டெரிக்பிரின்ஸ்

# வாழ்வழிக்கும் விசுவாசம்

*Derek Prince Ministries - India*

Originally published in English under the title
**"FAITH TO LIVE BY"**

Printed by Derek Prince Ministries

TA/3000/1021
ISBN 978-93-92947-06-3
"FAITH TO LIVE BY" (Tamil)
**"VAZHVALIKUM VISUVASAM"**
Published by permission in the Tamil language.

Cover Design: DPM-Asia/Pacific
For orders & other enquiries please contact :
**DEREK PRINCE MINISTRIES - INDIA**
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur, Trichy - 620 017
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201
Derek Prince
MINISTRIES INDIA
www.derekprince.in

‘‘நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு,... எழுதுகிறதாவது:''

2 பேதுரு 1:1

# பொருளடக்கம்

# அத்தியாயம் ஒன்று

# விசுவாசமும் தரிசனமும்

## விசுவாசம் !

விசுவாசம் என்னும் அந்த எளிய சிறிய வார்த்தையில் அடங்கியுள்ள ஆற்றலை யார் முழுவதும் அளந்து விளக்கக் கூடும் ?

விசுவாசத்தின் ஆற்றலை நாம் கண்டுகொள்வதற்கு தெளிவான வழி இயேசுவினால் உரைக்கப்பட்ட இரண்டு வாசகங்களை அடுத்து அடுத்து வைப்பதாகும் :

*தேவனாலே எல்லாம் கூடும் (மத்தேயு 19:26).*
*விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்*
*(மாற்கு 9:23)*

இவ்விரு வாசகங்களிலும் நாம் "எல்லாம் கூடும்" என்னும் வார்த்தைகளைக் காண்கிறோம். முதலாவது பகுதி தேவனைப் பற்றியும், இரண்டாம் பகுதி விசுவாசிக்கும் ஒருவனையும் குறிக்கிறது. ஒரு வேளை தேவனால் எல்லாம் கூடும் என்பதை ஏற்றுக் கொள்வது அவ்வளவு கடினமன்று. விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்பதை அதற்கு சமானமாக நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா ? எனினும் இதைத் தான் இயேசு நமக்கு சொல்கிறார்.

நடைமுறை வழக்காற்றின்படி இதனுடைய அர்த்தம் என்ன ? அதாவது விசுவாசத்தினால், தேவனால் செய்யக்கூடியவற்றை

விசுவாசிக்கிற ஒருவனாலும் சமமான அளவில் சாதிக்கக்கூடும் என்பதாகும். விசுவாசம் என்பது தேவனால் செய்யக்கூடியவற்றை விசுவாசிக்கிற ஒருவனாலும் சமமான அளவில் சாதிக்கக்கூடும் என்பதாகும். விசுவாசம் என்பது தேவனால் செய்யக்கூடியவற்றை நம்மால் செய்யக் கூடியதாக்கும் கால்வாய் ஆகும். விசுவாசத்தின் மூலம், தேவனால் செய்யக் கூடியவை அனைத்தும் நம்மால் சமமான அளவில் செய்யக் கூடியதாகிறது. வேதம், ஆரம்பம் முதல் முடிவு வரை விசுவாசத்தின் உன்னத, ஒப்பற்ற முக்கியத்துவத்தை தொடர்ந்து வலியுறுத்துவதில் அதிசயம் ஒன்றுமில்லை.

## மொழிபெயர்ப்பின் பிரச்சனைகள்

விசுவாசத்தைப் பற்றி நாம் மேலும் படிப்பதற்கு முன்பு புதிய ஏற்பாட்டை வாசிக்கிறவர்களுக்கு மொழி பெயர்ப்பினால் அடிக்கடி உண்டாகும் பிரச்சனைகளை தெளிவாக்குவது உதவியாய் இருக்கும். ஆங்கிலத்தில் இரண்டு வித்தியாசமான வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன: விசுவாசம் என்னும் பெயர்ச்சொல் (noun) **faith** என்றும் விசுவாசிப்பது என்னும் வினைச்சொல் (verb) **to believe** என்றும் வருகிறது. இவைகளின் உருவாக்கத்திலோ ஆரம்பத்திலோ இவ்விரு வார்த்தைகளுக்கும் இடையே எந்த வெளிப்படையான தொடர்பும் இல்லை. இதனால் ஆங்கில பிரசங்கியார்கள் (believing) விசுவாசித்தல் என்பதையும் (having faith) விசுவாசத்தை கொண்டிருந்தல் என்பதையும் வித்தியாசப்படுத்தி கூற முற்படுகின்றனர், என்றாலும் புதிய ஏற்பாட்டின் கிரேக்க மூலமொழியில் இந்த வித்தியாசத்திற்கு ஆதாரம் இல்லை.

கிரேக்கத்தில் (faith) விசுவாசம் என்னும் சொல்லுக்கு **பிஸ்டிஸ்** என்றும் (believe) விசுவாசிப்பது என்பதற்கு **பிஸ்டியோ** என்றும் வருகிறது. (I believe) நான் விசுவாசிக்கிறேன்

என்பதைக் குறிக்கும் வினைச் சொல்லான **பிஸ்டியோ** என்பது (faith) விசுவாசம் என்பதைக் குறிக்கும் பெயர்ச்சொல்லான **பிஸ்டிஸ்** என்பதிலிருந்து வருகிறது. இவ்விரு வார்த்தைகளின் அடிப்படையிலும் **பிஸ்ட்** என்னும் சொல் வருகிறது. எனவே ஆங்கிலத்தில் believe (விசுவாசிப்பது) என்று சொல்வது faith (விசுவாசம்) என்பதை செயற்படுத்துவதாகும். மாறாக, faith (விசுவாசம் என்பதை செயற்படுத்துவது believing (விசுவாசித்தல்) ஆகும். தமிழில் இந்த பிரச்சனை இல்லை. கிரேக்கத்தை போலவே தமிழில் விசுவாசித்தல் என்னும் வினைச்சொல் விசுவாசம் என்னும் பெயர்ச்சொல்லிலிருந்தே வருகிறது.

விசுவாசத்தின் எதிர்மறையை காணும்போது, மீண்டும் ஆங்கிலத்திற்கும் கிரேக்கத்திற்கும் வித்தியாசம் உள்ளது. ஆங்கிலத்தில் "faith" (விசுவாசம்) என்பதின் எதிர்மறையான சொல் "unbelief" (அவிசுவாசம் என்று சொல்லப்படுகிறது. அவிசுவாசத்திற்கு "unfaith" என்று சொல்லுவதில்லை. ஆனால் கிரேக்கத்தில் விசுவாசத்திற்கும் அதன் எதிர்மறைக்கும் நேரிடை தொடர்பு உள்ளது. (faith) விசுவாசம் என்பது **பிஸ்டிஸ்** என்றும் (unbelief) அவிசுவாசம் என்பது **அபிஸ்டியா** என்றும் வருகிறது. (கிரேக்கத்தில் ஒரு சொல்லின் எதிர்மறையான சொல்லைக் கூற ‘‘அ’’ என்ற எழுத்துடன் ஆரம்பிக்கிறது. இவ்விரு வார்த்தைகளின் அடிப்பமைடயிலும் **பிஸ்ட்** என்ற சொல் வருகிறது. தமிழில் கிரேக்கத்தை போலவே ஒரு சொல்லின் எதிர்மறையான சொல்லைக் கூட “அ” என்ற எழுத்துடன் ஆரம்பிக்கிறது. எனவே “விசுவாசம்” என்பதின் எதிர்மறை “அவிசுவாசம்” என்று வருகிறது.

மேலும் **பிஸ்ட்** என்ற சொல்லின் அடிப்படையிலிருந்து தான் **பிஸ்டாஸ்** (விசுவாசமுள்ள) என்னும் பெயரடை (adjective) வருகிறது. இதன் எதிர்மறையான சொல் **அபிஸ்டாஸ்** (அவிசுவாசமுள்ள) என்பதாகும்.

நான் கூறியவற்றை தெளிவு படுத்துவதற்கு கீழே ஐந்து வார்த்தைகளையும் மூன்று பத்திகளில் வரிசைப்படுத்திக் காட்டி இருக்கிறேன்.

| | | கிரேக்கம் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|---|
| *பெயர்ச்சொல்* (noun) | : | *பிஸ்டிஸ்* | Faith | *விசுவாசம்* |
| *பெயர்ச்சொல்* (noun) | : | *அபிஸ்டியா* | Unbeleif | *அவிசுவாசம்* |
| *பெயரடை* (Adjective) | : | *பிஸ்டாஸ்* | Faithful, beleiving | *விசுவாசமுள்ள உண்மையுள்ள* |
| *பெயரடை* (Adjective) | : | *அபிஸ்டாஸ்* | Unfaithful, unbelieving | *அவிசுவாசமுள்ள* |
| *வினைச்சொல்* (Verb) | : | *பிஸ்டியோ* | I believe | *நான் விசுவாசிக்கிறேன்* |

மேற்கூறிய எல்லா கிரேக்க வார்த்தைகளிலும் **பிஸ்ட்** என்ற அடிப்படை சொல் வருவதைக் காணலாம். மொத்தத்தில் புதிய ஏற்பாட்டில் இந்த மூல சொல் கிட்டத்தட்ட 600 தடவைகள் வருகின்றன. இதன் அடிப்படையில் மட்டுமே இவ்வார்த்தைகள் வேதாகமத்தின் முழு வெளிப்பாட்டின் மையக் கருப்பொருளை எடுத்துக் கூறுகின்றன என்று தெளிவுப்படுத்துகிறது.

## விசுவாசத்தின் வரையரை

எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் பதினோராம் அதிகாரம் விசுவாசத்தைப் பற்றி பிரத்தியேகமாகப் பேசுகிறது. அதன் ஆரம்ப வசனம், விசுவாசம் என்ற சொல் வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளபடியே அதன் அர்த்தத்தை வரையறுக்கிறது.

*விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.*

இந்த வசனத்தை, "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் **சாரப்பொருளும்,** காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்று சொல்லுக்கு சொல் மொழி பெயர்க்கலாம். இது விசுவாசத்தை பற்றி இரண்டு முக்கிய காரியங்களை நமக்கு சொல்லுகிறது, முதலாவதாக, "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் சாரப்பொருளாய் இருக்கிறது." விசுவாசம் மிகவும் நிசமானது என்பதால் அது உண்மையில் சாரப்பொருள் என்றழைக்கப்படுகிறது. இதன் கிரேக்கச் சொல் **க்யூபோஸ்டாசிஸ்** என்பதாகும். இதற்கு ஒன்றை தாங்கி நிற்கும் ஒன்று அல்லது ஒன்றிற்கு அடிப்படை அளிக்கும் ஒன்று என்று அர்த்தம் கொள்ளலாம்.

**க்யூபோஸ்டாசிஸ்** என்னும் இதே வார்த்தை எபிரெயர் **1:3**ல் வருகிறது. இங்கு இயேசு "அவருடைய (பிதாவினுடைய) **தன்மையின்** சொரூபமாய் இருக்கிறார்'' என்று சொல்லப்பட்டுள்ளது. இங்கு **க்யூபோஸ்டாசிஸ்** என்பது "தன்மை" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் என்னவென்றால் நித்தியமான, காணப்படாத பிதாவாகிய தேவனின் மறைந்திருக்கின்றன உண்மை நிலையை குமாரனாகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுகறவராய் இருக்கிறார். எனவே எபிரெயர் **11:1**யை விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் "மறைந்திருக்கின்ற உண்மை நிலை" என கூறலாம். விசுவாசம் நிசமானது; விசுவாசம் சாரப்பொருளாய் இருக்கிறது.

இரண்டாவதாக விசுவாசமானது "காணப்படாதவைகளின் **நிச்சயமாயிருக்கிறது"**, சில ஆங்கில மொழிப்பெயர்ப்புகளிலே இது "காணப்படாதவைகளின் **உறுதியாயிருக்கிறது"** என்று வருகிறது. எப்படி மொழி பெயர்க்கப்பட்டிருப்பினும், மிக

முக்கியமான கருத்து என்னவென்றால் விசுவாசமானது நம்மால் காணக்கூடாதவைகளுடன் செயலாற்றுகிறது. விசுவாசம் காணப்படாதவைகளுடன் சம்பந்தப்பட்டது.

இரண்டு வசனங்களுக்கு அடுத்து எபிரெயர் **11:3**ல் அதன் எழுத்தாளர் விசுவாசம் காணப்படாதவைகளுடன் தொடர்புடையதாய் இருக்கிறது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறார்:

> *விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.*

இதன் எழுத்தாளர் இங்கு காணப்படுகிறவைகளுக்கும், காணப்படாதவைகளுக்கும் உள்ள வேற்றுமையை குறிப்பிடுகின்றார். நமது புலன்கள் காணப்படும் உலகத்துடன், அதாவது “காணப்படுகிறவைகளுடன்” சம்பந்தப்பட்டது. ஆனால் விசுவாசமானது நம்மை காணப்படுபவைகளிலிருந்து காணப்படாதவைகளுக்கு, அதாவது இப்பிரபஞ்சம் முழுவதும் உண்டான பின்னணியின் உண்மை நிலைக்கு எடுத்துச் செல்கிறது.

இவ்வாறாக விசுவாசமானது இரண்டு காணப்படாத, நித்திய உண்மைகளுடன் இணைந்தது: அவைகள் தேவனும், அவருடைய வார்த்தையும் ஆகும். வேதம் கூறும் விசுவாத்திற்கு இந்த இரு கூறுகள் மட்டுமே உள்ளன. உலக சம்பந்தமான பேச்சில் நாம் விசுவாசம் என்னும் சொல்லை மற்ற அநேக அர்த்தங்களில் பயன்படுத்துகிறோம். ஒரு செய்தித்தாளில் அல்லது ஒரு மருந்தில் அல்லது ஒரு அரசியல் தலைவரின்

பெயரில் வைக்கும் விசுவாசத்தைப் பற்றி நாம் பேசுவதுண்டு. ஆனால் விசுவாசமானது வேதத்தில் இவ்வாறாக பயன்படுத்தப்படவில்லை. வேதாகமத்தில் விசுவாசமானது பிரதானமாக கண்ணால் காணக்கூடாத இரு காரியங்களுடன் முக்கியத் தொடர்புடையதாக உள்ளது : முதலாவதாக தேவனும், இரண்டாவதாக தேவனுடைய வார்த்தையுமாகும்.

## தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடத்தல்

விசுவாசத்திற்கும் தரிசனத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை பவுல் **2** கொரி.**5:6**ல் கூறுகிறார்: ''நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்'' என்கிறார். நாம் தரிசித்து நடந்தால் நமக்கு விசுவாசம் தேவையில்லை. நாம் விசுவாசித்து நடந்தால், நாம் தரிசித்து நடக்கத் தேவையில்லை. ஒன்று இருந்தால் மற்றொன்று தவிர்க்கப்படுகிறது.

இது நம்முடைய இயற்கையான சிந்தனைக்கு எதிர்மறையானது, "காண்பதே விசுவாசம்" என்று உலகம் சொல்லுகிறது. ஆனால் வேதம் இந்த முறையை மாற்றி முதலாவது நாம் விசுவாசிக்க வேண்டும் என்றும், பின்பு நாம் காண்போம் என்றும் கூறுகிறது, இந்த தத்துவம் மிகவும் முக்கியமானதென்பதால் இதனை விளக்கக் கூடிய சில வேதப்பகுதிகளை நாம் காண்போம். சங்கீதம் **27:13**ல் தாவீது, "நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன்" என்கிறார். எது முதலில் வந்தது, விசுவாசமா ? காண்பதா ? பதில் விசுவாசமே. தாவீதுக்கு எது உண்மையாய் இருந்ததோ, அது நம் அனைவருக்கும் உண்மையானதாக இருக்கிறது. கர்த்தருடைய நன்மையை நாம் காண்போம் என நாம் விசுவாசிக்காவிட்டால் நாம் கெட்டுப்

போவோம். நம்மை கெட்டுப் போகாமல் இருக்கச் செய்வது நாம் எதைக் காண்கிறோம் என்பதல்ல எதை விசுவாசிக்கிறோம் என்பதாகவே உள்ளது.

இது மோசேயைப் பற்றி எபிரெயர் 11:27ல் சொல்லப்பட்ட கூற்றுடன் ஒத்திருக்கிறது: ''விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறது போல உறுதியாயிருந்து, இராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்.'' மோசேயின் வாழ்க்கையில் அவ்வேளையில் காணப்பட்ட சூழ்நிலைகள் எதுவும் அவனுக்கு நம்பிக்கையையோ, உற்சாகத்தையோ அளிக்கக்கூடியதாக இல்லை. ஆனால் அவனுக்கு விரோதமாக அனைத்தும் இருந்தபோதும் ''அதரிசனமானவரைத் தரிசித்ததினாலே'' அவன் "உறுதியாயிருந்தான்." அவன் இதை எப்படிச் செய்தான்? **விசுவாசத்தினாலே** செய்தான். விசுவாசம் "காணக்கூடாதவரை காணும்படிச்'' செய்து, காணப்படும் உலகம் நமக்கு நம்பிக்கையையோ, உற்சாகத்தையோ அளிக்காத போது உறுதியாய் இருக்கும்படி செய்கிறது.

மேலும் இயேசு இலாசருவை உயிருடன் எழுப்பிய சம்பவம் யோவான் 11ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் 39-40ம் வசனங்களைக் காண்போம்:

(39) இயேசு : கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே என்றாள்.

(40) இயேசு அவளை நோக்கி : நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்.

இயேசு இங்கு மார்த்தாளிடம் கேட்பதை, தேவனுடைய மகிமையைக் காணவிரும்பும் அனைவரிடமும் கேட்கிறார். நாம்

**காண்போம்** என்று நாம் விசுவாசிக்க வேண்டும். முதலாவது கண்டு பின்பு விசுவாசிப்பதல்ல முதலாவது நாம் விசுவாசிக்கிறோம்; பின்பு விசுவாசித்ததின் பலனாக நாம் காண்கிறோம். விசுவாசம் தரிசிப்பதற்கு முன்பு வருகிறது.

இங்குதான் பழைய சுபாவத்திற்கும், புதிய சுபாவத்திற்கும் இடையே அடிப்படை போராட்டம் ஏற்படுகிறது. பழைய சுபாவம் புலன்களை சார்ந்து இருப்பதால், அந்த சுபாவம் **காணும்படி** விரும்புகிறது. தேவன் நம்மை அந்த பழைய சுபாவத்திலிருந்தும் பழைய வாழ்க்கை முறையிலிருந்தும் விடுவித்து, புதிய சுபாவத்திற்கும் புதிய வாழ்க்கை முறைக்கும் நம்மை வழிநடத்த வேண்டும். புதிய சுபாவம், ''நான் **காணாவிட்டாலும்** பரவாயில்லை; நான் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறேன்" என்று சொல்லும்.

2 கொரிந்தியர் 4:17-18ல் மீண்டும் காணப்படுகிறவைகளுக்கும், காணப்படாதவைகளுக்கும் உள்ள வித்தியாசம் நமக்கு அறைகூவலாக கொடுக்கப்பட்டுள்ளது:

> (17) மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.
>
> (18) ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.

பவுலின் மொழி நடையில் இங்கு வேண்டுமென்றே கூறப்படும் ஒரு முரண்பாட்டைக் காண்கிறோம். "காணப்படாதவைகளை நோக்கியிருப்பதைப்" பற்றி அவர் சொல்லுகிறார். இதை நாம் எப்படி செய்யக்கூடும்? இதைச் செய்வதற்கான ஒரே ஒரு வழி விசுவாசமே!

“நோக்கியிருக்கிற பொழுது” என்பதில் ஒரு பெரிய முக்கியத்துவம் உள்ளது: “காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு” என்று வருகிறது. மோசே தன்னுடைய பொறுமையின் சோதனையின் வேளையில் கற்றுக் கொண்ட அதே பாடத்தை இது வலியுறுத்துகிறது. தேவனுடைய திட்டத்தில் ஒரு விசுவாசிக்கு துன்பம் நற்பலனை அளிக்கக்கூடும். அது நமது குணத்தை உருவாக்கி பெலப்படுத்தி வர இருக்கும் நித்திய மகிமைக்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறது. ஆனால் **காணப்படாத தளத்தின் மீது நமது கண்களைப் பதித்துக் கொண்டிருக்கும் போது மட்டுமே துன்பம் நமக்கு நற்பலனை** அளிக்கிறது. இதை மறந்துவிட்டு நமது புலனையும், உலகத்தின் காலத்தையும் நாம் சார்ந்திருப்போமென்றால் துயரம் நம்மில் உருவாக்க இருக்கும் நற்பலனைப் பெற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே நாம் அநித்திய உலகம், நித்திய உலகம் என்னும் இரு உலகங்களுக்கு மத்தியில் சிக்குண்டு இருக்கிறோம். நாம் காணக்கூடியது அநித்திய உலகமாய் உள்ளது; அதனுடன் நாம் நமது புலன்களின் மூலம் தொடர்பு கொள்கிறோம். ஆனால் நித்திய உலகத்திலே நாம் இருக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார். அதுவே நம் வீடு. நம் வீடாகிய அவ்வுலகத்தில் விசுவாசத்தின் மூலமாக மட்டுமே பிரவேசிக்கக்கூடும். தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் உரிய, காணப்படாத உண்மைகளுடன் நம்மை இணைக்கும் **ஒரே** காரியம் விசுவாசமே.

## தொகுப்பு

விசுவாசமானது நமது சொந்த திறமையின் தளத்திலிருந்து நம்மை உயர்த்தி, தேவனால் செய்யக்கூடியவற்றை நாம் செய்யும்படி செய்கிறது.

விசுவாசமானது தேவனும் அவருடைய வார்த்தையும் ஆகிய இரண்டு காணப்படாத உண்மைகளுடன் நம்மை தொடர்பு கொள்ளச் செய்கிறது. விசுவாசத்தின் மூலம் தேவனுடன் இந்த உறவை நாம் கொள்ளும் பொழுது நம்முடைய அனுதின வாழ்க்கையில் நமக்கு எதிர்படும் சோதனைகளையும், கஷ்டங்களையும் சகித்து அவைகளை மேற்கொள்ளும் சக்தியை நாம் பெறுகிறோம். இவைகள் தேவனுக்கு தமது நன்மையையும் தமது மகியையும் வெளிப்படுத்த தருணங்கள் ஆகின்றன.

விசுவாசத்திற்கும், தரிசனத்திற்குமிடையே தொடர்ந்து போராட்டம் நடைபெறுகிறது. நமது பழைய சுபாவம் புலன்களுக்கடுத்த உலகத்தில் சுகமாய் இருப்பதால் அது ''கண்டு ஆக வேண்டும்'' என்கிறது. ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனையும் அவருடைய வார்த்தையையும் எந்த உறுதிப்பாட்டையும் கேட்காமல் நம்புவதற்கு ஆயத்தமாயுள்ள புதிய சுபாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

# அத்தியாயம் இரண்டு

# விசுவாசமும் நம்பிக்கையும்

முதலாம் அத்தியாயத்தில் விசுவாசத்திற்கும், தரிசனத்திற்கும்-விசுவாசிப்பதற்கும், காண்பதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நாம் ஆராய்ந்தோம். இந்த அத்தியாயத்தில் **விசுவாசத்திற்கும், நம்பிக்கைக்கும்** இடையே உள்ள வித்தியாசத்தை நாம் ஆராய்வோம். இதில்தான் இன்று கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் தவறான கருத்துக்கள் நிலவி வருகின்றன. அநேக கிறிஸ்தவர்கள் தாங்கள் ஜெபத்திலே எதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதைப் பெற்று கொள்ளாததினால் அவர்கள் ஏமாற்றமடைந்து சோர்ந்து போகிறார்கள். அடிக்கடி அவர்கள் நம்பிக்கையில் ஜெபிக்கிறார்களே அன்றி விசுவாசத்தில் ஜெபிக்கவில்லை. விசுவாசத்திற்கு தேவனால் வாக்களிக்கப்பட்டுள்ள காரியங்கள் நம்பிக்கைக்கு வாக்களிக்கப்படவில்லை.

இதன் வித்தியாசம் என்ன? விசுவாசத்தையும், நம்பிக்கையையும் நாம் எப்படி வித்தியாசப்படுத்திக் காண்பது?

## விசுவாசம் இருதயத்திற்குரியது

விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் இடையே உள்ள பிரதான வித்தியாசம் என்னவென்றால் விசுவாசம் **இருதயத்திற்குரியது,** நம்பிக்கை மனதிற்குரியது. ரோமர் **10:10**ல் பவுல், **“நீதி உண்டாக இருதயத்திலே** விசுவாசிக்கப்படும்” என்கிறார். உண்மையான

வேதத்திற்கடுத்த விசுவாசம் இருதயத்தில் ஆரம்பமாகிறது, இங்கு **நீதி உண்டாக** என்று சொல்லப்பட்டுள்ளது உண்டாக என்பது ஒரு வகையான அசைவையோ அல்லது மாற்றத்தையோ குறிக்கின்ற சொல். விசுவாசம் என்பது ஒருபோதும் அசைவற்றதன்று. அது எப்பொழுதுமே தன்னை செயலிலும், மாற்றத்திலும் இயக்கத்திலும் வெளிப்படுத்துகிறது. உண்மையாகவே விசுவாசிக்கிறவன் அவன் விசுவாசிக்கிற வண்ணமாகவே மாற்றப்படுகிறான்.

இதற்கு மாறாக, சத்தியத்தை தன் மூளையின் அறிவின்படி மட்டும் ஏற்றுக் கொள்கிறவன் அதனால் மாற்றம் அடையாமல் இருக்கிறான். சத்தியத்தை மனதில் ஏற்றுக் கொள்வது விசுவாசம் ஆகாது, விசுவாசத்தை உண்டாக்குவதற்கு சத்தியமானது நினைவின் மன தளத்தைக் கடந்து, இருதயம் என்னும் ஜீவனின் மைய உள் பகுதிக்கு செல்ல வேண்டும். மனோ ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படும் சத்தியம் பலனற்றதாய், உபயோகமற்றதாய் இருக்கும். ஆனால் விசுவாசத்தினால் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் சத்தியம் எப்பொழுதுமே வாழ்வை மாற்றக்கூடிய ஆற்றல் நிறைந்ததாயிருக்கும்.

நீதிமொழிகள் 4:23ல் சாலமோன் நம்மை இவ்வாறாக எச்சரிக்கிறார்: “எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.” நம்முடைய வாழ்க்கையின் போக்கை இறுதியாக நிருணயிக்கும் காரியங்கள் அனைத்தும் நம்முடைய இருதயத்திலிருந்தே புறப்படுகிறது. உண்மையான வேதத்திற்கடுத்த விசுவாசம் இருதயத்திலிருந்து புறப்பட்டு, நமது வாழ்க்கை முறையை நிருணயிக்கிறது. இது வெறும் மூளையின் தளத்தினின்று எழும் காரியமல்ல; இது இருதயத்தினின்று செயல்படும் உண்மையான ஆற்றலாக உள்ளது.

எனினும் தேவன் நமது மனதை வெறுமையாய் விட்டு விடவில்லை. இருதயத்தில் செயல்படும் விசுவாசம் மனதில்

நம்பிக்கையை தோற்றுவிக்கிறது. இது எபிரெயர் 11:1ல் நாம் ஏற்கெனவே ஆராய்ந்த விசுவாசத்தின் அர்த்தத்திலிருந்து வருகிறது: ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் சாரப்பொருளாய் இருக்கிறது.'' இருதயத்தில் உள்ள விசுவாசமானது சாரப்பொருளாய்-மறைந்திருக்கின்ற உண்மை நிலையாய்-இருக்கிறது. இது நமது மனதில் உண்டாகும் நம்பிக்கைக்கு வேதத்தின்படி சரியான அடிப்படை அளிக்கிறது.

1 தெசலோனிக்கேயர் 5:8ல் பவுல் நமது ஆள்தத்துவத்தின் பல்வேறு பகுதிகள் விசுவாசத்தினாலும் நம்பிக்கையினாலும் பாதிக்கப்படுவதைப் பற்றி குறிப்பிடுகிறார்: “பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்.'' விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசம் இருதயத்தைப் பாதுகாக்கிறது. நம்பிக்கை என்பது தலைச்சீரா, இது தலையை அல்லது மனதை பாதுகாக்கிறது.

விசுவாசத்தையும், நம்பிக்கையையும் பிரித்துக் காட்டுவதில், நாம் நம்பிக்கையை குறைத்துக் காட்ட முற்படவில்லை. நம்பிக்கை என்பது வேதத்தின் அர்த்தத்தில், நன்மையை நிச்சயமாய் எதிர்பார்ப்பதாகும். அதாவது உறுதியாய் இறுதியில் நன்மை விளையும் என்ற எண்ணம் கொண்டிருப்பதாகும். இதுவே நமது மனதை பாதுகாக்கிறது. நம்பிக்கை என்னும் இந்த தலைச்சீராவை ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு நாளில் 24 மணி நேரமும் அணிந்து கொண்டிருக்க வேண்டும். நாம் இந்த தலைசீராவை கழற்றிவிட்டு எதிர்மறையான எண்ணங்களையும் இருண்ட கெட்ட சகுனங்களையும் சிந்திக்க ஆரம்பிப்போம் என்றால் நமது மனது சாத்தானின் தந்திரமான தாக்குதல்களுக்கு உள்ளாகிறது.

இப்படிப்பட்ட கிறிஸ்தவ முற்போக்கான எண்ணம் கற்பனையோ அல்லது போலியோ அன்று. அது வெறும்

ஆவலுள்ள எண்ணம் அன்று. அது பிரத்தியேகமாகவும், உறுதியாகவும் வேதத்தின் வாக்கியங்களையும் வாக்குத்தத்தங்களையும் சார்ந்திருக்க வேண்டும். உதாரணமாக ரோமர் **8:28**ல் “அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்” என்று சொல்லப்பட்டுள்ளது. தேவன் சகலத்தையும் நமது நன்மைக்கேதுவாக நடப்பிக்கிறார் என்றால், நாம் முற்போக்கான எண்ணம் கொள்ளலாமே.

என்றாலும் இந்த வசனத்தை நமது வாழ்க்கையில் சொந்தமாக்கிக் கொள்ளும் போது, நாம் முதலில் இதில் குறிப்பாக சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுகிறோமா என காண வேண்டும். நாம் உண்மையாகவே தேவனை நேசிக்கின்றோமா? நமது வாழ்விற்கு அவர் வைத்திருக்கிற நோக்கத்தை நிறைவேற்ற முற்படுகிறோமா? அப்படியானால் தேவன் சகல காரியங்களையும் ஒவ்வொரு சம்பவத்தையும், ஒவ்வொரு சூழ்நிலையையும் நமது நன்மைக்கேதுவாக நடப்பிக்கிறார். இவ்வாறு இருக்கும்பொழுது, நாம் நியாயமாய் முற்போக்கான எண்ணம் கொண்டவர்களாய் இருக்கக்கூடும். இதன் அடிப்படையில் பார்க்கும் பொழுது ஒரு கிறிஸ்தவன் பிற்போக்கான எண்ணம் கொள்வானேயானால் உண்மையில் அவன் தன் விசுவாசத்தை மறுதலிக்கிறவன் ஆவான்.

இந்த உதாரணம் ஏற்கெனவே சொல்லியதை உறுதிப்படுத்துகிறது: நம்பிக்கைக்கு விசுவாசம் மட்டுமே உறுதியான அடித்தளமாகும். முதலாவதாக நாம் ரோமர் **8:28** கூறுவதை உண்மையாகவே விசுவாசிக்க வேண்டும்-சகலமும் நமது நன்மைக்கேதுவாகவே நடக்கின்றது. இதை நாம் விசுவாசித்தால் நம்பிக்கையைத் தவிர வேறொன்றுக்கும்

இடமில்லை. ஆனால் இதை நாம் விசுவாசிக்காவிட்டால் நமது நம்பிக்கைக்கு உறுதியான அடித்தளம் இல்லாமற் போகிறது.

இதிலிருந்து வெளிப்படையாக ஒன்று போல் தோன்றினாலும் ஒன்றினின்று மற்றொரு மாறுபட்ட இரு வகையான நம்பிக்கைகள் இருப்பதைக் காணலாம். முதல் வகையான நம்பிக்கை இருதயத்தின் மெய்யான விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே அது மெய்யானது. அது ஏற்ற காலத்தில் நிறைவேறும் என்பதை நம்புகிறது. இரண்டாவது வகையான நம்பிக்கை இருதயத்தில் அடித்தளம் இல்லாமல் மனதில் மாத்திரம் உள்ளதால் இதற்கு வேத ஆதாரம் இல்லை. இதன் எதிர்பார்ப்பு பெரும்பாலும் ஏமாற்றத்திலேயே முடிவடைகிறது. இந்த இரு நம்பிக்கைகளில் உள்ள வித்தியாசங்களை அறிந்து கொள்ளவில்லையானால் இந்த நம்பிக்கை நிறைவேறாமற்போவதற்கான அபாயமுள்ளது.

## விசுவாசம் தற்காலத்திற்குரியது

விசுவாசத்திற்கும், நம்பிக்கைக்கும் உள்ள இரண்டாவது பிரதான வித்தியாசம் விசுவாசம் தற்காலத்திற்குரியது. நம்பிக்கை வருங்காலத்திற்குரியது. விசுவாசம் என்பது ஒரு **மெய்ப் பொருள்.** அது இங்கு இருக்கும் ஒன்று; நம்பிக்கையோ ஒரு **எதிர்பார்ப்பு.** அது வருங்காலத்தை நோக்கி இருக்கிறது.

என்னுடைய பல ஆண்டு ஊழியத்தில் எத்தனையோ பேர் என்னிடம் வந்து "எனக்கு பெரிய விசுவாசம் இருக்கிறது எனக்காக ஜெபியுங்கள்" என்று கூறியதுண்டு. ஒரு மனிதன் என்னிடத்தில் வந்து உலகத்திலுள்ள எல்லா விசுவாசமும் என்னிடம் உள்ளது என்றான். அப்படியானால் வேறு எவருக்குமே விசுவாசத்தை உடையவனாயிருக்க வாய்ப்பில்லை என நினைத்து சிரித்துக் கொண்டேன். உண்மையைச் சொல்லப் போனால் மக்கள் என்னிடம் என் விசுவாசம் பெரியது என்று சொல்லும் பொழுது நான் உள்ளத்தில் சஞ்சலமடைகிறேன்.

ஏனென்றால் அவர்கள் தங்களுக்கு எதில் விசுவாசம் இருக்கிறது என்று சொல்லுகின்றார்களோ அதை அவர்கள் பெற்றுக் கொள்வதில்லை. அவர்கள் இதை பாசாங்கு இல்லாமல் சொல்லியிருக்கலாம். ஆனால் அவர்களின் ஆசைகள் நிறைவேறாமற் போவதற்கு காரணம் அவர்கள் தங்கள் நம்பிக்கையை, விசுவாசம் என்று குழப்பிக் கொண்டதே ஆகும்.

இப்படி நாமும் எளிதில் ஏமாந்து போகக்கூடும், ஏனென்றால் நம்பிக்கை மனதிற்குரியது விசுவாசம் இருதயத்திற்குரியது. பொதுவாக நமது மனதில் என்ன இருக்கிறது என்பது நமக்குத் தெரியும், ஆனால் இருதயத்தில் இருப்பதை அறிந்து கொள்வது கடினம். நம் மனதில் உயர்ந்த எதிர்பார்ப்பு உண்டாயிருக்கிற வேளையிலே அது நம்பிக்கையாகவே இருக்கின்றது. ஆனால் அதை நாம் விசுவாசம் என்று அழைக்கின்றோம். ஆனால் விசுவாசத்திற்குரிய அடித்தளம் இல்லாததினால் நாம் எதிர்பார்த்த பலன் நமக்கு கிடைக்காமலே போகிறது.

மனிதனுடைய இருதயத்தை வகையறுத்துக் கூற முடியாது. அதைப் போலவே விசுவாசத்தின் பண்பும், வகையறுக்கப்படாததாக இருக்கிறது. சில வேளைகளில் எனக்கு உறுதியான விசுவாசம் இருப்பதாக உணர்ந்துள்ளேன். ஆனால் அவ்வேளைகளில் ஒன்றுமே நடக்காமற் போய் உள்ளது. ஆனால் மற்ற நேரங்களில் விசுவாசம் இருப்பதாக உணராத காலங்களில் தேவன் எனக்குச் செய்த அதிசயமான காரியங்களைக் குறித்து வியந்திருக்கிறேன். இருதயத்தில் விசுவாசத்திற்குப் பதிலாக நம்பிக்கை இருப்பதாக உணர்வேன் என்றால் அது மனதிற்குரியதாகவே இருக்கிறது. அதே நேரத்தில் சில வேளைகள் நான் உணராதிருக்கும்போது என் இருதயத்திலிருந்து உண்டாகக் கூடிய மெய்யான பலன் அளிக்கும் விசுவாசத்தால் அற்புத விளைவுகள் ஏற்பட்டுள்ளதை எண்ணி வியந்திருக்கிறேன்.

தேவன் என்னைக் குணப்படுத்தவார் என்று சொல்லும் மக்கள் “நான் நாளைக்கு குணமடைவேன் என்று நம்புகிறேன்” என்ற அர்த்தத்திலே அதைச் சொல்லுகின்றனர். அது விசுவாசம் அல்ல. ஏனென்றால் விசுவாசம் நாளைக்குரியதல்ல; விசுவாசம் என்பது தற்காலத்திற்குரியது. நம்முடைய எதிர்பார்ப்பை வருங்காலத்தில் பதிப்போமென்றால் அதற்கு நாம் விசுவாசத்திற்குப் பதிலாக நம்பிக்கயையே வைக்கிறோம் என்பது பொருளாகும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு கேம்பிரிட்ஜ் சர்வகலா சாலையில் உதவிப்பணம் பெற்று கடந்த கால கிரேக்க கலாச்சாரத்தைப் படிக்க ஏதேன்ஸ் நாட்டிற்கு அனுப்பப்பட்டேன். சிறிது காலத்தில் கிரீஸ் நாட்டில் உள்ள பழங்கால சின்னங்களின் மேல் இருந்த அக்கறை எனக்கு குறைந்து கிரீஸில் வாழ்ந்த மக்களின் பெயரில் அக்கறை கொள்ளானேன். ஒவ்வொரு நாள் காலையிலும் நான் ஹோட்டலை விட்டு சர்வ கலாசாலையில் ஒரு நண்பனுடன் வெளியே வரும் வேளைகளில் எல்லா செருப்புகளையும் பிரகாசிக்கச் செய்யும் சிறுவர்கள் எங்கள் மிதியடிகளை சுத்தப்படுத்துவதிலே ஆர்வம் காட்டுவதுண்டு. நாங்கள் எவ்வளவு வேண்டாம் என்று சொன்னாலும் அவர்கள் கேட்கமாட்டார்கள். ஒவ்வொரு நாளும் கடிந்த முகத்துடன் தலையை துலுக்கி (Ochi) “ஓச்சி” என்று கிரேக்கத்தில் நாங்கள் “இல்லை” என்று சொல்வதுண்டு. ஆனால் அதைக் கேட்காமல் சிறுவர்கள் எங்கள் மிதியடிகளை பளபளப்பாக்க ஆரம்பித்து விடுவர்.

நான்காவது நாளிலே என் நண்பன் ஒரு புதியதொரு உத்தியைக் கையண்டான். வழக்கம் போல் அன்றும் சிறுவர்கள் செருப்புகளை பளபளப்பாக்க வந்தனர். அவ்வேளையில் என் நண்பன் அவர்கள் முகத்தை நோக்கி “ஆவ்ரியோ” (AVRIO) என்று கூறினான். அவர்கள் சும்மாய் இருக்கவே நாங்கள் கடந்து சென்றோம். (AVRIO) என்பதற்கு என்ன அர்த்தம்

என்று யூகியுங்கள் அதற்கு அர்த்தம் "நாளை" என்பதாகும்.

அநேக ஆண்டுகளுக்குப் பின்பு நான் ஒரு கிறிஸ்தவனான போது இச்சம்பவத்தை நினைவு கூர்ந்தேன். பிசாசு சிலவேளைகளில் கிறிஸ்தவர்களை எப்படி ஏமாத்துகிறான் என்பதை இது தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. நமக்கு ஆரோக்கியத்தைத் தேடும் பொழுது அல்லது இரட்சிக்கப்படாத ஒருவருக்கு இரட்சிப்பைப் பெற ஜெபிக்கும் பொழுது உடனே நாம் தேடுவது கிடைக்காது என பிசாசு சொல்லி விடுவதில்லை. உனக்கு சுகம் கிடைக்காது அல்லது "நீ நேசிக்கிறவன் இரட்சிக்கப்பட மாட்டான்" என்று சொல்வானேயாகில் நாம் அவனுக்கு செவி கொடுக்க மாட்டோம். அதற்குப் பதிலாக அவன் "நல்லது, நீ தேடுவதை இன்று அல்ல நாளை பெற்றுக் கொள்வாய்!" என்று கூறுவான். இப்படியாக நாம் விரும்பித் தேடுவதை அடைந்து விடாதபடி அவன் பார்த்துக் கொள்வான். பிசாசினுடைய "இல்லை" என்பதை ஒப்புக் கொள்ளாமல் "நாளை" என்பதை ஒப்புக் கொள்ளும் போது நமக்கு உண்டாயிருப்பது நம்பிக்கையே, விசுவாசம் அல்ல.

தேவன் காரியங்களை நமக்கு நாளைக்கு ஒத்திபோடுபவர் அல்ல. அவர் 2 கொ. 6:2ல் **"இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சண்ய நாள்"** எனக்கூறுகிறார். தேவன் நித்தியமான தற்காலத்தில் இருப்பவர். விசுவாசத்திற்கு அவர் தம்மை ''இருந்தவராகவோ'' அல்லது ''இருக்கப் போகிறவராகவோ'' அறிமுகம் செய்யாமல் ''தம்மை இருக்கிறவராகவே" வெளிப்படுத்துகிறார். விசுவாசம் தேவனை தொடர்பு கொள்ளும் காலம் தற்காலமே.

தேவனிடம் வேண்டிக் கொள்ளும் வேண்டுதல்களை இதன் அடிப்படையில் செய்வோமானால் நம் ஜெப வாழ்க்கை அனைத்தும் புரட்சிகரமாய் மாறும். "இயேசு: ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ,

**அவைகளைப் பெற்றுக் கொள்வோம்** என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்" என்று மாற்கு **11:24**ல் கூறுகிறார். நாம் ஜெபிப்பதற்குப் பதிலை எப்பொழுது பெற்றுக் கொள்வோம் என்று இயேசு கூறுகிறார். குறிப்பிட முடியாத வருங்காலத்திலா? இல்லை-நாம் ஜெபிக்கும் அதே வேளையிலே பெற்றுக் கொள்கிறோம். "நீங்கள் ஜெபம் பண்ணும்போதே அவைகள் உங்களுக்கு உண்டாகும்" ஆகவே நாம் கேட்டுக்கொண்ட காரியங்கள் நமக்கு உடனேயே கிடைக்கும். கையில் கிடைப்பது வருங்காலத்தில் இருந்தாலும் ஜெபித்த வேளையிலே விசுவாசித்தால் பெற்றுக் கொள்கிறோம். விசுவாசத்திலே ஜெபித்த வேளையிலே காரியங்களை பெற்றுக் கொண்ட நாம் தேவன் குறித்த வேளையில் அது நமக்கு சொந்தமாக கிடைக்கிறது. விசுவாசத்தில் பெற்றுக் கொள்வது தற்காலத்தில் நடைபெறுகிறது. நாம் பெற்றுக் கொண்டது புலப்படுவது வருங்காலத்தில் நடைபெறுகிறது. தற்காலத்தில் பெற்றுக் கொண்டோம் என்ற விசுவாசம் இல்லையென்றால் வருங்காலத்தில் அது புலப்படுவதற்கு வாய்ப்பில்லை.

எபிரெயர் **4:3**ல் விசுவாசித்து பெற்றுக் கொள்வதை "விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்" என்று வருகிறது. இங்கு விசுவாசிப்பது திரும்ப செய்யப்படவேண்டிய காரியமன்று. விசுவாசித்த பொழுதே நிறைவேறியது என்று அறியப்படுகிறது. இவ்விதமாய் விசுவாசித்தவர்கள் அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கின்றனர். இதில் போராட்டமோ, வியாகுலமோ இல்லை. விசுவாசத்தில் நாம் பெற்றுக் கொண்டுள்ளதை வருங்காலத்தில் அனுபவரீதியில் தோற்றமளிப்பதாகக் காண்போம். விசுவாசத்தால் பெற்றுக் கொள்வது நம் பங்கு. அதை வெளிப்படையாக புலப்படச் செய்வது தேவனின் காரியம்.

# தொகுப்பு

விசுவாசமும், நம்பிக்கையும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு உள்ளது. எனினும் அவைகளின் மத்தியிலே இரண்டு முக்கிய வித்தியாசங்கள் உண்டு. முதலாவதாக விசுவாசம் **இருதயத்திலிருந்து** தோற்றமளிக்கிறது. நம்பிக்கை **மனதிலே** உண்டாகிறது. இரண்டாவதாக விசுவாசம் **தற்காலத்திற்குரியது.** அது நம்மிடத்திலுள்ள ஓர் உண்மைப் பொருள். நாம் அதை ஏற்கெனவே உடையவர்களாக இருக்கிறோம். நம்பிக்கை **வருங்காலத்திற்குரியது.** காரியங்கள் வரக் காத்திருக்கிறோம்.

இருதய விசுவாசத்தின் அடிப்படையில் தோன்றி நம்பிக்கைகள் ஏமாற்றம் அடைவதில்லை. ஆனால் இந்த அடிப்படையில்லையாயின் நம் நம்பிக்கைகள் நிறைவேற வாய்ப்பில்லை.

நம்பிக்கை என்பது தேவன் நமது மனங்களுக்கு தரும் பாதகாப்பு. விசுவாசத்திற்கு வாக்களித்துள்ளதை தேவன் இதற்கு தரமாட்டார். நமக்கு தேவனிடமிருந்து அளிக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கான திறவுகோல் விசுவாசம். இது உடனே நடைபெறுவதால் நம்மை போராட்டத்திலிருந்தும், வியாகுலத்திலிருந்தும் விடுவித்து ஓர் உள்ளான இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கச் செய்கிறது.

# அத்தியாயம் மூன்று
# விசுவாசம் என்னும் வரம்

புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள விசுவாசத்திற்கு பல கூறுகள் உள்ளன. அதன் அடிப்படை குணம் எப்பொழுதும் எபிரெயர் **11:1**ல் கொடுக்கப்பட்டுள்ள வரையறையுடன் இணைந்து செல்கிறது-''நம்பப்படுகிறவைகளின் சாரப்பொருளும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.'' என்றாலும் இந்த குணம் தன்னை ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட பல வடிவங்களில் வெளிப்படுத்துகிறது.

விசுவாசத்தின் மூன்று பிரதான வடிவங்களை கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்:

1. வாழ்வளிக்கும் விசுவாசம்
2. விசுவாசம் என்னும் வரம்
3. விசுவாசம் என்னும் கனி

இதில் முதல் வகையான விசுவாசம் விசுவாசியை தேவனுடன் நேரிடையாக இணைக்கும் ஒரு தொடர்ச்சியான தனிப்பட்ட உறவாகும். அது அவனுடைய வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் பாதிக்கிறது. அவன் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் அது உந்து சக்தியையும், திசையையும், திறமையையும் அளிக்கிறது. உண்மையில் இதுவே நீதியுள்ள வாழ்க்கைக்கு போதுமான அடிப்படையாக உள்ளது. ஆகவே தான் இதை ''வாழ்வளிக்கும் விசுவாசம்'' என்றழைக்கிறோம்.

இந்தப் புத்தகத்தின் ஐந்தாம் அத்தியாத்திலிருந்து இவ்வகையான விசுவாசத்தைப் பற்றி விளக்கமாகக் காண்போம். ஆனால் முதலில் இந்த அத்தியாயத்தில் விசுவாசம் என்னும் **வரத்தைப்** பற்றி காண்போம். பின்பு அடுத்த அத்தியாத்தில் விசுவாசம் என்னும் **கனியைப்** பற்றி காண்போம்.

## ஆவிக்குரிய வரங்களின் தன்மை

1 கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் பவுல் பரிசுத்த ஆவியின் வரங்களைக் குறித்துப் பேசுகிறார். அவர் அந்த அதிகாரத்தை ஆரம்பிக்கும் பொழுது, "அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை" என்கிறார். பின்பு 7-11 வரையுள்ள வசனங்களில் அவர் ஒன்பது வித்தியாசமான வரங்களை வரிசைப்படுத்துகிறார்:

(7) ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.

(8) எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும் வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,

(9) வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,

(10) வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.

(11) இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப்

பகிர்ந்து கொடுக்கிறார்.

இதில் 7ம் வசனம் ஆங்கிலத்தில், ''ஆவியினுடைய **வெளிப்படுதல்** அவனவனுக்கு **பொதுநலனுக்கென்று** அளிக்கப்பட்டிருக்கிறது'' என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த வரங்களின் விசேஷமான குணத்தை விளக்கும் திறவுகோல் வார்த்தை "வெளிப்படுதல்" என்பதாகும். ஒரு விசுவாசிக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியனாவர் தாமே கண்ணிற்குப் புலப்படாதவர். ஆனால் இந்த வரங்கள் ஒரு விசுவாசியின் மூலம் செயல்படுவதின் வழியாக பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் மனித புலன்களுக்கு வெளிப்படுகிறது. ஒவ்வொரு வரத்திலும் அவைகள் உண்டாகும் பலன்கள் புலன்களின் தளத்தில் உணரக்கூடியதாக உள்ளன; அவைகள் காணக்கூடியதாகவும், கேட்கக்கூடியதாகவும் உணரக்கூடியதாகவும் உள்ளன.

இந்த வரங்கள் விசுவாசியின் ஆள்தத்துவத்தை வெளிப்படுத்தாமல் விசுவாசிக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதால் இவைகள் அனைத்தும் இயற்கைக்கப்பாற்பட்ட குணத்தை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு வரத்திலும் அவைகள் உண்டாகும் பலன்கள் ஒரு விசுவாசி தன் சொந்த திறமையினால் மட்டுமே சாதிக்கக்கூடியதை விட அதிகமாகவே உள்ளன. ஒவ்வொரு வரமும் பரிசுத்த ஆவியானவரின் நேரிடையான இயற்கைக்கப்பாற்பட்ட செயல்பாட்டினால் மட்டுமே சாத்தியமாகிறது. இந்த வரங்கள் விசுவாசியின் மூலம் செயல்படுவதின் வழியாக பரிசுத்த ஆவியானவர் காணப்படாத ஆவிக்குரிய தளத்திலிருந்து வெளிப்பட்டு காலம், இடம் என்னும் இயற்கை உலகின் மீது மாற்றத்தை உண்டாக்குகிறார்.

இந்த வரங்களைக் குறித்துப் பவுல் இரண்டு முக்கிய நடைமுறை குறிப்புகளை நிலைநிறுத்துகிறார். முதலாவதாக, இவைகள் ஒவ்வொரு விசுவாசியின் ஊழியத்திற்கும் பரிசுத்த

ஆவியானவரின் தெய்வீக நோக்கத்திற்கு இணங்க அவருடைய தீர்மானத்தின்படி மட்டுமே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இந்த ஆவிக்குரிய வரங்களைப் பெறுவதற்கு மனித சித்தமோ, சாதனைகளோ அடிப்படை அன்று. இரண்டாவதாக, 7ம் வசனத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பின்படி, இவைகள் ''அவனவனுக்கு பொது நலனுக்கென்று'' அளிக்கப்படுகின்றன-அதாவது ஒரு நடைமுறைக்கு பயனுள்ள நோக்கத்திற்காக அளிக்கப்படுகின்றன. திரு. பாப் மம்ஃபோர்டு (Bob Mumford) கூறியுள்ளது போல ஆவியின் வரங்கள் விளையாட்டு பொம்மைகள் அல்ல, அவைகள் கருவிகள் ஆகும்.

இந்த ஒன்பது வரங்களும், இயல்பாக மூன்று வரங்களை கொண்ட மூன்று பிரிவுகளாக உள்ளன என அடிக்கடி குறிப்பிடப்படுவதுண்டு:

**வாய்மொழி** வரங்கள் மூன்று - இவைகள் விசுவாசியின் குரல்வளை வழியாக செயல்படுகின்றன தீர்க்கதரிசனம் உரைத்தல்; பற்பல பாஷைகளைப் பேசுதல் நவமான பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்.

**வெளிப்பாட்டு** வரங்கள் மூன்று-இவைகள் ஆவிக்குரிய பிரகாசத்தை தருகின்றன: ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம் ஆவிகளைப் பகுதித்தறிதல்.

**வல்லமை** வரங்கள் மூன்று-இவைகள் இயற்கைக்கப்பாற்பட்ட தேவ வல்லமையை இயற்கை தளத்தில் வெளிப்படுத்துகின்றன: விசுவாசம், குணமாக்கும் வரங்கள், அற்புதங்களைச் செய்யும் சக்தி.

## "தேவனுடைய விசுவாசம் உடையவனாயிரு"

நாம் இப்பொழுது கற்றுக் கொள்ள இருக்கும் விசுவாசம் என்னும் வரம் மூன்று வல்லமை வரங்களில் முதலாவதாகும். இந்த விசுவாசம் விசுவாசியின் மூலம் செயல்படுகின்ற பரிசுத்த

ஆவியானவரின் இயற்கைக்கப்பாற்பட்ட தெய்வீக வெளிப்படுதல் என்பதால் இது மற்ற வகை விசுவாசங்களிலிருந்து மாறுபட்டது. இதற்கான இரண்டு திறவுகோல் வார்த்தைகள் **தெய்வீக, இயற்கைக்கப்பாற்பட்ட** என்பவைகளாகும்.

மத்தேயு 21ம் அதிகாரத்திலும் மாற்கு 11ம் அதிகாரத்திலும் எப்படி இயேசு தமது சீஷர்களுடன் எருசலேமுக்கு தாம் செல்லுகின்ற வழியிலே வழியோரத்திலிருந்த அத்திமரத்தண்டை வந்தார் எனக் காண்கிறோம். இயேசு அதில் கனியைத் தேடினார். அந்த மரத்தில் இலைகளையன்றி கனிகள் காணப்படாததினால், அதன் மீது ஒரு சாபத்தைக் கூறினார்: "இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன்" (மாற்கு 11:14) என்றார். மறுநாளிலே அவர்கள் அதே மரத்தை கடந்து சென்ற பொழுது இருபத்தி நான்கு மணி நேரத்தில் அது வேரோடே பட்டுப் போயிருக்கிறதைக் கண்டு சீஷர்கள் ஆச்சரியப்பட்டனர். பேதுரு இதை நினைவு கூர்ந்து, அவரை நோக்கி: ரபீ, இதோ, நீர் சபித்த அந்த மரம் பட்டுப் போயிற்று என்றார் (மாற்கு 11:21).

பேதுரு கூறியதற்கு இயேசு மறுமொழியாக "தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்" (மாற்கு 11:22) என்றார். இது சாதாரண மொழிபெயர்ப்பு. என்றாலும் இயேசு உண்மையில் கூறியது என்னவென்றால், சரியான மொழிபெயர்ப்பிலே "தேவனுடைய விசுவாசம் உடையவர்களாய் இருங்கள்" என்பதாகும். இது நாம் இங்கு விளக்கும் விசுவாசம் என்னும் **வரமாகிய** விசேஷித்த வகையான விசுவாசத்தைப் பற்றி கூறுகிறது. விசுவாசத்தின் ஆரம்பம் மனிதனில் இல்லை. அது தேவனிடத்திலிருந்து ஆரம்பிக்கிறது. அது தேவனுடைய நித்திய பண்பாகும். (இந்தப் புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தில் இதைப்பற்றி முழுவதும் பார்ப்போம்.) விசுவாசம் என்னும் வரத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர் ஒரு

விசுவாசிக்கு நேரிடையாக இயற்கைக்கப்பாற்பட்ட நிலையில் தேவனுடைய விசுவாசத்தின் ஒரு பகுதியை தருகிறார் பூமிக்கு வானம் எவ்வளவு உயரமானதோ, அவ்வளவாய் தெய்வீக விசுவாசம் மனித விசுவாசத்தை விட உயரமாய் உள்ளது.

“தேவனுடைய விசுவாசம் உடையவர்களாயிருங்கள்” என்று இயேசு சொல்லும் போது, அவர் செயல்படுத்தியது போல இவ்வகையான விசுவாசத்தை தம்முடைய சீஷர்கள் பெற்றுக் கொண்டு செயற்படுத்தும்படி அறைகூவல் விடுகிறார். இவ்விதமான விசுவாசத்தைக் கொண்டு அவர்கள் அத்திமரத்திற்கு தாம் செய்யக்கண்ட காரியத்தை செய்வது மட்டுமல்லாமல் ஒரு வார்த்தையைப் பேசுவதின் மூலம் அவர்களால் ஒரு மலையையே அசைக்கக்கூடும் என்றும் கூறுகிறார்: ‘‘நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்தேயு **21:21**).

மாற்கு **11:23**ல் இயேசு, ‘‘நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால்...’’ என்று சொல்லாமல் ‘‘எவனாகிலும்...’’ என்று கூறுவதால் அவர் தமது வாக்குத்தத்தத்தை அங்கிருந்த சீஷர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லா விசுவாசிகளுக்கும் உரியதாக்குகிறார்: “எவனாகிலும் இந்த மலையை பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்னு தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார். இப்படிப்பட்ட விசுவாசம் செய்யக்கூடிய சாதனைக்கு இயேசு ஓர் எல்லையை வரையறுக்கவில்லை. எல்லாருக்கும் உரியதான

வார்த்தைகளையே அவர் பயன்படுத்துகிறார்: "எவனாகிலும்... என்று சொல்லி, தான் சொன்னபடியே ...அவன் சொன்னபடியே ஆகும்..." யார் பேசுகிறார் என்றோ என்ன பேசப்படுகிறது என்றோ ஒரு தடையும் குறிக்கப்படவில்லை. அது எந்த வகையான விசுவாசம் என்பதே முக்கியமாய் உள்ளது: அது தேவனுடைய சொந்த விசுவாசமாயிருக்க வேண்டும்.

லூக்கா 8:22-25 வரையுள்ள வசனங்களில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஒரு படகில் கலிலேயாக் கடலைக் கடக்கும் பொழுது, இயற்கைக்கு மாறான ஒரு பலத்த சுழல்காற்றை அவர்கள் எதிர்பட்ட சம்பவத்தை பார்க்கிறோம். சீஷர்கள் கப்பலின் பின்னணியத்தில் நித்திரை செய்து கொண்டிருந்த இயேசுவை எழுப்பி, "ஐயரே, ஐயரே, நாங்கள் மடிந்து போகிறோம்!" என்றனர். "அவர் எழுந்து காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; உடனே அவைகள் நின்று போய், அமைதலுண்டாயிற்று" என்று பார்க்கிறோம்.

தெளிவாக இங்கு இயேசு செயல்படுத்திய விசுவாசம் மனித தளத்திற்குரிய விசுவாசமன்று. சாதாரணமாக காற்றும், தண்ணீரும் மனித கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. ஆனால் அந்த இக்கட்டான வேளையில் இயேசு தேவனுடைய தனிப்பட்ட விசுவாசத்தின் விசேஷ பகிர்ந்தளிப்பை பெறுகிறார். பின்பு அந்த விசுவாசத்தைக் கொண்டு பேசப்பட்ட வார்த்தையினால் தேவனால் மட்டுமே செய்யக்கூடிய காரியத்தை அவர் நிறைவேற்றினார்- சுழல்காற்று உடனடியாய் அமைதியாயிற்று.

அந்த ஆபத்தான கட்டத்திற்கு பிறகு இயேசு தமது சீஷர்களைப் பார்த்து, "**உங்கள்** விசுவாசம் எங்கே**?**" என்று கேட்டார். இதை வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், "இதை **நான்** ஏன் செய்யவேண்டும்**?**" இதை **நீங்கள்** ஏன் செய்திருக்கக்கூடாது**?**" என்று கேட்கிறார். சீஷர்கள் சரியான விசுவாசத்தை செயற்படுத்தியிருப்பார்கள் என்றால், சுழல்காற்றை அமைதிப்படுத்துவது அவருக்கு எவ்வளவு

எளிதாய் இருந்ததோ அவ்வளவாய் அவர்களுக்கும் இருந்திருக்கும் என்று கூறுகிறார். ஆனால் ஆபத்தான வேளையிலே சுழல்காற்று சீஷர்களின் புலன்களை தாக்கினதால், பயம் அவர்களின் இருதயத்தில் நுழைய வழியை உண்டாக்கியது. இதனால் விசுவாசம் வெளியேற்றப்பட்டது. இயேசு இதற்கு மாறாக, தமது இருதயத்தை பிதாவிற்கு திறந்து சூழல்காற்றை அமைதிப்படுத்துவதற்கான இயற்கைக்கப்பாற்பட்ட விசுவாசத்தை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

## தரமே முக்கியம் அளவு அல்ல

இதற்குப் பின்பு இயேசு இன்னொரு வகையான புயலைச் சந்திக்கிறார்- காக்காய் வலிப்பு பிடித்த ஒரு பையன் தரையில் உருண்டு கொண்டிருக்கின்றான். மனவேதனைப்படும் அவனின் தந்தை உதவியை நாடி நிற்கின்றார். இயேசு கலிலேயா கடலில் புயலை மேற்கொண்டது போல இந்தப் புயலையும் சந்திக்கின்றார். அவர் அதிகாரமுள்ள ஒரு விசுவாச வார்த்தையை பேசின பொழுது அந்த பையனிலிருந்து ஒரு அசுத்த ஆவி வெளியேறியது. அவருடைய சீஷர்கள் இதை தங்களால் ஏன் செய்யகூடாமற் போயிற்று என்று அவரை கேட்டபொழுது, அவர் அவர்களிடம் தெளிவாக ‘‘அது உங்களுடைய அற்ப விசுவாசத்தினாலேயே” என்றார். இயேசு மேலும், “கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்தேயு **17:20**) என்றார்.

இங்கு இயேசு ஒரு கடுகு விதையை விசுவாசத்தின் அளவிற்கு குறிப்பிடுகின்றார். மத்தேயு **13:32**ல் கடுகு விதையானது ‘‘சகல விதையிலும் சிறியது’’ என்று வாசிக்கிறோம். வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால்

விசுவாசத்தின் **அளவு** அல்ல, ஆனால் விசுவாசத்தின் **தரமே** முக்கியமானது என்று இயேசு கூறுகிறார். இவ்வகையான விசுவாசத்தின் கடுகு அளவு ஒரு மலையைப் பெயர்க்கப் போதுமானதாகும்.

தம்முடைய பூவுலக ஊழியத்தின் கடைசி கட்டத்தில், இலாசருவின் கல்லறைக்கு வெளியே, இயேசு மீண்டும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் கொண்டு பேசப்படும் வார்த்தைகளின் வல்லமையை வெளிப்படுத்துகிறார். அவர் உரத்த சத்தமாய் “இலாசருவே வெளியே வா” (யோவான் 11:43) என்றார். இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசத்தினால் ஆற்றல் ஊட்டப்பட்ட இச்சிறிய வாசகம் மரித்து அடக்கம் பண்ணப்பட்ட ஒரு மனிதனை தன் கல்லறையிலிருந்து உயிருடன் சுகமாய் வெளியே நடந்து வர செய்தது.

இப்படிப்பட்ட விசுவாசத்தின் ஆற்றலை படைப்பின் செயலிலேயே நாம் காண்கிறோம். தம் சொந்த வார்த்தியில் உள்ள விசுவாசத்தினால் தேவன் இப்பிரபஞ்சத்தை உண்டாக்கினார். ‘‘கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் (சரியாக ஆவியினால்) அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது... அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்” (சங்கீதம் 33:6,9). தேவன் பேசிய வார்த்தைகள் பரிசுத்த ஆவியானவரால் வல்லமைப்படுத்தப்பட்டு படைப்பு அனைத்தையும் தோற்றுவித்தது.

விசுவாச வரம் செயல்படும் பொழுது ஒரு மனிதன் சிறிது நேரத்திற்கு தேவனுடைய சொந்த விசுவாசத்தின் கால்வாய் ஆகிறான். பேசுவது **யார்** என்பது முக்கியமல்ல, வெளிப்படும் **விசுவாசம்** மட்டுமே முக்கியமானது. தேவனுடைய சொந்த விசுவாசம் செயல்படுகிறதென்றால், வார்த்தைகள் தேவனுடைய வாயினால் பேசப்பட்டாலோ அல்லது பரிசுத்த ஆவியானவரால் ஒரு மனித விருவாசியின் வாயின் மூலமாக உரைக்கப்பட்டாலோ

அவைகள் ஆற்றல் நிறைந்ததாகவே இருக்கும். இந்த தெய்வீக விசுவாசத்தில் ஒரு விசுவாசி செயல்படும்பொழுது, அவனுடைய வார்த்தைகள் தேவனே அவைகளைப் பேசியதைப் போன்று வல்லமையுடையதாய் இருக்கும். **விசுவாசமே** முக்கியமாயுள்ளது, மனிதனல்ல.

இதுவரைக்கும் நாம் பார்த்த உதாரணங்களில் இந்த இயற்கைக்கப்பாற்பட்ட விசுவாசம் பேசப்பட்ட ஒரு வார்த்தையினால் வெளிப்படுத்தப்பட்டது. பேசப்பட்ட ஒரு வார்த்தையின் மூலமே இயேசு அத்தி மரத்தை பட்டுப் போகச் செய்தார். மேலும் பேசப்பட்ட வார்த்தை மூலமாகவே அவர் புயலை அடக்கினார்; காக்காய் வலிப்பு பிடித்த பையனிலிருந்த அசுத்த ஆவியைத் துரத்தினார்; இலாசருவை கல்லறையிலிருந்து வெளியே வரச் செய்தார். மாற்கு **11:23**ல் இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசத்தினால் பேசப்படும் எந்த வார்த்தைக்கும் உரியதாக்கிக் கூறுகின்றார்: ''எவனாகிலும்... என்று சொல்லி, தான் சொன்னபடியே ...அவன் சொன்னபடியே...'' என்றார்.

சில வேளைகளில் ஜெபத்தில் பேசப்படும் ஒரு வார்த்தை விசுவாச வரத்திற்கு கால்வாயாய் அமைகிறது. யாக்கோபு **5:15**ல் **''விசுவாசமுள்ள ஜெபம்** பிணியாளியை இரட்சிக்கும்'' என்று சொல்லப்பட்டுள்ளது. இங்கே விளக்கிச் சொல்லப்பட்டுள்ளது போன்ற ஜெபத்தின் பலனைப் பற்றி சந்தேகத்திற்கு எந்த இடமுமில்லை. அவற்றிற்கு நிச்சயமாய் பலன்கள் உண்டு. இப்படிப்பட்ட தேவ விசுவாசத்தைக் கொண்டு விண்ணணப்பம் செய்யப்படும் ஜெபம் எல்லா தடைகளையும் மேற்கொள்ளும். தேவனுடைய சித்தத்திற்கு விரோதமான எந்த நோயோ அல்லது வேறு எந்த சூழ்நிலையோ இதை எதிர்த்து நிற்க முடியாது.

''விசுவாச ஜெபத்திற்கு'' உதாரணமாக யாக்கோபு எலியாவைக் குறிப்பிடுகிறார். அவன் தன் ஜெபத்தினால் மூன்றரை ஆண்டுகளுக்கு எந்த மழையும் பெய்யாதபடி தடுத்து

நிறுத்தினான், பின்பு மீண்டும் மழையை பெய்யப்பண்ணினார். (யாக்கோபு 5:17-18) மழையை பெய்யச் செய்வதும் நிறுத்தி வைப்பதும் தேவன் தாமே செயற்படுத்தும் தெய்வீக உரிமை என்று வேதம் குறிப்பிடுகின்றது. (உதாரணத்திற்கு உபாகமம் 11:13-17; எரேமியா 5:24; 14:22 வசனங்களைப் பார்க்க). எனினும் எலியா மூன்றரை ஆண்டுகளுக்கு தேவனுடைய சார்பில் இந்த உரிமையை செயல்படுத்துகிறான். யாக்கோபு எலியாவை "நம்மைப் போலப் பாடுள்ள மனுஷன்" என்று வலியுறுத்துகிறார் - அதாவது நம் அனைவரையும் போன்ற எளிய மனிதன் என்கிறார். ஆனால் தேவனுக்கடுத்த விசுவாசத்தைக் கொண்டு அவன் ஜெபித்த பொழுது அவன் பேசிய வார்த்தைகள் தேவனுடைய சொந்த கட்டளைகளைப் போன்றே பலித்தன.

என்றாலும் இப்படிப்பட்ட விசுவாசம் பேசப்பட்ட ஒரு வார்த்தையினால் மட்டுமே செயல்பட வேண்டும் என்பதல்ல. இதே வகையான இயற்கைக்கப்பாற்பட்ட விசுவாசத்தினால் தான், இயேசுவினால் காற்று நிறைந்த கலிலேயாக் கடலின் மேல் நடக்க முடிந்தது (மத்தேயு 14:25-33 வரையுள்ள வசனங்களைப் பார்க்க) இவ்வேளையில் அவர் பேசுவதற்கு அவசியமற்றதாய் இருந்தது; அவர் அப்படியே தண்ணீரின் மேல் நடந்தார். இதே வகையான விசுவாசத்தைப் பேதுருவும் பயன்படுத்தி இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி நடக்க ஆரம்பித்தான். இதனால் இயேசு செய்ததையே அவனாலும் செய்ய முடிந்தது. ஆனால் அவன் இயேசுவிலிருந்து தன் கண்களை எடுத்து அலைகளின் மேல் பதித்த பொழுது அவன் விசுவாசம் அவனைக் கைவிடவே அவன் மூழ்க ஆரம்பித்தான்!

இவ்விடத்தில் இயேசு கூறிய வார்த்தைகள் நமக்கு அறிவூட்டுவதாக உள்ளன: ''அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்?" (மத்தேயு 14:31) என்றார். தண்ணீரில் நடக்க விரும்பியதற்கு இயேசு பேதுருவை கடிந்து கொள்ளவில்லை.

பாதிவழியில் விசுவாசத்தைக் கைவிட்டதற்குத் தான் அவர் கடிந்து கொள்கிறார். திரு. டான் பாஷம் (Don Basham) என்பவர் ஒவ்வொரு மனித இருதயத்திலும் இயற்கைக்கப்பாற்பட்ட விசுவாசத்தில் அடியெடுத்து வைத்து, தன்னுடைய சொந்த திறமையின் அளவிற்கு மேலான தளத்தில் நடைபோடும்படி தெய்வீக உந்துதல் நடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். தேவன் தாமே இந்த ஆவலை மனிதனில் வைத்ததால், இதைக் குறித்து அவர் மனிதனைக் கடிந்து கொள்கிறதில்லை. இதற்கு மாறாக, இதைச் செய்யக்கூடிய விசுவாசத்தை நமக்குத் தர அவர் சித்தமுடையவராய் இருக்கிறார். இவ்விதமான விசுவாசத்தை நாம் நாடிச் செல்லும் பொழுது அவர் மகிழ்கிறார். ஆனால் தொடர்ந்து இதில் நிலைத்து நிற்க முடியாமல் போகும் பொழுது அவர் ஏமாற்றம் அடைகிறார்.

## இதைத் துவக்கி வைப்பவர் தேவனே

இந்த இயற்கைக்கப்பாற்பட்ட வகையான விசுவாசம் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட தேவையை சந்திக்கும்படி கொடுக்கப்படுகிறது. அது தேவனுடைய நேரிடை கட்டுப்பாட்டிற்குள் வருகிறது. அது தேவனுடைய சொந்த விசுவாசமாய் இருப்பதால், அது அவருடைய கட்டுப்பாட்டிற்குள் தான் இருக்க வேண்டும். அவர் தமது தீர்மானத்தின்படி அதை கொடுக்கின்றார் அல்லது அதை நிறுத்தி வைக்கின்றார். இது மற்ற இயற்கைக்கப்பாற்பட்ட வரங்களில் ஒன்றாகும். இந்த வரங்களைக் குறித்துப் பவுல், **1** கொரிந்தியர் **12:11**ல் "இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" என்று கூறுகிறார். இங்கு திறவுகோல் வார்த்தைகள் "**அவருடைய** சித்தத்தின்படியே என்பதாகும். தேவன் தாமே இந்த வரங்கள் ஒவ்வொன்றினையும் யாருக்கு, எப்பொழுது கொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கின்றார்.

இதன் துவக்கம் மனிதனில் அல்ல. தேவனிலேயே ஆரம்பமாகிறது.

இயேசுவினுடைய ஊழியத்தைப் பொறுத்தமட்டிலும் கூட இது உண்மையாய் இருந்தது. ஒவ்வொரு கனியற்ற அத்திமரத்தையும் அவர் சபிக்கவில்லை; ஒவ்வொரு புயலையும் அவர் அமைதிப்படுத்தவில்லை; மரித்த ஒவ்வொருவனையும் அவனுடைய கல்லறையிலிருந்து அவர் வெளியே வரச் சொல்லவில்லை; அவர் எப்பொழுதுமே தண்ணீரின் மேலே நடக்கவில்லை. அவர் கவனமாய் இதன் தொடக்கத்தை தமது பிதாவினுடைய கரங்களில் விட்டு விட்டார். யோவான் **5:19**ல் ‘‘பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்” என்று அவர் கூறினார். மீண்டும் யோவான் **14:10**ல் “நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்” என்று பார்க்கிறோம் எப்பொழுதுமே ஆரம்பம் பிதாவினால் உண்டானது.

இயேசுவைப் போல நாம் பிதாவினிடத்தில் கொள்ளும் நமது உறவில் கவனமாயும், பயபக்தியாயும் இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். இந்த விசுவாச வரம் நம்மால் கட்டுப்படுத்தப்படுவதன்று. இது நம்முடைய சொந்த விருப்பங்களையும், ஆசைகளையும் நிறைவேற்றுவதற்கு கொடுக்கப்படுவதன்று தேவனுடைய நித்திய நோக்கத்தில் அமைந்திருக்கும் காரியங்களை நிறைவேற்றும்படி தேவனுடைய தீர்மானத்தின்படி இது அளிக்கப்படுகிறது. இதை ஆரம்பிக்கும் உரிமையை நாம் தேவனிடத்திலிருந்து பறிக்க முடியாது, பறிக்க முற்படவும் கூடாது. தேவன் இதைச் செய்ய அனுமதித்தாலும் கூட அதினால் இறுதியில் நமக்குத் தான் இழப்பு உண்டாகும்.

ஒரு “கடுகு விதைக்கு” ஒப்பிட்டுச் சொல்லப்படும் பொழுது, இந்த விசுவாச வரம் இரண்டு வெளிப்பாட்டு வரங்களுடன் -

ஞானத்தைப் போதிக்கும் வசனம் அறிவை உணர்த்தும் வசனம் - இவைகளுடன் ஒத்ததாய் இருக்கிறது. ஞானம் நமக்கு வழியை காட்டுகிறது; அறிவு நமக்கு குறிப்புகளைத் தருகிறது. தேவன் சகல ஞானத்தையும், அறிவையும் உடையவராய் இருக்கிறார். ஆனால் அதிர்ஷ்டவசமாக அவையனைத்தையும் அவர் நம்மேல் சுமத்துவதில்லை. எனினும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நமக்கு வழி தேவைப்படும் பொழுது, அவர் தமது எல்லையற்ற ஞானக்களஞ்சியத்திலிருந்து ஒரு சிறு "கடகு விதையைப்" போன்ற ஞானத்தைப் போதிக்கும் "வசனத்தை" எடுத்து நமக்கு கொடுக்கிறார். அல்லது ஒரு சூழ்நிலையில் நமக்கு தகவல்கள் தேவைப்படும் பொழுது, அவர் தமது எல்லையற்ற அறிவுக்களஞ்சியத்திலிருந்து ஒரு சிறு "கடுகு விதையைப்" போன்ற அறிவை உணர்த்தும் "வசனத்தை" எடுத்து நமக்கு கொடுக்கிறார்.

விசுவாச வரமும் இவ்வாறே செயல்படுகிறது. தேவன் சகல விசுவாசத்தையும் உடையவராய் இருக்கிறார். ஆனால் அனைத்தையும் அவர் நமக்கு கொடுத்து விடுவதில்லை, நமது சொந்த விசுவாசத்திற்கு மேலாக உயர்ந்த தளத்தில் செயல்பட நமக்கு விசுவாசம் தேவைப்படும் பொழுது, தேவன் தமது எல்லையற்ற களஞ்சியத்திலிருந்து ஒரு "கடுகு விதையை" எடுத்து நமக்கு கொடுக்கிறார். இந்த சிறந்தத் தேவை சந்திக்கப்பட்டவுடன், தேவன் தமது விசுவாசத்தை திரும்ப எடுத்துக் கொள்கிறார். அவ்வேளையில் மீண்டும் நமக்கு நமது சொந்த விசுவாசம் மட்டுமே செயல்படுத்த உள்ளது.

## சுவிசேஷத்திற்கான கருவிகள்

வேறொரு கோணத்தில் பார்க்கும் பொழுது, நாம் முன்பு கண்டபடி, விசுவாசம் என்னும் வரமானது இரண்டு வல்லமை வரங்களோடு இணைக்கப்பட்டதாய் உள்ளது. குணமாக்கும் வரங்கள், அற்புதங்களைச் செய்யும் சக்தி. நடைமுறையில்

விசுவாச வரம் ஒரு கிரியா ஊக்கியாக அமைந்து மற்ற இரண்டு வரங்களையும் இயக்குகிறது. இதற்கான உதாரணத்தை அப். **8:5-8** வரையுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ள சமாரியா நாட்டில் பிலிப்பு செய்த ஊழியத்தில் காணலாம்.

> **(5)** அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்.
>
> **(6)** பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.
>
> **(7)** அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகம் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.
>
> **(8)** அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.

தனது ஊழியத்தின் முதற்கட்டத்தில், பிலிப்பு அசுத்த ஆவிகளைத் துரத்துகிறார். மத்தேயு **17:17-20** வரையுள்ள வசனங்களில் நாம் பார்த்த இயேசுவின் உதாரணத்திலும் மற்ற இடங்களிலேயும், இந்த காரியம் விசுவாச வரத்தை செயல்படுத்தி பேசப்பட்ட வார்த்தையின் மூலம் செய்யப்பட்டது. பிலிப்புவின் ஊழியத்தின் இரண்டாம் கட்டத்தில் இரண்டு இணையான வரங்கள் - **குணமாக்கும்** வரங்கள், **அற்புதங்களைச்** செய்தல் - ஆகியவை செயல்பட ஆரம்பித்தன. இதன் விளைவாக திமிர்வாதக்காரரும், சப்பாணிகளும் சுகமடைந்து நடக்கின்ற அற்புதங்களைக் காண்கிறோம்.

அப்.**21:8**ல் பிலிப்பு “சுவிசேஷகர்” என்று அழைக்கப்படுகிறார். ஒரு சுவிசேஷகருடைய ஊழியத்தின் உண்மையான மாதிரியை புதிய ஏற்பாட்டில் இரண்டு நபர்களில் மட்டுமே காண்கிறோம்: ஒன்று இயேசுவின் ஊழியம், மற்றது பிலிப்புவின் ஊழியம். இவ்விரண்டிலுமே அசுத்த ஆவிகளைத் துரத்துதலுக்கு அதிக

முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அற்புதங்களும், சுகமும் உண்டாயின. ஒரு சுவிசேஷகருடைய ஊழியத்திற்கு விசுவாசம், அற்புதங்கள், சுகமளித்தல் ஆகிய மூன்று வரங்களும் இயற்கைக்கப்பாற்பட்ட கருவிகள் என புதிய ஏற்பாடு தெளிவுப்படுத்துகிறது.

## தொகுப்பு

விசுவாசம் என்னும் வரமானது **1** கொரி. **12:7-11** வரையுள்ள வசனங்களில் பவுல் வரிசைப்படுத்தியுள்ள பரிசுத்த ஆவியானவரின் ஒன்பது வரங்களில் ஒன்றாகும். இவைகள் ஒவ்வொன்றும், ஒரு விசுவாசியினுள் வாசம் செய்து அவர் மூலமாய் செயல்படும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கப்பாற்பட்ட வெளிப்படுதலாகும்.

விசுவாச வரத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசிக்கு தற்காலிகமாக தேவனுடைய விசுவாசத்தின் ஒரு பங்கை கொடுக்கிறார். இது தெய்வீக தளத்தின் விசுவாசம். மனித விசுவாசத்தை விட இது மிகவும் உயர்ந்தது. விசுவாசத்தின் அளவு அல்ல, ஆனால் விசுவாசத்தின் தரமே முக்கியமானது. இவ்வகையான விசுவாசத்தின் "கடுகளவு" ஒரு மலையைப் பெயர்க்கப் போதுமானது.

விசுவாச வரம் அடிக்கடி, ஆனால் பிரத்தியேகமாக அல்லாமல், பேசப்பட்ட ஒரு வார்த்தையின் வழியாக செயல்படுகிறது. இப்படிப்பட்ட வார்த்தை ஜெபத்தில் பேசப்படலாம். இந்த வரத்தினால் இயேசு 24 மணி நேரத்தில் ஓர் அத்தி மரத்தைப் பட்டுப்போகச் செய்தார்; கடலில் ஏற்பட்ட புயலை அமைதிப் படுத்தினார்; காக்காய் வலிப்புள்ள ஒரு பையனிலிருந்து அசுத்த ஆவியைத் துரத்தினார்; இலாசருவை கல்லறையிலிருந்து வெளியே வரச் செய்தார்; கொந்தளிக்கும் அலைகளின் மேல் நடந்தார்.

இவ்வகையான விசுவாசத்தைச் செயல்படுத்தும் ஒரு

உந்துதலை தேவன் மனிதனில் நாட்டி இருக்கிறார். ஆகவே இதைச் செய்யும் போது அவர் நம்மைக் கடிந்து கொள்வதில்லை. மாறாக இந்த விசுவாசத்தை வெகு சீக்கிரத்தில் கைவிடும்போது தான் அவர் ஏமாற்றம் அடைகிறார். எனினும் இயேசுவின் ஊியத்தைப் போலவே இதன் ஆரம்பத்தை எப்பொழுதுமே தேவனிடத்தில் விட்டு விட வேண்டும்.

குணமாக்கும் வரங்கள், அற்புதங்களை நடப்பித்தல் என்னும் இணையான வரங்களுக்கு விசுவாச வரம் ஒரு கிரியா ஊக்கியாக இருக்கிறது. ஒரு சுவிசேஷகருடைய ஊழியத்திற்கு இந்த மூன்று வரங்களும் இணைந்து செயல்படும் கருவிகள் என புதிய ஏற்பாடு இயம்புகிறது.

# அத்தியாயம் நான்கு
# விசுவாசம் என்னும் கனி

கடந்த அத்தியாயத்தில் 1 கொரி. 12:8-10 வரையுள்ள வசனங்களின் பவுல் வரிசைப்படுத்தியுள்ள ஆவிக்குரிய ஒன்பது வரங்களைப் பற்றிக் கண்டோம். இந்த அத்தியாயத்தில் பவுல் கலாத்தியர் 5:22-23ல் குறிப்பிடும் ஆவிக்குரிய ஒன்பது வகையான கனியின் பட்டியலைப் பற்றி காண்போம்: "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்'' என்பவைகளாகும்.

இந்தப் பட்டியலில் ஏழாவது வகையான கனி **விசுவாசம்** ஆகும். சமீப கால ஆங்கில மொழி பெயர்ப்புகளில் இவ்வார்த்தை ''உண்மையாயிருத்தல்" "நேர்மையாயிருத்தல்," ''நம்பத்தகு தன்மை'' என்னும் பல வார்த்தைகளினால் குறிக்கப்படுகின்றது. என்றாலும் பவுல் இங்கு பயன்படுத்தும் கிரேக்கப் பெயர்ச்சொல் **பிஸ்டிஸ்** என்பதாகும். நாம் முதலாம் அத்தியாத்தில் பார்த்தது போல, புதிய ஏற்பாடு முழுவதிலும் விசுவாசம் என்னும் சொல்லுக்கு இதுவே அடிப்படைச் சொல்லாக இருக்கிறது.

இந்த குறிப்பிட்ட வகையான கனியைப் பற்றி நாம் படிப்பதற்கு முன்பதாக வரங்களுக்கும், கனிக்கும் இடையே பொதுவாக உள்ள உறவினை முதலில் காண்பது உதவியாக இருக்கும். இவைகளுக்கு இடையே உள்ள வித்தியாசம் என்ன?

## கனியும், வரங்களும்

இந்த வித்தியாசத்தை கண்டு கொள்வதற்கு ஒரு வழி என்னவென்றால் ஒரு கிறிஸ்மஸ் மரத்தையும், ஒரு ஆப்பிள் மரத்தையும் அடுத்தடுத்து வைப்பதிலிருந்து அறியலாம். ஒரு கிறிஸ்மஸ் மரம் வரங்களை அல்லது ஈவுகளை அளிக்கிறது; ஒரு ஆப்பிள் மரம் கனியை கொடுக்கிறது. ஒரு கிறிஸ்மஸ் மரத்தில் ஒரு வரம் அல்லது ஈவானது ஒரு எளிய செயலாகக் கட்டப்பட்டு ஒரு எளிய செயலாகவே அது மரத்திலிருந்து எடுக்கப்படவும் செய்கிறது. இந்த ஈவானது ஓர் ஆடையாக இருக்கலாம்; அது கட்டப்பட்ட மரம் தேவதாரு மரமாக இருக்கலாம். மரத்திற்கும், ஈவிற்கும் எந்த நேரடி தொடர்பும் இல்லை. அந்த ஈவானது, அது எந்த மரத்திலிருந்து எடுக்கப்பட்டதோ அதன் தன்மையைப் பற்றி நமக்கு எதுவும் சொல்வதில்லை.

அதற்கு மாறாக, ஒரு ஆப்பிளுக்கும், அதனைக் கொடுக்கும் மரத்திற்கும் நேரிடைத் தொடர்பு உள்ளது. மரத்தின் பண்பு கனியின் பண்பை, அதனுடைய வகையையும், தரத்தையும் தீர்மானிக்கிறது. ஒரு ஆப்பிள் மரம் ஒரு ஆரஞ்சு கனியைத் தரவே தராது. ஆரோக்கியமான ஒரு மரம் ஆரோக்கியமான கனியைக் கொடுக்கும்; ஆரோக்கியமற்ற ஒரு மரம் ஆரோக்கியமற்ற கனியைக் கொடுக்கும். (மத்தேயு 17:20 வரையுள்ள வசனங்களைப் பார்க்க). ஆப்பிள் மரத்தில் தோன்றும் கனி ஒரே ஒரு செயலினால் உருவாக்கப்படுவதில்லை. ஆனால் அது சீரான, தொடர்ச்சியான வளர்ச்சியின் பயனாக உண்டாகிறது. நல்ல கனி உண்டாவதற்கு, அம்மரம் நன்கு பாதுகாக்கப்படவேண்டும். இதற்கு நேரம், திறமை, உழைப்பு தேவை.

இந்த எளிய உதாரணத்தை ஆவிக்குரிய தளத்திற்கு பயன்படுத்துவோம். ஓர் ஆவிக்குரிய வரம் ஒரு சிறிய சுருக்கமான செயலினால் அளிக்கப்படுகிறது; பெற்றுக்

கொள்ளப்படுகிறது. அதைச் செயல்படுத்தும் நபரின் பண்பைப் பற்றி அது நமக்கு ஒன்றும் சொல்வதில்லை. அதே நேரத்தில் ஆவிக்குரிய கனி, அது எந்த வாழ்விலிருந்து வெளிப்படுகிறதோ அதன் பண்பைக் காட்டுகிறது; வளர்ச்சியின் பயனாக மட்டுமே அது தோன்றுகிறது. நல்ல கனியை அடைவதற்கு வாழ்க்கையை கவனத்துடன் நேரமெடுத்து திறமையினாலும், உழைப்பினாலும் பண்படுத்த வேண்டும்.

இந்த வித்தியாயசத்தை வேறு முறையில் சொல்லப்போனால் வரங்கள் **திறமையை** வெளிப்படுத்துகின்றன. கனி **குணத்தை** வெளிப்படுத்துகிறது.

எது மிகவும் முக்கியமானது ? காலப்போக்கில் சந்தேகமின்றி திறமையை விட பண்பு மிக முக்கியமானது. வரங்களை செயல்படுத்துதல் தற்காலிகமானது. 1 கொரி.13:8-13 வரையுள்ள வசனங்களில் பவுல் விளக்குவது போல, ஒரு காலம் வரும், அப்பொழுது வரங்கள் தேவைப்படாது. ஆனால் குணம் நிரந்தரமானது. இவ்வாழ்க்கையில் நாம் வளர்த்துக்கொள்ளும் பண்பு நித்தியம் முழுவதிலும் நாம் இருக்கக்கூடிய நிலையை நிர்ணயிக்கிறது. ஒரு நாளில் நாம் நமது வரங்களை பின் விட்டுச் செல்வோம்; நமது குணம் நிரந்தரமாய் நம்முடன் இருக்கும். வரங்கள் குணத்திற்கு நடைமுறை தோற்றத்தை அளிக்க வேண்டும். இயேசுவின் வாழ்க்கையில் தாமே இதற்கான தெளிவான உதாணரத்தைக் காணலாம். அவரது அன்பும், கிருபை நிறைந்த பண்பும் ஆவிக்குரிய வரங்களை செயல்படுத்தினதின் மூலமாக முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது. இவைகளின் மூலமாகவே தாம் ஊழியம் செய்ய வந்த மக்களின் தேவைகளை அவரால் சந்திக்க முடிந்தது. பரலோக பிதாவின் பிரதிநிதியாக வந்த அவர் இவ்வாறாக தமது பிதாவின் சுபாவத்தை முழுமையாக வெளிப்படுத்த முடிந்தது. (யோவான் 14:9-10 வசனங்களைப் பார்க்க).

நாம் அவருடைய மாதிரியைப் பின்பற்ற முற்பட வேண்டும். இயேசுவின் வாழ்வில் காணப்பட்ட அன்பு, கரிசனை, இரக்கம் முதலிய இயல்புகளை நாம் நம்மில் அதிகமாக வளர்த்துக் கொள்ளும் பொழுது, இந்த இயல்புகளை நடைமுறையில் வெளிப்படுத்தும்படி அவர் செயல்படுத்தின அதே வரங்கள் நமக்கும் அதிகமாக தேவைப்படும். இந்த வரங்கள் நமக்கு முற்றிலும் கொடுக்கப்படும் போது, இயேசு செய்தது போல, நமது பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்தும் நமது திறமை அதிகரிக்கிறது.

## நம்பிக்கையான விசுவாசம்

எனவே கனி குணத்தை வெளிப்படுத்துகிறது. ஆவிக்குரிய ஒன்பது வகையான கனியும் முழுமையாக வளர்ந்து காணப்படும் பொழுது, அவைகள் கிறிஸ்தவப் பண்பின் முழுமையை வர்ணிக்கின்றன. ஒவ்வொரு கனியும் ஒரு குறிப்பிட்ட தேவையைச் சந்தித்து, மற்றவை அனைத்தையும் தாங்கி நிற்கிறது. இந்த முழுமையில் விசுவாசம் என்னும் கனியை, பிஸ்டிஸ் என்னும் கிரேக்கச் சொல் இரண்டு வித்தியாசமான ஆனால் சம்பந்தப்பட்ட முறையில் பயன்படுத்தப்படுவதிலிருந்து இரண்டு கோணத்தில் காணலாம். முதலாவது **நம்பிக்கை;** இரண்டாவது **நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருத்தல்.**

விசுவாசம் என்னும் கனியின் முதற்கூற்றை விளக்குவதற்கு எருசலேம் வேதாகமம் (Jerusalem Bible) **பிஸ்டிஸ்** என்ற சொல்லை ''நம்பிக்கையாய் இருத்தல்'' என்று மொழி பெயர்க்கின்றது. அநேகம் தடவைகளில் இயேசு, தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் அனைவருக்கும் இருக்க வேண்டிய ஒரு முக்கிய தேவையை பற்றி பேசும் போது சிறு குழந்தைகளைப் போல் ஆகவேண்டும் என்று வலியுறுத்தினார் (மத்தேயு 18:1-14; 19:13-14; மாற்கு 10:13-15; லூக்கா 18:16-17 போன்ற வசனங்களைப் பார்க்க). குழந்தைப் பருவத்தின்

சிறப்பியல்பிலே மிகத்தெளிவாய் காணப்படும் பண்பு **நம்பிக்கையாய் இருத்தலைக்** காட்டிலும் வேறொன்றுமில்லை. எனினும், முரண்பாடாக காணப்பட்டாலும், அநேக முதிர்ந்த தேவ மனிதர்களில் - ஆபிரகாம், மோசே, தாவீது, பவுல் போன்றவர்களின் வாழ்வில் - இந்த பண்பு பூரண நிலையில் காணப்பட்டது. ஆகவே இந்த குறிப்பிட்ட வகையான கனியை நாம் எந்த அளவிற்கு வளர்த்துக் கொள்கிறோமோ அந்த அளவிற்கு நமது ஆவிக்குரிய முதிர்ச்சி உண்டாகும் என்னும் முடிவிற்கு வருகிறோம்.

விசுவாசம் என்னும் கனி-இந்த அர்த்தத்தின்படி - அமைதியான, உறுதியான, எந்த மாறுபாடின்றி தேவனுடைய நன்மையிலும், ஞானத்திலும், நேர்மையிலும் முழு நம்பிக்கை வைப்பதாகும். எந்தவித சோதனைகள், விபரீதங்கள் நேர்ந்தாலும் இவ்வித கனியை வளர்த்துக் கொண்டவன் அவைகள் எல்லாவற்றின் மத்தியிலும் அமைதியாயும், இளைப்பாறுதலுடனும் இருப்பான். ஒவ்வொரு சூழ்நிலையும் தொடர்ந்து தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது என்றும் எல்லா சூழ்நிலைகளினூடே கடந்து செல்லும் போது தேவன் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பதற்கான தமது நோக்கங்களை நடப்பிக்கிறார் என்றும் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவனாய் இருக்கிறான்.

இவ்வித நம்பிக்கையின் வெளிப்புறத் தோற்றம் **ஸ்திரமாய்** இருப்பதாகும். இது சங்கீதம் **125:1**ல் தாவீதினால் அழகாக சொல்லப்பட்டுள்ளது; ‘‘கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள்.” உலகின் எல்லா மலைகளும் - ஒரு மலையைத் தவிர்த்து-நடுங்கி அசைந்து முற்றிலும் நீக்கப்படக்கூடும். சீயோன் மலை தேவன் தாம்

தங்குவதற்காகத் தெரிந்து கொண்ட மலை. அது மட்டுமே அசைக்கப்படாமல் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

தேவனில் நம்பிக்கை வைக்க கற்றுக் கொண்ட விசுவாசியும் இப்படியாய் இருக்கிறான். தன்னைச் சுற்றியுள்ள மற்றவர்கள் அனைவரும் பயத்திற்கும் குழப்பத்திற்கும் உள்ளாகலாம். ஆனால் இவன் அமைதியாக பாதுகாப்பாக இருக்கிறான். “அவர் அஸ்திபாரம் பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது” **(சங்கீதம் 87:1).**

**1960**ம் ஆண்டு வாக்கில் ஆப்பிரிக்காவிலுள்ள மேற்கு கென்யாவில் ஆசிரியப்பயிற்சி கல்லூரி ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுது, ஆக்னிட்டா (Agneta) என்ற மாணவிக்கு டைபாய்டு காய்ச்சல் கண்டது. நானும் என் மனைவியும் அவளை மருத்துவமனையில் சந்தித்த பொழுது அவள் ஆபத்தான நிலையில் ஆழ்ந்த கோமாவில் நோய்வாய்ப்பட்டிருந்ததைக் கண்டோம். அவள் என்னுடன் சற்று நேரம் பேசுவதற்கு அந்த கோமா நிலையிலிருந்து அவளைக் கொண்டுவர வேண்டும் என்று நான் தேவனிடம் ஜெபித்தேன். சில வினாடிகளுக்குப் பின்பு, அவள் கண்களைத் திறந்து என்னைப் பார்த்தாள்.

நான் அவளைப் பார்த்து, “ஆக்னிட்டா, உன் ஆத்துமா கர்த்தருடைய கரத்தில் பாதுகாப்பாய் உள்ளது என்ற நிச்சயம் உனக்கு உண்டா?” என்று கேட்டேன்.

“ஆமாம்” என்று அவள் தெளிந்த, உறுதியான குரலில் கூறிவிட்டு உடனே மீண்டும் கோமாவிற்குள் சென்று விட்டாள். ஆனால் நான் திருப்தி அடைந்தேன். “ஆமாம்” என்ற அந்த ஒரு சொல்லை மட்டுமே அவள் சொல்ல நான் கேட்க வேண்டியதாயிருந்தது. இந்த உலகத்தில் எதுவும் அசைக்கமுடியாத, எடுத்துப் போட முடியாத ஒரு ஆழமான, அமைதியான நம்பிக்கையை அச்சொல் வெளிப்படுத்தியது.

இப்படிப்பட்ட நம்பிக்கையின் உறுதிக்கு திறவுகோலாய் இருப்பது **ஒப்புக்கொடுத்தல்** ஆகும். கிட்டத்தட்ட ஓராண்டிற்கு முன்பு, ஆக்னிட்டா உறுதியாக சொந்த தீர்மானத்தை இயேசு கிறிஸ்துவிடம் தன் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்து என் முன்னிலையில் செய்தாள். இப்பொழுது சோதனையின் வேளையில் - ஒருவேளை நித்தியத்தின் வாயிலிலேயே நின்ற அவளுக்கு-மீண்டும் ஒரு ஒப்புக் கொடுத்தல் தேவைப்படவில்லை. ஏற்கெனவே செய்திருந்த ஒப்புக் கொடுத்தலில் மட்டுமே அவள் சார்ந்திருக்க வேண்டியதாயிற்று-அது ஜீவனுக்கும் மரணத்திற்கும், காலத்திற்கும் நித்தியத்திற்கும் இடையே செய்யப்பட்ட ஒரு தீர்மானம் ஆகும்.

காலப்போக்கில் தேவன் ஆக்னிட்டாவை சக மாணவிகளின் ஜெபங்களுக்கு பதிலளித்து அவளை மீண்டும் பூரண ஆரோக்கிய நிலைக்கு எழுப்பினார். அவள் பெயரில் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களின் பலனை அவள் “பெற்றுக் கொண்டதின்” காரணம் பெரும் அளவில் அவளுக்கிருந்த நம்பிக்கையின் மனோநிலையே ஆகும்.

சங்கீதம் **37:5**ல் “உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்” என்று தாவீது சொல்கின்றார். அவரே இதைச் செய்வார் என்ற அர்த்தத்தில் இந்த வசனம் சொல்லப்பட்டுள்ளது. இங்கு நம்மில் காணப்பட வேண்டிய இரண்டு காரியங்கள் உண்டு. முதலாவது நாம் ஒப்புக் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக நம்பிக்கை. உறுதிப்பாடுடன் இருக்க வேண்டும். இந்த நம்பிக்கையில் தொடரும் பொழுது தேவன் நமக்காக காரியங்களைச் செய்வார் என்று தாவீது சொல்கின்றார். வேறு வார்த்தைகளில் சொன்னால் நாம் ஒப்புக் கொடுத்தவைகளை ஏற்றுக்கொண்டு தேவன் செயல்படுகின்றார். நாம் தொடர்ந்து நம்பிக்கையுடன் இருக்கும் போது தேவன் நம் வாழ்வில் ஈடுபட்டு நமது தேவைகளைச்

சந்திக்கும்படி செயலாற்ற நாம் வழியை திறந்து கொடுக்கிறோம். ஆனால் நாம் நம்பிக்கையை இழப்போமானால் தேவன் நமது சார்பில் செய்ய ஆரம்பித்துள்ள வேலையைத் தடை செய்கிறவர்களாகிறோம்.

கர்த்தரிடத்தில் ஒரு காரியத்தை ஒப்புக் கொடுப்பது பணத்தை எடுத்துச் சென்று நமது கணக்கில் ஒரு வங்கியில் செலுத்துவதற்கு ஒப்பாக உள்ளது. பணம் செலுத்தியதற்கான ரசீதை நாம் பெற்றுக் கொண்டதற்கு பிறகு நமது பணம் பாதுகாப்பாய் இருக்குமா? என்பதை குறித்த கவலை நமக்குத் தேவையில்லை. அதற்குப் பின்பு அந்தப் பொறுப்பு நம்முடையதல்ல. அது வங்கியின் பொறுப்பாய் இருக்கிறது. ஒரு வங்கியில் பணம் செலுத்தியதற்குப் பின்பு அதில் வைக்கக்கூடிய நம்பிக்கையின் அளவிற்குக் கூட நம்முடைய சொந்தக் காரியங்களை தேவனிடம் ஒப்புக் கொடுத்ததற்குப் பின்பு அவரை அதற்காக நம்புவது கடினமாய் இருப்பது விந்தையான காரியமாய் உள்ளது.

வங்கியில் நமது பணத்தைச் செலுத்தும் உதாரணம் தேவனிடம் வெற்றிகரமாய் நமது காரியங்களை ஒப்புக் கொடுப்பது எவ்வாறு என்னும் முக்கிய பாடத்தைக் கற்றுத் தருகிறது. வங்கியிலிருந்து வெளியேறும் போது எந்த தேதியில், எந்த இடத்தில் எவ்வளவு பணம் செலுத்தினோம் என்பதற்கான வங்கியின் ரசீது நமக்குத் தரப்படுகிறது. இதைக் குறித்த எந்த சந்தேகமும் இல்லை. தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்கும் காரியத்தைக் குறித்தும் இதைப் போன்ற நிச்சயமுடையவர்களாகவே நாம் இருக்கவேண்டும். ஒரு சிறிதளவு சந்தேகமுமின்றி எங்கு, எப்பொழுது, எதை தேவனிடம் ஒப்புக் கொடுத்தோம் என்று நினைவில் வைக்க வேண்டும். நாம் ஒப்புக் கொடுத்ததை தேவன் அங்கீகரித்தார் என்பதற்கான பரிசுத்த ஆவியானவரின் ரசீது நமக்குண்டு என்ற நிச்சயமும் நமக்கு உண்டாயிருக்க வேண்டும்.

# நம்பிக்கை வர்த்திக்கப்பட வேண்டும்

நம்பிக்கையானது எல்லா வகையான கனிகளைப் போன்றே உள்ளது: அது பயன்படுத்தப்பட வேண்டும். அது முழுமையான வளர்ச்சியை அடைவதற்கு முன்பு பல்வேறு வளர்ச்சியின் நிலைகளினூடே கடந்து செல்ல வேண்டும். நம்பிக்கையின் வளர்ச்சி **62**ம் சங்கீதத்தில் தாவீதின் வார்த்தைகளினால் அழகாக விளக்கப்பட்டுள்ளது. **2**ம் வசனத்தில் அவர் சொல்கிறார் "அவரே (தேவனே) என் கன்மலையும், என் இரட்சிப்பும் என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் **அதிகமாய் அசைக்கப்படுவதில்லை.**" ஆனால் **6**ம் வசனத்தில் தேவன் மீதான அப்படியே அதேவிதமான நம்பிக்கையின் அறிக்கையை செய்துவிட்டு, அவர் சொல்கிறார்: "**நான் அசைக்கப்படுவதில்லை**" **2**ம் வசனத்திற்கும், **6**ம் வசனத்திற்கும் இடையில், தாவீது "அதிகமாய் அசைக்கப்படுவதில்லை" என்ற நிலையிலிருந்து ஒருபோதும் "அசைக்கப்படுவதில்லை" என்ற நிலைக்கு முன்னேறி செல்கிறார்.*

தாவீது இருந்தது போலவே, நாமும் நம்மைக் குறித்து நேர்மையுடையவர்களாய் இருக்க வேண்டும். நம்முடைய நம்பிக்கை முதிர்நிலைக்கு வருவதற்கு முன்பு, நான் இவ்வாறாக மட்டுமே சொல்லக்கூடும். "நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை!" இந்த கட்டத்தில் பிரச்சனைகளும் எதிர்ப்பும் நம்மை அசைக்கும். ஆனால் அவைகள் நம்மை தோற்கடிக்காது. எனினும், நாம் நமது நம்பிக்கையை பயன்படுத்துவோமென்றால், "நான் அசைக்கப்படுவதில்லை" என்று சொல்லக்கூடிய கால கட்டத்திற்கு வருவோம்! நம்மை ஒன்றும் இனி அசைக்க இயலாது - தோற்கடிக்கவும் முடியாது.

---

* *7ம் அத்தியாயத்தில் நமது விசுவாசத்தை மீண்டும் மீண்டும் உறுதியாய் "அறிக்கை" செய்வதின் அவசியத்தைப் பற்றி முழு விளக்கமாய் காண்போம்.*

இவ்வித நம்பிக்கை ஆவியின் தளத்திற்கு உரியதேயன்றி உணர்ச்சியின் தளத்திற்கு உரியதல்ல. மீண்டும் தாவீதையே உதாரணமாக எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். சங்கீதம் **56:3**ல் அவர் கர்த்தரை நோக்கி "நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்" என்று சொல்லுகிறார். இங்கு தாவீது ஒரே நேரத்தில் இரண்டு வித ஆற்றல்கள் - நம்பிக்கையும், பயமும் செயல்படுவதாகக் கூறுகிறார். பயம் என்பது உணர்ச்சியின் அடிப்படையில் உள்ளது. நம்பிக்கை என்பது ஆவியின் ஆழமானதோர் அனுபவம்.

முதிர்ந்த நம்பிக்கை என்பது கடலை நோக்கிச் செல்லும் ஓர் ஆழமான தடுத்து நிறுத்த முடியாத ஆற்றல் நிறைந்த ஒரு நதியைப் போல உள்ளது. சில வேலைகளில் பயம் அல்லது சந்தேகம் என்னும் காற்று அந்த நதியின் மேல் மோதி அதன் மேல் தளத்தில் திவலைகள் நிறைந்த அலைகளை அனுப்லாம். ஆனால் இந்த காற்றுகளும், அலைகளும் அந்த நதியின் தொடர்ந்த போக்கை அதை பாதியினின்று விலக்கி விடமுடியாது. அது எப்படியும் கடலில் சேர வேண்டிய இடத்திற்கே போய்ச் சேரும்.

முதிர்ச்சியான நம்பிக்கையானது 2 தீம்மோத்தேயு **1:12**ல் பவுல் "நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன் ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால, நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" என்கிறார். உலகத்தின் ரீதியில் பார்க்கும் போது இக்கட்டத்தில் பவுல் தோல்வி அடைந்தவராகக் காணப்படுகிறார். அவருடைய நண்பர்களும், ஆதரவாளர்களும் அவருக்கு விரோதமாக மாறுகின்றனர். அவருடைய எல்லா ஊழியக்காரர்களிலும் லூக்கா மாத்திரமே அவருடன் இருக்கிறார். அவர்களுள் ஒருவரான தேமா அவரைக் கைவிட்டு

உலகத்தை நோக்கி திரும்பி விட்டான். பவுல் பெலவீனமடைந்து, வயதானவராய் இருக்கிறார். ரோம சிறைச்சாலையில் நீதியற்ற வழக்கை சந்தித்து கொரடுமான ஆட்சியாளர்களின் நியாயத்தீர்ப்பினால் அவதிப்பட இருக்கிறார். என்றாலும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் நான் வெட்கப்படவில்லை ...எனக்குத் தெரியும். - நான் விசுவாசிக்கிறேன் எனக்கு உறுதிப்பாடு உண்டு. காலம் என்னும் அடிவானத்திற்கு அப்பால் மேகமற்ற ஒரு நாளைக் காண்கிறார் - அந்த நாளிலே வேறொரு நீதிபதி நீதியின் கிரீடத்தை அவருக்கு அருளுவார். **(2 தீமோ. 4:8)**

தாவீதைப் போலவே பவுலுக்கும் நம்பிக்கை என்பது **ஒப்புக் கொடுப்பதால்** வரும் பலனாய் உள்ளது. அவருடைய வார்த்தைகளில் நான் ஒப்புவித்ததை அவர் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார். நம்பிக்கை என்பது ஒப்புக் கொடுத்தலின் விளைவாகும். பல ஆண்டுகளுக்கு முன்பாக பவுல் கிறிஸ்துவிடம் தம்மை நிபந்தனையின்றி ஒப்புக்கொடுத்தார். இதைத் தொடர்ந்த சோதனைகளாலும், துயரங்களாலும், அவர் முதிர்ச்சியான அனுபவத்தின் ஆழத்திற்குள்ளே, கருகலான ரோமச் சிறைச்சாலையில் இருந்தாலும் சுடரொளியுடன் காணப்படுகிறார்.

## நம்பிக்கைக்கு பாத்திரமான விசுவாசம்

விசுவாசம் என்னும் கனியின் இரண்டாவது பண்பு நம்பிக்கைக்கு பாத்திரமாய் இருப்பது. மொழியியலின் படி **பிஸ்டிஸ்** என்பதின் மூல அர்த்தம் நம்பிக்கைக்கு பாத்திரமாய் இருத்தல் என்பதாகும். புதிய ஏற்பாட்டு கிரேக்க அகராதியில் பிஸ்டிஸ் என்பதற்கு கொடுக்கப்பட்ட வரையரை உண்மை, நம்பத்தக்கது என்பதாகும். விசுவாசத்தின் எபிரெயச் சொல்லான **"யமுனா"** என்பது பழைய ஏற்பாட்டில் "உண்மையுடன் இருத்தல்" என்ற அர்த்தத்திலும், "விசுவாசம்" என்னும் அர்த்தத்திலும்

இரண்டாவதாக வருகிறது. இதன் வினைச்சொல்லில் இருந்து தான் "அப்படியே ஆகட்டும்" "அது உறுதிப்படுவதாக" என்ற அர்த்தம் கொள்ளும் **ஆமென்** என்னும் சொல் பிறந்துள்ளது. உறுதிப்பாடு என்பது இதன் அடிப்படைச் சொல்.

நம்பிக்கையும், நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருப்பதும் தேவனுடைய பண்பாகும். **விசுவாசத்தை நம்புதல்** என்று சொல்லுவோமானால் அது இறுதியில் தேவனுடைய **நம்பத்தக்க** பண்பைக் குறிக்கிறது. விசுவாசத்தை நம்பத்தக்க தன்மை என்போமானால் நம்முடைய **நம்பிக்கையின்** அடிப்படையிலேயே தேவனை நாம் நம்புகின்ற அளவிற்கே பரிசுத்த ஆவியானவர் நமக்கு பலன் கொடுக்க வல்லவராயிருக்கிறார். தேவன் ஒருவரே விசுவாசத்தின் துவக்கமும், முடிவுமாயிருக்கிறார். அவருடைய **நம்பத்தகு** தன்மையே நமது **நம்பிக்கைக்கு** அடித்தளமாகிறது; அவரில் நாம் வைக்கும் **நம்பிக்கை** அவரது நம்பத்தகு தன்மையை நம்மில் வளரச் செய்கிறது.

வேறு எல்லா பண்பிலும் தேவனுடைய நம்பத்தக்க தன்மை வேதம் முழுவதிலும் அதிகமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலே இதைக் குறிக்கும் சிறப்பு எபிரெயச் சொல்லான (chesed) **"செஸ்ட்"** என்ற சொல் வருகிறது. இதைத் தமிழிலே நற்குணம், காருண்யம், இரக்கம் என்று மொழி பெயர்க்கலாம். எனினும் எந்த மொழி பெயர்ப்பும் இதன் முழு அர்த்தத்தை விளக்கவில்லை.

தேவனுடைய **செஸ்டில்** இரண்டு பண்புகள் உள்ளன. முதலாவதாக இது தேவனுடைய இலவசமான, தகுதியைப் பார்க்காத கிருபையாகும். இதை மனிதன் தன் தகுதியின் அடிப்படையிலோ அன்றி உரிமை பாராட்டியோ பெற்றுக் கொள்ளமுடியாது. இரண்டாவதாக தேவன் செய்த **"உடன்படிக்கையின்"** அடிப்படையில் இது இருக்கிறது. இந்த இரண்டு பண்புகளையும் சேர்த்து **செஸ்ட்** என்பது உடன்படிக்கையின்படி ஒப்புக் கொடுத்தலை

நிறைவேற்றுதலாகும்; அது நமது தகுதிக்கும் திறமைக்கும் அப்பாற்பட்டதாய் விளங்குவது.

மூன்று எபிரெய சொற்களுக்குள்ள தொடர்பை நோக்குவோம்; **யமுனா** என்பது விசுவாசம் அல்லது உண்மையாயிருத்தல்; **செஸ்ட்** என்பது நம்புவதற்குப் பாத்திரமானவர் என எண்ணுவதாகும். மூன்றாவது சொல் **"பெரியித்"** இது ஓர் உடன்படிக்கை. இது **89**ம் சங்கீதத்தில் பல வசனங்களில் மீண்டும் மீண்டும் வருகிறது.

**(24)** என் உண்மையும் **(யமுனா)** என் கிருபையும் **(செஸ்ட்)** அவனோடிருக்கும்; என் நாமத்தினால் அவன் கொம்பு உயரும்.

**(28)** என் கிருபையை **(செஸ்ட்)** என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன்; என் உடன்படிக்கை **(பெரியித்)** அவனுக்காக உறுதிப்படுத்தப்படும்.

**(33)** ஆனாலும் என் கிருபையை **(செஸ்ட்)** அவனை விட்டு விலக்காமலும், என் உண்மையில் **(யமுனா)** பிசகாமலும் இருப்பேன்.

**(34)** என் உடன்படிக்கையை **(பெரியித்)** மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்.

கடைசி வசனம் தேவன் செய்த உடன்படிக்கையும் அவர் கூறின வார்த்தைகளும் மாறாதவை என்பதைக் காட்டுகிறது. இரண்டு காரியங்களை தேவன் செய்யமாட்டார்; உடன்படிக்கையை மீறமாட்டார்; அல்லது தாம் கூறியவற்றிற்கு எதிராக செயல்படமாட்டார். நம்பக்கூடிய தேவனின் தன்மை பரிசுத்த ஆவியானவரால் நமக்குக் கொடுக்கப்பட்டு அந்த பண்பு நம்மிலும் வளர்கிறது. அது நம்மை நம்புதலுக்குப் பாத்திரமான நேர்மையானவர்களாக்குகிறது.

சங்கீதம் **15:1**ல் தாவீது "கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்**?** யார் உம்முடைய பரிசுத்த பர்வத்தில்

வாசம் பண்ணுவான் ?" என்னும் இரு கேள்விகளைக் கேட்கிறார். கீழே வரும் வசனங்களில் இப்படிப்பட்ட மனிதனை விளக்கும் பதினொரு காரியங்களைச் சொல்கிறார். இதில் ஒன்பதாவது நிபந்தனை நான்காம் வசனத்தின் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ளது. "ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்" என்கின்றார். தேவன் ஒரு விசுவாசியை தான் ஒப்புக் கொடுத்ததற்கு பாதகம் ஏற்பட்டாலும் தான் கூறிய வார்த்தையில் உண்மையாக இருக்க விரும்புகிறார். உலகமானது தன் பாணியில் இதை ஒரு மனிதன் எந்த அளவிற்கு அவன் வார்த்தையில் உண்மையாயிருக்கிறானோ அந்த அளவிற்கு அவனும் இருக்கிறான் என்று சொல்லுகிறது. தனது வார்த்தைகளையும், ஒப்புக் கொடுத்தலையும் கனப்படுத்தாத மனிதன் நம்பிக்கையின் கனியை வளர்த்துக் கொள்ளவில்லை என்பதாகும்.

எல்லா மனிதர்களிடமும் இப்படிப்பட்ட நம்பிக்கைக்கு பாத்திரவான்களாக இருக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். சிறப்பாக நமது உடன் கிறிஸ்தவர்களுடன் இப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும். தேவனுடைய நம்பப்படத்தக்க தன்மை **(செஸ்ட்)** என்பது அவருடைய உடன்படிக்கையை **(பெரியித்)** சார்ந்துள்ளது. இயேசு கிறிஸ்துவின் மூலம் இப்படிப்பட்ட உடன்படிக்கையின் உறவை அவருடனும் மற்றவர்களுடனும் தேவன் கொடுத்திருக்கிறார். இந்த உறவைத் தான் நாம் தேவனிடமும் உடன் விசுவாசிகளிடமும் வெளிப்படுத்துகிறோம். இந்த நம்பப்படும் தன்மையை தாராளமாக இலவசமாக தேவன் நமக்குத் தந்துள்ளார்.

தேவனுடைய செஸ்ட் என்பது அவருடைய கிருபையிலும், ஒப்புக்கொடுத்தலிலும் தகுதிக்கும் திறமைக்கும் அப்பாற்பட்ட நிலைமையில் நாம் பெற்றுக் கொள்ளும் திறனிலும் உள்ளது.

நம்மை உடன்படிக்கையின் முழு ஒப்புக் கொடுத்தலை நாம் செய்ய வேண்டும். ஒருவருக்கொரவர் ஒப்புக் கொடுத்தலே இந்த உடன்படிக்கையின் மையக்கருத்து 1 யோவான் 3:16ல் "அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்." நம்முடைய ஜீவனை ஒப்புக் கொடுப்பதின் மூலமாகவே முழு உடன்படிக்கையின் உறவிற்குள் தேவனுடனும் மற்றவர்களுடனும் நாம் வருகிறோம். வேதமானது ஓர் பயங்கரமான படத்தை இந்தக் காலத்தின் கடைசிக் கட்டத்தில் இவ்வுலகம் எப்படியிருக்கும் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது (2 தீமோத்தேயு 3:1-4):

> *மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில் மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும் அவதூறு செய்கிறவர்களாயும், இச்சை அடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், .....இருப்பார்கள்.*

இணங்காதவர்கள் என்ற வாசம் கிரேக்க மொழியில் தாயாஸ் அகராதியில் இவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கைக்குள் செல்லும் படியாக வற்புறுத்தப்படக் கூடாதவர்கள். இந்த உலகத்தின் காரியங்கள் உண்மையாகவே இந்த உடன்படிக்கை எதிர்பார்க்கும் கற்பு நெறி, ஒழுக்க காரியங்களுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. இவ்வுலகம் இருளின் ஆழத்திற்குள் செல்லும்பொழுது தேவனின் மக்கள் ஒளியின் ஐக்கியத்தில் நடக்கத் தீர்மானிக்க வேண்டும். இந்த உடன்படிக்கையின் உறவுக்குள் சென்று அதை பாதுகாக்கும் மக்களாய் நாம் நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு நமக்கு விருப்பமும் இருக்க வேண்டும்.

இந்த நோக்கத்திற்கு நாம் நம்பிக்கைக்குரிய கனிகளை உடையவர்களாய் முதிர்ச்சியுடன் காணப்பட வேண்டும்.

## தொகுப்பு

ஆவியின் கனி ஆவியின் வரங்களிலிருந்து இரண்டு முறைகளில் வித்தியாசப்படுகிறது. முதலாவதாக ஆவியின் வரம் ஒரு எளிய குறுகிய கால செயலால் அளிக்கப்படுகிறது. ஆனால் கனியோ காலமும், திறமையும், வேலையும் கொண்டதாக முதிர்ச்சி அடைய நாள் எடுக்கிறது. வரங்களைச் செயல்படுத்துபவர்களின் பண்பு வரத்துடன் நேரிடையாகத் தொடர்புடையதல்ல. கனி என்பது பண்பின் வெளிப்பாடு. கனியும், வரங்களும் அதினதின் இடத்திலிருந்து தேவனை மகிமைப்படுத்தி, மனுகுலத்தைச் சேவிக்கிறதாய் இருக்க வேண்டும்.

விசுவாசம் என்னும் கனி இரண்டு அர்த்தத்தில் குறிக்கப்படுகிறது. ஒன்று நம்பிக்கை மற்றது நம்பப்படும் தன்மை.

நம்பிக்கை முதிர்ச்சியடையும் பொழுது அது நிலையானதாக ஆகிறது. நம்பிக்கைக்கு ஏற்ற நிலையிலேயே ஒப்புக்

கொடுத்தல் அமைகிறது. முதலாவது நாம் ஒப்புக் கொடுக்கவேண்டும். ஒப்புக்கொடுத்தல் நம்பிக்கை கொள்வதற்கு வழிவகுக்கிறது.

தேவன் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்பதில் (எபிரெயம் - **செஸ்ட்**) நம்முடைய நம்பிக்கை அமைகிறது. உடன்படிக்கையின் ஒப்புக் கொடுத்தலை அவர் நிறைவேற்றுதலின் மூலம் அவருடைய நம்பத்தகு தன்மை வெளியாகிறது. அது நம்முடைய பாத்திர, அபாத்திர தன்மையைப் பொறுத்ததன்று. அது நம்மை உடன்படிக்கையின் ஒப்புக் கொடுத்தலுக்கு தகுதிப்படுத்துகின்றது. இதனால் நாம் தேவனுடனும், பிறருடனும் நமது ஒப்புக் கொடுத்தலைப் பாதுகாக்கிறோம்.

# அத்தியாயம் ஐந்து

# வாழ்வளிக்கும் விசுவாசம்

கிறிஸ்தவம் பிறப்பதற்கு சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பு தேவன் ஆபகூக் தீர்க்கதரிசிக்கு சுவிசேஷத்திற்கு அடித்தளம் அளிக்கின்ற ஒரு வெளிப்பாட்டை கொடுத்தார்: "தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ஆபகூக் 2:4). மிகவும் சரியாக இத்தீர்க்கதரிசனம் கிறிஸ்தவச் செய்தியின் மையக்கருத்தை கூறுகிறது. உண்மையில் இது புதிய ஏற்பாட்டில் ரோமர் 1:17, கலாத்தியர் 3:11; எபிரெயர் 10:38 ஆகிய மூன்று இடங்களில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## ஒரே அடித்தளம் : விசுவாசம்

இந்த மூன்று பகுதிகளில் ஆபகூக்கின் தீர்க்கதரிசனம் ரோமருக்கு எழுதின நிருபத்தில் மிகவும் முழுவதுமாக விளக்கப்பட்டுள்ளது. உண்மையில் அந்த முழு நிருபத்திற்கும் இது மையக் கருத்தை அளிக்கிறது. ரோமருக்கு எழுதின நிருபம் முழுவதின் சரியான கண்ணோட்டத்தை பெறுவதற்கு பீதோவன் போன்ற பெரியவர்கள் இயற்றிய ஸ்வரங்களின் ஐக்கியத்திற்கு (symphony) நாம் அதை ஒப்பிடலாம். முதலாம் அதிகாரத்தின் முதல் பதினைந்து வசனங்கள் முன்னுரையாய் உள்ளன. பின்பு 16,17ம் வசனங்களில் பவுல் அந்த நிருபத்தின் பிரதான கருத்தை அளிக்கிறார்: "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்கிறார்.

இந்த சிம்பனி மூன்று முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. முதல் பிரிவு முதலாம் அதிகாரம் முதல் 8ம் அதிகாரம் வரைக்கும் வருகிறது. இங்கு பவுல் **போதனைகளைப்** பற்றி பேசுகிறார். தான் விவாதிக்கும் கருத்து எவ்வாறு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களுடனும் உதாரணங்களுடனும் பொருந்துகிறது என்பதை காண்பித்து அதனை விளக்கமாக விவாதித்து அலசி ஆராய்கிறார். இரண்டாம் பிரிவில் ஒன்பது, பத்து, பதினொன்றாம் அதிகாரங்கள் வருகின்றன. இங்கு பவுல் **இஸ்ரவேலர்களைப்** பற்றி குறிப்பிடுகிறார். எவ்வாறு விசுவாசத்தை விட்டு விட்டு கிரியைகளினாலே நீதியை அடையும்படி இஸ்ரவேலர்களின் முயற்சியானது அவர்களின் மேசியாவை அவர்கள் காணவொட்டாது செய்தது என்றும் அவர் மூலமாய் தேவனால் அவர்களுக்கு அருளப்பட்ட அசீர்வாதங்களை அவர்கள் இழந்து போனார்கள் என்றும் விளக்குகிறார். மூன்றாம் பிரிவில் 12 முதல் 16 அதிகாரங்கள் அடங்கும். இங்கு **நடைமுறை** காரியங்களைப் பவுல் பேசுகிறார். எவ்வாறு தனது கருத்தை அன்றாட வாழ்வின் பலவித செயல்களில் உறவுகளில், வேளைகளில் செயல்படுத்த வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறார்.

ஒரு ஸ்வரங்களின் ஐக்கியத்தை (symphony) சரியாக மதிப்பிட வேண்டுமானால், அதை இயற்றியவரின் பிரதான கருத்து எப்பொழுது முதலாவது அறிமுகப்படுத்தப்படுகிறதோ அதை தெரிந்து கொண்டு அதன் அடிப்படையிலேயே அதை முழுவதுமாக தொடர வேண்டும். இந்தப் பிரதான கருத்தை நாம் மனதில் கொள்ளவில்லையாயின் அது தொடர்ந்து அடையும் பல்வேறு மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் முழுவதுமாக நாம் மதிப்பிட முடியாது. ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் படிப்பதிலும் இதையே பின்பற்ற வேண்டும். முதலாவதாக இந்த நிருபம் முழுவதிலும் வரக்கூடிய பிரதான கருத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்; “விசுவாசத்தினாலே நீதிமான்

பிழைப்பான்." பின்பு இந்நிருபத்தில் பிரதான பகுதிகளை நாம் படிக்கும் பொழுது இந்த கருப்பொருளை நாம் எப்பொழுதும் மனதிற் வைத்துக் கொண்டு, விவாதிக்கப்பட்ட ஒவ்வொரு குறிப்பிட்ட தலைப்பிலும் அது எவ்வாறு பொருந்துகிறது என கவனிக்க வேண்டும். இவ்வாறு செய்வது அந்த முழு நிருபத்தையும் நாம் புரித்து கொள்ளும்படி ஒற்றுமையையும், இசைவையையும் தரும்.

ரோமர் **1:16**ல் இரட்சிப்பினுடைய தேவ வல்லமையை அனுபவிப்பதற்கு நமக்கு இருக்க வேண்டிய ஒரு அடிப்படைத் தேவையை குறிப்பிடுகிறார்:

> கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.

இங்கு **"விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு"** இரட்சிப்பு அளிக்கப்பட உள்ளது எனக் காண்கிறோம். முதலாவது யூதருக்கும் பின்பு கிரேக்கருக்கும் இது உரியது. இதற்கு விதிவிலக்கு இல்லை. மத வித்தியாசங்களோ அல்லது இனவித்தியாசங்களோ இதற்குக் கிடையாது. மனுக்குலத்திற்கு எல்லா ஆசீர்வாதங்களையும் தாங்கியிருக்கும் இரட்சிப்பை தேவன் வழங்குவதற்கு ஒரே நிபந்தனையை மட்டும் எதிர் பார்க்கிறார். அது மாறாதது. அது **விசுவாசம்** ஆகும்.

மேலும் **17**ம் வசனத்தில் பவுல் இந்த இரட்சிப்பின் உண்மையை எப்படி அறிந்து கொள்ளக்கூடும் என விளக்குகிறார்.

> *விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று*

*அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.*

இந்த வசனத்தில் விசுவாசம் என்னும் சொல் மூன்று தடவை வருகிறது. தேவ வெளிப்பாடு விசுவாசத்தினால் உண்டாகி விசுவாசத்திற்கென்று வெளிப்படுத்தப்படுகிறது. இது தேவனுடைய விசுவாசத்தில் அதாவது, அவருடைய வார்த்தையானது முன்கூட்டி நியமிக்கப்பட்டுள்ள நோக்கத்தை நிறைவேற்றும் என்கிற விசுவாசத்தில் ஆரம்பமாகிறது. இந்தச் செய்தியை வழங்குபவரின் விசுவாசத்தின் மூலம் இது செலுத்தப்படுகிறது. இச்செய்தியை ஏற்றுக் கொள்ளுகிறவரின் விசுவாசத்தினால் இது உரிமையாக்கிக் கொள்ளப்படுகிறது. இந்தச் செய்தி தாமே "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்பதாகும். ஆரம்பம் முதல் முடிவு வரை **விசுவாசமே** மையக்கருத்தாகிறது.

இச்செய்தியை நாம் இன்னும் கவனமாகக் காண்போம். இதை "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்று மிக சாதாரணமாக மட்டும் சொன்னால் போதாது. தெளிவாக இங்கு "பிழைப்பது" என்பது சாதாரண சரீர வாழ்க்கையை மட்டும் குறிப்பதன்று. துன்மார்க்கரும், தேவனற்றவர்களும் கூட அப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்துகின்றனர் என்பதை நாம் அறிவோம். ஆனால் வேதம் மற்றொரு வகையான வாழ்வு - நீதியின் வாழ்வு - உண்டு என வெளிப்படுத்துகிறது. அதன் ஆரம்பம் தேவனிடத்தில் மட்டுமே உள்ளது. இப்படிப்பட்ட வாழ்க்கையை **இயேசு கிறிஸ்துவின் பெயரில் வைக்கும் விசுவாசத்தின்** மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய சுவிசேஷத்தில் இந்த தெய்வீக நித்திய வாழ்க்கையைப் பற்றியே பேசுகிறார். அதன் ஆரம்பத்தில் யோவான் **1:4**ல் இயேசுவைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, "அவருக்குள் ஜீவன் இருந்தது" என்கிறார். யோவான் **3:36**ல் இயேசுவைப் பற்றி யோவான் ஸ்நானகன்

கூறிய சாட்சியை குறிப்பிடுகிறார்: ‘‘குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்” என்கிறார். யோவான் 6:47ல் இயேசு தாமே “என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு ” என்கிறார். மீண்டும் யோவான் 10:10ல் “நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” என்கிறார். மேலும் யோவான் 10:27-28ல் ‘‘என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிக்கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்” என்கிறார். யோவான் தமது சுவிசேஷத்தின் இறுதியில் அது எதற்காக எழுதப்பட்டது என்பதின் பிரதான நோக்கத்தை தெரிவிக்கிறார்: “இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது” (யோவான் 20:31) என்கிறார்.

தமது முதலாம் நிருபத்தின் 5ம் அதிகாரத்தில் யோவான் இதே கருத்தை மீண்டும் சொல்கிறார்.

(11) தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்.

(12) குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.

(13) உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.

இதில் யோவான் நிகழ்காலத்தையே பயன்படுத்துகிறார். "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்" என்கிறார். விசுவாசிக்கிறவனுக்கு ஏற்கெனவே நித்திய ஜீவன் உண்டாயிருக்கிறது என்கிறார். பவுலும் கிறிஸ்துவிலுள்ள வாழ்வைக் குறித்து தெளிவாகவும், அழகாகவும் குறிப்பிடுகிறார். பிலிப்பியர் **1:21**ல் "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்கிறார். கொலோசெயர் **3:4**ல் நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து என்று வருவதைப் பார்க்கிறோம். யோவானைப் போல பவுலுக்கும் இது வருங்கால நம்பிக்கையன்று. ஆனால் தற்கால உண்மையே.

சுவிசேஷத்தின் பிரதான செய்தியும் இதுவே. தெய்வீக, நித்திய வாழ்வின் ஆதாரமாக தேவன் இருக்கிறார். இயேசு கிறிஸ்துவில் இந்த வாழ்வு நமக்குக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசத்தின் மூலம் நமது இருதயங்களில் ஏற்றுக்கொண்டு முழு கீழ்ப்படிதலுடன் நமது வாழ்வை அவருக்கு ஒப்புக் கொடுக்கும் போது, தேவனிலுள்ள ஜீவனையே நாம் பெற்றுக்கொள்கிறோம். இது வேறு உலகத்திற்கோ, வருங்காலத்திற்கோ உரியதன்று. இதை நாம் இப்பொழுதே இங்கு அனுபவிக்கலாம். குமாரனை உடையவனுக்கு ஜீவன் உண்டு. இந்த நொடிப்பொழுதில் தானே, அவன் நித்தியத்திற்குரியவனாய் இருக்கின்றான். இயேசு கிறிஸ்துவில் நமது விசுவாசத்தை வைத்த நேரத்திலிருந்து இந்த நித்திய ஜீவன் நமக்குச் சொந்தமாக உள்ளது.

கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் இந்தப் புது வாழ்வைப் பெற்றிருக்கிற நாம் தின வாழ்வில் இதை வெளிப்படுத்த வேண்டிய அறைகூவலைப் பெற்றவர்களாக இருக்கின்றோம். இதை நாம் எப்படிச் செய்யக்கூடும்? **விசுவாசமே** இதற்குப் பதில். இது பவுல் கூறும் "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்பதிலுள்ளது. நடைமுறையில் பிழைப்பான் என்ற சொல்லை பார்க்கும் பொழுது

அது சகலத்தையும் உள்ளடக்கியதாய் இருக்கிறது. எந்த நேரத்தில் நாம் செய்யும் எந்தக்காரியமும் - சாப்பிடுதல், குடித்தல், தூங்குதல், வேலை செய்தல் போன்ற பற்பல செயல்கள் நமது **வாழ்வுடன்** இணைக்கப்பட்ட செயல்கள். விசுவாசத்தின் மூலம் இந்த ஒவ்வொரு செயல்களிலும் கூட தேவனுடைய ஜீவனின் ஆற்றலை நமக்குள்ளே நாம் பெற்றுக் கொள்ளக்கூடும்.

அநேகம் தடவைகளில் தின வாழ்வின் சாதாரண காரியங்கள் ஆவிக்குரிய முக்கியத்துவமற்றதாக உள்ளது என்றும், அங்கு விசுவாசத்திற்குச் செயல்பட வாய்ப்பில்லை எனவும் எண்ணுகிறோம். ஆனால் வேதம் இதற்கு மாறாகவே கற்பிக்கிறது. இப்படிப்பட்ட சாதாரண தினவாழ்க்கையின் காரியங்களில் விசுவாசத்தை வெற்றியுடன் செலுத்தினால் தான், தேவன் நம்மை உயர்ந்த ஆவிக்குரிய பொறுப்புகளுக்கு உயர்த்துகிறார். லூக்கா **16:10-11**ல்

> **(10)** கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்.
>
> **(11)** அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிரா விட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?

அநீதியான உலகப் பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாய் இராவிட்டால் யார் உங்களை நம்பி, உங்களிடத்தில் பெரும் பொறுப்புகளையும் மெய்யான பொருளையும் ஒப்புவிப்பார்கள். நமது விசுவாசத்தை முதலாவது பணம் போன்ற காரியங்களில் நேர்மையாய் இருக்கும் பொழுது தேவன் ஆவிக்குரிய செல்வத்தையும், பெரும் பொறுப்புகளையும் நமக்குத் தருவார்.

ஆகவே தினவாழ்வில் நமது விசுவாசத்தை எவ்வாறு பயன் உள்ளதாக வெளிப்படுத்த முடியும் என்பதற்கான இரண்டு

நடைமுறை காரியங்களைக் காண்போம். ஒன்று பணம், மற்றொன்று சாப்பிடும் உணவு. எனது பல ஆண்டு அனுபவத்தின் அடிப்படையில் இந்த இரு பகுதிகிளில் விசுவாசத்தை பயன்படுத்துகிறவன் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழக்கற்றுக் கொண்டவன் ஆவான் எனக்கூறுவேன். இதற்கு எதிராக இந்த இரண்டு பகுதிகளில் தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் வராதவன் தன் முழு வாழ்வையும் சரிசெய்து கொள்ள வேண்டியவனாகவே இருக்கிறான்.

## விசுவாசத்தினால் உண்பது

ரோமருக்கு எழுதிய நிருபமாகிய சிம்பனியின் மூன்றாம் பகுதி, அந்நிருபம் 12ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள விசுவாசத்தை நடைமுறையில் எவ்வாறு பயன்படுத்துவது என்று கூறும் ஆரம்பப் பகுதியாகும். அது புதிரானதையும் பரத்திற்குரியதையும் கூறமுற்படுகிறதா? இல்லை. அதற்கு எதிராக அது முதல் வசனத்திலேயே **நமது சரீரம்** பற்றி பேசுகிறது.

> *அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியயுள்ள ஆராதனை. (ரோமர் 12:1)*

பவுல் இதிலே ஆவிக்குரிய ஆராதனை என்பது நம் சரீரத்தை தேவனுக்கு ஒப்புக் கொடுப்பதில் உள்ளது என்கிறார். ஆவிக்குரிய செயல் என்பது நடைமுறையில் நாம் நமது சரீரங்களை என்ன செய்கின்றோம் என்பதில்

ஆரம்பமாகின்றது.*

இதிலிருந்து பவுல் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு சம்பந்தமான பல நடைமுறை காரியங்களை கூறுகின்றார். 14ம் அத்தியாயத்தில் உணவைப் பற்றி பேசுகிறார். (சரீரத்திற்கு உணவை விட முக்கியமானதோர் காரியமில்லை.) இங்கு இரண்டு விதமான விசுவாசிகளைப் பற்றிப் பேசுகிறார். ஒருவன் எந்தப்பதார்த்தத்தையும் புசிக்கலாம் என்று நம்புகின்றான். பலவீனனோ மரக்கறிகளை மாத்திரம் புசிக்கிறான். இங்கு பவுல் மாம்சம் புசிப்பதை தவறு என்றோ மரக்கறி உண்பது சரியென்றோ சொல்லவில்லை. இதற்கு எதிர் மறையாகவும் சொல்லவில்லை. விசுவாசத்தினால் செய்வதெல்லாம் சரியாய் இருக்கும் விசுவாசம் இல்லாமல் செய்வதெல்லாம் தவறாய் இருக்கும் என்கிறார். தனது முடிவை இந்த அதிகாரத்தின் கடைசி வசனத்தில் சொல்லுகிறார். ''ஒருவன் சமுசயப்படகிறவனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். **விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே**" (ரோமர் 14:23).

தமது முடிவுரையில் பவுல் மாம்சம் உண்பதையோ, மரக்கறி உண்பதையோ விட விசுவாசமே முக்கியமாய் இருக்கிறது என இந்த நிருபத்தின் ஆரம்பத்தில் கூறியதையே கூறுகின்றார். ரோமர் 1:17ல் தெளிவாக ''விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்'' என்கிறார். ரோமர் 14:23ல் இதையே வேறு வார்த்தைகளில் சொல்லுகின்றார். "விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" என்கிறார். எப்படிச் சொன்னாலும் முடிவிலே நீதியின் வாழ்விற்கு **விசுவாசமே அடித்தளம்** என்கிறார்.

ஆகவே விசுவாசத்தை உணவு சாப்பிடும் காரியத்திற்கு செலுத்துவோம். விசுவாசத்தினாலே நாம் சாப்பிட வேண்டும். இது சற்றுப் புதிதாக இருக்கிறதல்லவா! இதை நடைமுறையில் எவ்வாறு செய்வது ?

பல வழிகளில் இதைக் கடைப்பிடிக்கலாம். முதலாவதாக நாம் நமது உணவிற்கு தேவனையே நம்பியிருக்கிறோம். அது தேவனிடமிருந்து நமக்கு ஈவாகத் தரப்படுகிறது. அவர் உணவளிக்கா விட்டால் நாம் பட்டினி கிடக்க வேண்டியது தான்.

இரண்டாவதாக நமது உணவிற்காக நாம் தேவனை துதிக்கிறோம். மூன்றாவதாக நமது உணவிற்கு நன்றி செலுத்தும் பொழுது என்ன நடக்கிறது என்பதை பவுல் 1 தீமோத்தேயு 4:4-5ல் கூறுகிறார்.

(4) தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல.

(5) அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்.

தேவன் படைத்ததெல்லாம் நல்லதாய் இருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக் கொள்ளப்படுமாயின் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல. அது தேவ வசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும். நாம் ஜெபத்துடன் உணவைப் புசிக்கும் பொழுது அது பரிசுத்தமாகிறது. அது தேவனால் நமக்களித்த தூய உணவாகிறது. அந்த உணவிலே தூய்மையற்ற பாதகமான பொருட்கள் இருந்தாலும், நன்றி செலுத்தி பின்பு விசுவாச ஜெபம் செய்வதால் கேடு விளைவிக்கும் பொருள் நீக்கப்படுகிறது.

நான்காவதாக “விசுவாசத்தினாலே சாப்பிடுவது” சாப்பாட்டு மேஜையை விட அதிகம் முக்கியத்துவமுள்ளதாக இருக்கிறது. நமது உணவு இயற்கையின் பெலனுக்கு ஆதாரமானது. தேவனே நமக்கு உணவளிப்பவர். இதன் மூலம் நம்முடைய பெலன் தேவ ஈவாக நமக்குக் கிடைக்கிறது. இதை நமது சுயத்திற்காகவும், பாவ வழிகளுக்காகவும், ஊழியத்திற்காகவும் நாம் செலவிட வேண்டும்.

உணவருந்துவதிலே விசுவாசத்தை செலுத்தும் பொழுது நமது வாழ்வு முழுவதுமே ஒரு புதிய முக்கியத்துவம் பெறுகிறது. இதிலிருந்து 1 கொரி 10:31ல் பவுல் "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்'' என்று விசுவாசிகளுக்கு அறிவுரை கூறுவதைக் காணலாம். விசுவாசத்தின் மூலம் நாம் சாப்பிடும் தின உணவு கூட தேவனுடைய மகிமையை பகிர்ந்து கொள்ளும் ஒரு சாக்கிரமந்தைப் போல் உள்ளது. இதுவே பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்தவர்களின் மேல் ஆவியினாவர் ஊற்றப்பட்டதின் வெளிப்படையான சான்றாக உள்ளது. அவர்களுடைய உணவு . ஆராதனை, துதி என்னும் ஆவிக்குரிய விருந்தாக மாறியது. அப்.2:46-47ல் :

(46) அவர்கள் ஒருமனப்பட்டபவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி,

(47) தேவனைத் துதித்து, ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என வாசிக்கிறோம்.

அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும், கபடமில்லா இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். இந்தக் கிறிஸ்தவர்கள் தங்கள் உணவைச் சாப்பிட்டதில் ஒரு வித்தியாசம் காணப்பட்டதால் அது மனம் திரும்பாத அயலகத்தாரை கர்த்தரிடத்தில் ஆதாயப்படுத்தியது. இப்படியாக நாமும் கூட

இந்த நாளில் உணவருந்துவதில் விசுவாசத்தை காட்டக்கூடும்.

"விசுவாசத்தினால் உணவருந்துவது" அதிக முக்கியமானது என்று கூறினோம். இவ்வாறு சாப்பிட தவறினால் நடப்பது என்ன என்பதைக் காண்போம். இவ்விதமாக விசுவாசத்தினால் சாப்பிடாத மனிதனைப்பற்றி பிரசங்கிகளின் புத்தகத்தில் காண்கிறோம். (சில கிறிஸ்தவர்களே பிரசங்கியின் நூலை வாசிப்பதற்கு நேரம் செலவிடுகின்றனர்-நமக்கு நன்கு தெரிந்த வேத வசனங்களின் ஒளியில் இதைப்பார்க்கும் பொழுது பல ஆழ்ந்த விலையுயர்ந்த, சத்தியங்கள் இதில் வெளிப்படுகின்றன. இப்புத்தகத்தின் பெரும்பாலான இடங்களில் சாலமோன் வேதத்தின் இன்னொரு பகுதியில் சொல்லப்பட்டிருக்கும் ஜென்ம சுபாவமான மனிதனைப்பற்றி விளக்குகிறார். - இப்படிப்பட்ட மனிதன் தன் வாழ்வில் தேவ கிருபையும், அறிவும் இல்லாதவனாய் அவிசுவாசியாய் வாழ்கிறான். பந்தியில் உட்கார்ந்திருக்கும் இப்படிப்பட்ட மனிதனைப் பற்றி சாலமோன் பிரசங்கி **5:17**ல் "அவன் தன் நாட்களிலெல்லாம் இருளிலே புசித்து, மிகவும் சலித்து, நோயும் துன்பமும் அடைகிறான்" என்கிறார்.

அவன் இருளிலே புசிக்கிறான். என்ன அழகான வசனம்! "இதன் அர்த்தம் என்ன**?**" இது விசுவாசத்தில் புசிப்பதற்கு மாறுபாடானது. இப்படிப்பட்ட மனிதன் தன் உணவு தேவனுடைய ஈவு என்பதை ஒப்புக்கொள்வதில்லை. ஆகவே அவன் தேவனுக்கு நன்றி செலுத்துவதும் இல்லை. ஆகவே அது ஆசிர்வதித்து பரிசுத்தமாக்கப்படாத உணவு. இதன் பலன் சலிப்பும், நோயும், துன்பமுமே. விசுவாசம் இல்லாமல் புசிப்பது சலிப்பையும், நோயையும், துன்பத்தையுமே உண்டாக்குகிறது.

உணவருந்துதலாகிய தினவாழ்வின் சாதாரண காரியத்திற்கு விசுவாசத்தை இணைப்பதின் மூலம் வரக்கூடிய பலனை ஆராய்ந்தால் அது நம்மை வியப்பில் ஆழ்த்துவதாக உள்ளது. இதன் மூலம் ரோமர் **1:17**ல் சொல்லப்பட்ட "விசுவாசத்தினால்

நீதிமான் பிழைப்பான்'' என்னும் வாசகத்தின் முழு அர்த்தத்தையும் புரிந்து கொள்ள முடியும். விசுவாசம் என்பது தெய்வீக வாழ்வு வரும் வழியாக உள்ளது. எவ்வளவு விசுவாசம் உடையவர்களாய் இருக்கின்றோமோ அந்த அளவிற்கு அந்த வாழ்வை நாம் அனுபவிக்க முடியும். ஒவ்வொரு செயலிலும் நாம் விசுவாசத்தை இணைக்கும் பொழுது அது தெய்வீக வாழ்வாகிறது. அது துதித்தலுக்கும், ஆராதித்தலுக்கும் ஒரு சந்தர்ப்பமாக புதிய மகிழ்ச்சியைத் தருகிறது.

## பணத்திற்கு விசுவாசம்

நாம் விசுவாசத்தை செலுத்த வேண்டிய அடுத்த காரியம் பொருளாதாரத்திற்கும், பணத்திற்கும் அடுத்த காரியமாயிருக்கிறது. வேதம் முழுவதிலும் தேவன் தம்முடைய மக்களின் தேவைகளை சந்திக்க வல்லவர் என்பது பல உதாரணங்களால் காட்டப்படுகிறது. இயற்கையின் உதவியோ, மனித உதவியோ இல்லாத இடத்தில் கூட தேவ உதவி கிடைக்கக்கூடும். இது மிகத் தெளிவாக 2 கொரி. **9:8**ல் ''நீங்கள் **எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித** நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் **சகலவித** கிருபையையும் **பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்."** இதை நாம் கவனமாய் கவனிக்க வேண்டும். தமிழ் மொழிபெயர்ப்பில் சகல என்பது கிரேக்கத்தில் எல்லாம் என்று வருகிறது. பூரணம், அல்லது பரிபூரணம் என்னும் வார்த்தை இரண்டு தடவையும், சகலமும் என்னும் வார்த்தை ஐந்து தடவைகளும் வருகின்றன. தமது மக்களின் சகல தேவைகளையும் தேவன் சந்திக்க வல்லவர் என்பது உறுதியான மொழியில் அழுத்தமாகச் சொல்லப்பட்டுள்ளது. தேவைகள் மட்டும் சந்திக்கப்படுகிற அனுபவமன்று. இதில் **பரிபூரணம்** உண்டாகிறது.

மக்கள் மூன்று நிலையில் வாழ்கின்றனர்: தேவையுள்ளவர்களாக, தேவை சந்திக்கப்பட்டவர்களாக, பரிபூரணமாய் வாழ்பவர்களாக. ஒரு மனைவி கடைக்குச் சென்று மளிகை சாமான்கள் வாங்கும் தின அனுபவத்திலித்திருந்து, இதை விளக்கலாம். ஒரு மனைவிக்கு 15 டாலர் மளிகை சாமான்கள் வாங்குவதற்கு கையில் 10 டாலர்கள் மட்டுமே இருக்குமாயின் அவள் **பணப்பற்றாக்குறையில்** இருக்கிறாள். அவளுக்கு மளிகை சாமான்கள் வாங்க 15 டாலர்கள் தேவைப்பட்ட பொழுது பணப்பையில் 15 டாலர்கள் மட்டுமே இருக்குமாயின் அவள் **போதுமான பணம்** வைத்திருக்கிறாள். 15 டாலர்கள் பொருட்கள் வாங்க வேண்டிய நிலையில் அவள் கையில் 20 டாலர்கள் இருந்தால் **அது பரிபூரணநிலையாகும்.**

இங்கு ஒரு மனைவி டாலர்களைக் கொண்டு மளிகை சாமான்கள் வாங்குவதைச் சொன்னோம். பரிபூரணம் என்பது பணத்தின் தரத்திலே பொருளாதாரத்தில் காண்பது மட்டுமன்று. பரிபூரணம் என்பது தேவன் நமது எல்லா தேவைகளையும் சந்தித்தது போக பொருட்கள் மீதியிருக்கும்படி செய்கிறார் என்பதே. இப்படிப்பட்ட பரிபூரணத்திற்கான உதாரணம் இயேசு கிறிஸ்துவே. அவருக்கு தங்க இடமில்லை. அவர் பொருட்களைச் சேகரித்து வைக்கவில்லை. அவர் கையில் பெரும் தொகையில்லை. என்றாலும் அவருடைய சீஷராகிய யூதாஸின் இடத்தில் இருந்த பணப்பைக்கு அநேகர் காணிக்கை அளித்தனர். (யோவான் 12:6, 13:29 பார்க்கவும்) என்றாலும் இயேசுவுக்கும் அவருடன் இருந்தவர்களுக்கும் ஒன்றும் குறைவுபடவில்லை.

வரிப்பணம் செலுத்த பேதுருவிற்கு பணம் தேவைபட்டபொழுது பணப்பையையுடைய யூதாஸிடம் செல்லும்படியாக இயேசு அவனிடம் சொல்லவில்லை. அவனை கலிலேயாக் கடலுக்கு அனுப்பி முதலில் பிடிக்கும் மீனின் வாயிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்ளச் சொல்லுகிறார்.

(மத்தேயு 17:24-27) இங்கு ஒரு முக்கிய கேள்வி எழுகிறது. எது எளியது? வங்கிக்கு சென்று ஒரு காசோலையை மாற்றுவதா? அல்லது கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதா! இரண்டாவதே பரவசமூட்டக்கூடியது.

இன்னொரு தடவை சுமார் பன்னிரெண்டாயிரம் பசியுள்ள மக்கள் கூட்டமாக இயேசுவை சூழ்ந்து கொண்டு நிற்கின்றனர். (யோவான் 6:5-13ல் காண்க) ஒரு பையனிடமிருந்து 5 அப்பங்களையும், 2 மீன்களையும் எடுத்து பிதாவை நோக்கி அதற்கு நன்றி செலுத்துகின்றார். அந்தக் கூட்டம் அனைத்திற்கும் உணவளித்ததற்குப் பின்னர் மீந்த துணிக்கைகளை 12 கூடைகள் நிறைய எடுக்கின்றனர். இதுவே பரிபூரணம். நம்முடைய உணவிற்கு விசுவாசத்தில் நன்றி செலுத்துவதின் மூலம் உண்டாகும் இயற்கைக்கு அப்பாற்பட்ட விளைவு இது.

பின்பு இயேசு சீஷர்களை பிரசங்கத்திற்கு அனுப்புகிறார். வழிக்கு ஒன்றும் எடுத்துச் செல்ல வேண்டாம் என்கிறார். (லூக்கா 9:1-3; 10:1-4 காண்க) பூவுலக வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இதை நினைவுபடுத்தி அவர்களுக்கு ஏதாவது குறைவு ஏற்பட்டதா என்று கேட்கின்றார். அவர்கள் அதற்கு இல்லை என்கிறார்கள். (லூக்கா 22:35) இதுவே பரிபூரணம். நான் மிஷனெரியாக பல தடவைகள் இரண்டு கண்டங்களில் பணிபுரிந்திருக்கின்றேன். ஒரு மிஷனெரிக்கு வீடு, கார், பணம் போன்ற பல காரியங்கள் கொடுக்கப்பட்டபோதிலும் அவர் அநேக காரியங்களில் குறைவுபட்டவராய் இருக்கக்கூடும். பரிபூரணத்தின் திறவுகோல் பணமோ, பொருட்களோ அன்று. அது விசுவாசமே.

இயேசு கிறிஸ்துவின் வாழ்விலுள்ள இந்த உதாரணங்களை நாம் காணும்போது இது இயேசுவுக்கு நடந்தது. நமக்கு நடக்குமா? நாம் இதை எதிர்பார்க்கக் கூடுமா! என்று நினைக்கத் தோன்றுகின்றது. ஆனால் இயேசு கிறிஸ்து இதற்கு

மறுப்பு தெரிவிக்கின்றார். யோவான் **14:12**ல் ''மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்று கூறுகின்றார். இதை நேரிடையாக வாழ்வில் கண்ட அப்போஸ்தலனாகிய யோவான் **1** யோவான் **2:6**ல் "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்". இயேசு விசுவாச வாழ்க்கைக்கு ஒரு மாதிரி அதை நாம் பின்பற்ற அழைக்கப்படுகிறோம்.

இந்த அறைகூவலை ஏற்றுக் கொள்ள தாமதிப்போமானால் தேவனுடைய கிருபையை நாம் முற்றிலும் புரிந்து கொள்ளவில்லை என்று தான் அர்த்தமாகும், **2** கொரி. **9:8**ல் பிரதான வார்த்தை **கிருபையாகும்.** தேவன் உங்களிடத்தில் சகல **கிருபையையும்** பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார். நாம் காரியங்களைப் பெற்றுக் கொள்வது தேவனுடைய கிருபையினால் அன்றி நம்முடைய திறமையினாலோ, ஞானத்தினாலோ அல்ல. இதைப் பெற்றுக் கொள்ள நாம் இரண்டு முக்கிய கொள்கைகளை அறிந்திருக்க வேண்டும்.

முதல் குறிப்பு யோவான் **1:17**ல் ''நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" என்று கூறப்பட்டதாகும். கிருபைக்கான ஒரே வழி இயேசு கிறிஸ்துவே. கிருபையானது முற்றிலுமாக கிறிஸ்துவிடம் இருந்து வருமே தவிர மதத்தின் காரியங்களையோ, சட்டத்தையோ பின்பற்றுவதினால் வராது.

இரண்டாவது குறிப்பினை எபேசியர் **2:8-9**ல் காண்கிறோம். **கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்;** இது உங்களால் உண்டானதல்ல, இது

தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; கிருபையானது நம்முடைய திறமையினால், செயலினால் பெற்றுக் கொள்ள முடியாததை பெற்றுத் தருவதாகும். அதை நாம் **விசுவாசத்தின்** மூலமாகவே பெற்றுக் கொள்ளக்கூடும். நாம் எதற்கு பாத்திரவான்கள், நாம் எதை சம்பாதிக்கக்கூடும் என்று நினைக்கும் வேளையில் நாம் விசுவாசத்தை செயல்படுத்த தவறுகிறோம். அதனால் தேவ கிருபையை முற்றிலுத் அனுபவிக்க முடியாமற்போகிறது.

இந்தக் கொள்கை பணத்தைப் பொறுத்தமட்டில் எப்படி செயல்படுகிறது? முதலாவதாக, தேவன் சோம்பேறித்தனத்தையோ, பணத்தை விரயம் செய்வதையோ, தவறாய் சம்பாதிப்பதையோ ஆசீர்வதிப்பதில்லை. நீதிமொழிகள் 10:4ல் "சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்" என்கிறது. எபேசியர் 4:28ல் பவுல் "திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத் தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன்" என்கிறார், தேவன் நமது திறமைக்கேற்ற நேர்மையான தொழிலில் இறங்கி நமக்கு மட்டுமல்ல தேவையுள்ள மற்றவர்களுக்கும் பகிர்ந்தளிக்க நம்மை தேவன் எதிர்பார்க்கிறார். 2 தெசலோனிக்கேயர் 3:10ல் ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்த போது உங்களுக்குக் கட்டளையிட்டோமே என்று பவுல் அழுத்தமாகக் கூறுகிறார். தேவனுடைய கிருபையானது நேர்மையற்றவர்களுக்கும், சோம்பேறிகளுக்கும் கிடையாது.

நமக்கும் நம்மை சார்ந்தவர்களுக்கும் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் தேவைகளை சந்தித்த பின்பு நாம் குறைவுள்ளவர்களாக இருப்பதாக உணரலாம். கிருபையின் செய்தி என்னவென்றால் இதை நாம் தேவனுடைய சித்தம்

என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்ல. நமது விசுவாசத்தை இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனிடத்தல் செலுத்தி அவர் தெரிந்தெடுக்கும் முறைமையின்படி நம்மை உயர்த்தும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். நமது சாதனை, ஞானம், திறமை இதற்கப்பாற்பட்ட நிலையில் நம்மை உயர்த்தும்படி நாம் தேவனிடம் கேட்டுக்கொள்ளவேண்டும்.

## தேவ உதவி அனைவருக்கும் பொதுவாய் உள்ளது

தேவன் கொடுப்பதை முற்றிலும் உணர இன்னொரு குறிப்பையும் மனதிற்கொள்ள வேண்டும். தேவன் தமது மக்களுக்கு பொருட்களை மொத்தமாகவே வழங்குகிறார். அவர்களை தனிப்பட்ட நபர்களாக கருதி நடத்தாமல் ஒருவருடன் ஒருவர் நெருக்கமான நிலையில் இணைக்கப்பட்ட ஒரே சரீரத்தின் பல அங்கங்களாகக் கருதுகிறார். எபேசியர் 4:15-16ல் இந்த சரீரத்தின் தலையாக கிறிஸ்துவை கூறிவிட்டு தேவன் செயலாற்றும் விதத்தை இவ்வாறு விளக்குகிறார்.

> **(16)** அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.

பவுல் இங்கு கணுக்களை முக்கியப்படுத்துகிறார். அவற்றிற்கு இரண்டு வேலைகள் உண்டு : முதலாவதாக அது சரீரத்தை **இணைத்து** வைத்துள்ளது. இரண்டாவதாக அது உணவளிக்கிறது. கணுக்கள் என்பது வெவ்வேறு அங்கத்தினர்களுக்குரிய மத்தியில் உள்ள உறவைக் குறிக்கிறது. இவைகள் சரியாய் இருக்குமானால் எந்த

அவயவத்திற்கும் குறைவின்றி சரீரம் முழுவதின் தேவையும் சந்திக்கப்படும்.

கணுக்கள் சரியாக இணைக்கப்படாவிட்டால்- அங்கத்தினர்கள் ஒருவருடன் ஒருவர் இணங்கிச் செல்லவில்லை என்றால் கிறிஸ்துவின் சரீரத்தின் சில பகுதிகள் தேவையில் இருக்கும். இதற்கு தேவன் வழங்குகின்றவை போதுமானதன்று என்று பொருள் அல்ல. நமது தவறான எண்ணங்களினால், உறவுகளினால் அவர் வழங்குவது தேவையான இடத்திற்குச் செல்லாதபடி தடை செய்யப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து விடுதலை அடையச் செய்தபொழுது இக்கொள்கையை நடைமுறையில் நன்கு போதித்தார். இரண்டு அல்லது மூன்று மில்லியன் மக்கள் கடுமையான வனாந்தரத்தில் இயற்கையின் உணவில்லாத சூழ்நிலையில் இருந்தனர். அவர்கள் தேவையை சந்திக்கும்படி ஒவ்வொரு நாள் இரவிலும் தேவன் மன்னாவை பொழிந்தருளினார். சூரியன் அதை உருகச் செய்வதற்கு முன்பு அதை அவர்கள் பொறுக்கிக் கொள்ள வேண்டியதாயிருந்தது. ஒவ்வொருவருக்கும் தேவையானது ஓர் ஓமர் மன்னாவாகும். ஆனாலோ சிலர் ஓர் ஓமருக்கு அதிகமாகவும் மற்றும் சிலர் ஓர் ஓமருக்கு சற்று குறைவாகவும் பொறுக்கினர். அவர்கள் ஒவ்வொருவருடனும் பகிர்ந்து கொண்ட போது ஒவ்வொருவருக்கும் ஒரு ஓமர் அளவே உண்டாயிருந்தது. (யாத் **16:14-18**க் காண்க) இந்த முறையில் பகிர்ந்து கொள்ள விருப்பமற்றவர்களாய் அவர்கள் இருந்திருப்பார்களாயின் சிலருக்கு உணவுப் பற்றாக்குறை உண்டாயிருக்கும். தேவன் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் தனக்குத் தேவையானதை பொறுக்கும்படி செய்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. மற்றவர்களுக்கு உள்ள பொறுப்பை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இவ்வாறு செய்தார்.

இது புதிய ஏற்பாட்டிலும் தொடர்கிறது. 2 கொரி.**8**ம்

அதிகாரத்தில் பவுல் யூதேயாவிலுள்ள ஏழை யூத விசுவாசிகளுக்கு மக்கொதொனியா, அகாயா என்னுமிடங்களில் உள்ள திருச்சபைகளில் வசூலிக்கப்பட்ட ஒரு காணிக்கையைப் பற்றி பேசுகிறார். கொரிந்தியர்களுக்கு பிறருடைய தேவையைச் சந்திக்கின்ற தேவனுடைய முறையைக் கற்பிக்கிறார். சிலருக்கு ஒன்றுமில்லாமலும் சிலருக்கு அதிகமாய் இருப்பதும் பற்றி தேவ கருத்தைக் கூறுகிறார். இந்தக் கருத்தை விளக்குமிடத்தில் இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் மன்னாவை பகிர்ந்து கொண்டதை **13-15** வரையுள்ள வசனங்களில் கூறுகின்றார்:

> *மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலை இருக்கும்படியாகவே சொல்லுகிறேன். எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிற பிரகாரம், சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக. (பவுல் இதை யாத். 16:18ல் இருந்து எடுத்துக் கூறுகிறார்)*

பரிசுத்த ஆவியானவர் எருசலேமில் ஊற்றப்பட்டதற்குப் பின்பு ஆதி கிறிஸ்தவ திருச்சபை இப்படியே செயலாற்றியது. அப். **4:32-35** வரையுள்ள வசனங்களில் லூக்கா இவ்வாறு எழுதுகிறார்.

> **(32)** விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுள்ளவர்களாய் இருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும்

தன்னுடையதென்று சொல்லலில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது.

(33) கர்த்தராகிய இயேசுவின் உயர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள்; அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது.

(34) நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து,

(35) அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை.

இங்கே சேர்ந்து சிந்திக்க வேண்டிய மூன்று காரியங்களைக் காண்கிறோம். முதலாவதாக அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பலத்த சாட்சிகளாய் இருந்தார்கள். இரண்டாவதாக, அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. மூன்றாவதாக, அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாய் இருந்ததில்லை. அப்போஸ்தலர்களுடைய வாயின் சாட்சியானது அந்த விசுவாசிகளின் மேல் காணப்படக்கூடிய நிலையில் செயலாற்றிய தேவ கிருபையை விளக்குகிறது. அவர்களுடைய எல்லா தேவைகளும் சந்திக்கப்பட்டன. ஆகவே முழு சரீரமாகிய தேவமக்களின் வாழ்வில் தேவ கிருபை எல்லா வாழ்வின் பகுதிகளுக்கும் போதுமானதாய் இருந்தது.

தேவனுடன் கிறிஸ்துவின் மூலம் விசுவாசத்தில் இணைக்கப்பட்ட மக்கள் கூட்டம் பிறர் தேவைகளைத் தன் தேவைகளாக ஏற்றுக்கொண்டு அவைகளைச் சந்திக்க முற்பட்டால் நமது நாட்களில் உலகம் எவ்வளவு சிறப்பாய் இருக்கும்.

# விசுவாசத்திற்குப் பதிலாக வேறொன்றும் கிடையாது

தேவனில் நாம் கொள்ளும் உறவுக்கு இரு பகுதிகள் உள்ளன. வேதம் இந்த பகுதிக்கும் முக்கியத்துவம் செலுத்துகிறது. தேவன் தமது பரிபூரண கிருபையை நமது விசுவாசத்தின் அடிப்படையில் நமக்கு சொந்தமாக்குகிறார். ஆனால் அதே நேரத்தில் விசுவாசத்தை அன்றி வேறு வழியில் அவரை சந்திக்க முற்பட்டால் அவர் அதை தள்ளிவிடுகிறார். இது எபிரெயர் **11:6**ல்

> **(6)** விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்.

தேவனை திருப்தி படுத்த நமக்குத் தேவையான ஒரே ஒரு காரியம் விசுவாசமே. வேதம் தரும் இந்தப் பதிலை சிலரே உணர்ந்தவர்களாக இருக்கின்றனர். அநேகம் தடவைகளில் மக்கள் விசுவாசத்தை விட்டு விட்டு கற்பொழுக்கத்தினாலும், நற்கிரியையினாலும் சபை அங்கத்துவத்தினாலும், ஜெபத்தினாலும் பக்திக்கடுத்த மற்ற காரியங்களினாலும் தேவனை திருப்தி படுத்த முற்படுகின்றனர். விசுவாசம் இல்லையென்றால் இவைகளில் ஒன்றையும் தேவன் ஏற்றுக் கொள்ளமாட்டார். நாம் எதைச் செய்தாலும் சரி. நம் உள்நோக்கங்கள் எவ்வளவு சிறப்பாய் இருந்தாலும் சரி. விசுவாசத்திற்கு கொடுக்குமிடத்தை வேறொன்றுக்கும் நாம் கொடுக்க முடியாது. விசுவாசம் இல்லாமல் தேவனை திருப்தி படுத்த முடியாது. திருப்திப்படுத்தமுற்படுவது கூடாத காரியம்.

தேவனிடத்தில் நேர்முகமாக வருவதற்கு ஒரே ஒரு வழியே உண்டு : அவரிடத்தில் வருகிறவன் அவர் உண்டென்று

**விசுவாசிக்க வேண்டும்.** நாம் விசுவாசிக்க வேண்டிய காரியம் இரண்டு உள்ளது. முதலாவதாக தேவன் இருக்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும். அநேக மக்கள் தேவன் **இருக்கிறார்** என்று விசுவாசிக்கின்றனர். ஆனால் அது மட்டும் போதாது. அவரைத் தேடுகிறவர்களுக்கு தேவன் பதிலளிக்கிறவர் என்று நாம் விசுவாசிக்கவும் வேண்டும். தேவனுடைய **நற்குணத்தில்** விசுவாசம் வைக்க வேண்டும். அவர் உண்மையுள்ளவர், நம்பத்தக்கவர். இப்படிப்பட்ட விசுவாசம் நம்மை, கோட்பாடுகளுக்கும் இறையியலுக்கும் அப்பால் எடுத்துச் செல்லுகிறது. தேவனுக்கும் ஒரு விசுவாசிக்கும் இடையே உள்ள நேரிடையான சொந்த உறவை இது உருவாக்குகிறது.

முதலாம் அத்தியாயத்தில் நம் விசுவாசமானது நம்மை தேவனுடனும் அவருடைய வார்த்தையுடனும் இணைக்கிறது எனப் பார்த்தோம். இன்னும் ஒரு படி முன்னேறிச் செல்ல வேண்டும். விசுவாசத்தின் இறுதி இலக்கு தேவனே ஆவார். ஏனென்றால் தேவனும் அவருடைய வார்த்தையும் ஒன்றே. அவருடைய வார்த்தையில் நாம் வைக்கும் தன்னம்பிக்கை அவர் பேரில் நாம் வகிக்கும் நம்பிக்கையைப் பொறுத்துள்ளது. நாம் தேவனை விசுவாசிக்க தவறும் பொழுது அவருடைய வார்த்தையையும் விசுவாசிக்கத் தவறுகிறோம்.

ஒரு கோட்பாட்டையோ அன்றி ஒரு இறையியலையோ விசுவாசிப்பது முக்கிய காரியமன்று. இத்திசையில் யாருக்காவது விசுவாசம் செல்லுமாயின் தேவன் அவர்களுக்கு அருளும் வாழ்வின் முழுமையையும், ஐசுவரியத்தையும் இவர்களால் உணர்ந்து கொள்ளமுடியாது. அவருடைய இறுதி உறவு நமக்கு ஆக்கமூட்டி, திசைக்காட்டி நாம் செல்லும் திசையில் பாதுகாப்பளிக்கிறது. இதுவே வாழ்வின் ஆதாரமும், முழுமையும் ஆகும். இம்முறையில் விளக்கும் போது விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்றும் ஆபகூக்கின் தீர்க்கதரிசனம் நம்மை ஒரு பிரமாணத்திற்கோ, இறையியலுக்கோ

வழிநடத்தவில்லை. ஆனால் ஆழ்ந்த நிலையில் தொடர்ந்து செல்லக்கூடிய தேவனுடன் கூடிய உறவை இது விளக்குவதாக உள்ளது.

இந்த உறவைத் தான் தாவீது தமது சங்கீதம் 23:1ல் ‘‘கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார் நான் தாழ்ச்சி அடையேன்’’ என்கிறார். இங்கு தாவீது இறையியலை விளக்காமல் ஓர் உறவை விளக்குகிறார். தேவனை நம்முடைய மேய்ப்பனாகக் கொண்ட அவர் நான் தாழ்ச்சி அடையேன் என்கிறார். அவர் அற்புதமான, சொந்த பாதுகாப்பை இந்த வசனத்தில் தெரிவிக்கிறார். ஒவ்வொரு சூழ்நிலையிலும் வரும் ஒவ்வொரு தேவையையும் இது சந்திக்கிறது. தாவீது மற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி எனக்கு பணம் ....உதவி ....நண்பர்கள் ...ஆரோக்கியம் என்பவைகளில் தாழ்ச்சியடையேன் எனக்கூறவில்லை. அப்படிச் சொல்லி இருப்பார் என்றால் அவருடைய வார்த்தைகளுக்கு வலிமை இருந்திருக்காது.

இந்த வேத வசனம் ஆழ்ந்த சத்தியத்தை எளியமுறையில் கூறுகிறது. மூல மொழியில் எபிரெயத்தில் சங்கீதம் 23:1 நான்கு வார்த்தைகளில் வருகின்றது. தமிழ் மொழிபெயர்ப்பில் ஏழு வார்த்தைகள் வருகின்றன. என்றாலும் இவை சிறிய வார்த்தைகள் ஆழமான உறவை சகல தேவையையும் சந்திக்கின்ற உறவை வெளிப்படுத்துகிறது. ஜீவனிலும் மரணத்திலும், தற்காலத்திலும் நித்தியத்திலும் இந்த உறவு தொடர்கிறது.

## அடிப்படையான பாவம் அவிசுவாசமே

நாம் இதுவரை நீதி என்பது விசுவாசத்திலிருந்தே ஆரம்பமாகிறது என்பதைக் கண்டோம். ஆனால் இதன் மறுதலையும் உண்மையாக இருக்கிறது : பாவத்தின் இறுதி முடிவு அவிசுவாசமே.

யோவான் 16:8ல் பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகத்தில்

மூன்று காரியங்களை கண்டித்து உணர்த்துகிறார்: அவை பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு எனப்பார்க்கிறோம். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அடுத்த வசனத்தில் இயேசுகிறிஸ்து அதை ஆவியானவர் கண்டித்து உணர்த்துவார் என்பதை விளக்குகிறார். அவர்கள் தன்னை விசுவாசியாததினால் பாவத்தைக் குறித்தும் என்கிறார். இந்த உலகம் அனைத்தையும் பாதித்திருக்கும் குற்றம், **அவிசுவாசமாகும்.** இது மற்ற எல்லா பாவங்களிலும் அடிப்படையானது.

எபிரெயர் 3ம் அதிகாரம் சிறப்பாக இந்தப் பாவத்தைக் குறித்துப் பேசுகிறது. தேவனுடைய மக்கள் அனைவரும் மோசேயின் தலைமையின் கீழ் எகிப்திலிருந்து விடுபட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் வரவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் வனாந்தரத்திலே மடிந்து போயினர்.

இஸ்ரவேலருக்கு ஏற்பட்ட இந்த துயரமான பாடத்தை கிறிஸ்தவர்களாகிய நமக்கு 12ம் வசனத்தில் கூறுகிறார். "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான **அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம்** உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள் என்கிறார்." அநேக கிறிஸ்தவர்கள் அவிசுவாசம் வருந்தத்தக்க காரியம் என்று கருதினாலும், அதினால் அவ்வளவு பாதகமில்லை என்று எண்ணுகின்றனர். **அவிசுவாச** இருதயம், **பொல்லாத** இருதயம் என்றழைக்கப்படுகிறது. அவிசுவாசம் பொல்லாதது. அது நம்மை தேவனிடமிருந்து விழச் செய்கிறது. விசுவாசம் தேவனுடன் ஒரு சொந்த உறவை உண்டாக்குகிறது. அவிசுவாசம் அதை அழிக்கிறது. இவைகள் இரண்டும் எதிர்மறையானவைகள்.

13ம் வசனத்தில் எழுத்தாளர் மீண்டும் ''உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்

போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்.” அவிசுவாசம் தேவன் பேரில் நம் இருதயத்தை கடினப்படுத்தி நம்மை பாவத்திற்கும், சாத்தானுக்கும் அறிமுகம் செய்கிறது. இந்த அவிசுவாசத்தின் எச்சரிப்பு மிக முக்கியமானதொன்றாகும். அதை இன்றே செயல்படுத்த வேண்டும் என்கிறார். மோசேயின் கீழ் எகிப்தை விட்ட இஸ்ரவேலர்களை விட அது கிறிஸ்தவர்களாகிய நமக்குத்தான் முக்கியமுள்ளதாய் உள்ளது. அதன் பலன் அவர்களுக்கு எவ்வளவு பயங்கரமாய் இருந்தது. 17 முதல் 19 வரையுள்ள வசனங்களில் இஸ்ரவேலரின் தோல்வியைக் குறித்து இறுதியாக அவர் கூறுகிறார்.

(17) மேலும், அவர் நாற்பது வருஷமாய் யாரை அரோசித்தார்? பாவம் செய்தவர்களையல்லவா? அவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்றே.

(18) பின்னும், என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று அவர் யாரைக்குறித்து ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக் குறித்தல்லவா?

(19) ஆதலால், அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமற்போனார்களென்று பார்க்கிறோம்.

அதன் முடிவு வார்த்தையான **அவிசுவாசத்தினிமித்தம்** என்பதைக் கவனிக்கவும். இஸ்ரவேலர்கள் அநேக பாவங்களுக்குள்ளானார்கள், வேசித்தனம், அவிசுவாசம், முறுமுறுத்தல், எதிர்த்து நிற்பது போன்ற பாவங்கள் என்றாலும் அவர்களுடைய சுதந்தரத்திற்குள் பிரவேசிக்க கூடாதபடி அவர்களைச் செய்தது அவர்களின் அவிசுவாசமே.

அவிசுவாசம் என்பது எல்லா பாவங்களின் அடித்தளத்திலும் உள்ளது. இதை நாம் தர்க்கரீதியில் நிரூபிக்கலாம். எப்படியெனில் விசுவாசம் என்பது இறுதியாக தேவனுடைய பண்புடன் சம்பந்தப்பட்டது. தேவனுடைய நற்குணம், ஞானம், வல்லமை

போன்றவற்றை நாம் கொண்டிருப்போமாயின் நாம் தேவனுக்கு கீழ்படியாமற் போகவே மாட்டோம். ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவன் நல்லவர் நமக்கு நல்லதையே செய்வார் என்றும் நமக்குச் சிறந்ததே செய்யும் ஞானம் அவருக்கு உண்டென்றும் நமக்கு அனைத்தையும் கொடுக்கும் வல்லமை அவருக்கு உண்டென்றும் நாம் கருதுவோமென்றால் கீழ்ப்படியாமைக்கு அங்கு இடமில்லை. தேவனுக்கு விரோதமான எல்லா கீழ்ப்படியாமையும் அவிசுவாசத்திலே ஆரம்பமாகிறது.

கடைசியாகச் சொல்லப்போனால் தேவன் பேரிலே நாம் இவ்வித நோக்கங்கள் கொள்ளக்கூடும். ஒன்று நம் விசுவாசம் அவருடன் நம்மை இணைக்கலாம் அல்லது அவிசுவாசம் நம்மை அவரிடமிருந்து பிரிக்கலாம். ஒன்று இருந்தால் மற்றொன்று தானாகவே விலகுகிறது. எபிரெயர் **10:38-39** வரையுள்ள வசனங்களில் ஆபகூக் தீர்க்கதரிசியின் வசனம் இன்னும் இரு காரியங்களுடன் சேர்த்து சொல்லப்படுகிறது.

> **(38)** விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.
>
> **(39)** நாமோ கெட்டுபோகப் பின் வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.

விசுவாசத்தின் அடிப்படையிலான இந்த வாழ்க்கைக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது அதை விட்டு நம்மால் திரும்பிச் செல்ல முடியாது. அவிசுவாசத்திற்குச் சென்றால் அது நம்மை இருளுக்கும், அழிவிற்குமே நடத்தும். முன்னேறிச் செல்வதற்கு நமக்கு உதவக்கூடியது - விசுவாசமே!

## தொகுப்பு

புதிய ஏற்பாட்டின் நீதி, இரட்சிப்பு இவற்றின் செய்தி ஆபகூக் **2:4** ஆகிய “விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்” என்னும் வசனத்தைச் சார்ந்தது. இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கும்

விசுவாசத்தால் நாம் தேவனிடமிருந்து இப்பொழுது இவ்வுலகிலேயே ஒரு தெய்வீக நீதியின் நித்தியப் புதுவாழ்வைப் பெறுகிறோம். ஆகவே நமது விசுவாசத்தை வாழ்வின் பல பகுதிகளுக்கு செலுத்தும் பொழுது அது தேவனிடமிருந்து வரும் இப்புது வாழ்வாக மலர்கிறது.

முதலாவதாக விசுவாசமானது நடைமுறையிலான சிறிய காரியங்களில் செலுத்தப்பட வேண்டும். ரோமர் 14ம் அதிகாரத்தில் சாப்பிடுகிற காரியத்திற்கு பவுல் இதை இணைத்துக் கூறுகிறார். எதை சாப்பிடலாம், எதை சாப்பிடக்கூடாது என்னும் மாறுபாடான கருத்துள்ள விசுவாசத்தின் இரு நிபந்தனையைக் குறித்துப் பேசுகிறார். நாம் எதை உண்கிறோம் என்பதைவிட விசுவாசத்தினால் உண்கிறோமா என்பதே முக்கியம் என முடிக்கின்றார்.

விசுவாசித்து உண்பதால் ஏற்படும் பலன்களை வரிசைப்படுத்துகிறார். முதலாவதாக உணவை நாம் தேவனிடத்திலிருந்து ஈவாகப் பெறுகிறோம். இரண்டாவதாக அதற்காக தேவனுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். மூன்றாவதாக இவ்விதமாக இவ்வுணவு பரிசுத்தமாக்கப்படுகிறது. நான்காவதாக இதிலிருந்து வரும் பெலத்தை தேவஊழியத்திற்கும் மகிமைக்கும் நாம் செலவிடுகிறோம். இவ்விதமாக சாதாரண செயலான உணவு உட்கொள்தல் ஒரு சாக்கிரமெந்தாகிறது.

அடுத்தபடியாக நமது விசுவாசத்தை பொருளாதாரத் துறையில் நமது பணத்தை பொறுத்தமட்டிலுள்ள காரியங்களிலும் செலுத்த வேண்டும். கிறிஸ்துவின் மூலம் உண்டான தேவ கிருபை நமக்கு சகலத்தையும் அபரிமிதமாக தருகிறது. நமது தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட்ட பின்பும் பிறருக்கு கொடுக்கவும் உண்டாயிருக்கிறது. எனினும் பரிபூரணம் என்பது பணமோ, பொருட்களோ அன்று. அது விசுவாசத்தையே சார்ந்தது. பணமோ, செல்வமோயின்றி வரும்

இந்த பரிபூரணம் இயேசுவினால் உண்டாகிறது. அவருடைய நல்லமாதிரியைப் பின்பற்ற நமக்கு அறைகூவல் விடப்படுகிறது. அதே நேரத்தில் சோம்பேறித்தனம், சீர்கேடு, பொறுப்பற்ற தன்மை இவைகளிலிருந்து விலகியிருக்கும்படி நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

தேவனின் பரிபூரணத்தை பகிர்ந்து கொள்வதற்கு நம்மை தனிப்பட்ட அங்கத்தினர்களாகக் காணாமல் ஒரே சரீரத்தின் பல உறுப்புகளாகக் காணவேண்டும். தேவன் இந்த பாடத்தை இஸ்ரவேலர்களுக்கு வனாந்தரத்தில் தாம் வழங்கிய மன்னாவின் மூலம் போதித்தார். ஒவ்வொருவருக்கும் போதுமானதாக இருக்க அவர்கள் பொறுக்கியதை அவர்கள் பகிர்ந்து கொண்டனர். கிறிஸ்துவின் சரீரத்தை பொறுத்தமட்டிலும் அது அப்படியே இருக்கவேண்டும். நமது நோக்கங்களும், உறவுகளும் சரியாக இருந்தால் நாம் பகிர்ந்துகொள்கிறோம். எல்லோருக்கும் போதுமானது கிடைக்கிறது. தவறான நோக்கங்களும், உறவுகளும் சரீரத்தின் சில பகுதிகளுக்கு முழு உதவியும் கிடைக்காதபடி தடை செய்கிறது.

எருசலேமிலுள்ள ஆதிக்கிறிஸ்தவர்களின்மேல் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்ட பொழுது அவர்களுடைய விசுவாசம் உணவு, பணம் ஆகிய பகுதிகளில் வெளிப்பட்டது. அவர்கள் உணவை சாக்கிரமெந்தை துதியுடனும், ஆராதனையுடனும் உண்டனர். ''அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை" என்று சொல்லத்தக்கதாக அவர்கள் தங்கள் பணத்தை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தார்கள். இவ்விதமாக அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் வெளிப்பட்ட தேவ கிருபையானது தங்களுடைய அயலகத்தார்களை கிறிஸ்துவினிடத்தில் ஈர்ப்பதற்கு உதவியது.

தேவனை சந்திப்பதற்கு விசுவாசத்தை தவிர வேறு ஒரு வழியில்லை. அவர் இருக்கிறார் என்பதை மட்டும்

விசுவாசித்தால் போதாது. அவர் நற்பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும். இது நம்மை இறையியலுக்கு அப்பாற் எடுத்துச் சென்று தேவனுடன் ஆழ்ந்த உறவில் இணைக்கிறது. இதன் மூலம் நமக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பும் கிடைக்கிறது.

அவிசுவாசம் என்பது பாவத்தின் மூல ஆதாரம். தேவனின் நற்பண்பில், ஞானத்தில், வல்லமையில் நாம் முழு நம்பிக்கை கொண்டிருப்போமென்றால் நாம் பாவம் செய்ய தூண்டப்படமாட்டோம். எபிரெயர்களுக்கு எழுதின நிருபத்தில் ஆசிரியர் மோசேயின் தலைமையில் இஸ்ரவேலர்கள் தங்களுக்குரிய சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளாமற் போனதற்குரிய காரணம் அவிசுவாசமே. கொடிய இந்த தவறை கிறிஸ்தவர்களாகிய நாம் செய்யாதிருக்கும்படி எச்சரிக்கப்படுகிறோம். தேவனுக்கும் நமக்குமிடையே உள்ள உறவு இரு நிலையாய் உள்ளது. விசுவாசம் நம்மை தேவனுடனே இணைக்கிறது. அல்லது அவிசுவாசம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது.

# அத்தியாயம் ஆறு

# எவ்வாறு விசுவாசம் வருகிறது

விசுவாசத்தைக் குறித்து ஒப்புரவாகாத நிலையில் தேவன் நம்மில் எதை எதிர்ப்பார்க்கிறார் என்பதை கடந்த அத்தியாயத்தில் கண்டோம். "நீதிமான் விசுவாசத்தினால் பிழைப்பான்... விசுவாசத்தினால் வராதது யாவும் பாவம்... விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். தேவனிடத்தில் வருகிறவன் விசுவாசத்துடன் வரவேண்டும்..." இவ்விதமான தெய்வீக எதிர்பார்ப்பின் ஒளியில் விசுவாசத்தை விலையுயர்ந்த தங்கத்திற்கு ஏன் ஒப்பிடப்பட்டுள்ளது என்பதை எளிதில் காணலாம். விசுவாசத்தை வேறு எதற்கும் பரிமாற்றம் செய்ய முடியாது. அது இல்லாமல் தேவனிடம் வரமுடியாது. அவரை திருப்திபடுத்த முடியாது. அவருடைய ஜீவனை பெற்றுக் கொள்ளமுடியாது.

அப்படியென்றால் விசுவாசத்தை எப்படி பெற்றுக்கொள்வது? விசுவாசம் என்பது விளக்கமுடியாத நமது கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்ட விவரிக்க முடியாத ஒன்றா? அல்லது விசுவாசத்தை நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார் என்று சொல்லும் அதே வேதத்தில் அதைப் பெற்றுக் கொள்வதற்கான வழி காட்டப்பட்டுள்ளதா?

இந்த அத்தியாயத்தில் நான் கிறிஸ்தவ வாழ்க்கையிலேயே கண்டுபிடித்த மிக முக்கியமான கண்டுபிடிப்பை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நான் கற்றுக் கொண்ட

அநேக பாடங்கள் நிரந்தர மதிப்புள்ளதாக இருக்கிறது. அவற்றை என் சொந்த அனுபவம் என்னும் கடினமான முறையில் படித்திருக்கிறேன். அதிகமான துயரத்திற்கும், போராட்டத்திற்கும் மத்தியிலே இந்த விலைமதிக்க முடியாத முத்தினை நான் இறுதியாக கண்டடைந்தேன்: **விசுவாசம் எப்படி வருகிறது என்பதைக் கற்றுக் கொண்டேன்.**

## இருண்ட பள்ளத்தாக்கில் ஒளி

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் நான் பிரிட்டிஷ் இராணுவத்தில் பணிபுரிந்த போது பன்னிரெண்டு மாதங்கள் எகிப்தில் உள்ள ஒரு இராணுவ ஆஸ்பத்திரியில் பயங்கர சரும நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தேன். மாதங்கள் கடந்து செல்லச் செல்ல அந்த வெப்பமான, வனாந்தரமான சூழ்நிலையில் மருத்துவர்களால் என்னைக் குணப்படுத்த முடியாது என்பதை உணரலானேன். பரிசுத்த ஆவியைப் பெற்ற ஒரு புதிய கிறிஸ்தவனாக தேவனுடன் சொந்தத் தொடர்புடையவனாக இருந்தேன். என்னுடைய பிரச்சனைக்கு அவரிடத்தில் கட்டாயம் தீர்வு உண்டு என அறிந்தேன்-ஆனால் அதை எப்படிக் கண்டுபிடிப்பது என்பது தெரியாதிருந்தது.

மீண்டும் மீண்டும் நான் “எனக்கு விசுவாசம் இருந்தால் தேவன் என்னைக் குணப்படுத்துவார்” என்று சொல்லிக் கொண்டேன். ஆனால் அத்துடனே “எனக்கு விசுவாசம் இல்லை” என்றும் எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு தடவை நான் அதைச் சொல்லிய போதும் ஜான் பனியன் அழைக்கின்ற உளையான சேற்றில் தனிமையில் இருளின் பள்ளத்தாக்கில் சோர்வுற்றிருந்தேன். ஒருநாள் ஒரு பிரகாசமான ஒளிக்கற்றை அந்த இருளினுள் பிரகாசித்தது. படுக்கையில் தலையணையில் படுத்துக்கொண்டு கிங் ஜேம்ஸ் வேதத்தின் மொழி பெயர்ப்பினை என் கைகளில் திறந்து வைத்து பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென

என் கண்கள் ரோமர் 10:17ல் ‘‘ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்’’ என்பதைக் கண்டேன். ஒரு தனி வார்த்தை என் கவனத்தை ஈர்த்தது. அது “வரும்” என்பதாகும். “விசுவாசம் வரும்” என்னும் உண்மையைப் பிடித்துக் கொண்டேன். எனக்கு விசுவாசம் இல்லையாயினும் அதை நான் பெற்றுக் கொள்ளக் கூடும் என்னும் உறுதிக்கு வந்தேன்.

ஆனால் விசுவாசம் எப்படி வருகிறது ? அந்த வசனத்தை மீண்டும் படித்தேன். ‘‘விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனின் வசனத்தினாலே வரும்”. நான் ஏற்கெனவே வேதத்தை தேவவார்த்தையாக ஏற்றுக் கொண்டிருந்தேன். ஆகவே விசுவாசத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஆதாரம் என் கரங்களில் அப்பொழுது இருந்தது. ஆனால் “கேட்பது” என்றால் என்ன ? வேதம் எனக்குச் “சொல்வதை” நான் எவ்வாறு கேட்கக் கூடும் ?

வேதத்தின் ஆரம்பத்திற்குச் சென்று புத்தகம், புத்தகமாக ஆரம்பத்திலிருந்து முழுவதும் படிக்கலானேன். அவ்வேளையில் ஒரு நீல நிற பென்சிலை கரத்தில் பிடித்துக்கொண்டு கீழ்க்கண்ட பொருட்களைக் குறித்து வரும் வசனங்களின் கீழே கோடிட்டு குறிக்க விரும்பினேன்: சுகம், ஆரோக்கியம், சரீர பெலன், நீண்ட ஆயுள். அது கடினமாக இருந்த போதிலும் அம்முயற்சியை விடாது தொடர்ந்தேன். என்னுடைய நீல நிற பென்சிலை அடிக்கடி பயன்படுத்த வேண்டியதாயிருந்தது.

இரண்டு மாதங்களுக்குப் பின்பு நீதிமொழிகளின் புத்தகத்திற்கு வந்தேன். அங்கு 4ம் அதிகாரத்தில் தொடர்ந்து வந்த மூன்று வசனங்களை என்னுடைய நீல நிற பென்சிலால் குறிக்க வேண்டியிருந்தது.

**(20)** என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்.

**(21)** அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்.

**(22)** அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம். (நீதி.4:20-22)

இந்த வார்த்தைகளை நான் அடிக்கோடிட்ட போது அதன் அர்த்தம் எனக்குத் தெளிவாயிற்று. **"என் மகனே..."** இதன் மூலம் பிதாவாகிய தேவன் அவருடைய பிள்ளையாகிய என்னிடம் நேரிடையாகப் பேசலானார். அது எனக்கு ஏற்ற செய்தியாயிருந்தது. ''அவருடைய வார்த்தைகளும், வாசகங்களும் என் உடலுக்கெல்லாம் ஆரோக்கியம்" என்பதை அறிந்தேன். இதைவிட அதிகமான ஒரு காரியத்தை தேவன் என் சரீரத்திற்கென வாக்களிக்க முடியுமா? சுகமும், சுகவீனமும் ஒன்றுக்கொன்று எதிர்மறையானது. ஒன்று இருந்தால் மற்றொன்று இருக்காது. "என் சரீரம் முழுவதும்" ஆரோக்கியமாய் இருந்தால் நோய்கே இடமிராது.

என்னுடைய வேதாகமத்தின் ஓரத்திலே "ஆரோக்கியம்" என்பதற்கு வேறொரு சொல் மொழி பெயர்ப்பாக தரப்பட்டிருந்தது. அது ''மருந்து'' என்னும் சொல்லாகும். தேவனுடைய ''வார்த்தைகளும் வாசகங்களும்'' சரீர சுகத்தைத்தரும் ''மருந்தாக'' உண்மையாகவே இருக்கமுடியுமா? இதைப்பற்றி அதிகம் சிந்தித்ததற்குப் பின்பு இதை சோதித்துப் பார்க்க தீர்மானித்தேன். என் வேண்டுகோளின்படி எனக்கு கொடுக்கப்பட்ட மருந்துகள் நிறுத்தப்பட்டன. தேவவார்த்தையை நான் மருந்தாக எடுத்துக்கொண்டேன். இராணுவத்திலே நான் மருத்துவ துறையிலே ஒரு உதவியானராக இருந்ததினாலே மக்கள் மருந்தை சாப்பிடும் முன் சொல்லும் வாசகங்கள் எனக்கு நன்கு தெரியும் - "சாப்பாட்டிற்குப் பின்பு மூன்று தடவைகள்

சாப்பிடவும்" இவ்விதமாக தேவவார்த்தையை நான் மருந்தாக எடுத்துக் கொள்ள ஆரம்பித்தேன்.

அந்த தீர்மானத்தை நான் எடுத்த பொழுது தேவன் என் மனதில் உரத்த குரலில் பேசியதுபோல அவ்வளவு தெளிவாகப் பேசினார் : "ஒரு மருத்துவர் ஒருவருக்கு மருந்து கொடுக்கும் போது அதைச் சாப்பிட வேண்டியதின் விதம் அந்த மருந்து புட்டியிலே எழுதி இருக்கும். இது என்னுடைய மருந்து புட்டி. இதைச் சாப்பிடுவதற்கான ஆலோசனை அதில் எழுதப்பட்டுள்ளது, அவைகளை நீ வாசித்துப்பார்" என்றார்.

இந்த வசனங்களை நான் மீண்டும் வாசித்த பொழுது தேவனின் "மருந்தை" உட்கொள்வதற்கான நான்கு "விதி முறைகள்" உள்ளதை கண்டேன்.

**முதலாவது நிபந்தனை :** "கவனி..." நான் தேவனுடைய வசனத்தை வாசிக்கும் போது சிந்தனை சிதறாதபடி முழு கவனத்தையும் அதன்மேல் செலுத்த வேண்டும்.

**இரண்டாம் நிபந்தனை :** "உன் செவியைச் சாய்" - இதற்கு தாழ்மையுடன் கற்றுக் கொள்வதற்கேற்ற மனதுடையவனாய் இருத்தல் என்பது பொருள். என்னுடைய தவறான எண்ணங்களையும், தீங்கிழைக்கும் சிந்தனைகளையும் விட்டு தேவன் எனக்குச் சொல்வதை திறந்த மனதுடன் கேட்க வேண்டும்.

**மூன்றாம் நிபந்தனை :** "அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக''. என் கண்களை கூர்மையாக தேவவார்த்தைகளில் பதிக்க வேண்டும். வசனத்தைப் பற்றி விளக்கம் கூறி எழுதப்பட்ட முரண்பாடான கருத்துகளுக்கும், வசனங்களுக்கும் நாம் செவிசாய்க்கக் கூடாது.

**நான்காம் நிபந்தனை :** ''அவைகளை உன் இருதயத்திற்குள்ளே காத்துக் கொள்". எழுதப்பட்ட வார்த்தைகள் என் கண்களின் முன்பாக இல்லாதபோதும், அவைகளை என்

வாழ்வின் மையமாகவும், ஆதாரமாகவும் உள்ள இருதயத்தில் வைத்து தியானிக்க வேண்டும்.

இதற்குப் பின்னான மாதங்களில் என்ன நடந்தது என்பதை எழுதுவதற்கு ஒரு புத்தகமே எழுதவேண்டும். அதற்குப் பின்பு ஆப்பிரிக்காவிலே மிகவும் மோசமான வானிலை உள்ள சூடான் பகுதிக்கு என்னை எகிப்திலிருந்து மாற்றினார்கள். அங்கு வெப்பம் 127°F யைத் தொட்டது. அதிக வெப்பம் என் சருமத்தில் நோயை மோசமாக்கியது. சூழ்நிலை அனைத்தும் என் ஆரோக்கியத்திற்கு விரோதமாக இருந்தது. என்னை சூழந்திருந்த ஆரோக்கியமானவர்கள் கூட சுகவீனமடைந்தனர். காலப்போக்கில், தேவனின் வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதற்கு சூழ்நிலை சாதகமாய் இருக்கத் தேவையில்லை, அவருடைய தேவைகளை சந்தித்தால் போதும் என்பதைக் புரிந்து கொண்டேன். ஆகவே என் "மருந்தை" தினமும் மூன்றுமுறை சாப்பிடலானேன். ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பின்பும் திறந்த வேதத்திற்கு முன்பு என் தலையை தாழ்த்தி "கர்த்தாவே உம்முடைய வார்த்தைகள் என் உடலுக்கெல்லாம் ஆரோக்கியம் என்று கூறியிருக்கிறீர். இயேசுவின் நாமத்தில் அதை இப்பொழுது என் மருந்தாக எடுக்கிறேன்" என்று கூறி வாசித்தேன்.

சூழ்நிலையில் திடீர் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ''அற்புதம்'' என்று சொல்லக்கூடிய வகையில் ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் மூன்று மாதம் சூடானில் இருந்த நாட்களில் இந்த "மருந்து" தன் வேலையைச் சரியாகச் செய்துள்ளது என்பதைக் கண்டேன். நான் பூரண சுகமாகி வந்தேன். என் சரீரத்தில் எந்தவித சுகவீனமும் இல்லை. உண்மையாகவே நடைமுறையில் "உடல் அனைத்திற்கும் ஆரோக்கியத்தைப் பெற்றேன்."

இது எளிதில் கடந்து செல்லக்கூடிய ஒரு மன பிரம்மையா? 35 ஆண்டுகள் கடந்து விட்டன. சில சிறிய

அசௌகரியங்களைத் தவிர நான் மிகச் சிறந்த ஆரோக்கியம் உடையவனாய் இருக்கின்றேன். பின்னிட்டு திரும்பி பார்க்கும் பொழுது சோதனை வேளையில் வெற்றி பெற்றவனாக இயற்கைக்கு அப்பாற்பட்ட தளத்திலே ஒரு ஜீவ ஊற்றுடன் தொடர்பு கொண்டதை உணர்கிறேன். அந்த ஜீவன் இன்றும் என்னுடைய சரீரத்தில் கிரியை நடப்பிக்கிறது.

## லோகோஸீம் ரேமாவும்

என்னை சுகத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் வழிநடத்தின தேவனுடைய வசனத்தைப் பற்றிய மாறாத சில குறிப்புகளை மேலே கூறியுள்ள பகுதியில் நான் விளக்கினேன். "வார்த்தை" என்று பொதுவாக புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ள சொல்லுக்கு மூல கிரேக்கத்தில் இரண்டு வார்த்தைகள் உள்ளன. ஒன்று **லோகோஸ்** என்பதாகும். மற்றது **ரேமா** என்பதாகும். சில வேளைகளில் இவ்விரு வார்த்தைகளையும் ஒன்றினிடத்தில் மற்றொன்றை பயன்படுத்தலாம். எனினும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அதற்கேற்ற சிறப்பு முக்கியத்துவம் உள்ளது.

**லோகோஸ்** என்னும் வார்த்தையானது பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட வார்த்தையைக் குறிக்கும் சொல். இது **மனதிலிருந்து** வெளிப்பட்ட காரியங்களைக் குறிக்கும் சொல். லிடலும், ஸ்காட்டும் எழுதிய கிரேக்க அகராதியில் **லோகோஸ்** என்ற சொல் பேச்சிலோ, விவாதத்திலோ வெளிப்படுத்தப்படும்

---

** தற்காலத்திய ஆங்கில மொழிப்பெயர்ப்புகளிலே, இந்த வசனமானது, "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி கிறிஸ்துவினுடைய வசனத்தினாலே வரும்" என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. "தேவனுடைய வசனம்" என்று சொன்னாலும் அல்லது "கிறிஸ்துவினுடைய வசனம்" என்று சொன்னாலும், விசுவாசம் வருகின்ற விதத்தில் எந்தவித நடைமுறை வித்தியாசமும் இல்லை. தேவனுடைய வசனம் எப்பொழுதும் கிறிஸ்துவின் மூலமாகவே நமக்கு வருகிறது (யோவான் 14:10யை காண்க).*

மனதின் ஆற்றல் என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்த அர்த்தத்தில் **லோகோஸ்** என்பது மாறாத நிலையான தேவனுடைய வார்த்தையாகும். அது காலம் முடிவுற்றதற்குப் பின்பும் நிரந்தரமாய் நிறுவப்பட்ட தேவ ஆலோசனையைக் குறிக்கும் சொல். இந்த தெய்வீக **லோகோஸைக்** குறித்து தாவீது சங்கீதம் **119:89**ல் ‘‘கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது’’ என்று கூறுகிறார். இவ்வுலகத்தில் நடைபெறும் எந்தக் காரியமும் நித்திய பரலோகத்திலுள்ள இந்த வார்த்தையை பாதிக்கவோ, மாற்றவோ முடியாது. **ரேமா** என்பது **பேசப்படும்** வார்த்தையைக் குறிக்கும் - இது ஒரு கால கட்டத்தில் ஒரு நேரத்தில் பேசப்படுவது.

ரோமர் **10:17**ல் பவுல் “விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்”* என்று எழுதும் வேளையில் **லோகோஸ்** என்னும் வார்த்தையை பயன்படுத்தாமல் **“ரேமா"** என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இங்கு வார்த்தையை கேட்பதுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார். பேசப்பட்டால் தான் கேட்கமுடியும்.

என் ஆஸ்பத்திரி படுக்கையிலே எனக்கு முன்பாக நான் திறந்த வேத புத்தகத்தை வைத்திருந்து பொழுது வெள்ளைக் காகிதத்தில் கருப்பு மையினால் அச்சிடப்பட்ட சில பக்கங்களை வைத்திருப்பது போல் காணப்பட்டது. ஆனால் நீதிமொழிகள் **4**ம் அதிகாரத்தில் இது உடலுக்கெல்லாம் ஆரோக்கியம் என்ற வார்த்தைகளை நான் படித்த பொழுது அவ்வார்த்தைகள் ஒரு வெள்ளைக் காகிதத்தில் கருப்பு மையினால் அச்சடிக்கப்பட்டுள்ள வார்த்தைகளாக நான் கருதவில்லை. அந்த வார்த்தைகளை ஆவியானவர் எடுத்து அவைகளுக்கு தமது ஜீவனை அருளி அவ்வேளையில் என் தேவையைச் சந்தித்தார். அவ்வார்த்தைகள் ரேமாவாக - நான் கேட்கக்கூடியவையாக என் இருதயத்துடன் பேசும் ஜீவக்குரலாக இருந்தது. தேவனே என்னுடன் சொந்த ரீதியில் நேரிடையாக பேசுவதாக உணர்ந்தேன். நான்

அவருடைய வார்த்தைகளைக் கேட்டபொழுது அவைகளின் மூலம் விசுவாசம் எனக்கு வந்தது.

இது பவுல் கூறிய எழுத்து சொல்கிறது, **ஆவியோ உயிர்ப்பிக்கிறது** என்ற வசனத்துடன் இணைந்தது. பரிசுத்த ஆவியில்லாமல் **ரேமா** என்பது இல்லை. வேதாகமத்திலே தேவனின் பூரண ஆலோசனையான **லோகோஸ்** எனக்கு அருளப்பட்டிருக்கிறது- ஆனால் அந்த **லோகோஸை** என்னால் முற்றிலும் புரிந்து கொள்ள முடியாது. நித்தியத்திலிருந்து **லோகோஸின்** ஒரு பகுதியை பரிசுத்த ஆவியானவர் எடுத்து நமது அனுபவத்திற்கு தற்காலத்தில் அளிப்பது ரேமா ஆகும். ரேமா என்பது என்னுடைய சூழ்நிலைக்கு ஏற்றதாக தேவன் அருளும் பொருத்தமான சொல். இது ஒரு குறிப்பிட்ட காலத்தில் உண்டாவது. **ரேமாவின்** மூலம் என் வாழ்க்கைக்கேற்ற **லோகோஸ்** குறிப்பிட்டதாக எனக்கு பயனுள்ள அனுபவமாகிறது.

தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியில் உள்ள இந்த பரிமாற்றத்தை துவக்கி வைப்பவர் தேவன், இதைப் பெற்றுக் கொள்ளுவதில் நமக்கு பெருமைகொள்ளவோ, மேன்மை பாராட்டவோ இடமில்லை. இதைத்தான் பவுல் ரோமர் 3:27ல் விசுவாசத்தின் சட்டத்தில் மேன்மை பாராட்டல் எங்கே ? என்று கேட்கிறார். நம்மைவிட எல்லாம் தெரிந்த தேவனே எந்தப் பகுதி **லோகோஸை** எடுத்து எந்த தேவையை சந்திக்க நமக்கு எப்போது அருள வேண்டும் என்பதை அறிவார். பரிசுத்த ஆவியானவர் மூலம் நமக்கு ஏற்ற வார்த்தைகளை ஜீவன் அளிக்கும் **ரேமாவாக** ஜீவக்குரலாக அவர் தருகிறார். இவ்வேளையில் நமது பங்கு அவர் சொல்வதைக் கேட்பதாகும். அவர் சொல்வதைக் கேட்கும் அளவிற்கு விசுவாசத்தை நாம் பெற்றுக் கொள்ளுகிறோம்.

கேட்பதில் உள்ளது என்ன ? நம்மில் எதிர்ப்பார்க்கப்படுவது என்ன என்பதை திட்டமாக மிக முக்கியமானதாக நாம் அறிந்திருத்தல் வேண்டும். இதையும் கூட நான் என்

ஆஸ்பத்திரி படுக்கையிலே கற்றுக்கொண்டேன். தெய்வீக ஞானத்தின் படி நீதியும் அதிகாரத்திலிருந்து கொடுக்கப்பட்ட வார்த்தைகள் என் சரீர தேவைகளை மட்டும் சந்திக்கவில்லை. தேவவார்த்தைக்கு செவி சாய்ப்பது எப்படி என்றும் முழு விளக்கத்தையும் அது வழங்கியது. தேவன் எனக்கு வழங்கிய மருந்து சாப்பிடும் முறைகள் நான்கு பிரிவாக அம்மருந்து புட்டியிலே கொடுக்கப்பட்டிருந்தது. முதலாவதாக **கவனி,** இரண்டாவதாக **செவி சாய்,** மூன்றாவதாக அவைகள் உன் **கண்களை விட்டு பிரியாதிருப்பதாக**, நான்காவதாக **அவைகள் உன் இருதயத்திற்குள்ளே காத்துக்கொள்**. இதை முற்றிலும் புரிந்து கொள்ள முடியாமல் இருந்த பொழுதிலும் கூட இந்த 4 நிபந்தனைகளையும் நான் பின்பற்றியதால் கேட்க ஆரம்பித்தேன். அதன் பலனாக விசுவாசம் வந்தது.

கேட்பதற்குள்ள நான்கு கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**(1)** பரிசுத்த ஆவியானவர் மூலமாக தேவன் நம்மிடம் கூறுவதற்கு நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். ஓர் உறுதியான தீர்மானத்துடன் நமது கவனத்தை திசைதிருப்பக் கூடிய வேண்டாத காரியங்களை விலக்கவேண்டும்.

**(2)** நமது செவியைச் சாய்க்கவேண்டும். தேவனிடத்தில் தாழ்மையுடன் கற்றுக் கொள்பவர்களாக நாமிருக்க வேண்டும். நமது சொந்தத் தவறான கருத்துக்களை ஒதுக்கி வைக்கவேண்டும். தேவன் எளிதாகச் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

**(3)** தேவன் நமக்கு வழிகாட்டியுள்ள வார்த்தைகளுக்கு நேராக நாம் நமது கண்களைத் திருப்பவேண்டும். தேவன் சொல்வதற்கு விரோதமான மற்ற எழுத்துகளின்பேரில் நமது கவனத்தைச் செலுத்தக்கூடாது.

(4) அந்த வார்த்தைகள் நமது கண்களுக்கு முன்பாக இல்லையாயினும், அவைகளை நாம் தொடர்ந்து நமது இருதயத்தின் தியானத்தில் வைக்கவேண்டும். இதன் மூலம் அவ்வார்த்தைகளை நமது வாழ்வின் மையத்தில் வைக்கிறோம். இதனால் அதன் பலன் நமது வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் பரிமளிக்கிறது.

இவ்விதமாக தேவனுடைய **ரேமா** மிகத் தெளிவாகவும், தனிப்பட்ட நிலையிலும் வருகிறது. இதை மருத்துவமனையில் ஏற்பட்ட என் சொந்த அனுபவத்திலிருந்து விளக்குகிறேன். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின் தேவன் அந்த நேரத்தில் என்னிடம் நேரிடையாகப் பேசினார். என் தெய்வீக சுகத்தை பெற்றுக் கொள்வது எப்படி என்று அவர் எனக்கு காட்டினார். மற்ற மருந்துகளை விட்டு அவருடைய வார்த்தைகளை என் மருந்தாக எடுக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு நான் கீழ்ப்படிந்தேன். நான் ஆரோக்கியமடைந்தேன். எனக்கு ஏற்பட்டது போல் பிறருக்கும் இப்படித்தான் சுகம் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை-அல்லது எனக்கே என் அனுபவத்தின் இன்னொரு கட்டத்தில் தேவன் இதைச் செய்யாமல் இருக்கலாம். உண்மையாகவே இதற்குப் பின்பு எனக்கு சுகம் தேவைப்பட்ட வேளைகளில் தேவன் என்னை இந்த வழியில் வழிநடத்தவில்லை. நன்றியுடனே மருத்துவரின் உதவியை ஏற்றுக்கொண்டு அதன் மூலம் சுகத்தைப் பெற்ற நாட்கள் உண்டு.

**ரேமா** என்பது நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட நிலையிலே தேவனிடமிருந்து நேரிடையாக வரும் வார்த்தை. அது ஒரு குறிப்பிட்ட வேளையில், குறிப்பிட்ட காலத்தில் கொடுக்கப்படும். அது நாம் தேவனுடன் கொள்ளும் தொடர்ச்சியான உறவைச் சார்ந்து அமைவதாகும். இவ்வாறு **ரேமாவைத்** தொடர்ந்து வழங்கி அவர் நம்மை அழைத்த விசுவாச நடையில் தனிப்பட்ட ரீதியில் வழிநடத்துகிறார். ஒரு

விசுவாசிக்கு கொடுக்கப்பட்ட **ரேமா** இன்னொரு விசுவாசிக்கு பொருத்தமற்றதாய் இருக்கலாம் அல்லது அதே விசுவாசிக்கு தன் அனுபவத்தின் மற்றொரு கட்டத்தில் பொருந்தாததாக இருக்கலாம்.

தேவனுடைய **ரேமாவில்** தொடர்ந்து சார்ந்திருக்க வேண்டும் என்பது வனாந்தரத்தில் சாத்தான் இயேசுவை சோதித்த பொழுது அவர் கூறிய பதிலிலிருந்து அறிந்து கொள்ளலாம். அது என்றும் உண்மையுள்ள வாசகம். "மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் **(ரேமாவினாலும்)** பிழைப்பான்" **(மத்தேயு 4:4)**. புறப்படுகிற என்பது ஒரு தொடரும் செயலைக் குறிக்கிறது. இதற்கு தேவனுடைய வாயிலிருந்து **புறப்படும்** ஒவ்வொரு சொல்லும் என்று அர்த்தம். அந்த வார்த்தை அவருடைய வாயின் சுவாசத்தினால் - பரிசுத்த ஆவியினால் ஆற்றல் பெற்றதாய் இருக்கிறது. இந்த தின மன்னா எப்பொழுதும் புதியதாகவே புறப்படுகிறதாக இருக்கிறது. நாம் இதை சார்ந்திருக்கும் பொழுது அன்றாட வாழ்க்கையின் நீதிமான் பிழைப்பதற்கான விசுவாசம் இதனால் கொடுக்கப்படுகிறது. கீழ்க்கண்டவற்றைக் கூறி **லோகோஸீக்கும் ரேமாவிற்கும்** உள்ள உறவை தொகுத்துக் கூறலாம்.

**ரேமா** என்பது பரலோகத்தின் - **லோகோஸை** எடுத்து பூவுலகில் அளிப்பதாகும்.

**ரேமா** என்பது ஆற்றல் நிறைந்த - **லோகோஸை** எடுத்து பலனளிப்பதாக தருவது.

**ரேமா** என்பது பொதுவான - **லோகோஸை** எடுத்து நமக்கு குறிப்பிட்டதாக தருவது.

**ரேமா** என்பது முழுமையான **லோகோஸை** எடுத்து மனிதன் புரிந்து கொள்ளும் அளவிற்கு அதை அமைத்துத் தருவது.

திரள் கூட்டத்து மக்களைப் போஷிக்க இயேசு பகிர்ந்தளித்த

அப்பத்தைப் போல் **ரேமா** உள்ளது. அது ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனின் தேவைக்கும், திறமைக்கும் ஏற்றதாய் உள்ளது; அது மற்றொரு கரத்திலிருந்து வருகிறது.

## பரலோகத்திலிருந்து பூவுலகிற்கு

ஏசாயா **55:8-13** வசனங்களில் தீர்க்கதரிசி லோகோஸீக்கும், ரேமாவிற்கும் உள்ள உறவை அழகாக சித்தரித்துக் காட்டுகிறார்.

> **(8)** என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்ததர் சொல்லுகிறார்.
>
> **(9)** பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.
>
> **(10)** மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,
>
> **(11)** அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத்திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.
>
> **(12)** நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டு, சமாதானமாய்க் கொண்டுபோகப்படுவீர்கள்; பர்வதங்களும் மலைகளும் உங்களுக்கு முன்பாகக் கெம்பீரமாய் முழங்கி, வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும்.

**(13)** முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அது கர்த்தருக்கு கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும்.

இங்கு பூவுலகம், பரலோகம் என்னும் இரு தளத்தைக் காண்கிறோம். பரலோகத்தின் தளத்திலே தெய்வீக **லோகோஸ்** உள்ளது - இது நிலைவரப்பட்ட தேவனுடைய எண்ணங்களையும் வழிகளையும் கொண்ட முழு ஆலோசனையாகும். அடுத்தபடியாக பூலோக தளத்தில் மனிதனுடைய எண்ணங்களும் வழிகளும் உள்ளன. அவைகள் தேவனின் வரம்பை விட மிக தாழ்வான நிலையில் அமைந்திருக்கிறது. எந்த விதத்திலும் மனிதன் தன்னை தன்னிலையிலிருந்து தேவனிலைக்கு உயர்த்த முடியாது. ஆனால் தேவ எண்ணங்களும், வழிகளும் மனிதனைக் கிட்டிச் சேர வாய்ப்புள்ளது. மாரியும், உறைந்த மழையும் பரலோகத்தின் ஜீவன் அளிக்கும் தண்ணீரை பூலோகத்திற்கு கொண்டு வருவது போல என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும் என்று தேவன் சொல்கிறார்.

இதே வார்த்தையைத் தான் இயேசு மத்தேயு **4:4**ல் "என் வாயிலிருந்து புறப்படும் வார்த்தை" என்கிறார். அவ்வார்த்தை மனிதனை பிழைப்பூட்டும் வார்த்தை. அது **ரேமாவாக** பரலோகத்தின் **லோகோசிலிருந்து** பூலோகத்திற்கு வரும் ஒரு பகுதியாகும். அது நமது சூழ்நிலைக்கேற்ற தேவ எண்ணங்களையும், வழிகளையும் காட்டி நமது தேவையைச் சந்திக்கிறது.

ரேமாவை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படியும் போது நம் வாழ்வில் உண்டாகும் கிரியையும் கனியும் தேவனை மகிமைப்படுத்தும். நாம் மகிழ்ச்சியுடையவர்களாய் சமாதானத்தில் நடத்தப்படுவோம். "முட்செடிக்குப் பதிலாக தேவதாரு விருட்சம் முளைக்கும். காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்". முட்செடியும்

காஞ்சொரியும் நமது வழிகளையும் எண்ணங்களையும் குறிக்கின்றன. தேவனுடைய வாயிலிருந்து வரும் ரேமாவை ஏற்றுக் கொள்ளும் போது இவை தேவதாரு, மிருதுச் செடியாக மாறும். தேவதாரு, மிருதுச்செடி தேவனின் வழிகளையும் எண்ணங்களையும் குறிக்கும்.

## நமக்கு உதாரணங்களாக மரியாளும், தாவீதும்

ரேமா வந்து அளிக்கும் பெலனை வேதத்தின் இரண்டு சம்பவங்களிலிருந்து அறியலாம். முதலாவது பழைய ஏற்பாட்டில் தாவீதைப் பற்றியது. இரண்டாவது புதிய ஏற்பாட்டின் கன்னிமரியாளைப் பற்றியது.

1 நாளாகமம் 17ம் அதிகாரத்தில் இஸ்ரவேலின் ராஜாவாக தாவீது நியமிக்கப்படுகிறதைக் காண்கிறோம் - அவன் வெற்றியும், பொருளாதார ஆசீர்வாதமும் பெற்று அமைதியான ஆட்சி செய்கிறான் அவனுடைய செல்வம் ஜொழிக்கும் மாளிகையையும் தேவ உடன்படிக்கை பெட்டியில் சிறிய நிலப்பரப்பையும் அவன் கண்டு தேவனுக்கும் அவருடைய உடன்படிக்கைக்கும் அந்த ஒரு ஆலயத்தைக் கட்டி எழுப்ப விரும்புகிறான். இந்த விருப்பத்தை தாவீது நாத்தானிடம் பகிர்ந்து கொண்ட பொழுது அதற்கு நல்ல வரவேற்பை அளித்து உற்சாகப்படுத்துகிறான் நாத்தான்வேல். ஆனால் அடுத்த நாள் இரவிலே தேவன் தாவீதுக்கு வேறொரு செய்தியைக் கொடுத்து "நான் வாசமாயிருக்க நீ எனக்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம்" எனச் சொல்லச் சொல்கிறார். மேலும் "உன் சத்துருக்களையெல்லாம் கீழ்ப்படுத்தினேன். இப்போதும் கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்பதை உனக்கு அறிவிக்கிறேன்" என்று கூறினான். (வசனங்கள் 4,10).

இங்கே மனிதனுடைய எண்ணங்களுக்கும், வழிகளுக்கும் தேவ எண்ணங்களுக்கும் வழிகளுக்கும் உள்ள வித்தியாசம்

உதாரணமாக சொல்லப்பட்டுள்ளது. தாவீது தன் மனதில் பூமியின் தளத்திலிருந்து உயர்ந்ததாக சிந்திக்கக்கூடியது தேவனுக்காக ஒரு வீட்டைக் கட்டவேண்டும் என்பதாகும். ஆனால் தாவீதினால் புரிந்து கொள்ள முடியாதபடி தேவ எண்ணமானது பரலோக தளத்திலிருந்து உயர்ந்த நிலையில் கொடுக்கப்படுகிறது. தாவீது வீடு என்னும் அர்த்தத்தில் ஒரு தங்கும் இடத்தைக் குறிப்பிடுகிறார். ஆனால் தேவன் தொடர்ந்து வரப்போகிற அரச பரம்பரையைப் பற்றி கூற ஆரம்பிக்கிறார்.

இவ்விடத்தில் நாத்தான் தாவீதுக்கு தேவனிடத்திலிருந்து நேரிடையான ஒரு **ரேமாவை** வழங்குகிறார். இதற்கு மறுமொழியாக தாவீது "கர்த்தருடைய சமூகத்தில் போய் உட்காருகிறார்" (வசனம் 16) அவர் செய்தது என்ன? தன் சொந்த திட்டங்களையும், எண்ணங்களையும் ஒதுக்கி வைக்கிறார். அவைகளை அவர் ஒதுக்கி வைக்க ஆரம்பித்த பொழுது தேவசெய்தியில் கவனம் செலுத்தி தியானிக்கலானார். அது அவருக்குள் ஊடுருவிப் பாய்ந்தது. உள்ளத்தின் அமைதியில் அவரால் "கேட்க" முடிந்தது. அவர் கேட்டதினால் விசுவாசம் வந்தது. விசுவாசம் தேவன் வாக்களித்ததைப் பெற்றுக் கொள்ள உதவுகிறது. தேவபிரசன்னத்தில் உட்கார்ந்து கொண்டு அவர் ''இப்போதும் கர்த்தாவே தேவரீர் அடியானையும், அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தை என்றென்றைக்கும் நிலைவரப்பட்டிருப்பதாக; தேவரீர் சொன்னபடியே செய்தருளும்" என்றான். (வசனம் 23)

நீர் சொன்னபடியே என்று சொல்லியது தான் **ரேமா:** இது தாவீதின் சொந்த எண்ணங்களின் அடிப்படையிலோ வழிகளின் அடிப்படையிலோ உண்டானதல்ல. இது பரலோகத்தின் தளத்திலிருந்து தாவீதினிடம் வந்த தேவஎண்ணங்களும் வழிகளுமாகும். இந்த ரோமாவைக் கேட்டதற்குப் பின்பு அவர் தன்னில் இந்த விசுவாசத்தை தோற்றுவிக்கச் செய்தார். இந்த

வாக்குத்தத்தத்தை சில குறுகிய வார்த்தைகளினால் “தேவரீர் சொன்னபடியே செய்தருளும்” என்று ஜெபித்தால், இது ஒரு மனிதன் எளிதில் ஜெபிக்கக்கூடிய சில வார்த்தைகளைக் கொண்ட ஒரு ஆழமான ஜெபம். அது உடனே பலனை தோற்றுவிக்கிறது. தேவன் நமக்கு ஒன்றைச் சொன்னார் என்ற நிச்சயம் ஏற்படும் பொழுது அவர் சொன்னதை நாம் கேட்கவேண்டும். அவர் நிறைவேற்றுவாரா ? என்று சந்தேகம் கொள்வதற்கு இங்கு இடமேயில்லை. பரலோகத்தின் எந்த வல்லமையும் பூலோகத்தின் எந்த வல்லமையும் அதை நிறுத்த முடியாது.

தாவீதுடன் சேர்ந்து யூதர் சரித்திரத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு அந்த சந்ததியில் தோன்றிய எளிமையான நாசரேத்தூரைச் சார்ந்த மரியாளைப் பற்றிக் காண்போம். தேவ சிங்காசனத்திலிருந்து ஒரு தேவதூதன் தோன்றி ஒரு செய்தியைத் தருகின்றார்.

**(31)** இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், AYÃeh **இயேசு** என்று பேரிடுவாயாக.

**(32)** அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.

**(33)** அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான். (லூக்கா **1:31-33**).

இது எப்படியாகும் என்று மரியாள் கேட்ட பொழுது அதற்கு தூதன் பரிசுத்த ஆவியின் வல்லமை அவள் மேல் நிழலிடும் என்று கூறிவிட்டு தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக்கா **1:37**) என்றார். “ஒன்றுமில்லை” என்ற கிரேக்க சொல்லுக்கு வார்த்தை ஒன்றுமில்லை - **ரேமா** ஒன்றுமில்லை

என்பதாகும். ஆகவே தேவதூதன் அளித்த பதிலை தேவன் சொல்லும் எந்த வார்த்தையும் (ரேமாவும்) வல்லமை நிறைந்ததாகவே இருக்கும் என்பது பொருள். இதை இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் தேவன் கூறும் வார்த்தையிலேயே **(ரேமா)** அதை நிறைவேற்றுவதற்கான வல்லமை அடங்கியுள்ளது.

தேவ தூதன் மரியாளுக்கு தேவனிடமிருந்து நேரிடையான சொந்த வார்த்தை ஒன்றைக் கொண்டு வருகின்றான். அந்த **ரேமாவில்** அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கான வல்லமை அடங்கியிருக்கிறது. இதற்குரிய பலன் மரியாளின் பதிலைச் சார்ந்திருக்கிறது. அதற்கு மரியாள் : ''இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின் படி எனக்கு ஆகக்கடவது என்றாள்.'' **(லூக்கா 1:38)** இந்த வார்த்தைகளின் மூலம் மரியாள் அவளுக்கு கொடுக்கப்பட்ட தேவனின் **ரேமாவின்** இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமையை தன்னுடைய சரீரத்தில் நிறைவேறும்படி தன்னை அதற்கு ஒப்புக் கொடுத்தாள். அதன் பலனாக மனித சரித்திரத்தின் மிகப்பெரிய அற்புதம் உண்டாயிற்று : கன்னியின் வயிற்றிலிருந்து தேவனின் நித்திய குமாரன் பிறந்தார்.

மரியாள் அளித்த பதிலும் தாவீது கொடுத்த பதிலைப் போலவே உள்ளது. தாவீது உமது வார்த்தையை நிறைவேற்றியருளும் என்றான். மரியாள் உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது என்றான். இச்சிறிய பதில்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்திலிருந்த தேவ அற்புத ஆற்றலை வெளிப்படுத்தியது. விசுவாசத்தில் கற்றுக் கொண்ட இந்த **ரேமாவில்** அது நிறைவேறக் கூடிய ஆற்றல் அதிலேயே இருந்தது.

மரியாளின் விசுவாசம் நிறைந்த பதிலினாலேயே இயேசு பிறந்து அற்புதம் நடைபெற்றது என்பதை சிலர் ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் இது எலிசபெத்து

பின்பு மரியாளை வாழ்த்திய வாசகங்களிலிருந்து காணலாம்.‘‘விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்” (லூக்கா 1:45) மரியாள் விசுவாசித்ததினாலே அந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது என்பது தெளிவாகிறது. இப்படியில்லையாயின் வாக்களிக்கப்பட்ட இக்காரியத்தை தெய்வீக அற்புத ஆற்றல் நிறைவேற்றி இருக்கமுடியாது.

தாவீது, மரியாள் இவர்களுடைய அனுபவங்களில் உள்ள ஒப்புவமைகளைக் காண்போம்.

(1) ஒவ்வொருவருக்கும் ஒரு ரேமா கொடுக்கப்பட்டது. அது தேவனிடத்திலிருந்து அவர்களுக்கு வந்த சொந்த வார்த்தை.

(2) இந்த ரேமா தேவனின் எண்ணங்களையும், வழிகளையும் அவர்களுக்கு வெளிப்படுத்தியது. அது மனித கற்பனைக்கும், சிந்தனைக்கும் அப்பாற்பட்டதாய் இருந்தது.

(3) அவர்கள் கேட்ட அந்த ரேமா அவர்களுக்கு விசுவாசத்தைக் கொடுத்தது.

(4) இருவரும் விசுவாச வார்த்தைகளாக நீர் சொன்னபடியே செய்தருளும் உம்முடைய வார்த்தையின்படியே ஆகக்கடவது என்றனர்.

(5) இந்த விதத்தில் வெளிப்படுத்தப்பட்ட **ரேமா** வல்லமையுடன் விளங்கி அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற போதுமானதாய் இருந்தது.

தேவனும் இன்று விசுவாசிக்கும் தம்முடைய பிள்ளைகளின் பேரில் இதையே செய்கிறார். பரிசுத்த ஆவியானவர் மூலம் நித்திய **லோகோஸிலிருந்து** ஒரு குறிப்பிட்ட **ரேமாவை** வழங்கி நமது காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வார்த்தையை அருளுகிறார். இந்த **ரேமாவைக்** கேட்கும் பொழுது விசுவாசம் வருகிறது. இந்த விசுவாசத்தை பயன்படுத்தி அந்த **ரேமாவை**

நமக்கு சொந்தமாக்கும் போது அதை நிறைவேற்றுவதற்கான ஆற்றல் அதிலேயே இருக்கிறது.

## தொகுப்பு

தேவன் நம்மிடத்தில் விசுவாசத்தை எதிர்பார்க்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் அந்த விசுவாசத்தை பெற்றுக் கொள்வது எப்படி என்றும் சொல்கிறது. (ரோமர் 10:17) விசுவாசம் கேள்வியினாலே வரும், தேவனுடைய வார்த்தை - தேவனுடைய **ரேமா**-நம்மை நோக்கி ஜீவனுள்ளதாக பரிசுத்த ஆவியானவர் மூலம் வருகிறது.

**லோகோஸிக்கும் ரேமாவிற்கும்** உள்ள வித்தியாசத்தை நாம் காணவேண்டும். **லோகோஸ்** என்பது என்றும் மாறாத தேவனின் பரலோகத்தின் ஆலோசனை. **ரேமா** என்பது பரிசுத்த ஆவியானவர் நித்தியத்திலிருந்து கொஞ்சம் **லோகோஸை** எடுத்து மனித அனுபவத்திற்கு ஒரு காலக்கட்டத்தில் அளிப்பதாகும். **ரேமா** மூலம் **லோகோஸ்** என் சொந்தமான வார்த்தையாக, திட்டவட்டமாக வருகிறது. இந்த **ரேமாவைக்** கேட்கும் பொழுது எனக்கு விசுவாசம் வருகிறது.

கேட்பது என்றால் என்ன? இதற்கு நடைமுறையிலான உதாரணம் நீதி. 4:20-22 வரையுள்ள வசனங்களில் வரும் “தேவனின் மருந்து புட்டியில்” கொடுக்கப்பட்டுள்ளது. இதில் கேட்பதற்குரிய 4 நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன. 1. பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவன் நமக்குச் சொல்லும் காரியங்களை கூர்ந்து கவனிக்க வேண்டும். 2. தாழ்மையான கற்றுக்கொள்ள வேண்டிய மனப்பான்மை இருக்க வேண்டும். 3. தேவன் நமக்கு கொடுத்த வார்த்தைகளின் பேரில் நம் கண்களைப் பதிக்க வேண்டும். 4. நம் இருதயத்திலே அவைகளைத் தொடர்ந்து தியானிக்க வேண்டும்.

ரேமா என்பது தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் தேவனுடைய வார்த்தை. இவ்வித வார்த்தை நம்மிடம்

வரும்போது நாம் அதை கேட்கவேண்டும். அது நம்முடைய ஆவிக்குரிய வாழ்வின் தின மன்னாவாக தேவனுடன் தொடர்ந்து நடக்க பெலன் அளிக்கிறது.

ரேமா உறைந்த மழையைப் போல பூமியில் இறங்கி பலனற்ற தன்மையை மாற்றி கனி தருகிறது. தேவனின் எண்ணங்களையும் வழிகளையும் மனித தளத்திற்குக் கொண்டுவந்து மனிதனுடைய எண்ணங்களையும், வழிகளையும் வெளியேற்றுகிறது.

**ரேமா** எப்படி செயலாற்றுகிறது என்பதை தாவீது ராஜாவின் வாழ்க்கையிலிருந்து கன்னிமரியாளின் வாழ்க்கையிலிருந்தும் கற்றுக் கொள்ளலாம். தாவீது கர்த்தருக்கு ஒரு வீட்டைக் கட்டத் தீர்மானித்தான். ஆனால் கர்த்தரோ ஒரு **ரேமாவைக்** கூறி தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டுவதாக வாக்களித்தார். மரியாளுக்கு காபிரியேல் மூலம் கொடுக்கப்பட்ட **ரேமா** வெகுநாட்களாய் தேவ குமாரனாகிய மேசியாவின் தாயாக அவள் ஆவாள் என்பதாகும். தாவீதும், மரியாளும் தங்களுடைய ரேமாவைக் கேட்டபொழுது அது அவர்களுக்கு விசுவாசத்தை அளித்தது. அதன் மூலம் வாக்களிக்கப்பட்ட **ரேமா** நிறைவேறியது. அவர்களின் பதில் “உம்முடைய வார்த்தையை நிறைவேற்றியருளும்” உம்முடைய வார்த்தையின் படி ஆகக்கடவது என்பதாகும்.

# அத்தியாயம் ஏழு

# விசுவாசம் அறிக்கைப்பண்ணப்பட வேண்டும்

விசுவாசம் வரும் பொழுது அது மூன்று தளங்களைக் கடந்து செல்ல வேண்டும். அறிக்கை, அதற்கேற்ற கிரியை, பரீட்சை-இவை மூன்றும் விசுவாசத்திற்கு மிக அத்தியாவசியமானவை. விசுவாசம் **வாயினாலே அறிக்கை** பண்ணப்பட வேண்டும். விசுவாசத்திற்கேற்ற **கிரியைகளை நடப்பிக்க வேண்டும்.** விசுவாசம் **பரீட்சையை கடந்து** வரவேண்டும்.

## வாயின் அறிக்கை

''அறிக்கை'', ''அறிக்கையிடுதல்'' என்பவை சிறப்பு அர்த்தத்துடன் வரும் வேதத்தின் பதங்கள். கிரேக்கச் சொல்லான **"ஹோமோலோகியா"** (Homologeo) என்பது "அறிக்கையிடுதல்" என மொழிபெயர்க்கப்படுகிறது. இதற்கு அர்த்தம் ''சொன்னபடியே சொல்லுதல்'' என்பதாகும். "அறிக்கையிடுதல்" என்றால் "சொன்னதையே சொல்லுதலாகும்" என்றாலும் மொழிபெயர்ப்பாளர்கள் அறிக்கை, அறிக்கையிடுதல் என்பதற்குப் பதிலாக உறுதியாக கூறுதல் என்னும் வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளனர். இது கிறிஸ்துவ உலகில் அதிகாமாக பயன்படுத்தப்படும் ஒரு சொல். அது இந்த அதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ''விசுவாச அறிக்கை" என்பதுடன் சம்பந்தப்பட்டது. ஆகவே உறுதியாகக் கூறுதல்

என்றாலும், அறிக்கையிடுதல் என்றாலும் **சொன்னபடி சொல்லுவதாகும்.**

இந்த சிறப்பு அர்த்தத்தில் "அறிக்கையிடுதல்", தேவனுடைய வார்த்தையுடன் நேர்தொடர்பு உள்ளது. தேவன் தமது வார்த்தையில் சொல்லியுள்ளதை நம்முடைய வாயின் மூலம் அப்படியே சொல்லுதலாகும். எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையுடன் வாயினால் பேசப்படும் நமது வார்த்தைகள் இணைந்ததாய் இருக்கவேண்டும். எழுதப்பட்ட தேவவார்த்தையுடன் பேசப்படும் நமது வார்த்தைகள் முரண்பாடின்றி அமைக்கப்படவேண்டும்.

**116**ம் சங்கீதம் **10**ம் வசனத்தில் ''விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்;" என்று சங்கீதக்காரன் கூறுகிறான். **2** கொரி. **4:13**ல் பவுல் இதை நமது விசுவாச அறிக்கையுடன் இணைத்துக் கூறுகிறார். ''விசுவாசித்தேன் ஆகையால் **பேசுகிறேன்** என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்." பேசுதல், விசுவாசம் தன்னை வெளிப்படுத்தும் இயல்பான முறையாகும். பேசாத விசுவாசம் உயிரற்றது.

வேதம் முழுவதிலும் நமது இருதயத்திற்கும், நமது வாய்க்கும் நேரிடை தொடர்பு இருக்கிறதாகக் கூறுகிறது. ஒன்றில் நடைபெறுவது மற்றொன்றை பாதிக்கின்றது. மத்தேயு **12:34**ல் இயேசு, "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்கிறார். இன்றைய ஆங்கில மொழிபெயர்ப்புகளிலே இந்த வசனம், "இருதயம் எதனால் நிரம்பியிருக்கிறதோ, அதையே வாய் பேசுகிறது" என்று வருகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், இருதயம் நிரம்பி வழியும் போது வாய் என்னும் வால்வு (valve) வழியாக வெளிப்படுகிறது எனலாம். அந்த வால்விலிருந்து வெளிப்படும் பொருள் இருதயம் எதினால் நிரம்பியிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தும்.

ஒரு தண்ணீர் தொட்டி நிரம்பி வால்வின் வழியாக வழியும் போது, அந்த தண்ணீரில் மணல் அல்லது பாசி துணுக்குகள் இருக்குமானால், அந்த தொட்டியில் உள்ள தண்ணீர் சுத்தமாய் உள்ளது எனச் சொல்ல முடியாது அந்த தொட்டியில் எங்கேயோ மணலோ அல்லது பாசியா நிச்சயம் இருக்க வேண்டும். இப்படியே நம் இருதயமும் இருக்கிறது. நம் இருதயம் விசுவாசத்தினால் நிரம்பியிருக்குமானால் நாம் வாயின் மூலம் சொல்லும் வார்த்தைகளும் விசுவாசத்தினால் நிறைந்ததாகவே இருக்கும். ஆனால் சந்தேகத்தின் வார்த்தைகளும், அவிசுவாசத்தின் வார்த்தைகளும் வாயிலிருந்து வெளிப்படுமானால், அது நம்முடைய இருதயத்தின் ஒரு பகுதியில் சந்தேகமும், அவிசுவாசமும் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

இரண்டாம் மகா உலக யுத்தத்தின் போது வடஆப்பிரிக்காவிலே பிரிட்டிஷ் இராணுவத்தில் ஒரு மருத்துவ உதவியாளனாக வயிற்றுப் போக்கு நோயை மாத்திரம் கவனித்து வந்த ஒரு மருத்துவமனையில் ஒரு ஸ்காட்லாந்து டாக்டருடனே பணிபுரிந்தேன். காலை நேரத்தில் நோயாளிகளைச் சுற்றிப் பார்க்கும் போது ஒவ்வொருவரையும் பார்த்து அந்த மருத்துவர் இரு வாக்கியங்களை சொல்வதுண்டு; ‘‘நீ எப்படியிருக்கிறாய்? உன் நாக்கைக் காட்டு!” என்று.

தினமும் இவ்விதமான மருத்துவப் பணியில் ஈடுபட்டிருந்த நான் அந்த மருத்துவர் நீ எப்படியிருக்கிறாய்? என்ற கேள்வியைவிட நோயாளியின் நாக்கினுடைய நிலையைப் பற்றியே அதிக அக்கரை கொண்டிருப்பதாக எனக்குக் காணப்பட்டது. இதைக் குறித்து நான் அநேகம் தடவைகள் சிந்திக்கையில் இது தேவனிடத்தில் நாம் கொள்ளும் உறவிலும் உண்மையாய் உள்ளது என்று நினைப்பதுண்டு. நம்முடைய ஆவிக்குரிய நிலையைப் பற்றி நாம் தேவனிடம் கொடுக்க ஒரு குறிப்பிட்ட மதிப்பீடு உள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் அந்த மருத்துவரைப் போல தேவன் நமது நாவைக் கொண்டே

காரியங்களை நியாயம் தீர்க்கிறார்.

இரட்சிப்பிற்கு அடிப்படையாகத் தேவையானதை பவுல் ரோமர் 10:8-10 வசனங்களில் இருதயத்தில் இருக்கும் விசுவாசத்திற்கும், வாயின் அறிக்கைக்கும் முக்கியத்துவம் கொடுத்து கூறுகின்றார்.

(8) இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.

(9) என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

(10) நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.

இந்த மூன்று வசனங்களில் பவுல் வாயைப் பற்றியும், இருதயத்தைப் பற்றியும் பேசுகிறார். இதை எந்த வரிசையிலிருந்து கூறுகிறார் என்பது மிகவும் முக்கியமானது. 8ம் வசனத்தில் வாயைப் பற்றி முதலில் கூறி, பிறகு இருதயத்தைப் பற்றி பேசுகிறார். 9ம் வசனத்தில் வாயைப் பற்றிச் சொல்லி பின்பு இருதயத்தைப் பற்றி பேசுகிறார். ஆனால் 10ம் வசனத்தில் இருதயம் முதலில் வருகிறது. அதற்குப் பின்பே வாயைப் பற்றி குறிப்பிடுகின்றார்.

நடைமுறை அனுபவத்திலும் இது உண்மையாய் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். நமது வாயில் தேவ வார்த்தையுடன் ஆரம்பிக்க வேண்டும். அதை வாயினால் அறிக்கை செய்வதின் மூலம் அதை நம் இருதயத்தில் ஏற்றுக் கொள்கிறோம். எவ்வளவு உறுதியாக அதை வாயினால் அறிக்கையிடுகிறோமோ அவ்வளவு உறுதியாக அது இருதயத்தில் பதிகிறது.

இருதயத்தில் விசுவாசம் நிறுவப்பட்டதானால் சரியான அறிக்கை செய்ய அதிக முயற்சி எடுத்துச் சொல்லத் தேவையில்லை. அதற்குப் பின்பு நமது வாயிலிருந்து விசுவாசம் இயற்கையாகவே பெருக்கெடுக்க ஆரம்பிக்கும். தொடர்ந்து விசுவாசத்தை வாயின் மூலம் அறிக்கை செய்யும் போது இரட்சிப்பின் சிலாக்கியங்களுக்குள் அதிவிரைவில் முன்னேறுகிறோம்.

இது எவ்விதமாக செயல்படுகிறது என்பது எபிரெய மொழியின் ஒரு வாசகத்திலிருந்து நான் நன்கு புரிந்து கொண்டேன். மனப்பாடம் பண்ணுவது என்பது வாயினால் சொல்லக் கற்றுக்கொள்வது என எபிரெயம் சொல்லுகிறது. மனப்பாடம் செய்வது என்பது நாம் அடையவேண்டிய இறுதி முடிவானால் அதை நடைமுறையில் வாயின் அறிக்கையினாலேயே சாதிக்க முடியும். இருதயத்தில் காரியங்களைக் கற்றுக் கொள்வதற்கு மனப்பாடம் பண்ண வேண்டியதை மீண்டும் மீண்டும் வாயினால் சொல்ல வேண்டியதாக உள்ளது. அதிகமாய் மீண்டும் மீண்டும் சொல்வதால் அது நமக்கு தானாகவே மனதில் பதிந்து விடுகிறது. இவ்விதமாக நமது வாயில் ஆரம்பிப்பது நமது இருதயத்தின் நிரந்தரமான இடத்தைப் பெறுகிறது.

நான் சிறுவனாக இருந்த பொழுது கணித வாய்ப்பாடுகளைப் படித்தேன். அவைகளை நான் மீண்டும் மீண்டும் கூறினேன். or (7x7=49; 7x8=56; 7x9=63) இப்படியே தொடர்ந்து சொன்னேன். இறுதியில் இது எனக்கு மனப்பாடம் ஆனது. அதிகம் சிந்திக்காமலேயே இதைச் சொல்ல முடிந்தது. இந்த வாய்ப்பாடு என் இருதயத்தில் பதிந்து விட்டது. அது என் இருதயத்தில் ஒரு பகுதியாயிற்று. இன்று ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு புயற்காற்று வீசும் ஓர் நள்ளிரவில் 7x7 எவ்வளவு என்று கேட்டால் எந்த தடங்கலுமின்றி **49** என்று நான் பதிலளிப்பேன்.

இவ்விதமாகவே தேவனுடைய வார்த்தையும் அழிக்கப்படாததாய் நம்முடைய இருதயத்திலே பதிப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு தடவை தேவை ஏற்படும்பொழுதும் நமது விசுவாசத்திற்கு ஒரு அறைகூவல் விடப்படுகிறது. அந்த சூழ்நிலைக்கேற்ற வசனத்தை நாம் அறிக்கையிடுகிறோம். ஆரம்பத்தில் இதில் ஒரு போராட்டம் ஏற்படலாம். நமது உணர்ச்சிகள் தேவனின் வார்த்தைக்கு விரோதமான காரியங்களை சொல்லத் தூண்டலாம். ஆனால் உணர்ச்சிகளுடனே போராடி மேற்கொண்டு நம்முடைய வாயின் வார்த்தைகளை தேவ வார்த்தைகளுடன் மாறுபடாததாக அறிக்கையிட வேண்டும். இறுதியிலே இதில் போராட்டம் இருக்காது. ஒவ்வொரு சூழ்நிலையைக் குறித்தும் தேவ வார்த்தை என்ன சொல்லுகிறதோ அதையே சாதாரணமாக நமது வாயும் சொல்ல ஆரம்பிக்கும்.

விசுவாசத்திற்கும், உணர்ச்சிக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். உணர்ச்சி நமது ஐம்புலன்களைச் சார்ந்தது. அநேகம் தடவைகள் அதன் முடிவு தேவவார்த்தைக்கு முரண்பாடானது. ஆனால் விசுவாசமோ நாம் முன்பு கண்டபடி நம்மை காணப்படாத தேவனுடனும் அவருடைய வார்த்தையுடனும் இணைப்பதாகும். விசுவாசத்திற்கும், உணர்ச்சிக்கும் போராட்டம் ஏற்படும் பொழுது நாம் நமது அறிக்கையின் மூலம் விசுவாசத்தின் கட்சியைச் சாரவேண்டுமே தவிர உணர்ச்சியைச் சாரக்கூடாது.

இதை வரிசைப்படுத்திக் கூறினால் முதலாவது உண்மை, விசுவாசம் - உணர்ச்சி. இவை ஆங்கிலத்தில் சொன்னால் இந்த மூன்று வார்த்தைகளும் "F" என்ற சொல்லைக் கொண்ட Fact - Faith - Feeling என்று வருகிறது. **உண்மைகள்** தேவவார்த்தைகளில் இருக்கிறது. அது மாறாதது. **விசுவாசம்** தேவவார்த்தையின் உண்மையைச் சார்ந்து அதுவே மெய்யென அறிக்கையிடுகிறது. **உணர்ச்சிகள்** மாறலாம். இறுதியாக

விசுவாசம் நிலைத்திருக்குமானால் உணர்ச்சி உண்மையுடன் இணைந்து விடும். தவறான இடத்தில் ஆரம்பிப்போமானால் - உண்மையை விட உணர்ச்சிக்கு அதிக மதிப்பு தருவோமென்றால் முடிவு பிரச்சனையாய் இருக்கும். நமது உணர்ச்சிகள் நிமிடத்திற்கு நிமிடமும், மணிக்கு மணியும் மாறுகிறது. நம்முடைய வாழ்க்கை அதைச் சார்ந்திருக்குமென்றால் அதுவும் உறுதியற்றதாகவே இருக்கும். “விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்-உணர்ச்சியினால் அல்ல”.

## பாதுகாப்பிற்கான ஐந்து குறிப்புகள்

விடாமல் வாயின் மூலம் அறிக்கையிடுவது வல்லமையுள்ள நற்பெலனை தரக்கூடியது. எனினும் இதை சரியாகப் புரிந்து கொள்ளாது தவறுதலாக பயன்படுத்தும் பொழுது ஆவிக்குரிய நிலையில் இது ஆபத்து ஆகிறது. அது மனதின் ஆற்றலைப் பயன்படுத்தக் கூடியதொன்றாகும். இப்படிப்பட்ட தத்துவத்தை பிரெஞ்ச் நாட்டு தத்துவ ஞானி திரு “கூ” (Coue) போதித்தார். அவர் சொன்னார் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வகையிலும் நான் முன்னேறுகிறேன், அதிகம் முன்னேறுகிறேன், என்பதாகும். அதே நேரத்தில் ஒரு முதிர்ச்சி அடையாத உற்சாகமுள்ள கிறிஸ்தவன் சர்வ வல்லமையுள்ள தேவனின் கரங்களை முறுக்கி இந்த முறையில் தனக்கு வேண்டியதையெல்லாம் பெற்றுக் கொள்ளக்கூடும் என நினைக்க தவறான வாய்ப்புண்டு. அல்லது இதன் மூலம் காசு போட்டால் தானாகவே பொருட்களைத் தரும் ஒரு “வெண்டிங் இயந்திரமாக” நாம் தெரிந்தெடுக்கும் சரீர ஆசைகளை அறிக்கையின் மூலம் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியும் என தப்பெண்ணம் கொள்ளக்கூடாது.

இவ்வித தப்பிதங்களுக்குள் விழாதபடி வேதத்திலிருந்து பாதுகாவலான ஐந்து முறைகளை கூற விரும்புகிறேன்.

**பாதுகாப்பின் முதல் வழி :** நாம் தேவனை எப்படி சந்திக்க முற்படுகிறோம் என்பதை கவனத்துடன் ஆராயவேண்டும். எபிரெயர் நிருபத்தின் எழுத்தாளர் இயேசு கெத்சமனேயில் செய்த ஜெபத்தைப் பற்றி எழுதும் பொழுது எபிரெயர் 5:7ல் தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு என்று எழுதுகிறார். இந்த பயபக்தி லூக்கா 22:42ல் பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; என்று கூறியதால் வெளிப்படுகிறது. இந்த மாதிரியை நாம் அனைவரும் பின்பற்ற வேண்டும். நாம் சொந்த சித்தத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு தேவசித்தத்தைப் பின்பற்றும் பொழுது தானாகவே ஜெபத்தின் பலன்களையும் இரட்சிப்பின் சிலாக்கியங்களையும் சுதந்தரித்துக் கொள்ளுகிறோம்.

**பாதுகாப்பிற்கான இரண்டாவது வழி :** நாம் விரும்பும் அல்லது கற்பனை செய்யும் ஒரு காரியத்தை அறிக்கையிட சுயாதீனத்துடன் நாம் முற்படக்கூடாது. நமது அறிக்கை **தேவனுடைய எழுதப்பட்ட வசனத்தின் வரம்பிற்குள்ளாகவே** இருக்கவேண்டும். வசனம் வாக்களிக்காததை நாம் கேட்க ஆரம்பிக்கும்பொழுது அது கானல் நீர் ஆகிவிடும்.

**பாதுகாப்பிற்கான மூன்றாம் வழி :** பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலை நாம் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும். ரோமர் 8:14ல் பவுல் தேவ புத்திரர்களை எப்படி கண்டு கொள்ளலாம் என்று கூறுகிறார் : ''மேலும் எவர்கள் தேவனுடைய **ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ,** அவர்கள் **தேவனுடைய புத்திரராய்** இருக்கிறார்கள்'' என்கிறார். கிறிஸ்தவ வாழ்வின் மற்ற பகுதிகளை விட இது நமது வாயின் அறிக்கையுடனே இணைக்கப்பட்டதாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எந்த வேத வசனத்தின் சத்தியத்தை அறிக்கையிட வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலை பரிசுத்த ஆவியானவரே நமக்கு காட்டுகிறார். கடந்த அத்தியாயத்தில் பரிசுத்த ஆவியானவரே நித்திய **லோகோஸிலிருந்து** எடுத்து நடைமுறையில் நமது

சூழ்நிலைக்கேற்ற ரேமாவை அளிக்கிறார் என்று கண்டோம்.

**பாதுகாப்பிற்கான நான்காவது வழி :** இயற்கைக்கப்பாற்பட்ட தேவகிருபையை நாம் சார்ந்தவர்களாய் இருக்க வேண்டும். எபேசியர் 2:8ல் பவுல் **கிருபையினாலே விசுவாசத்தைக்** கொண்டு என்று எழுதுகின்றார். எப்பொழுதுமே முதலாவது கிருபை பின்பே விசுவாசம் நாம் தேவகிருபையையும், வல்லமையையும் சார்ந்திருக்க தவறும்போது நமது சொந்தத் திறமையை சார்ந்தவர்களாகிறோம். நமது சொந்த திறமையை சாரும் போது முதலில் ஈசாக்கைப் பெறாமல் இஸ்மவேலைப் பெற்ற ஆபிரகாமைப் போலவே இருக்கிறோம்.

**பாதுகாப்பிற்கான ஐந்தாவது வழி :** நமது ஐம்புலன்களின் செயல்பாடுகளை கவனத்துடன் கணிக்க வேண்டும். இயற்கைக்கடுத்த இந்த பூவுலகம் இல்லாததுபோல் நம்முடைய கண்களை மூடி, காதுகளைப் பொத்திக் கொண்டு இவ்வுலகில் நடைபோட வேண்டும் என்று தேவன் கற்பிக்கவில்லை. விசுவாசம் என்பது ஒரு **புதிர்** அல்ல. நம் புலன்கள் வெளிப்படுத்தும் காரியங்களின் உண்மையின் மேல் நாம் கேள்வி எழுப்பவேண்டும் என நான் கூறாமல் அதனையே முடிவாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்கிறேன்.

ரோமர் 4:16-21ல் பவுல் விசுவாசம் எப்பொழுதும் தேவகிருபையைச் சார்ந்திருக்க வேண்டும் என்கின்றார். விசுவாசத்திற்கும், ஐம்புலன்கள் கூறுவதற்கும் இடையே உள்ள போராட்டத்தைத் தீர்ப்பது எவ்வாறு என்பதற்கு ஆபிரகாமின் உதாரணத்தைக் காட்டுகிறார்.

> (16) ஆதலால், சுதந்தரமானது **கிருபையினால்** உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்குமாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச்

சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது.

(17) அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாய் இருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்.

(18) உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்.

(19) அவன் விசுவாசத்திலே பலவீனமாய் இருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும் போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்.

(20) தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்,

(21) தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.

ஆபிரகாமின் புலன்கள் ஒரு குழந்தையை உருவாக்க அவனிடத்தில் சரீர பெலனில்லை என்று கூறியது. சாராளும் குழந்தையைப் பெற்றெடுக்கும் ஆற்றல் அற்றவளாய் இருந்தாள். எனினும் தேவன் அவர்களுக்கு ஒரு குமாரனை வாக்களித்திருந்தார். தனது சொந்த சரீரத்தைப் பற்றி தனது புலன்கள் அறிவித்ததையும், சாராளின் நிலையைப் பற்றியும் புரிந்து கொள்ளாதவனாக அவன் நடக்கவில்லை. ஆனால் அந்த **முடிவே** இறுதியானது என்பதை ஒப்புக்கொள்ள

மறுத்தான். அவன் புலன்கள் கூறியது ஒன்று தேவவார்த்தை வாக்களித்தது மற்றொன்று தன் புலன்கள் அந்த வாக்கிற்கு விரோதமாக சந்தேகத்தை எழுப்பி விடாதபடி விடாப்பிடியாய் அந்த வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டான். இறுதியாக அவன் விசுவாசம் பரீட்சிக்கப்பட்ட பின்பு ஆபிரகாமின் சரீரமும் சாராளின் சரீரமும் தேவவாக்குத்தத்தத்திற்கு ஏற்றபடி கொண்டுவரப்பட்டது. அவர்கள் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் திறமையைப் பெற்றார்கள்.

நமது காரியமும் இப்படித்தான் உள்ளது. ஒரு சூழ்நிலையைக் குறித்து நமது புலன்கள் ஒன்றைச் சொல்லலாம். ஆனால் தேவவார்த்தை மற்றொன்றைச் சொல்லலாம். இதனால் ஒரு போராட்டம் ஏற்படக்கூடும். ஆனால் ஆபிரகாமைப் போல சரியான அறிக்கை செய்து விசுவாசத்தைப் பற்றிப்பிடித்துக் கொள்ளும் போது நமது புலன்களை தாக்கும் சரீர நிலைமை தேவன் கூறும் வசனத்திற்கேற்ப கொண்டுவரப்படும்.

## இரட்சிக்கப்படுவதற்கான அறிக்கை

ரோமர் **10:8-10** வரையுள்ள வசனங்களில் பவுல் தமது போதனையை **இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை** பண்ணப்படும் எனக் கூறி முடிக்கின்றார். இதில் ஒரு முன்னேற்றத்தின் பாதை உள்ளது. சரியான அறிக்கையை தொடர்ந்து செய்யும் பொழுது நாம் இரட்சிப்பின் சிலாக்கியம் அனைத்தையும் பெறுவதில் முன்னேற்றம் அடைகிறோம்.

சரியான அறிக்கையை தெரிந்தெடுத்து செய்வதிலே இரட்சிப்பு என்னும் சொல்லுக்கு உள்ள முழு அர்த்தத்தையும் புரிந்து கொள்வது அவசியமாகிறது. அநேக கிறிஸ்தவர்கள் அறிக்கை என்பதற்கு பாவ அறிக்கையே அர்த்தம் என்றும், இரட்சிப்பு என்பதற்கு பாவம் மன்னிக்கப்படுதல் என்று மட்டுமே கருதுகின்றனர். நமது பாவங்களை அறிக்கை பண்ணவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நமது பாவங்கள்

மன்னிக்கப்படுவது இரட்சிப்பில் உள்ளது எனினும் இரட்சிப்பு, அறிக்கையிடுதல் என்பதற்கான அர்த்தம் விரிவானது.

சங்கீதம் 78:21-22ல் இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று வெளியே வந்ததிற்கு பின்பு தேவன் அவர்கள் பேரிலே கோபம் கொண்டார். அவர்கள் தேவனை விசுவாசியாமலும், அவருடைய இரட்சிப்பை நம்பாமலும் போனார்கள் என்கிறார். இதற்கு முந்தின வசனமும், பிந்தின வசனமும் தேவன் அவர்களுக்கு நிறைவேற்றிய இரட்சிப்பின் முழுமையைக் குறிப்பிடுகிறது. அவர் எகிப்தியர்களை நியாயம் தீர்த்தார். செங்கடல் இரண்டாகப் பிளந்தது. இரவில் அக்கினி ஸ்தம்பமும், பகலில் மேகஸ்தம்பமும் அவர்களை வழிநடத்தினது. கன்மலையை அடித்ததினால் தண்ணீர் புறப்பட்டு வந்தது. அவர்கள் சாப்பிடுவதற்கு போதுமான மன்னா கொடுக்கப்பட்டது. இவ்விதமாக தேவன் அவர்கள் வாழ்வில் ஈடுபட்டு செய்த அனைத்து காரியங்களும் இரட்சிப்பு என்னும் அந்த வார்த்தையில் அடங்குகிறது.

புதிய ஏற்பாட்டில் (SOZO) என்னும் வார்த்தை இரட்சிப்பு என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது பாவமன்னிப்பை மட்டும் குறிக்காமல் ஒவ்வொரு மனிதத் தேவையையும் குறிப்பதாக உள்ளது. இந்த வார்த்தையின் முழு அர்த்தத்தை விளக்கும் சில உதாரணங்களைக் காண்போம். கீழ்க்கண்ட உதாரணங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாடுள்ள ஸ்திரி குணமடைந்தது. மத்தேயு 9:21-22 லிஸ்திராவில் தாயின் வயிற்றிலிருந்து முடவனாகப் பிறந்தவன் குணமடைந்தது. அப். 14:8-10, கதரேனருடைய நாட்டில் பல பிசாசுகள் பிடித்திருந்த மனிதன் தெளிந்த மனதை அடைந்தது. லூக்கா 8:36 யவீருவின் மகளை உயிருடன் எழுப்பியது. லூக்கா 8:49-55 விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளிகளை இரட்சிப்பது யாக்கோபு 5:15.

இறுதியாக 2 தீமோத். 4:18ல் ‘‘கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்” என்று கூறுப்பட்டுள்ளது. இங்கு காப்பாற்றுவார் என்பதற்கு இரட்சிப்பு என்பதற்கு பயன்படும் கிரேக்கச் சொல் வருகிறது. இந்த அர்த்தத்தில் இது ஒவ்வொரு விடுதலையையும், பாதுகாப்பையும் பவுலுக்கான பூவுலகத் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படுவதும் இந்த இரட்சிப்பில் அடங்குகிறது. இது இறுதியாக தேவனின் இராஜ்ஜியம் வரைக்கும் நடத்தக் கூடியது.

இரட்சிப்பு என்பது இயேசு சிலுவையில் மரித்ததினால் கிரயத்திற்கு கொள்ளப்பட்ட - எல்லா சிலாக்கியங்களையும் குறிக்கிறது. இச்சிலாக்கியங்கள் ஆவிக்குரியதாகவும் சரீரத்திற்கடுத்ததாகவும் பொருளாதாரத்திற்கடுத்ததாகவும் இம்மைக்கும், மறுமைக்கும் உள்ள ஆசீர்வாதங்களாகவும் இரட்சிப்பு என்னும் ஒரு வாக்கியத்தில் அடக்கி கூறப்படுகிறது.

இரட்சிப்பின் சகல சிலாக்கியங்கள் அறிக்கையின் மூலம் நமக்கு கிடைக்கிறது. வேதமானது தேவனின் எல்லா சிலாக்கியங்களையும் பெற்றுக் கொள்வது எவ்வாறு என்பதை தெளிவாகக் கூறுகிறது. இதை விசுவாசத்தினாலே இருதயத்தில் ஏற்றுக் கொண்டு வாயினாலே அறிக்கையிடும் பொழுது அவைகள் நமக்குச் சொந்தமாகின்றன.

அடிக்கடி பிசாசு நம்மைத் தாக்கி நம்மைப் பற்றி குறைவாக எண்ணச் செய்து நம்மை தகுதியற்றவர்களாக்குகிறது. தேவன் நம் பெயரில் கொண்டுள்ள அன்பையே நாம் கேள்வி கேட்க ஆரம்பிக்கிறோம். நமது எதிராளியான பிசாசானவனை செயலிழக்கச்செய்யும் வசனங்களைக் கண்டுபிடித்து அவைகளை அறிக்கை செய்ய வேண்டும். உதாரணமாக,

*ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. (ரோமர் 8:1)*

*நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5:8)*

*தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (1 யோவான் 4:16)*

இந்த வசனங்களின் அடிப்படையில் நான் கீழ்க்கண்ட சொந்த அறிக்கைகளைச் செய்கிறேன். "நான் கிறிஸ்து இயேசுவில் இருக்கிறேன்". ஆகவே எனக்கு நியாயத்தீர்ப்பு இல்லை. நான் பாவியாக இருக்கையிலே கிறிஸ்து மகிழ்ந்ததினாலே தேவன் என் பெயரிலுள்ள அன்பை விளங்கச் செய்கிறார். தேவன் என்னில் கொண்டுள்ள அன்பு எனக்குத் தெரியும். நான் அதை விசுவாசிக்கிறேன். எதிர் மறையான எண்ணங்களை நான் தவிர்க்கிறேன். முற்போக்குடன் வசனங்களை அறிக்கை செய்கிறேன். வசனத்தை அறிக்கையிடுவதால் சமாதானம் என்னில் தோன்றும் எதிர்மறையான உணர்ச்சிகளை நீக்குகிறது.

நமது தேவை சரீர ஆரோக்கியத்திலும், தெய்வீக சுகத்திலும் இருக்கலாம். இயேசுவைப் பற்றி மத்தேயு 8:17ல் **"அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய**

**நோய்களைச் சுமந்தார்"** எனக் கூறப்பட்டுள்ளது. **1** பேதுரு **2:24** "அவருடைய தழும்புகளினால் குணமானீர்கள்" என்று கூறப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அறிக்கை சுகத்தைப் பெற்றுக் கொள்ள நமக்கு உதவுகிறது. ஒவ்வொரு தடவை சுகவீனத்திற்கான அறிகுறிகள் என்னில் காணப்படும் போது இயேசு தாமே என் பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு என் நோய்களைச் சுமந்தார் அவருடைய தழும்புகளினால் நான் குணமானேன் என்று நான் அறிக்கையிடுகிறேன். ஆரம்பத்தில் என் சரீரத்திற்கும், மாறாத தேவ வார்த்தைக்கும் இடையே பெரும் போராட்டம் ஏற்படலாம். ஆனால் தொடர்ந்து நான் தேவ வார்த்தையை அறிக்கையிடும் போது வாய்ப்பாடு மனப்பாடம் ஆவது போல அது என் வாழ்வில் ஒரு பகுதியாகிறது. நள்ளிரவில் மூன்று விதமான நோய்களின் அறிகுறி என் சரீரத்தில் வந்த பொழுது என் ஆவி அவருடைய தழும்புகளால் குணமானேன் என்னும் அறிக்கையைச் செய்கிறது.

என் தேவை சுகத்தை பெறுவதைவிட மாறுபட்டதாய் இருக்குமாயின் அப்பகுதிக்குரிய வசனத்தை நான் அறிக்கையிடுகிறேன். உதாரணமாக, நான் பணக்கஷ்டத்தில் இருக்கிறேன் என்று வைத்துக் கொள்வோம். நான் **2** கொரி. **9:8** "நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும் படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்" என்பதை அறிக்கையிடுகிறேன். என் பயங்களுக்கு இடங்கொடுக்க மறுக்கிறேன். நன்றி செலுத்துவதின் மூலம் என் பயத்தை மேற்கொள்ளுகிறேன். அவர் எனக்கு சகலத்தையும் அபரிமிதமாய் கொடுக்கிறார் என்பதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த அறிக்கையை நான் செய்யும் போது தேவவார்த்தையின் உண்மை என் பண நெருக்கடியின் சூழ்நிலையில் உதவுகிறது.

ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒவ்வொரு தேவையிலும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் ஒவ்வொரு பிரச்சனையும் தேவன் அதற்கு கூறும் மறுமொழியை அறிக்கையிடுவதற்கான வாய்ப்பாக நான் கருதுகிறேன். நம்முடைய அறிக்கை தொடர்ந்து முழுமையாக இருக்கும் போது இரட்சிப்பின் மகிழ்ச்சியை அனுபவிக்க ஆரம்பிக்கின்றேன்.

## நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியர்

எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் பிரதான கருத்தாக கூறப்படுகிறது. இந்த பணியில் பிதாவாகிய தேவனுக்கு முன்பு நமது சொந்த பிரதிநிதியாக இயேசு செயலாற்றுகிறார். அவர் நம்மை தமது நீதியினால் மூடி நமது தேவைகளையும் ஜெபங்களையும் பிதாவினிடம் சமர்ப்பித்து நமது சார்பில் தேவனின் வாக்குத்தத்தங்கள் நிறைவேற உதவுகிறார். இவ்விதமாக கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவத்தை நிருபங்களில் காணும் பொழுது அது நம்முடைய அறிக்கையுடன் தொடர்பு கொண்டிருப்பதைக் காணலாம். அந்த அளவிற்கு இயேசு பரலோகத்தின் தமது பிரதான ஆசாரியப் பணியை நிறைவேற்றுகிறார்.

எபிரெயர் **3:1**ல் நாம் அறிக்கை பண்ணுகிற பிரதான ஆசாரியர் என இயேசு அழைக்கப்படுகிறார். இது கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய ஊழியத்தை நமது அறிக்கையின் அடிப்படையில் சிறப்பானதாக்குகிறது. நமது சார்பில் அவருடைய பிரதான ஆசாரியத்துவம் ஊழியத்தை திறமையானதாக்குவது நமது அறிக்கையே. ஒவ்வொரு தடவையும் நாம் சரியான அறிக்கையைச் செய்யும் பொழுது பிரதான ஆசாரியரான கிறிஸ்துவின் முழு அதிகாரமும் அதற்குப் பின்னாக

இருக்கிறது. நம் அறிக்கை நிறைவேறுவதற்கு அவர் உத்தரவாதம் அளிக்கிறார். ஆனால் நாம் சரியான அறிக்கை செய்யத் தவறினால் அல்லது சந்தேகத்தின் அவிசுவாசத்தை அறிக்கையிட ஆரம்பித்தால் நமது பிரதான ஆசாரியராக, நமது சார்பில் அவர் செயல்படுவதற்கு நாம் சந்தர்ப்பம் அளிக்காமல் போகிறோம். சரியான அறிக்கை அவர் ஊழியத்தை நமது சார்பில் வலுவடையச்செய்கிறது. தவறான அறிக்கை அவர் ஊழியத்தை நிறுத்திப் போடுகிறது.

எபிரெயர் **4:14**ல் பிரதான ஆசாரியராகிய இயேசுவின் ஊழியம் நமது அறிக்கையுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதை வானங்களின் வழியாய் பரலோகதிற்குப் போன தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறபடியால் நாம் பண்ணின **அறிக்கையை உறுதியாய்** பற்றிக் கொண்டிருக்கக்கடவோம் என்று கூறுகிறது. இங்கு நாம் நமது அறிக்கையை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று காண்கிறோம். நமது வாயின் வார்த்தைகளை தேவனுடைய எழுதப்பட்ட வசனத்துடன் மாறாததாக இணைத்துக் கூறும் பொழுது நாம் அவிசுவாசம் என்னும் தளத்திற்குள் சென்று விட மாட்டோம். அநேக எதிர்ப்புகள் நம்மை நோக்கி வரலாம். நாம் எதிர்பார்த்ததற்கு மேலாக காரியங்கள் செயல்பட ஆரம்பிக்கலாம். இயற்கையின் உதவி அனைத்தும் நின்று போகலாம். மாறாத காரியங்களான தேவ வார்த்தைக்கும் தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் நமது பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் உள்ள அறிக்கையைச் செய்வதில் நாம் உறுதியாய் நிலைத்து இருக்கவேண்டும்.

எபிரெயர் **10:21-24** வரையிலுள்ள வசனங்களில் மூன்றாவது தடவையாக எழுத்தாளர், இயேசு கிறிஸ்துவின் பிரதான ஆசாரியர் பணியை தமது அறிக்கையுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

**(21)** தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்,

**(22)** துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்தஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.

**(23)** அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கிறாரே.

**(24)** மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து;

இயேசு கிறிஸ்தவை நமது பிரதான ஆசாரியாராக ஏற்றுக் கொள்வதிலே மூன்று காரியங்கள் அடங்கியுள்ளன. முதலாவது, நாம் செய்வோம் (**22**ம் வசனம்) என்ற சொல்லின் மூலம் தேவனுடன் இணைக்கிறது. மீண்டும் உண்மையுள்ள இருதயத்தோடு வரவேண்டும். இரண்டாவதாக அது நமது அறிக்கையைப் பொறுத்திருக்கிறது. (**23**ம் வசனம்) "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்". மூன்றாவதாக (**24**ம் வசனம்) நாம் அன்புக்கும், நற்கிரியைகளுக்கும் ஏவப்பட வேண்டும். தேவன் பெயரிலும் நம்முடைய சக விசுவாசிகளின் பெயரிலும் அக்கரை காட்டவேண்டும். சரியான அறிக்கையை பற்றிக் கொள்ளவேண்டும். தேவனுக்கும் மற்ற விசுவாசிகளுக்கும் உள்ள கடமையைச் சரியாக நிறைவேற்றவேண்டுமாயின் இந்த இரண்டு நிபந்தனைகளையும் நாம் பின்பற்ற வேண்டும்.

எபிரெயரில் நாம் பார்த்த மூன்று வேதப் பகுதிகளில் சரியாக அறிக்கையிடுதலைப் பற்றி கூறப்பட்டுள்ளது. எபிரெயர் **3:1**ல் அவர் நாம் அறிக்கை பண்ணுகிற பிரதான ஆசாரியர்

என்றழைக்கப்படுகிறார். 4:14ல் நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப்பற்றிக் கொண்டிருக்கக் கடவோம் என்று சொல்லப்பட்டுள்ளது. எபிரெயர் 10:32ல் நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதில் அசைவில்லாமல் உறுதியாய் இருப்போம் என்று சொல்லப்பட்டுள்ளது. இதிலிருந்து தம்மை பெலவீனமடையச் செய்யக்கூடிய வகையில் நமது அறிக்கை மேல் தாக்குதல் உண்டாகும் என்பது புலனாகிறது. நம்மில் அநேகர் இது நமது அனுபவமாக இருக்கிறது என்று கூறலாம். நமக்கு உண்டாகக்கூடிய பிரச்சனை எவ்வளவு பெரிதாய் இருந்தாலும் வெற்றியானது அறிக்கையை உறுதியாகப் பற்றிக் கொண்டிருப்பதால் உள்ளது.

கடைசி மூன்று ஆலோசனைகளில் எபிரெயருக்கு எழுதின நிருபத்தின் ஆசிரியர் நாம் ஏன் அசைவில்லாமல் இருக்கவேண்டும் என்பதற்கான காரியங்களைக் கூறுகிறார். ஏனென்றால் வாக்களித்தவர் உண்மையுள்ளவர், நமது அறிக்கையானது என்றும் மாறாத பிரதான ஆசாரியருடன் இணைக்கப்பட்டுள்ளது. நமது “அறிக்கையானது” தேவன் தமது உண்மையையும், ஞானத்தையும், வல்லமையையும், நமது சார்பில் காட்டும்படியாக நமக்கு வகுத்துத்தந்த வழியாகும்.

## தொகுப்பு

தேவ இரட்சிப்பின் திட்டத்தில் விசுவாசமானது நேரிடையாக அறிக்கையுடன் தொடர்புள்ளது. அறிக்கை என்றால் நமது வாயின் வார்த்தைகளை தேவன் எழுதப்பட்ட வார்த்தைகளுக்கு ஏற்ப சொல்வதாகும். இதற்கு சுய கட்டுப்பாடு தேவை. இதில் நாம் நமது புலன்களையோ, உணர்ச்சிகளையோ சாராமல் அந்த சூழ்நிலையைக் குறித்து வசனம் என்ன சொல்லுகிறது என்பதையே சார்ந்திருக்க வேண்டும். ஆரம்பத்தில் இதில் போராட்டமும், குழப்பமும் ஏற்படலாம். ஆனால் இறுதியாக தேவவசனமானது நம் இருதயத்தில் பதிக்கப்படும் போது

இயற்கையாகவே நமது வாயின் மூலம் வெளிப்படும்.

இந்த அறிக்கையிடுதலை நாம் யுக்தியாக கருதக்கூடாது. இதற்கு பாதுகாவலான ஐந்து ஆலோசனைகள் பின்வருமாறு:

(1) நம் சுய சித்தத்தை விட்டு நாம் தேவனின் சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கவேண்டும்.

(2) நம்முடைய அறிக்கை திட்டவட்டமாக வசனத்தைச் சார்ந்ததாக இருக்கவேண்டும்.

(3) நாம் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும்.

(4) நமது சொந்த திறமையைச் சாராமல் இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவகிருபையைச் சார வேண்டும்.

(5) தேவனின் வார்த்தைக்கும் நமது புலன்களுக்கும் போராட்டம் வரும் வேளையில் நாம் ஆபிரகாமைப் போல நமது புலன்கள் அறிவிப்பது உண்மையாயினும் அது இறுதியானது அல்ல என்று கருத வேண்டும்.

சரியான அறிக்கையை நாம் தொடர்ந்து உறுதியாய் செய்யும் பொழுது இரட்சிப்பின் முழு பலனுக்குள் வருகிறோம். அதாவது கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் உண்டான சகல ஆசீர்வாதங்களுக்கும் பாத்திரவான்களாகிறோம். சரியான அறிக்கை நம்மை கிறிஸ்துவுடன் இணைக்கிறது. அவர் தேவனின் பிரசன்னத்திலுள்ள நம்முடைய பிரதான ஆசாரியர். அவருடைய வல்லமை, ஆற்றல், ஞானம் இவையனைத்தும் நமது அறிக்கையின் பலனாக வெளிப்படுகிறது.

# அத்தியாயம் எட்டு

# விசுவாசமானது கிரியையினால் வெளிப்பட வேண்டும்

நாம் முன்பு கண்டபடி விசுவாசமானது வாயினாலே அறிக்கை பண்ணப்பட வேண்டும். ஆனால் இது மட்டும் போதுமா? அநேகம் தடவைகளில் பக்தியுள்ள மக்கள் அர்த்தத்தை உணராத வெறும் வார்த்தைகளைப் பயன்படுத்தும் குற்றத்திற்குள்ளாகின்றனர். இதை நாம் எப்படி தவிர்க்கக் கூடும்? நாம் அறிக்கையில் பயன்படுத்தும் வார்த்தைகள் இருதயத்தின் மெய்யான விசுவாசத்திலிருந்து தான் வருகிறது என்பதைக் குறித்து எப்படி நிச்சயம் உள்ளவர்களாய் இருக்கக் கூடும்? இந்த கேள்விக்கு வேதம் நடைமுறையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு எளிய பதிலைக் கூறுகிறது; வாயினால் அறிக்கை செய்யப்பட்ட விசுவாசம் அதற்கேற்ற கிரியைகளினாலே பின்னணியில் தாங்கப்பட வேண்டும். கிரியையில்லாத விசுவாசம்-விசுவாசத்தை வெளிப்படுத்தாத கிரியை செத்ததாயிருக்கிறது.

## விசுவாசம் அன்பினால் செயல்படுகிறது

கலாத்தியர் 5:6ல் பவுல் இந்த முக்கிய கருத்தைக் குறித்தும் பேசுகிறார் “கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும், விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்” என்று பவுல் கூறுகிறார்.

இங்கு பவுல் ஒன்றன்பின் ஒன்றாக நான்கு முக்கியக் குறிப்புகளைக் கூறுகிறார்.

முதலாவதாக, விருத்தசேதனத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டு வெளிப்படையான எந்தக் காரியமும் அல்லது சடங்காச்சாரமும், நம்மை தேவனிடம் வழிநடத்தாது என்கிறார். தேவன் புறம்பான காரியங்களில் அல்ல உள்ளான காரியங்களிலே அக்கறை கொள்கிறார்.

இரண்டாவதாக, மெய்யான கிறிஸ்தவத்தின் முக்கியக் கூறு **விசுவாசமாகும்.** இருதயத்தின் உள்ளான நிலையைப் பொறுத்தே தேவன் ஏற்றுக் கொள்ளுகிறார். இதற்கு ஈடாக வேறு எந்தக் காரியத்தையும் வைக்க முடியாது. ஐந்தாம் அத்தியாயத்தில் வேதமானது விசுவாசத்தை மையமாக வைத்து முக்கியப்படுத்தி பேசுகிறது.

மூன்றாவதாக, விசுவாசமானது கிரியை நடப்பிக்கும் என்று பவுல் நமக்குச் சொல்கிறார். செயல்படுவது விசுவாசத்தின் பண்பாக உள்ளது. எங்கு தகுந்த செயல்பாடு இல்லையோ, அங்கு உண்மையான விசுவாசம் இல்லை.

நான்காவதாக, விசுவாசமானது பிரதானமாய் **அன்பினாலே** வெளிப்படுகிறது. அன்பில்லாத இடத்தில் உண்மையான விசுவாசத்திற்கு இடமில்லை. அன்பானது முற்போக்கானது, பெலப்படுத்துவது, ஆறுதல்படுத்துவது, கட்டியெழுப்புவது, கிரியைகள் எதிர்மறையாக அன்பற்றதாய் குறைகூறுவதாய் இருக்கும்பொழுது அங்கு அன்பிற்கு இடமில்லை. ஆகவே விசுவாசத்திற்கும் இடமில்லை. இங்கு மதத்திற்கு அடுத்த கிரியைகள் காணப்படலாம். ஆனால் அது விசுவாசத்திற்கு அடுத்த கிரியை ஆகாது.

புதிய ஏற்பாட்டில் விசுவாசத்திற்கும், கிரியைகளுக்கும் உள்ள உறவை எடுத்துக் காட்டுவது யாக்கோபின் நிருபமாகும். சில வேத பண்டிதர்கள் விசுவாசத்தைக் குறித்து பவுலின் கண்ணோட்டத்திற்கும், அதைக் குறித்த யாக்கோபின்

கண்ணோட்டத்திற்கும் ஒரு வித்தியாசம் உண்டென்று கூறுகின்றனர். அவர்கள் பவுல் விசுவாசத்தின் மூலமே இரட்சிப்பு; அதற்கு கிரியை தேவையில்லை என்றும், யாக்கோபு கிரியையினால் விசுவாசம் வெளிப்படவேண்டும் என்றும் கூறுகின்றார். என்னைப் பொறுத்தமட்டில் இதில் நான் ஒரு முரண்பாட்டையும் காணவில்லை; இவைகள் ஒரே சத்தியத்தின் இரு பக்கங்களாகும். கிரியைகள் அற்ற விசுவாசத்தினாலே நாம் நீதிமான்களாகிறோம் ஏனெனில் எந்தக் கிரியையும் நமக்கு நீதியை சம்பாதித்து தராது. ஆனால் கிரியைகள் அற்ற நிலையில் விசுவாசத்தினால் நாம் நீதியை பெற்றபின்பு நமது விசுவாசத்தை கிரியைகளினால் வெளிப்படுத்த வேண்டும். இல்லையாயின் நமது விசுவாசம் பயனற்றதாகும். ஆகவே பவுல் தேவனிடத்திலிருந்து நாம் நீதியைப் பெறுவது எவ்வாறு என்கின்றார். ஆனால் யாக்கோபு அந்த நீதியை தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டதினால் உண்டாகக் கூடிய விளைவுகளைக் கூறுகின்றார். இவ்வாறாக இவ்விரு எண்ணங்களிலும் வித்தியாசம் ஒன்றுமில்லை. முக்கியப்படுத்துவதில் மட்டுமே வித்தியாசம் உள்ளது.

அடுத்தபடியாக பவுல் கிரியைக்கு முக்கியத்துவம் கொடுக்கவே இல்லை என்று சொல்ல முடியாது. நாம் கலாத்தியர் 5:6ல் பார்த்தபடி விசுவாசத்தின் பண்பு கிரியையில் வெளிப்படுவதாகும் - அன்பின் கிரியையினால் அது வெளிப்படுகிறது. அன்பின் அதிகாரமாகிய 1 கொரி. 13ம் அதிகாரத்திலும், தமது எழுத்துக்களின் மற்ற பல இடங்களிலும் இதே சத்தியத்தை அவர் கூறுகின்றார்.

## யாக்கோபு கிரியைகளை முக்கியப்படுத்துகிறார்

விசுவாசம், கிரியைகள் இவைகளைப் பற்றிய போதனைகளை யாக்கோபு தமது நிருபத்தில் 2ம் அதிகாரத்தில்

14 முதல் 26 வசனங்களில் அறிவிக்கிறார். இப்பகுதியை ஆறு கூறுகளாக பிரித்து அதனை ஆராய்ச்சி செய்வோம்.

**முதல் பகுதி வசனங்கள் 14-17 வரை கிரியையற்ற அறிக்கை**

**(14)** என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?

**(15)** ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது,

**(16)** உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?

**(17)** அப்படியே விசுவாசமும் கிரியைகள் இல்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.

இங்கே தனக்கு விசுவாசம் உள்ளது எனக்கூறும் ஒரு மனிதனைப் பற்றி பேசுகிறார். இதை நாம் காண வேண்டும். விசுவாசம் தனக்கு உண்டு எனச் சொல்லும் ஒரு மனிதனின் நடத்தை அதற்கு மாறாக உள்ளது. அதிகப்படியாக தேவைகள் உள்ள ஒரு மனிதனை நோக்கி வெறும் வார்த்தைகளினால் ஆறுதல் சொல்லுகிறார். செயல் முறையில் அவருக்கு உதவி செய்வதாக இல்லை, செய்யத் தக்க செயலை செய்யாததினால் அவனுடைய வார்த்தைகள் வெறுமையாயும், உண்மையற்றதாயும் உள்ளது. நமது அறிக்கையை பொறுத்தமட்டிலும் கூட இது உண்மையாயுள்ளது. அறிக்கை செயலினால் தாங்கப்படவில்லையாயின் அது உண்மையற்ற வார்த்தையாகவும், அர்த்தமற்ற வார்த்தையாகவும் இருக்கும்.

**பகுதி- 2 வசனம் 18: இறையியலும் வாழ்க்கையும்**

**(18)** ஒருவன் : உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே.

இந்த வசனத்தை சொந்த அறைகூவலாக ஏற்றுக் கொள்கிறேன். என் விசுவாசம் உள்ளீடற்ற இறையியலாக உள்ளதா? அல்லது நான் விசுவாசிப்பதை என்னுடைய வார்த்தைகளினால் நிரூபிக்கின்றேனா? காணப்படாத ஒரு வரைபடமாக விசுவாசம் கொடுக்கப்பட்டு வந்ததை உலகம் கண்டு சோர்ந்து போயுள்ளது. செயல்படக்கூடிய விசுவாசத்தைக் காண உலகம் வாஞ்சிக்கிறது. என்னுடைய சொந்த எண்ணம் என்னவெனில் வாழ்க்கைக்குப் பயன்தராத இறையியல் ஒதுக்கப்பட்டு தள்ளப்பட வேண்டும் என்பதே.

**பகுதி- 3 வசனம் 19: பிசாசின் வைராக்கியம்**

**(19)** தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லது தான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன.

மெய்யான தேவன் ஒருவரே என்பது பழங்காலத்திலிருந்து நிலவிவரும் ஒரு கொள்கை. ஆனால் அது போதாது. பிசாசுகளும் அதை விசுவாசித்து நடுங்குகின்றன. வேதம் முழுவதும் உண்மை என்பது பிசாசுக்கும் தெரியும் என்பது என் எண்ணம். அநேக இறையியல் நிபுணர்களை விட பிசாசு பழங்கால கொள்கை அறிந்தவனாய் இருக்கிறான். இப்படிப்பட்ட விசுவாசத்தில் உள்ள குறைவு என்ன? இதற்கான பதிலை ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம் அதுவே **கீழ்படிதலாகும்!** சாத்தானும், அவனுடைய பிசாசின் கூட்டங்களும் மெய்யான ஒரே தேவனை விசுவாசித்தாலும், அவருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர்.

**மெய்யான விசுவாசம் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பதில்** உள்ளது. இல்லையாயின் அதில் பிரயோஜனம் இல்லை.

**பகுதி- 4 வசனம் 20-24: ஆபிரகாமின் உதாரணம்**

(20) வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறியவேண்டுமா?

(21) நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்?

(22) விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே.

(23) அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்.

(24) ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறாரென்று நீங்கள் காண்கிறீர்களே.

இப்பொழுது யாக்கோபு தமது குறிப்பை விளக்க ஆபிரகாமின் விசுவாசத்தையும் வாழ்க்கையையும் எடுத்துக் கொள்கிறார். இதைப்புரிந்து கொள்ளுவதற்கு ஆபிரகாமின் வாழ்க்கையிலிருந்து சில முக்கிய குறிப்புகளைக் காணவேண்டும். ஆதியாகமம் 12ம் அதிகாரத்தில் கல்தேய நாட்டிலுள்ள ஊர் என்னுமிடத்திலிருந்து தேவன் அவரை அழைத்து தாம் காட்டும் நிலப்பரப்பை சுதந்திரத்துக் கொள்ளுமாறு வேண்டினார். ஆபிரகாம் கீழ்ப்படிந்த போது தேவன் அவனை கானான் நாட்டிற்கு அனுப்பினார். ஆதியாகமம் 15ம் அதிகாரத்தில் ஆபிரகாம் தேவனை நோக்கி அந்த நிலப்பகுதியை சுதந்தரித்துக் கொள்வதற்கு தன் சரீரத்தில்

பிறந்த ஒரு மகனில்லை எனக் கூறுகிறார். இரவு நேரத்தில் நட்சத்திரங்களை அவனுக்கு காட்டி தேவன் உன் சந்ததி இவ்வளவாய் பெருகி இருக்கும் என்கிறார். ஆதியாகமம் 15:6ல் அவன் கர்த்தரை விசுவாசித்தான் அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தில் தேவன் ஆபிரகாமை அவன் செய்த நற்கிரியைகளின் அடிப்படையில் அல்ல, பிரதானமாய் அவன் தேவனை விசுவாசித்ததினாலே அவனை நீதிமான் எனக் கூறுகிறார்.

எனினும் ஆபிரகாம் யாக்கோபு கொண்ட விசுவாச உறவு இத்துடன் முடியவில்லை என்பதை யாக்கோபு குறிப்பிடுகிறான். தேவனை விசுவாசித்ததினாலே விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே நீதிமானாக கருதப்பட்ட ஆபிரகாம் அந்த விசுவாசத்தைக் காட்டும் பல செயல்களைத் தொடர்ந்து செய்கிறான். இதைத் தொடர்ந்து வரும் அதிகாரத்தின் ஏழு அதிகாரங்களில் தேவன் ஆபிரகாமை கீழ்ப்படிதலுக்கு மேல் கீழ்ப்படிதலைக் காட்டியபடியால் படிப்படியாக உயர்த்தி 40 ஆண்டுகளில் அவனுடைய விசுவாசத்தை முதிர்ச்சி அடையச் செய்கிறார். இறுதியாக ஆதியாகமம் 22ம் அதிகாரத்தில் ஆபிரகாம் தன் விசுவாசத்தின் உச்சக்கட்டப் பரீட்சையைச் சந்திக்கிறான். அது என்னவெனில் தன் குமாரனாகிய ஈசாக்கை தேவனுடைய பலிபீடத்தில் அளிப்பதாகும். இதனை எபிரெயர் 11:17-19 வசனங்களில் அவன் ஈசாக்கை தேவன் மீண்டும் கொண்டுவர வல்லவராயிருக்கிறார் என்னும் நிச்சயம் உடையவராய் இருப்பதைக் காண்கிறோம். இந்த பரீட்சையில் அவர் வெற்றி அடைகின்றார்.

ஆதியாகமம் 15ம் அதிகாரத்தில் ஆபிரகாம் இப்படிப்பட்ட பரீட்சையைச் சந்திக்க ஆயத்தமாயில்லை. இதற்கு முன்பு பல போராட்டங்களையும், ஆயத்தப்பரீட்சைகளையும் சந்தித்து அதற்கு தம் கீழ்ப்படிதலைக் காட்டியதால் தன் குமாரனையே அளிக்கும் உயர்ந்த கட்ட விசுவாசத்திற்கு வருகின்றான்.

யாக்கோபு இதை "விசுவாசம் அவனுடைய கிரியைகளோடே விட முயற்சி செய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே" என்று சொல்லுகிறார். விசுவாசம் என்பது ஒரு ஆரம்பமே, அந்த விசுவாசமானது பல கீழ்ப்படிதல்களைக் கடந்து அப்பரீட்சைகளில் வெற்றி அடைந்து தன்னை நிலைநாட்டுகிறது. ஒவ்வொரு கீழ்ப்படிதலும், விசுவாசத்தை பெருகச் செய்து பலப்படுத்தி அடுத்த பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துகிறது. இறுதியாக இப்பரீட்சைகளில் கீழ்ப்படிதல் காணப்படும் பொழுது விசுவாசமானது முதிர்ச்சியடைந்து பரிபூரணப்படுகிறது.

**பகுதி- 5 வசனம் 25: இராகாப்பின் உதாரணம்**

> **(25)** அந்தப்படி இராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்ட போது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்?

விசுவாசம், கிரியைகள் இவற்றிற்குள்ள உறவை விளக்குவதற்கு யாக்கோபு இறுதியாக இராகாப்பின் உதாரணத்தை எடுத்துக் கொள்கிறார். இராகாப்பை பற்றி யோசுவா **2:1-22**லும், **6:21-25**லும் காண்கிறோம். இவளுடைய சரிதையை நான் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வதற்கு ஒரு காரணம் நம்பிக்கையற்றோருக்கு, நம்பிக்கை உண்டு என்பதைக் காட்டுகிறது. இராகாப் எரிகோவில் வாழும் பாவமுள்ள அந்நிய நாட்டுப் பெண். அப்பட்டிணம் தேவனால் அழிவிற்கு இலக்காகக் குறிக்கப்பட்டிருந்தது. எனினும் அவளுடைய விசுவாசத்தின் காரணமாக அவளும், அவள் வீட்டார் அனைவரும் தேவனுடைய மக்களைப் போன்று அழிவிற்கு தப்பினர். அவள் திருமணம் செய்த கணவர் மனிதர் இயேசுகிறிஸ்துவின் மூதாதையரின் அட்டவணையில் இடம் பெறுகிறார். (மத். **1:5**யைக் காண்க)

எனினும் இராகாப்பினுடைய விசுவாசம் ஒரு வெற்று அறிக்கை அன்று- அது ஏற்ற கிரியைகளினாலே தாங்கப் பெற்றது. யோசுவாவினால் எரிகோவிற்கு அனுப்பப்பட்ட

வேவுகாரர்கள் அவளுடைய வீட்டில் தங்கினர். அவர்கள் அகப்பட்டுக் கொள்ளும் சூழ்நிலை வந்தபொழுது தன் உயிருக்கே ஆபத்து வரும் கட்டத்தில் அவர்களை இவள் தன் மேல்வீட்டறையில் வைத்து காப்பாற்றினாள். அந்த வேவுகாரர்கள் கடந்து செல்லும்முன்பு இராகாப் அவர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டாள் : ‘‘நான் உங்கள் வாழ்வைக் காப்பாற்றினேன். அதற்குப் பதிலாக நீங்கள் என்னையும் என் வீட்டாரையும் காப்பாற்ற வேண்டும்’’ என்றாள். வேவுகாரர்கள் இதை ஒப்பு கொண்டு இராகாப்பை காப்பதாக வாக்களித்தனர். அவர்கள் இதை தங்கள் சொந்த சார்பில் செய்யாமல் தேவனுடைய சார்பில் செய்தனர். தேவன் எரிகோவை இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலினால் செய்தார். (யோசுவா 6:20யைக் காண்க) இந்த ஒப்பந்தம் முடிந்ததற்கு பின்பு மீண்டும் இராகாப் தன் வாழ்க்கைக்கு மிகுந்த ஆபத்தான சூழ்நிலையில் மீண்டும் அந்த வேவுகாரர்களை கயிற்றின் வழியாய் இறக்கிவிட உதவி செய்தாள்.

அந்த வேவுகாரர்கள் இராகாப்பை விட்டுச் செல்லுமுன்னர் இறுதியாக ஒரு காரியத்தைக் கூறினர் : ‘‘நீ காப்பாற்றப்பட விரும்பினால் இந்த சிகப்பு நூலை உன் ஜன்னலில் கட்டிவை. இந்த நூல் உன் ஜன்னலில் காணப்படவில்லையாயின் நீ தப்பித்துக் கொள்ள வாய்ப்பில்லை.’’ அந்த சிகப்பு நூல் ஒருவகையான அறிக்கையாகும். அதன் மூலம் வேவுகாரர்கள் தனக்களித்த வாக்குத்தத்தத்தின் மேல் உள்ள விசுவாசத்தை அவள் தெரிவித்தாள். புதிய ஏற்பாட்டின் காலத்தில் உள்ள நமக்கு இது இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் பேரில் நமக்குள்ள விசுவாசத்தின் அறிக்கையை அழகாக வெளிப்படுத்துகிறது.

இராகாபின் சரித்திரம் விசுவாசத்திற்கும், அறிக்கைக்கும் அதற்கேற்ற கிரியைக்கும் உள்ள உறவை தெளிவாக விளக்குகிறது. எரிகோ அழிக்கப்படும் என்னும் இந்த

வேவுகாரர்களின் சாட்சியை இராகாப் விசுவாசித்தாள். ஆனால் அது போதாது. அந்த சிகப்பு நூலை ஜன்னலில் கட்டுவதின் மூலம் அவளுடைய விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டியதாயிற்று. ஆனால் அதுவும் போதாது. அவள் தன்னுடைய சொந்த வாழ்க்கைக்கே ஆபத்து வரக்கூடிய நிலையில் அந்த வேவுகாரர்களை தன் மேல்வீட்டறையில் ஒளித்து வைத்து பின்பு எந்த ஜன்னல் மூலம் அவர்களைக் காப்பாற்றினாளோ, அதே ஜன்னலிலே சிகப்பு நூலைக் கட்டியது கவனத்திற்குரியது. அந்த ஜன்னலை வேவுகாரர்கள் தப்பித்து செல்வதற்கு பயன்படுத்தவில்லையானால் அது அவளை இரட்சித்திருக்காது. ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத மூன்று முக்கிய குறிப்புகளை இராகாப்பின் வாழ்க்கை வெளிப்படுத்துகிறது; விசுவாசம், அறிக்கை அறிக்கைக்கேற்ற செயல்.

**பகுதி- 6 வசனம் 26: முடிவுரை**

(26) அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.

யாக்கோபு தனது ஆராய்ச்சியை ஒரு குறிப்பிட்ட உதாரணம் சொல்லி உடனே முடிக்கின்றார். கிரியையற்ற விசுவாசம் சடலத்தைப் போல் இருக்கிறது. அது மத சடங்காச்சாரங்களால் பதப்படுத்தப்பட்ட சடலமாய் இருக்கலாம். என்றாலும் அது உயிரற்றதே. சரீரத்திற்கு உயிர் கொடுக்கக்கூடிய ஒரே காரியம் ஆவியானவர். அதைப் போல விசுவாசத்திற்கு உயிர் கொடுக்கக்கூடியது கிரியைகள் - ஏற்ற கிரியைகள்.

## விசுவாசம் என்பது ஒரு தடை

கடந்த பகுதியிலே யாக்கோபு எவ்வாறு ஆபிரகாம் விசுவாசத்தை கிரியைகளுடன் இணைத்து செயல்பட்டான் எனக்கூறுகிறார். ரோமர் **4:11-12**ல் பவுல் ஆபிரகாமுடைய

வாழ்க்கை நாம் பின்பற்றத்தக்க விதமாய் விசுவாசத்திற்கு மாதிரியாக உள்ளது என்கின்றார்.

**(11)** மேலும், விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான். விருத்தசேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும்பொருட்டாக அவர்களுக்கு அவன் தகப்பனாய் இருக்கும்படிக்கும்,

**(12)** விருத்தசேதனத்தைப் பெற்றவர்களாய் மாத்திரமல்ல, நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயுமிருக்கிறவர்களுக்குத் தகப்பனாயிருக்கும்படிக்கும், அந்த அடையாளத்தை பெற்றான்.

முதலாவதாக, பவுல் கூறுகிறார் - ஆபிரகாம் விருத்தசேதனத்தினால், நீதிமானாக்கப்படவில்லை. விசுவாசத்தின் மூலமாக அவர் பெற்றுக்கொண்ட நீதிக்கான வெளிப்படையான முத்திரையாகவே விருத்தசேதனம் அவருக்கு இருந்திருக்கிறது. விசுவாசமில்லாமல் விருத்தசேதனம் செய்யப்பட்டிருந்தால் அது அர்த்தமற்றதாய் இருந்திருக்கும்.

ஆபிரகாம் தனது விசுவாசத்தினால் வரவிருக்கும் விருத்தசேதனம் செய்த, அல்லது செய்யாத அனைத்து விசுவாசிகளுக்கும் ஒரு மாதிரியாக இருக்கிறார். ஆபிரகாமின் சந்ததியராக நாம் நம்மை கருதுவோமானால் மத, இன, வேறுபாடின்றி நாம் பின்பற்ற வேண்டிய ஒரு நிபந்தனையை பவுல் கூறுகிறார்: நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனம் இல்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயும் இவர்களுக்கு தகப்பனாய் இருக்கும்படிக்கும் அந்த அடையாளத்தை பெற்றான்.

பவுல் ஆபிரகாமின் விசுவாசத்தில் படிகளை குறித்தும் பேசுகிறார். விசுவாசம் என்பது தேங்கி கிடப்பது அன்று என்பதை தெளிவாக படம் தீட்டுகிறார். அது ஒரு தேக்கமன்று. அடி அடியாய் எடுத்து வைத்து முன்னேறும் நடை அது. ஒவ்வொரு படியும் தேவனுடன் கொள்ளும் சொந்த உறவின் அடிப்படையில் அமைகிறது. ஆகவே ஒரு விசுவாசி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று முழுவதுமாக வெளிப்படுத்தக்கூடிய சட்டத்திட்டங்கள் கிடையாது. பலதரப்பட்ட விசுவாசிகள் தங்கள் விசுவாச நடையில் வெவ்வேறான நிலையில் உள்ளனர். ஒரு புதிய விசுவாசியை விட விசுவாசத்தில் பல ஆண்டுகளை கழித்த ஒருவர் இச்சாலையில் அதிகம் முன்னேறி சென்றிருப்பார். ஆரம்ப காலத்தில் ஒருவனிடத்தில் தேவன் எதிர்பார்ப்பதை விட முதிர்ச்சி அடைந்த விசுவாசியிடம் தேவன் அதிகம் எதிர்பார்க்கிறார். என் சொந்த விசுவாச நடையிலே தேவனுக்கும் எனக்கும் உள்ள உறவு அந்த நேரத்தில் உள்ள நிலைமையைக் காட்டுகிறது. என்னைவிட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விசுவாசமுள்ள மக்களைப் பார்த்து நான் நடக்க வேண்டும் என்பதற்கான அவசியமில்லாமற் போகிறது.

விசுவாசம் என்பது ஒரு விசுவாசிக்கும், தேவனுக்குமிடையே உள்ள சொந்த உறவின் வெளிப்படையாக உள்ளது. அந்த நடையில் ஒவ்வொரு படியும் கீழ்படிதலின் காரியமாகும். தேவனுடன் நாம் சரியான உறவில் நடக்கும் பொழுது, தொடர்ந்து நம்முடைய கீழ்படிதலை வெளிப்படுத்தும் போது நம்முடைய விசுவாசம் பெருகி இறுதியில் முதிர்ச்சி அடைகிறது.

## தொகுப்பு

நம்முடைய விசுவாச அறிக்கையானது அன்பினால் இயக்கப்படும் அதற்கேற்ற கிரியைகளை கொண்டதாக இருக்க வேண்டும். அன்பு இல்லையாயின விசுவாசத்திற்கு அர்த்தமிராது.

விசுவாசத்திற்கும், கிரியைகளுக்கும் உள்ள உறவை யாக்கோபின் நிருபம் மூன்று காரியங்களைக் கூறி தெளிவுப்படுத்துகிறது. 1) கிரியையில்லாத அறிக்கை பயனற்றது. 2) கோட்பாடுகள் நடைமுறைக்கு பயனுள்ளதாய் இருக்க வேண்டும். 3) நமது வைராக்கியங்கள் கீழ்படிதலின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

யாக்கோபு இந்த தத்துவங்களை இரண்டு பழைய ஏற்பாட்டு உதாரணங்களின் மூலம் விளக்குகிறார். 1) ஆபிரகாமுக்கு நீதி தேவனால் அவனுடைய விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே கொடுக்கப்பட்டது. ஆனால் அவருடைய விசுவாசம் முன்னேறி முதிர்ச்சி அடைந்து தன் குமாரனாகிய ஈசாக்கை தேவனுடைய பலிபீடத்திற்கு கொடுக்கும் அளவுக்கு உயர்ந்த கட்டத்தை எய்தியது. 2) இராகாப் வேவுகாரர்கள் சொன்ன காரியத்தை விசுவாசித்ததோடல்லாமல் தன் வாழ்விற்கே ஆபத்து ஏற்படும் நிலையில் வாக்குத்தத்தத்தின் மேலுள்ள தன் விசுவாசத்தை தன்னுடைய ஜன்னலில் கட்டிய சிகப்பு நூலினால் வெளிப்படுத்தினாள். விசுவாசம், அறிக்கை, அதற்கேற்ற கிரியை மூன்றும் இணைந்தே காணப்படுகிறது. தொகுப்புரையாக யாக்கோபு ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல கிரியையில்லாத விசுவாசம் உயிரற்றது என்கிறார்.

பவுல் ஆபிரகாமின் உதாரணத்தைச் சுட்டிக்காட்டி விசுவாசம் என்பது தேங்கிக் கிடக்கும் நிலையன்று, அது நாம் தேவனுடன் சொந்த நிலையில் கொள்ளும் உறவின் தொடர்ச்சியான நடையாக உள்ளது. இந்த நடையில் நாம் கீழ்ப்படிதல் என்னும் அடியை எடுத்து வைக்கிறோம். இவ்விதமாக பல அடிகள் எடுத்துவைப்பதினால் நாம் முதிர்ச்சிக்கு கொண்டு வரப்படுகிறோம்.

# அத்தியாயம் ஒன்பது

# விசுவாசம் பரீட்சைக்குட்படுத்தப்பட வேண்டும்

நமது விசுவாசம் வாயினால் அறிக்கை பண்ணப்படவேண்டும் என்றும் செயலினால் தாங்கப்பட வேண்டும் என்றும் பார்த்தோம். முக்கியமான மூன்றாம் காரியத்திற்கு வந்துள்ளோம். இதை நாம் சந்திக்க விரும்புவதில்லை. ஆகவே விசுவாசம் பரீட்சையை சந்திக்க வேண்டும்.

## உபத்திரவத்தில் மேன்மை பாராட்டுதல்

ரோமர் 5:1-11 வரையுள்ள வசனங்களில் கிறிஸ்துவின் மூலம் நமக்குள்ள விசுவாச உறவு பேசப்படுகிறது. பவுல் மேன்மை பாராட்டுதல் என்னும் சொல்லை மூன்று முறை பயன்படுத்துகிறார். நாம் பெருமை கொள்ளும் அளவிற்கு நம்பிக்கையை காட்டக்கூடிய வலுவான சொல் இது.

2ம் வசனத்தில், "...தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்" என்று பவுல் சொல்கிறார். நாம் இப்பொழுதும் கூட தேவ மகிமையின் சுதந்தரர் என்றும், நாம் நித்தியத்தில் அவருடன் அதில் பங்குகொள்வோம் என்றும் நம்மால் உண்மையாகவே விசுவாசிக்கக் கூடுமானால், உற்சாகத்தையும் சந்தோஷமான எதிர்பார்த்தலையும் உணர்வதும் வெளிப்படுத்துவதும் இயல்பே.

ஆனால் 4ம் வசனத்தில் பவுல் இதே வசனத்தை மீண்டும் பயன்படுத்துகிறார். "உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" என்கிறார். முதல் முறையாக காணும்போது, இது பரிகசிக்கத்தக்க விதத்தில் தோன்றுகிறது. துயரத்தில் மேன்மை பாராட்டுவதை யார் கற்பனை செய்து பார்க்க முடியும். கடினமான சூழ்நிலை, தனிமை, தவறுதலாக எண்ணப்படுதல், ஏழ்மை, நோய், இழப்பு இவைகளில் யார் மேன்மை பாராட்டக்கூடும்? இச்சூழ்நிலைகளில் மகிழும்படி பவுல் ஏன் குறிப்பிடுகிறார் அல்லது தேவன் ஏன் இதை எதிர் பார்க்கிறார்.

அதிர்ஷ்டவசமாக, பவுல் 3ம், 5ம் வசனங்களில் நமக்கு ஒரு காரணத்தைக் கொடுக்கிறார்: "அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, ...மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப் பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" என்கிறார். பவுலின் பதிலை தொகுத்துச் சொன்னால், உபத்திரவங்களிலேயும் கூட அதை ஏற்றுக் கொண்டு அதை விசுவாசத்தில் சகிக்கும்போது, அது நமது பண்பை வளரச் செய்கிறது.

பவுலின் பதிலை விளக்கமாக அலசி ஆராய்ந்தால், நாம் உபத்திரவத்தின் பரீட்சையை சந்திக்கும்போது, நம்முடைய குணத்தில் உண்டாகும் முன்னேற்றத்தை தொடர்ச்சியான படிகளாக வரிசைபடுத்திக் கூறுகிறார். அவைகள்:

முதலாவதாக, **பொறுமை.** வேறு விதமாக சொன்னால் **சகிப்புத்தன்மை.** இது கிறிஸ்தவ குணத்தின் ஒரு முக்கிய பகுதியாக பொறுமை உள்ளது. இது இல்லாமல், தேவன் நமக்கென்று வைத்திருக்கும் அநேக சிறந்த ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் நாம் பெற்றுக் கொள்ள முடியாது.

இரண்டாவதாக, **பரீட்சை.** இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கப் பதம் dokime என்பதாகும். சில தற்காலத்து ஆங்கில மொழி பெயர்ப்புகளிலே இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை: "குணத்தின் பெலன்" (Living Bible); "முதிர்ச்சியடைந்த குணம்" (J.B. Phillips); "தேவனின் அங்கீகாரம்" (Jerusalem Bible); சோதனையில் நிலைத்து நின்றதின் அத்தாட்சி" (New English Bible). மண் குகையில் புடமிடப்பட்டு சோதிக்கப்படும் உலோகத்துடன் இவ்வார்த்தை தொடர்புடையது. இதைப் பற்றி பின்பு காண்போம்.

மூன்றாவது, **நம்பிக்கை.** இதை (J.B. Phillips) ஜே.பி. பிலிப்ஸ் அசையாத நம்பிக்கை என்கிறார். இது பகற்கனவோ, அல்லது விண்ணில் கோட்டை கட்டுவதோ அன்று. இது உண்மைக்குப் புறம்பான ஒரு கற்பனையுமல்ல. இப்படிப்பட்ட நம்பிக்கை அமைதியானது, தைரியமானது, நல்லதை எதிர்பார்ப்பது, பரீட்சையின் மூலம் உண்டாகும் நம்பிக்கையை குறிப்பதாகும்.

நான்காவதாக, **தேவனின் அன்பு.** நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டு இருக்கிறது. ஏமாற்றத்திலிருந்து இந்த நம்பிக்கை நம்மை விலக்கிக் காக்கிறது. நம் பண்பை பொறுத்தமட்டில் தேவன் செய்யும் இறுதியான காரியம், அவருடைய தெய்வீக அன்பை நாம் அனுபவிக்கச் செய்வதாகும்.

**11**ம் வசனத்தில் மேன்மை பாராட்டுதல் என்று பவுல் கூறுவதின் மூன்றாவது அர்த்தம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நாம் தேவனைப்பற்றி **மேன்மை பாராட்டுகிறோம்** என்பதாகும். இதற்கு ஒரு தெய்வீக நோக்கமுள்ளது. நமது மகிழ்ச்சியும், நம்பிக்கையும் தேவன் நமக்களித்துள்ள அற்புத ஆசீர்வாதங்களின் மேல் மட்டும் அமையாமல் அவருடைய வரங்கள் அவர் தருபவை இவற்றில் மட்டும் நாம் மகிழ்ந்திருப்பதில் தேவன் திருப்தி

அடைகிறதில்லை. நம்முடைய உயர்ந்த இறுதி திருப்தி அவரைப் பற்றியதாகவே இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். இதற்கு நம்முடைய பண்புகள் நன்கு வளர்க்கப்படவேண்டும். அப்பொழுதே இது சாத்தியமாகும். தேவன் தாமே நம்முடைய திருப்தியாக அமையும் வேளையில் அது நமது ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளமாக அமைந்து நமக்கு ஆழ்ந்த மகிழ்ச்சியையும், உயர்ந்த பக்தியையும் தோற்றுவிக்கிறது.

தெய்வீக அன்பைக் குறிக்கும் சிறந்த அதிகாரமான 1 கொரி. 13ம் அதிகாரத்தை ரோமர் 5ம் அதிகாரத்தின் போதனையுடன் ஒப்பிட்டு பார்ப்பது நலமாயிருக்கும். ரோமரிலே தெய்வீக அன்பை முழுமையாக பெற்றுக் கொள்வதற்கு பொறுமை தேவை என்று சொல்லப்பட்டுள்ளது. 1 கொரி. 13:7ல் இதை வேறு வகையில் சொல்லுகிறார். எல்லா சோதனையையும் தாங்கக்கூடியது அன்பு மட்டுமே என்கிறார். அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் அன்பிற்கும், சகிப்பிற்கும் இடையே உள்ள உறவை முறித்துவிடவோ அதைப்போல நடித்துக் காட்டவோ யாராலும் முடியாது.

மீண்டும் ரோமர் 5ம் அதிகாரத்தில் பவுல் விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்னும் மூன்று அனுபவங்களை தொடர்ச்சியாக சொல்கின்றார். விசுவாசம் நம்பிக்கைக்கு வழிநடத்துகிறது. நம்பிக்கை அன்பிற்கு வழிநடத்துகிறது.

இதையே 1 கொரி. 13:13ல் இந்த மூன்று பண்புகளிலேயும் நிரந்தரமானதும், சிறந்ததும் அன்பு என்கிறார். இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது என்கிறார். இந்த அழகான மூன்று பண்புகளை தேவனின் வார்த்தையாகிய கண்ணாடியில் காணும் போது, நமது இருதயத்தின் கண்களை நமது சொந்த பண்பின் மேலே நிரந்தரமாய் பதிக்கின்றவர்களாக வேண்டும்,

2 கொரி. 3:18ல் இந்த அனுபவம் விளக்கப்பட்டுள்ளது. நாம் எல்லாரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையை, கண்ணாடியிலே காண்கிறது போல கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத் தானே மகிமை மேல் மகிமை அடைந்து மறுரூபப்படுகிறோம். மகிமையின் மேல் மகிமை அடைந்து என்பதற்கு விசுவாசம், நம்பிக்கையாகவும், நம்பிக்கை அன்பாகவும் வளர்வதை ஓர் அர்த்தத்தில் குறிக்கிறது.

யாக்கோபு 1:2-4 வரையுள்ள வசனங்களில் விசுவாசமானது பரீட்சையினால் வளர்வது குறிக்கப்பட்டுள்ளது.

(2) என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது,

(3) உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.

(4) நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாய் இராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.

பவுல் நாம் உபத்திரவத்தில் **மேன்மை** பாராட்ட வேண்டும் என்கிறார். யாக்கோபு விசுவாசத்தின் பரீட்சை **மகிழ்ச்சியை** உண்டாக்கும் என்கிறார். ஒவ்வொன்றும் நம்முடைய இயற்கையின் சிந்தனைக்கு மாறானது. ஆனால் இதற்கு ஒரே காரணம் உள்ளது. சோதனை மட்டுமே நம்மை பொறுமைக்குள் வழிநடத்தக்கூடும். பொறுமை மட்டுமே நம்மை தேவனின் சித்தத்திற்குள் முழுமையாய் வழி நடத்தும். யாக்கோபு இதையே நீங்கள் சம்பூரணமும், முழுமையும் உள்ளவர்களாய், தேவை என்பது ஒன்றுமில்லாதவர்களாய் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார். இதன் காரணத்திற்காகவே நம் விசுவாச பரீட்சையை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

# அக்கினி பரிசோதனை

பவுலையும் யாக்கோபையும் போல பேதுருவும் நமது விசுவாசம் சந்திக்க வேண்டிய பரீட்சையை குறித்து பேசுகிறார். 1 பேதுரு 1:5ல் அவர் கிறிஸ்தவர்களைப் பற்றி, "கடைசிகாலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக **விசுவாசத்தைக் கொண்டு** தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு'' என எழுதுகிறார். **விசுவாசத்தின் மூலமே** தேவனுடைய வல்லமை நமது வாழ்வில் சிறப்பாக செயல்படக்கூடும் என்று வலியுறுத்திக் கூறுகிறார். ஆகவே அந்த விசுவாசத்தில் தரித்திருப்பது தேவனுடைய இரட்சிப்பு முழுவதுமாக வெளிப்படுவதற்கான பிரதான நிபந்தனை என்று கூறுகிறார். பின்பு அதைத் தொடர்ந்து வரும் இரு வசனங்களில் நமது விசுவாசம் பரீட்சைக்கு எவ்வாறு உட்படக் கூடும் என்பதை விளக்குகிறார்.

> (6) இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும் துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.
>
> (7) அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும், மகிமையுமுண்டாகக் காணப்படும்.

பேதுரு நமது விசுவாசம் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதை அந்நாட்களில் தங்கம் எவ்வாறு சுத்திகரிக்கப்பட்டதோ அதற்கு ஒப்பிட்டு கூறுகிறார். அது அக்கினியினால் சுத்திகரிக்கப்படும். இதே காரியத்தை மீண்டும் 1 பேதுரு 4:12-13ல் கூறுகிறார்.

(12) பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்,

(13) கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.

இவ்விதமான அக்கினிப் பரீட்சையினூடே கடந்து செல்லும் போது அது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு புதுமையானதென்று கருதக்கூடாது என்று கூறுகிறார். மேலும் பேதுரு இதற்கு மாறாக இப்படிப்பட்ட சோதனை நமக்கு அத்தியாவசியமானது என்றும் தங்கத்தை சுத்திகரிப்பதற்கு அக்கினி எவ்வளவு அவசியமோ அவ்வாறே இதுவும் நமது விசுவாசத்தைச் சுத்திகரிப்பதற்கு அவசியம் என்கிறார். ஆகவே நம்மைத் தொடர்ந்து சந்தோஷப்படும்படியாக உற்சாகப்படுத்துகிறார். மேலும் பேதுருவின் போதனைகளில் பவுல், யாக்கோபைப் போலவே கடுமையான பரீட்சை மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கும் என்னும் புதிர் போன்ற காரியத்தைக் கூறுகிறார்.

மல்கியா 3:2-3ல் தீர்க்கதரிசி இயேசுவைப் பற்றி சித்திரம் தீட்டும் வேளையில் வெகு நாட்களாக எதிர்பாத்திருந்த அந்த மேசியா வரும் பொழுது ஒரு தட்டான் வெள்ளியையும், பொன்னையும் சுத்தம் செய்வது போல தமது மக்களைச் சுத்த செய்பவராக வருவார் என்று கூறுகிறார்.

(2) ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார்.

(3) அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரதைச் சுத்திகரித்து, அவர்கள்

கர்த்தருடையவர்களாயிருக்கும் படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்.

வெள்ளியையும் பொன்னையும் வேதத்தின் நாட்களில் சுத்திகரிக்கும் போது அதை அவர்களால் உண்டாக்கக்கூடிய மிகுந்த வெப்பத்தில் மண்குகையில் அதைப் போடுவார்கள். கீழ் உள்ள வெப்பத்தை விசிறி அதிகரிக்கச்செய்வார்கள். மேல் உள்ள மண்பாத்திரத்தில் தங்கம் இருக்கும். அந்தத் தங்கம் கொதித்து குமுறி தங்கள் அசுத்தத்தையெல்லாம் அதன் மேற்பரப்பில் கொண்டு வந்து தள்ளிவிடும். பின்பு தட்டானால் வெளியேற்றப்படும். (நீதிமொழிகள் 25:4ஐப் பார்க்க) இந்த சோதனை கசடு முழுவதும் நீக்கப்பட்டு சுத்தமான பொன் தங்கும்வரை தொடரும். அதைச் சுத்திகரிக்கும் தட்டான் குனிந்து அதன் மேற்பரப்பைப் பார்க்கும் பொழுது அது பூரணமாய் சுத்திகரிக்கப்பட்டதால் அதன் மேற்பரப்பில் உள்ள தங்கத்தில் தன் பிம்பம் தெளிவாகத் தெரியும் வரை அதைச் சுத்திகரிப்பான். இதைப் போலவே நம்மைச் சுத்திகரிக்கும் கர்த்தரும் சோதனையின் அக்கினியைக் கொண்டு சுத்திகரித்து தமது உருவம் முழுமையாய் நமது வாழ்வில் தோன்றும் வரையும் பரிசோதிப்பார்.

துன்பங்களும் உபத்திரவங்களும் மண்குகையைப் போன்று அமைந்து தேவனால் பயன்படுத்தப்பட்டு நம்மில் பரிசுத்தம் உண்டாகும்வரையில் நாம் அதில் அக்கினியால் சுத்திகரிக்கப்படுகிறோம். தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு இலக்காகி தேவனுடைய சிலாக்கியங்களைப் பெறும் வரையில் எவ்வாறு இஸ்ரவேலர்கள் சுத்திகரிக்கப்பட்டார்கள் என்பதை பல பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் இதைக் கூறி அழகாக விளக்குகின்றனர். உதாரணமாக ஏசாயா 48:10ல் அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறுகிறார் :

(10) இதோ, உன்னைப் புடமிட்டேன்; ஆனாலும் வெள்ளியைப்போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன்.

மேலும் சகரியா 13:9ல்

(9) அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப்பண்ணி, வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்களைப் புடமிடுவேன்; அவர்கள் என் நாமத்தைத் தொழுதுகொள்வார்கள்; நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன்; இது என் ஜனமென்று நான் சொல்லுவேன், கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள் என்று கூறுகிறார்.

இவ்வாறு சூளையின் சோதனையைக் கடந்து உலோகம் பண்பட்ட உலோகம் என்று கருதப்படும். இதற்கு மட்டுமே அனைவரும் மதிப்புத் தருவார்கள். இந்த சோதனையில் வெற்றி காணாத உலோகங்கள் தள்ளுபடியானவை என அழைக்கப்படும். எரேமியா 6:30ல் இஸ்ரவேலர்களை தேவனுடைய தொடர்ந்த கடுமையான நியாயத்தீர்ப்பு சுத்திகரிக்காததினால் அவர்கள் “தள்ளுபடியான வெள்ளி” என்று அழைக்கப்படுகின்றனர்.

புதிய ஏற்பாட்டில் பேதுரு, யாக்கோபு, பவுல் ஆகிய எல்லாரும் நாம் கடந்து செல்லும் இந்த உபத்திரங்கள் சிறப்பாக **நமது விசுவாசத்திற்கு** வரும் சோதனையே என்கின்றனர். இந்த விசுவாசம் என்னும் விலையுயர்ந்த உலோகம் இந்த சோதனையைக் கடந்து செல்லவில்லையாயின் அது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகாது, கடைசி இராப்போஜனத்தில் இயேசு, பேதுரு சீக்கிரத்தில் கர்த்தரை மறுதலிக்கப் போகிறான் என்னும் வேளையில் “நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்” (லூக்கா 22:32) என்று இயேசு கூறினார். பேதுருவின் பலவீனமான சுபாவத்திற்கு ஏற்பட்ட இந்த சூழ்நிலையின் அழுத்தம்

சோதனை வேளையில் தோல்வியை ஆரம்பத்தில் காணச்செய்தது. அது தேவையானதாகவே இருந்தது. அதை எதனாலும் தடுத்திருக்க முடியாது. எனினும் முழு இழப்பு உண்டாய்விடவில்லை. மீண்டுமாக தன்னுடைய கர்த்தரிடம் திரும்பி அவரிடம் அறிக்கையிடுவதற்கான வழி இன்னும் ஒரு நிபந்தனையின் அடிப்படையில் காத்திருந்தது. **விசுவாசம் தோல்வியடையவில்லை.**

இதே காரியம் நம்மைப் பொறுத்த மட்டிலும் உண்மையாக உள்ளது. சகிக்கமுடியாது என்று சொல்லுமளவிற்கு சில வேளையில் உபத்திரவம் ஏற்படக்கூடும். இவ்வேளையில் பேதுருவைப் போல நாமும் தற்காலிகமாக அதற்கு நம்மை ஒப்புக்கொடுத்துவிடலாம்; தோல்வி காணலாம். என்றாலும் பூரண இழப்பிற்குள் நாம் வந்து விடவில்லை. விசுவாசம் ஒழிந்து போகாது என்னும் நிபந்தனையின் அடிப்படையில் மீண்டும் வெற்றி பெற வழியுண்டு. ஆகவேதான் அழிந்துபோகக் கூடிய பொன்னைவிட விசுவாசமானது விலையேறப்பெற்றது என்று அழைக்கப்படுகிறது. சூழ்நிலையின் அழுத்தங்களுக்கு இலக்காகி நமது விசுவாசத்தை கைவிடாது இருக்கும் வரை நாமும் யோபுவைப் போல சோதனை வேளையிலும் வெளிப்புற அழிவைக்காணும் போதும் "ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளக்குவேன்." (யோபு **23:10**) என்று எளிதில் சொல்லக்கூடும்.

## இருவித பரீட்சைகள்

மத்தேயு **13:3-8; 18-23** ஆகிய வசனங்களில் வரும் பகுதி விதைக்கிறவனுடைய உவமையைக்குறிக்கும் பகுதி. இங்கு தேவனுடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளும் தன்மையைப் பொறுத்து நான்கு விதமான மக்களைப் பற்றி காண்கிறோம். வழியருகே விதைக்கப்பட்ட விதையானது செய்தியை தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளாத மக்களைக் குறிக்கிறது.

நல்ல நிலத்தில் விழுந்த விதை செய்தியை தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொண்டு காலப்போக்கில் விசுவாசத்தினாலும், கீழ்ப்படிதலினாலும் நிரந்தரமான பலனைத் தரும் மக்களைக் குறிக்கிறது. இவ்விரு மக்கள் கூட்டங்களுக்கிடையே இயேசு மேலும் இரண்டு விதமான மக்கள் இருப்பதாகக் கூறுகின்றார் - கற்பாறையான நிலத்தில் விழுந்த விதையைப் போன்ற மக்கள் - முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதையைப் போன்றவர்கள் இவ்விரு வகுப்பாகும். தங்கள் இருதயங்களில் செய்தியை ஏற்றுக் கொண்டார்கள். எனினும் பின்பு நல்ல நிரந்தரமான பலனைத் தர தவறி விட்டார்கள். இவ்விரு மக்கள் கூட்டத்தைப் பற்றி நாம் ஆரம்பத்தில் தேவனுடைய வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் பின்பு தங்களுக்கு முன்பு வைக்கப்பட்ட பரீட்சையில் தோற்றுப்போனார்கள் என்று நான் சொல்ல வேண்டும்.

இவ்விரு குழுவினரும் சந்திக்க நேர்ந்த பரீட்சை யாது? கற்பாறையான நிலத்தில் விழுந்த மக்களைப் பற்றி முதலாவது பார்ப்போம். இவர்களைப் பற்றி மத்தேயு 13:20-21ல் கூறப்பட்டுள்ளது.

> **(20)** கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ளுகிறவன்;
>
> **(21)** ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்.

இங்கு இயேசு பயன்படுத்திய வார்த்தைகள் மிகவும் முக்கியமானவை அவர் உபத்திரவமும், துன்பமும் **வருமானால்...** என்று சொல்லாமல் உபத்திரவமும், துன்பமும் உண்டான உடனே என்கிறார். இதிலிருந்து தேவனின் வார்த்தையை ஏற்றுக் கொள்ளும் எல்லாருக்கும் காலம் வரும்பொழுது உபத்திரவமும்,

துன்பமும் கட்டாயம் வரும் இவைகளை நாம் சந்திக்க வேண்டியதிருக்கும் என்பது கேள்வியல்ல. இவைகளிலிருந்து வெளிவரும் போது நமது விசுவாசம் பாதிக்கப்படாத நிலையில் வெற்றியுள்ளவர்களாக நமது பண்பு சிறக்க இது அமையுமா என்பதே கேள்வி. இதற்கு நாம் தேவனின் வார்த்தையை நமது இருதயத்தின் ஆழங்களுக்குள் சென்று அனைத்தையும் அவருடைய சித்தத்திற்கேற்ப அமைக்கும்படி செய்யவேண்டும். வசனம் நம்முடைய வாழ்வில் செல்லக்கூடாத வகையிலான கற்பாறையான பகுதி நம்மில் எங்கும் இருக்கக்கூடாது.

முட்களுக்கு மத்தியிலே விழுந்த விதையைப் பற்றிய காரியம் என்ன ? இப்படிப்பட்ட மனிதரைப் பற்றி இயேசு மத்தேயு 13:22ல் கூறுகிறார்:

> (22) ‘‘முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்.”

இவைகளை செயலிழக்கச் செய்வது உபத்திரவமோ, துன்பமோ அன்று. இதற்கு மாறாக இவர்கள் உலகக் கவலைகளாலும், ஐசுவரியத்தாலும் பாதிக்கப்படுகின்றனர். புகழ் ஏணியில் ஏறுவதும் பொருளாதார வெற்றியும் இவர்கள் பெற்றுக் கொண்ட சத்தியத்தை நெருக்கிப் போடுகிறது. இறுதியிலே அவர்கள் பலனற்றுப் போகிறார்கள். கிறிஸ்துவின் சாயலில் மாற்றப்படுவதற்குப் பதிலாக அவிசுவாசத்தால் கிறிஸ்துவை ஒதுக்கித் தள்ளி உலக சூழ்நிலைக்கேற்ப, தங்களை ஒப்புக் கொடுக்கின்றனர்.

இவ்விரு சாராரும் விசுவாசிகள் அனைவரும் கடந்து வரவேண்டிய இரு சோதனைகளைப் பற்றி கூறுகின்றனர். முதல் பரீட்சை சூழ்நிலை கடினமாய் இருக்கும் போது வருகிறது. இரண்டாம் பரீட்சை சூழ்நிலை எளிதாய் இருக்கும் போது

வருகிறது. சில மக்கள் உபத்திரவம் தங்களை அழுத்தும் போது விழுந்து போகின்றனர். வேறு சிலர் பொருளாதார வெற்றியுண்டாகும் போது வீழ்ந்து போகின்றனர். நீதிமொழிகளின் புத்தகத்திலே இவ்விரு சாராருக்கும் உள்ள ஒரு வசனம் உள்ளது. உபத்திரவத்திற்குட்பட்டவர்களுக்கு சாலமோன் ஆபத்துக் காலத்தில் நீ சோர்ந்து போவாயானால் உன் பெலன் குறுகினது என்கிறார். (நீதி. 24:10) வெற்றியை சமாளிக்க முடியாதவர்களுக்கு சாலமோன் "பேதைகளின் மாறுபாடு அவர்களைக் கொல்லும். மூடரின் நிர்விசாரம் அவர்களை அழிக்கும்" (நீதி. 1:32) என்கிறார். வருத்தத்திற்குரிய காரியம் என்னவென்றால் சாலமோன் இந்த இரண்டாம் பிரிவைச் சார்ந்தவராய் இருக்கிறார். தேவனால் கொடுக்கப்பட்ட ஞானம் இருந்த பொழுதிலும், செழுமை அவரை ஒரு மூடனாக்கி அழித்துப்போடுகிறது.

ஆனால் மோசேயைப் பார்க்கும் பொழுது இச்சோதனைகளிலிருந்து அவர் மீண்டும் வருகிறார். நாற்பது ஆண்டு காலத்திற்கு எகிப்தின் செல்வத்தையும், சிறப்பையும் அனுபவித்த பின்பு பார்வோனின் சிங்காசனத்திற்கு வாரிசாக வரும் வாய்ப்பும் அவருக்கு இருந்தது. ஆனால் அவர் முதிர்ச்சி அடைந்தபொழுது இவற்றுக்கெல்லாம் தன் முதுகைக் காட்டி தனிமையையும், வெளிப்படையான தோல்வியையும் தெரிந்து கொண்டார். இது தெளிவாக எபிரெயர் 11:24-25ல் கூறப்பட்டுள்ளது.

> (24) விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனான போது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து,
>
> (25) அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு,...

அதைத் தொடர்ந்து 40 வருடங்களுக்கு அவர் உபத்திரவத்தின் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டார். தம்முடைய மக்களினின்று வெளியேற்றப்பட்டு தன்னுடைய மாமனாரின் ஆடுகளை வறண்ட பாலைவனத்தின் ஓரத்தில் மேய்க்கின்றனவராகக் காணப்பாட்டார்.

எனினும் இந்த இரு பரீட்சைகளையும் மோசே தமது எண்பதாவது வயதில் வெற்றி கண்டு தம்முடைய மக்களின் விடுதலையாளராக தேவனால் ஏற்படுத்தப்பட்டு செயல்படுகிறார். யாக்கோபு **1:4**ல் இது பற்றி குறிக்கும் ஒரு வசனம் வருகிறது.

நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.

## இருவித வஞ்சகர்கள்

ரூட்யார்டு கிப்ளிங் (Rudyard Kipling) எழுதிய ''அப்படியானால்'' என்னும் கவிதையில் வெற்றியையும், தோல்வியையும் பற்றி இப்படிக் கூறியுள்ளார்:

> வெற்றி, தோல்வி ஆகிய இரு **வஞ்சகர்களையும்**
> ஒரேவிதத்தில் சந்திக்கக் கூடுமானால்...

அவர்கள் வெற்றி என்று அழைத்தாலும் சரி, தோல்வி என்று அழைத்தாலும் சரி அல்லது அழிவு என்று அழைத்தாலும் சரி அவைகள் இரண்டுமே கிப்ளிங்கின் வார்த்தைகளின்படி அவர்கள் **வஞ்சகர்களே.**

இந்த இரண்டுவிதமான வஞ்சர்களைச் சந்திப்பது எப்படி என்பதைக் குறித்த நல்ல உதாரணம் கூறப்பட்டுள்ளது. இவ்விருவரையும் இயேசு சந்தித்தது போல வேறு எவரும் சந்திக்கவில்லை. ஒரு தடவை மக்கள் தங்கள் வஸ்திரங்களை சாலைகளில் விரித்து அவரை தேவனுடைய தீர்க்கதரிசியாக

எருசலேமுக்குள், திரள் கூட்டமான மக்கள் வரவேற்ற பொழுது அவர் எல்லையற்ற வெற்றியைக் கண்டார் எனலாம். அதே போல முற்றிலும் தோல்வியான சூழ்நிலையையும் அவர் ஒரு வாரத்திற்குப் பின்பு சந்திக்கின்றார். அவரைப் பின்பற்றியவர்களும் நெருங்கிய நண்பர்களும் கைவிட்ட பொழுது திரள் கூட்டமான மக்கள் அவரை "சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" என்றனர். இவ்வாறாக இயேசு வெற்றியைக் கண்டு பூரிப்பு அடையவுமில்லை. தோல்வியைக் கண்டு சோர்ந்து போகவுமில்லை. இவ்விரண்டையுமே ஒன்றாக ஏற்றுக் கொண்ட அவர் தமது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி தம் பிதா அவருக்கு தந்திருந்த கிரியைகளை முடிப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட நோக்கத்தை தமக்கு முன்பு வைத்து அவர் சென்றபடியால் வெற்றி, தோல்வி ஆகிய இரு பரீட்சைகளிலும் அவர் வெற்றியடைந்தார்.

எபிரெயர் **12:1-2**ல் அதன் எழுத்தாளர் பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தினால் ஒவ்வொரு சோதனையையும் எப்படி வென்றார்கள் என்று கூறி நாம் பின்பற்றத்தக்க சிறந்த மாதிரியாக இயேசுவை வைக்கின்றார். இயேசுவின் வெற்றியும், சகிப்புத்தன்மையும் நமக்கு மாதிரியாக உள்ளது.

> **(1)** ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;
>
> **(2)** அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின்

வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

இந்த அறிவுரையை நாம் பின்பற்றி இயேசுவை நமக்கு மாதிரியாக வைக்கும் பொழுது அவர் உண்மையாகவே நமது விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாய் இருக்கிறார். தமது கிருபையினாலே இந்த வேலையை நம் ஒவ்வொருவரிலும் ஆரம்பித்தவர் தமது கிருபையினாலே எல்லாவற்றையும் முடிக்கவல்லவராயிருக்கிறார். அவருடைய வெற்றியே நம்முடைய வெற்றிக்கு அடித்தளம். நமது கண்களுக்கு முன்பாக அவரைப் பதிக்க வேண்டியதே நாம் செய்ய வேண்டிய ஒரே செயல்.

## தொகுப்பு

நமது விசுவாசம் கடுமையான பரீட்சைக்கு உட்படுத்தப்படும் என வேதம் நம்மை எச்சரிக்கிறது. இது நம்மில் கிறிஸ்தவ பண்புகளை உருவாக்கி நமது விசுவாசத்தின் தன்மை உண்மையானது என்பதை நிருபிக்கும்.

இப்பரீட்சையின் பலனாக நான்கு விளைவுகள் ஏற்படும் என பவுல் கூறுகிறார் : முதலாவதாக பொறுமை (சகிப்புத்தன்மை) இரண்டாவதாக நற்பண்பு; மூன்றாவதாக நம்பிக்கை (அமைதியான, பெலமுள்ள நன்மை விளையும் என எதிர்பார்ப்பது); நான்காவதாக தேவனின் அன்பு நம் இருதயங்களை நிரப்புவதாகும். இறுதியாக பரீட்சையானது தேவனுடன் நமக்குள்ள உறவை உறுதிப்படுத்தி வேறு யாரிடமும் கிடைக்காத திருப்தியை அவரிடத்தில் கண்டு கொள்ளச் செய்கிறது.

யாக்கோபும், பேதுருவும் நம்முடைய முழு கிறிஸ்தவ வாழ்க்கையில் உபத்திரவம் என்பது ஒரு முக்கிய பகுதி என்று போதிக்கின்றனர். பேதுரு இந்த பரீட்சையை ஒரு தட்டான் தங்கத்தை சுத்திகரிப்பதற்கு பயன்படுத்தும் நெருப்பிற்கு ஒப்பிடுகிறார். இது பொன்னிற்கு உயர்ந்த மதிப்பைத் தருகிறது.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலரைப் பற்றி குறிப்பிடுகையில் இதனையே பயன்படுத்துகின்றனர்.

பேதுரு, யாக்கோபு, பவுல் ஆகியோர் உபத்திரவத்தின் நோக்கத்தை நாம் புரிந்து கொள்ளக் கூடுமானால் அதை நாம் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வோம் என்கின்றனர். அழுத்தம் அதிகரிப்பதால் குறுகிய காலத்திற்கு நாம் தோல்வியைக் கண்டபோதிலும் நாம் நமது விசுவாசத்தை விட்டுவிடக்கூடாது.

பரீட்சையானது இரு முக்கிய கட்டங்களில் வருகிறது. முதலாவது காரியங்கள் கடினமாய் இருக்கும் போது; இரண்டாவது சூழ்நிலை மிகவும் சாதகமாய் இருக்கும் போது, மோசே என்பவர் இவ்விரு பரீட்சைகளிலும் வெற்றி கண்டு தமது மக்கள் பேரில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட தலைவனாக விளங்குகின்றார். வெற்றியையும், தோல்வியையும் எவ்வாறு சந்திப்பது என்பதற்கான சிறந்த உதாரணம் இயேசுவே ஆவார். அவருடைய மாதிரியை நாம் பின்பற்றும்போது, அவர் நமது விசுவாசத்தை முதிர்ச்சி அடையச் செய்கிறார்.

# அத்தியாயம் பத்து

# விசுவாசத்தின் அளவு

கிறிஸ்தவ வாழ்க்கையில் விசுவாசத்தின் அளவைப் பற்றி கற்றுக் கொள்ள விரும்புகின்றவர்கள் பவுல் ரோமர் 12:1-8 வசனங்களில் கூறும் விசுவாசத்தின் அளவைப்பற்றி கற்றுக் கொள்ள வேண்டும்.

(1) அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

(2) நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

(3) அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.

(4) ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல,

(5) அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவயங்களாயிருக்கிறோம்.

(6) நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்.

(7) ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும்,

(8) புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.

பவுல் இந்த அத்தியாயத்தை உங்களை வேண்டிக்கொள்கிறேன் என்னும் வார்த்தைகளினால் ஆரம்பிக்கிறார். வேதாகமத்தில் ஆகவே (therefore) என்னும் சொல் இருந்தால் ஏன் அது எங்குள்ளது என நாம் கண்டு பிடிக்க வேண்டும். ஆகவே என்பது பவுல் கடந்த 11 அதிகாரங்களில் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் என்ன கூறுகின்றார் என்பதை குறிக்கிறது. ரோமர் முதல் எட்டு அதிகாரங்களில் எப்படி கிறிஸ்து தமது சிலுவையின் மரணத்தினால் பாவத்திற்கும் தீய விளைவுகளுக்கும் முழு பரிகாரத்தை செலுத்தினார் என்பது கூறப்பட்டுள்ளது. 9-11 வரையுள்ள அதிகாரங்களில் பழைய உடன்படிக்கையின் தேவமக்களான இஸ்ரவேலர்கள் எவ்வாறு முரட்டாட்டம்

உள்ளவர்களாக குருட்டுத் தன்மை உள்ளவர்களாக இஸ்ரவேலர்கள் தேவனுடைய தொடர்ந்து வெளிப்பட்ட இரக்கத்தையும், பொறுமையையும் எப்படி இழந்து விட்டார்கள் என்பதைக் கூறுகிறது.

இவ்விதமாக தேவ இரக்கத்தைப் பெற்றுக் கொண்ட புறஜாதியாரும், யூதரும் "தேவன் நமக்குச் செய்த காரியங்கள் அனைத்தையும் நினைக்கும் பொழுது நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை எது (புத்தியுள்ள என்பதற்கு ஆவிக்குரிய என்றும் மொழி பெயர்க்கலாம்)" தேவன் நம்மிடம் கேட்கக் கூடிய மிகச் சிறிய காரியம் யாது? நாம் நமது சரீரத்தை ஜீவனுள்ள பரிசுத்த பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்-எந்த நிபந்தனையுமின்றி நம்மை முற்றிலும் தேவபலிபீடத்தில் ஒப்புக் கொடுக்க வேண்டும். பவுல் **ஜீவபலி** என்று சொல்லும் பொழுது பழைய உடன்படிக்கையில் கொடுக்கப்பட்ட பலிகளிலிருந்து இது மாறுபட்டது என்கிறார். அந்த பழைய உடன்படிக்கையின் பலியில் மிருகம் முதலாவது கொல்லப்பட்டது. பின்பு தான் அது பலிபீடத்தின் மேல் வைக்கப்பட்டது. ஆனால் புதிய உடன்படிக்கை உள்ள நாம் ஒவ்வொருவரும் நமது சரீரத்தை இறுதியாக, முழுமையாக அவரிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும். இதில் உள்ள வித்தியாசம் என்னவென்றால் நம்முடைய சரீரம் கொல்லப்படுவதில்லை. நாம் மரணத்தின் மூலமாக அல்ல வாழ்வதின் மூலமாகவே தேவனுக்கு சேவை செய்து வாழ அனுமதிக்கப்படுகிறோம்.

தேவனிடம் நமது சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக் கொடுப்பது என்பது நாம் முற்றிலும் அவரிடம் சரண் அடைவதைக் குறிக்கிறது. இது தேவசித்தத்தை நிறைவேற்றி அவர் தருபவற்றைப் பெற்றுக் கொள்ளும் காரியத்தை மையமாகக் கொண்ட தொடர்ச்சியான பல படிகள் ஆகும். முதற்படி நமது வாழ்வின் மாதிரி முழுவதையும் மாற்றுவதாகும். இவ்வுலகத்திற்கேற்றபடி நடப்பதை நிறுத்துவதாகும். இதனால்

நாம் மாற்றப்படுகிறோம். இவை நம்முடைய வெளிப்படையான நடத்தைகளான உணவு, உடை, அணிகலன்கள், பொழுதுபோக்கு இவற்றைப் பொறுத்ததன்று. இது நமது உள்ளான மனதிலே ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்தது. நாம் நமது மனங்களில் மறுரூபமாகிறோம். நமது எண்ணங்களும், மதிப்புகளும் காரியங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவங்களும் மாறுபடுகின்றன.

முன்பு ரோமர் **8:7**ல் பவுல் "...மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை. அது தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது" என்கிறார். மாம்ச சிந்தை என்பது பாவம், முரட்டாட்டம் இவற்றை அடிப்படையாகக் கொண்ட இயற்கையின் சுபாவத்தை விவரிப்பதாகும். இது **தேவனுக்கு விரோதமான பகை.** மனித உறவுகளில் ஒரு விரோதி தனக்கு முக்கியமான விலையேறப்பெற்ற காரியங்களை பிறருக்கு தெரிவிப்பதில்லை ஆகவே இதுவும் அப்படியே உள்ளது. நமது மனம் தேவனுக்கு விரோதமாய் இருக்கும் போது பல விலையேறப்பெற்ற அற்புதமான காரியங்களை அவர் நமக்கு வெளிப்படுத்தமாட்டார். ஆனால் நாம் நம்மை ஒப்புக் கொடுப்பத்தின் மூலம் தேவனிடம் மனந்திரும்பும் போது நமது மனம் பரிசுத்த ஆவியினாலே புதுப்பிக்கப்படுகிறதினாலே அது தேவனுக்கு விரோதமான பகையாகாது.

புதுப்பிக்கப்பட்ட நமது மனதிற்கு தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்த ஆரம்பிக்கிறார் நம் ஒவ்வொருவரின் வாழ்வைக் குறித்தும் அவருக்கு சிறப்புத் திட்டம் உண்டு. தேவனுடைய சித்தம் மூன்று முறைகளிலே தொடர்ச்சியாக வெளிப்படுகிறது. நமது மனது அதிகமதிகமாய் மறுரூபம் அடையும் போது இது நடைபெறுகிறது. முதல் தளத்தில் தேவசித்தம் "நலமானதாய்" உள்ளது; நமக்கு நலமானதையே அவர் தர விரும்புகிறார் எனக்கண்டு கொள்கிறோம். இரண்டாவது "தேவ சித்தம்

ஏற்றுக் கொள்ள வேண்டியது" என்பதாகும். இதை நாம் எந்த அளவிற்கு புரிந்து கொள்கிறோமோ அந்த அளவிற்கு இதை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாகிறோம். மூன்றாவதாக "தேவனின் பரிபூரண சித்தம்''. இது நமது வாழ்வில் எல்லா பகுதிகளுக்குமான முழு தேவையையும் சந்திப்பதாக உள்ளது.

நமது மனம் புதுப்பிக்கப்படும் பொழுது நாம் நம்மைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ண மாட்டோம். நாம் பெருமை, சுயசித்தம், தன்னலம் இவற்றினின்று விடுபட்டவர்களாவோம். இதன் மூலம் நமக்கு ஏமாற்றமோ, தோல்வியோ ஏற்படாது. நாம் காரியங்களை சரியாகத் தீர்மானம் செய்கின்றவர்களாவோம். பிதாவை நோக்கி, "என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" எனக் கூறிய இயேசுவின் மனதை நன்கு புரிந்து கொண்டவர்களாவோம். தேவதிட்டங்களும், நோக்கங்களும் நமது சொந்த திட்டங்கள், நோக்கங்களை விட மிகவும் முக்கியமானதாகும்.

இது நம்மை அடுத்த கண்டுபிடிப்புக்கு வழிநடத்துகிறது தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட விசுவாசத்தின் அளவை பகிர்ந்து அளிக்கிறார். நமக்கு எவ்வளவு விசுவாசம் வேண்டும் என நிருணயிப்பவர்கள் நாம் அல்ல. தேவன் ஏற்கெனவே இந்த அளவீட்டை நிர்ணயித்து நமக்கு தேவையான விசுவாசத்தை அளித்திருக்கிறார். தேவன் நமக்குத் தேவையான விசுவாசம் எவ்வளவு என்பதை எப்படி நிர்ணயிக்கிறார் ?

பவுல் இதற்கான விடையை கிறிஸ்துவின் சரீரத்தை விளக்கும்போது கூறுகின்றார் : (ரோமர் 12:4,5) "ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாய் இருக்கிறோம்." கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் ஒரே முழு சரீரமாய் இருக்கிறோம். இந்த ஒரே சரீரத்தில் நாம் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட அங்கம். நமக்கென்று

தனி இடமும், தனி செயல்பாடும் உண்டு. ஒருவர் மூக்காகவும், மற்றொருவர் காதாகவும் இருக்கிறார். ஒருவர் கையாகவும், மற்றொருவர் காலாகவும் இருக்கிறார். இவ்வாறாக இது தொடர்கிறது.

1 கொரி. 12:12-28 வசனங்களில் சரீரத்தைப் பற்றியும் அதன் அங்கங்களைப் பற்றியும் பவுல் பேசுகிறார். அதிலே அவர் தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். (வசனம் 18) நம்மில் எவரும் இந்த சரீரத்தில் நாம் இருக்க வேண்டிய இடத்தையும், செய்ய வேண்டிய செயலையும் நிருணயிக்க முடியாது. நமக்கு தேவன் குறித்துள்ள இடத்தைக் கண்டுபிடித்து அதை நிரப்புவதே நமது செயலாகும். இதை நிறைவேற்றுவதற்கு நமக்கு "மறுரூபமான மனம்" தேவை.

இந்த சரீரத்தின் பல அங்கங்கள் தனிப்பட்ட நிலையிலே முக்கியம் வாய்ந்தவை. ஒவ்வொருவருக்கும் மற்றவர் தேவை. மற்றவர்களைத் தள்ளி வைத்து விட்டு நாம் நமது இஷ்டப்படி செய்வதற்கு சுயாதீனம் கிடையாது. "கண்ணானது கையைப் பார்த்து நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும், தலையானது கால்களை நோக்கி நீங்கள் எனக்கு வேண்டுவதில்லை என்றும் சொல்லக்கூடாது. (வசனம் 21)" தலையென்பது உயர்ந்த அங்கமான கிறிஸ்துவையே குறிப்பாதாக உள்ளது. (எபேசியர் 4:15) சரீரத்தின் மறுபக்கத்தில் கால்கள் கடைசி அங்கங்கள். எனினும் தலைக்கு கால்கள் இல்லாமல் முடியாது. இதன் அடிப்படையிலேயே பவுல் இந்த சரீரத்தில் நமது இடத்தை நம்மைப் பற்றி உயர்வாய் எண்ணும்பொழுது கண்டுபிடிக்க முடியாது என்றும் நடைமுறையில் தாழ்மையாய் இருக்கும்பொழுது நாம் இதை கண்டு கொள்கிறோம் என்றும் கூறுகிறார்.

சரீரத்தைப் பற்றியும் அதன் அங்கங்களைப் பற்றியும் குறிக்கப்பட்டுள்ள இந்தப்பாடம் விசுவாசத்தை பகிர்ந்தளிப்பதை புரிந்து கொள்வதற்கு உதவுகிறது எனப் பவுல் கூறுகிறார்.

சரீரத்தில் நாம் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பணி செய்கின்றவர்களாகிறோம். அந்த பணியை நிறைவேற்றுவதற்கு நமக்கு ஒரு குறிப்பிட்ட அளவு விசுவாசம் தேவை. எந்த அளவு விசுவாசம் எந்நிலையில் தேவை என்பது நபருக்கு நபர் வித்தியாசப்படுகிறது. ஒரு காலுக்கு, காலுக்கான விசுவாசம் போதும். ஒரு கண்ணிற்கு, கண்ணிற்கான விசுவாசம் போதும். கைக்கு, கைக்கான விசுவாசம் போதும். இந்த விசுவாச அளவு மாற்றப்படக்கூடியதல்ல. கை செயற்படுவதற்கான விசுவாசம், கால் செயல்படுவதற்கு உதவாது. கண் செயல்படுவதற்கான விசுவாசம், காது செயல்படுவதற்கு போதுமானதாய் இராது. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டமான விசுவாசத்தின் அளவு தேவையாகிறது. இந்த சரீரத்தில் நமக்கு குறிக்கப்பட்டுள்ள இடத்தை நாம் கண்டு கொள்வோமாயின் நமக்கு அளிக்கப்பட்டுள்ள விசுவாசத்தின் அளவு அதில் செயல்படுவதற்குப் போதுமானதாகும்.

தேவன் நமக்கு அளித்துள்ள அடுத்த வரங்களைக் குறித்துக் காண்போம். (இது கிரேக்கத்தில் Charismata கரிஸ்மட்டா என்பதாகும்). “நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்கள் உள்ளவர்களானபடியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்.” (ரோமர் **12:6)** தீர்க்கதரிசனத்தை தவிர இன்னும் ஆறு வரங்களை பவுல் விளக்குகிறார்; சேவை, போதனை, அறிவுரை, உதவிசெய்தல், வழிநடத்துதல், இரக்கம் பாராட்டுதல். இவைகள் வரங்களின் முழுப்பட்டியல் அல்ல. அப்படி இதில் பல வகை உள்ளது என்பதை நமக்கு விளக்குகிறது.

இங்கே ஒரு முக்கியக் குறிப்பு கூறப்படுகிறது. **நாம் இந்த சரீரத்தில் வசிக்கும் இடமும், செயல்பாடும் இவ்வரங்களுக்கு முன்பு வருவதாகும்.** அநேக கிறிஸ்தவர்கள் வரங்களையும், ஊழியங்களையும் குறித்தே அக்கரை கொள்கின்றனர்.

அவர்களாகவே குறிப்பிட்ட சில வரங்களைத் தெரிந்து கொண்டு அதில் தங்கள் முழு கவனத்தையும் செலுத்துகின்றனர். இந்த வரங்கள் அதாவது சுகமளிக்கும் வரம், அற்புதங்களை நடப்பிக்கும் வரம், அப்போஸ்தலனாய் இருக்கும் ஊழியம் அல்லது சுவிசேஷகனாய் இருக்கும் ஊழியம் ஆகியவை வியப்பைத் தூண்டுபவையாகும். 1 கொரி. 12:31ல் பவுல் “மேலான வரங்களை நாடுங்கள்” என்கிறார். ஆனால் இந்த மேலான வரங்கள் எவையென்று கூறவில்லை. இதற்கு ஒரு வரம்பு கிடையாது. இது நாம் இந்த சரீரத்தில் இருக்கும் இடத்தைப் பொறுத்தது. இந்த வரங்கள் என்னைப் பொறுத்தமட்டில் மேலான வரங்களாக தேவனால் எனக்கு கொடுக்கப்பட்ட பணியை முடிப்பதற்கு உதவுகிறது.

இவ்விதமாக பரவசமூட்டும் சிறந்த ஈவுகளைக் குறித்தே எண்ணிக் கொண்டிருக்கிறவர்கள் பவுலின் எச்சரிப்பான நிதானித்தலை இழந்தவர்களாவர்கள். நம்முடைய முதல் பொறுப்பு நாம் எந்த வரங்களை உடையவர்களாய் இருக்கவேண்டும் என தீர்மானம் செய்வதல்ல. கிறிஸ்துவாகிய சரீரத்தில் நம்முடைய இடம் என்ன என்பதை கண்டு கொள்வதாகும். மிகச் சிறப்பாக செயலாற்றுவதற்கு எந்த வரங்கள் நமக்கு தேவை என்பதை இது நிர்ணயிக்கிறது. ஒரு கிறிஸ்தவன் தான் இருக்க வேண்டிய இடத்தையும், பணியையும் சரியாய் தெரிந்து கொள்ளும் போது எந்தவித சிரமமுமின்றி தானாகவே இந்த வரங்கள் செயல்பட ஆரம்பிக்கின்றன.

ரோமர் 12:1-8ல் பவுல் போதிக்கும் காரியங்களை நாம் இவ்வாறு தொகுத்துக் கூறலாம். தேவன் கிறிஸ்துவின் மூலம் நமக்கு அளித்துள்ள எல்லையற்ற கிருபை, இரக்கம் இவற்றின் அடிப்படையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை கீழே கொடுக்கப்பட்டுள்ள காரியங்களிலிருந்து காண்போம்.

(1) நாம் நமது சரீரங்களை தேவனுக்கு ஜீவபலியாய் ஒப்புக் கொடுக்க வேண்டும்.

(2) நமது மனதை ஒப்புக் கொடுப்பதின் மூலம் பரிசுத்த ஆவியனாவரால் நமது மனம் நாள்தோறும் புதுப்பிக்கப்படுகிறது.

(3) நமது மனங்களில் ஏற்படும் இந்த மாற்றத்தினால் நமது வாழ்க்கை மாறி நாம் முற்றிலும் புதியவர்களாகிறோம்.

(4) இவ்வாறு புதுப்பிக்கப்பட்ட மனமானது தேவனின் சித்தத்தை நமது வாழ்வில் மூன்று நிலையில் அனுபவிக்க உதவுகிறது. முதலாவதாக நன்மையானவை, இரண்டாவதாக ஏற்றுக் கொள்ளப்படுபவை, மூன்றாவதாக பரிபூரணமானவை.

(5) அனுபவத்தின் ரீதியில் தேவசித்தம் என்பது சரீரத்தில் நமக்குரிய இடத்தையும் நாம் செய்ய வேண்டிய பணியையும் கண்டுபிப்பதாகும்.

(6) தேவன் நமக்கு அவருடைய சரீரத்தில் கொடுத்திருக்கும் பணியின் அடிப்படையிலும், இடத்தின் அடிப்படையிலும் நமக்கு போதுமான விசுவாசத்தை பகிர்ந்தளிக்கிறார். காதுக்குரிய விசுவாசத்தை காதிற்கும், கண் செயல்படுவதற்கான விசுவாசத்தை கண்ணிற்கும், நாம் நமக்கு குறிக்கப்பட்ட இடத்தில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள விசுவாசத்துடன் செயல்படும் பொழுது நமக்குத் தேவையான வரங்கள் செயல்பட ஆரம்பிக்கின்றன.

(7) நாம் நமக்குக் குறிக்கப்பட்ட இடத்தில் குறிக்கப்பட்ட விசுவாசத்துடன் செயல்படும் பொழுது, நமக்குத் தேவையான வரங்கள் செயற்படத்துவங்கும்.

ஆறாம் அதிகாரத்தில் பவுல் ரோமர் 10:17ல் கூறிய ‘‘விசுவாசம் கேள்வினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்” என்பதைக் கண்டுள்ளோம். இது ரோமர்

**12:3-5** வசனங்களில் பவுல் அளிக்கின்ற போதனையுடன் எப்படி சம்பந்தப்பட்டது என்பதைக் காண்போம். நமக்கு அளிக்கப்பட்ட விசுவாசத்தின் அளவு தேவன் நம்மை வைத்திருக்கும், இடத்திற்கும், கிறிஸ்துவின் சரீரத்தில் நமக்கு கொடுத்திருக்கும் பணிக்கும் அது எப்படி பொருந்தும் என்பதைக் காண்போம்.

கேட்பது என்பது ஒரு கிறிஸ்தவனுக்கு ஒரு விமானத்திற்கு "ரேடர்" (Radar) செயல்படுவது போல செயல்படுகிறது. தேவன் ரேடாராகிய **ரேமாவைப்** புரிந்து கொள்ளும் போது - அவர் நமக்குத் தரும் சிறப்பு வார்த்தையை புரிந்து கொள்வது நாம் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள இடத்தை நிரப்பி கிறிஸ்துவின் சரீரத்தில் நமக்கு அளிக்கப்பட்ட பணியை நிறைவேற்றுகிறோம். நாம் இருக்க வேண்டிய இடத்தை கண்டு கொள்வது விமானம் தான் சரியான இறங்க வேண்டிய இடத்தைக் கண்டு கொள்வதற்கு ஒப்பானதாகும். கேட்பது என்பது தேவன் நம்மை எங்கு அழைத்துச் செல்ல விரும்புகிறாரோ அங்கு எடுத்துச் செல்லும் ரேடாராகும். தேவனிடத்திலிருந்து வரும் ஒவ்வொரு புதிய **ரேமாவை** நாம் கேட்கும் போதும் நாம் நம் இடத்தைக் கண்டு கொண்டு அங்கு சிறப்பாக செயல்பட முற்படுகிறோம்.

தேவன் நமக்கு குறிப்பிட்ட விசுவாசத்தை அளித்திருக்கிறார் என்பது நமது விசுவாசம் அசைவற்றதாய் இருக்கிறது என்பது பொருளல்ல. சரீரத்தில் நாம் செயல்படும் திறமை அதிகரிக்கும் போது அதற்கேற்ப நமது விசுவாசமும் வளருகிறது. விசுவாசம் வளரும் போது நாம் திறம்பட செயல்படுகிறோம். விசுவாசத்திற்கும், செயல்படுவதற்கும் ஒரு குறிப்பிட்ட உறவு உள்ளது.

விசுவாசம் என்பது மதம் என்கிற சந்தையிலே நாம் வாங்குகின்ற ஒரு பொருளோ அன்றி பண்டமாற்றிக் கொள்ளும் ஒரு பொருளோ அல்ல. அது தேவனுடைய திட்டத்தை நமது வாழ்வில் சரிவர நடைபெறச் செய்யக்கூடிய ஒப்புக் கொடுத்ததினால் தேவனுக்கும் நமக்கும் இடையில் உண்டாகும்

உறவாகும். நாம் நம்மை ஒப்புக் கொடுத்து தொடர்ந்து தேவனுக்கு கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் இருக்கும் போது விசுவாசத்தின் மூலம் நம்மிடத்தை நாம் கண்டு கொண்டு தேவன் நமக்குரிய பணியை நிறைவேற்றுவதாகும். இந்த விசுவாசம் சொந்த நிலையில் ஆனது. நம் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட நிலையில் பகிர்ந்தளிக்கப்பட்டதாகும். என் விசுவாசம் உனக்கு செயல்படாது; உன் விசுவாசம் எனக்கு உதவாது. சரீரத்தில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள தனி இடத்தில் உள்ள பணியை நிறைவேற்ற நமக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விசுவாசம் தேவை.

நான் வாலிப கிறிஸ்தவனாக இருந்த நாட்களிலே முதிர்ச்சியடைந்த விசுவாசிகளின் வாழ்க்கையிலே காணப்பட்ட விசுவாசத்தை கண்டு வியந்ததுண்டு. அவர்கள் கர்த்தருக்கு பெரிய தியாகம் செய்தவர்களாய் பெரும் வெற்றியை கண்டவர்கள். சரியாக ஒரு நாள் நான் கர்த்தாவே அவ்விதமான விசுவாசம் என் வாழ்க்கையில் உண்டாயிருக்கும் என்று நான் விசுவாசிக்கவில்லை என்று கூறினேன். எதிர்பாராத விதமாக இதற்கு தேவன் தெளிவான பதிலைத் தந்தார். “அவ்விதமான விசுவாசம் நீ உடையவனாய் இருக்கமாட்டாய், ஏனென்றால் அது உனக்குத் தேவையில்லை. மற்றவர்கள் செய்ததை செய்யவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.” அந்நாளிலிருந்து நான் கற்றுக் கொண்ட பாடங்களுக்காக நான் நன்றியுடையவனாய் இருக்கிறேன். **தேவன் எனக்குத் தரும் விசுவாசம் அவர் என்னை செய்யும்படி சொன்ன வேலைகளுக்கு போதுமானதாக உள்ளது.**

பின்பு இதனை ஊழியத்திலே கற்றுக் கொள்ளாத அநேக கிறிஸ்தவர்களை நான் கண்டேன். அவர்கள் விசுவாசத்திற்காக வேண்டிய பொழுதிலும் போதுமான விசுவாசத்தை பெற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அவர்கள் செய்ய விரும்பியவற்றிற்கும் அவர்களுடைய விசுவாசத்திற்கும் தொடர்பு

இருந்ததாகத் தெரியவில்லை. அநேக இடங்களில் அவர்களுக்கு தேவன் போதுமான விசுவாசத்தைக் கொடுக்கவில்லை என்று சொல்ல முடியாது. அவர்களுடைய விசுவாசம் தவறான திசையில் செலுத்தப்பட்டது. அவர்கள் தங்கள் விசுவாசத்தை தாங்கள் செய்ய நினைத்ததற்குப் பயன்படுத்தினார்கள். தேவன் அவர்களுக்கு பணிந்திருந்த காரியங்களுக்கு அதை பயன்படுத்தவில்லை.

கையுறை போட்டுக் கொண்டு செயலாற்றும் கால்களையே செருப்பு போட்டுக்கொண்டு செயலாற்றும் கரங்களையே கற்பனை செய்ய முடிகிறதா? இவையிரண்டும் சரியாக வேலை செய்ய முடியாது. இந்த கால், கை, உணவு, செருப்பு ஆகிய நான்கிலும் எந்தத் தவறும் இல்லை. தனிப்பட்ட நிலையில் ஒவ்வொன்றும் நலமாய் செயல்படக் கூடியதே. ஆனால் தவறாய் இணையும் போது அது பயனற்றது. செருப்பு போட்ட கரங்கள் காலின் வேலையை செய்ய முற்படுமாயின் அது அதைச் செய்ய முடியாது. அதைப் போலவே கையுறை அணிந்த காலும் திறம்பட செயல்பட முடியாது. ஆனால் கரங்கள் கையுறையையும், கால் செருப்பையும் போட்டுக் கொள்ளும் போது அதில் ஒரு இசைவு உண்டாகி வெற்றி கிடைக்கிறது. தேவன் கொடுக்கும் விசுவாசமும் இப்படியே உள்ளது. ஒரு கையுறைக்கு ஒரு கை பொருந்துவது போல அல்லது ஒரு செருப்பிற்கு ஒரு கால் பொருந்துவது போல நம் விசுவாசமும் பொருந்தி செயல்படுகிறது. எபிரெயர் 4ல் விசுவாசிகள் பிரவேசிக்க இருக்கும் சுதந்திரத்தை குறித்து சொல்லப்படுகிறது. அவர் சொல்லுகிறார், “விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்...” (வசனம் 3) விசுவாசம் நம்மை இளைப்பாறுதலுக்குள் நடத்த வேண்டும். தேவன் நமக்கு அளித்துள்ள சுதந்திரத்தில் நாம் இருக்க வேண்டிய இடத்தை கண்டு கொள்ளும் போது நமக்குள்ளே ஒரு அழகான

பிரச்சனையில்லாத சமாதானம் உண்டாயிருக்கும். இதில் கடின உழைப்பையும், அழுத்தத்தையும், எதிர்ப்பையும் சந்திக்க வேண்டியது வரலாம். இவைகளுக்கு மத்தியிலே நமக்கு உள்ளான இளைப்பாறுதல் உண்டாயிருக்கும். இப்படி தொடர்ந்து போராட்டத்தில் இருப்பது தேவன் நமக்கு நியமித்த இடத்தையும் பணியையும் நாம் கண்டு கொள்ளவில்லை என்பதாகும். இன்னும் நாம் செருப்பில் உள்ள கை போலவும் காலில் உள்ள உறை போலவுமே தடுமாறிக் கொண்டிருக்கிறோம்.

நான்காம் அதிகாரத்தில் சற்று கீழே 11ம் வசனத்தில், நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதை தேவைப்படுகிறது. சோம்பேறித்தனத்திற்கோ, உதாசீனத்திற்கோ கிறிஸ்தவ வாழ்வில் இடம் இல்லை. நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியதின் அவசியத்தை புரிந்து கொள்ள வேண்டும். விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ளும் படியான பிரதானமான அறிவுரை நமக்கு கூறப்படவில்லை. நமது சுதந்திரத்தில், சரீரத்தில் தேவன் நமக்கு நியமித்த இடத்தைக் கண்டு கொள்ள வேண்டும். இதை நாம் வெற்றியுடன் கண்டு கொள்வோமானால் போராட்டமின்றி கை வேலை செய்வது போல, கால் நடப்பது போல நாமும் செயலாற்றக்கூடும்.

## தொகுப்பு

பயனுள்ள கிறிஸ்தவ ஆராதனை என்பது நமது சரீரங்களை தேவனுக்கு ஜீவ பலியாக ஒப்புக் கொடுப்பதில் உள்ளது. இது நமது சிந்தனையின் தளத்தையே மாற்றுகிறது. நமது மனங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. நமது எண்ணங்கள், மதிப்பீடுகள், முக்கியம் தரும் காரியங்கள் மாற்றி அமைக்கப்படுகின்றன. தேவனுடைய திட்டங்களும், நோக்கங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன.

இப்படிப்பட்ட "புதுப்பிக்கப்பட்ட மனதினாலே" நம்மையும், மற்ற கிறிஸ்தவர்களையும் இச்சரீரத்தின் தனிப்பட்ட

அங்கங்களாக காண முடிகிறது. நாம் முக்கியத்துவம் தர வேண்டிய காரியம் சரீரத்தில் நாம் வகிக்க வேண்டிய இடத்தைக் கண்டுபிடித்து தேவனால் செய்யும்படி நியமிக்கப்பட்ட பணியைச் செய்து முடிப்பதாகும். இதில் நாம் வெற்றி காணும் போது நாம் இருக்க வேண்டிய இடத்தில் செய்ய வேண்டிய காரியத்திற்கு தேவன் பகிர்ந்தளித்த விசுவாசம் போதுமானது என நாம் கண்டு கொள்வோம்.

இப்படிப்பட்ட குறிப்பிட்ட விசுவாசத்தைக் கொண்டு குறிப்பிட்ட இடத்தில் செயலாற்றும் பொழுது தேவையான குறிப்பிட்ட வரங்கள் தானாகவே வெளிப்பட ஆரம்பிக்கும். நம்மைப் பொறுத்த மட்டில் இவைகளே மேலான வரங்கள்.

நாம் விசுவாசத்தையும், வரங்களையும் பெற்றுக் கொள்ளும்படியாக தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டிருப்போமென்றால் சரீரத்தில் நாம் இருக்க வேண்டிய இடத்தை கண்டு கொள்ளவில்லை என்பதாகும். இந்த இடத்தை நாம் கண்டு கொள்ளும் பொழுது நமது செயல்பாடுகள், விசுவாசம் நமது ஈவுகள் சிறந்த முறையில் வெளிப்படும்.

# அத்தியாயம் பதினொன்று

# விசுவாசம் வீழ்ச்சியை மேற்கொள்கிறது

இந்த அத்தியாயத்தில் விசுவாசம் என்னும் பொருளை வேறு ஒரு கோணத்திலிருந்து காண்போம். வேதம் பேசுகின்ற விசுவாசத்தை தேவன் நமக்குக் கொடுக்கும் பொழுது, அது நமது வாழ்வில் செயல்பட்டு வீழ்ச்சியின் பலனை ஒன்று மற்றதாக்குகிறது.

மனிதன் பூரணமாய்ப் படைக்கப்பட்ட பொழுதிலும் பாவத்தின் காரணமாக அந்நிலையிலிருந்து வீழ்ந்து போனான். அதற்கு அவன் கணக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் தேவன் மனிதனை அந்நிலையிலேயே விட்டுவிட முற்படவில்லை. அக்கட்டத்திலிருந்து வேதம் மீட்பு என்னும் ஒரு சிறந்த திட்டத்தை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்து சிலுவையில் மரித்ததின் மூலம் மனிதனின் சுபாவம் மாற்றப்பட்டு அவனுடைய வழிகளிலும் மாற்றம் ஏற்பட்டு அவனை தேவன் மீண்டும் தம்முடைய ஆரம்ப படைப்பின் நோக்கத்திற்கு கிரயம் செலுத்தி மீட்டெக்கிறார் என்பதை வேதம் கூறுகிறது. இந்தக் காரியம் **விசுவாசம்** என்னும் திறவுகோலைப் பயன்படுத்தி நடைபெறுகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால் விசுவாசத்தைச் செயற்படுத்தி நாம் மனித வீழ்ச்சியின் பலனிலிருந்து விடுபடக்கூடும்.

# விசுவாசம், பேசுதல், படைப்பு

இதை முழுவதும் புரிந்து கொள்வதற்கு, நாம் மனிதனுடைய பண்பு, அவன் வீழ்ச்சிக்குக் காரணமான படிகள், அவன் தன்னை ஒப்புக் கொடுத்த சோதனையின் தன்மை போன்றவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும் அப்பொழுது விசுவாசம் இதை எப்படி மாற்றுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். மனிதனை தேவன் படைத்ததின் ஆரம்பநிலை ஆதியாகமம் **1:26**ல் "பின்பு தேவன்; நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக..." என்றார். வேதத்தைத் தொடர்ந்து பார்க்கும் பொழுது இந்தச் சாயலின் பல பண்புகள் கூறப்பட்டுள்ளன.

இந்த அத்தியாயத்தில் பொதுவாக சொல்லப்படாத ஆனால் மிகவும் முக்கியமானதொரு தெய்வீகப் பண்பில் நமது கவனத்தைச் செலுத்துவோமாக: அது **விசுவாசத்தைச் செயல்படுத்தும் ஆற்றலாகும்.** விசுவாசம் என்பது தேவனுடைய நித்தியப் பண்புகளில் ஒன்று. அவருடைய படைப்பின் ஆற்றல் அந்த விசுவாசத்திலிருந்து உண்டாகிறது. அவர் செய்வதெல்லாவற்றையும் விசுவாசத்தினாலே செய்கிறார். மேலும் அந்த விசுவாசம் அவர் பேசும் வார்த்தைகளில் வெளிப்படுகிறது. அவருடைய வார்த்தைகள் அவருடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும் வழியாகும்; அது கருவியாக அவருடைய படைப்பின் ஆற்றலை வெளிப்படுத்துகிறது.

தமது சொந்த வார்த்தைகளில் அவருக்குள்ள விசுவாசத்தின் வல்லமை எசேக்கியேல் **12:25**ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு கர்த்தர் "நான் கர்த்தர், நான் சொல்லுவேன், நான் சொல்லும் வார்த்தை நிறைவேறும்; இனித் தாமதியாது" என்று கூறுகிறார். கர்த்தராகிய நான் என்று சொல்லப்பட்டதிலிருந்து, அதைத் தொடர்ந்து வருவது மாறாத நித்திய தேவனுடைய பண்பைச் சார்ந்தது எனக்காட்டுகிறது. தேவன் ஒன்றைக்

கூறினால் அது கட்டாயம் நிறைவேறும். அவருடைய சொந்த வார்த்தைகளில் அவருக்குள்ள விசுவாசம் அது.

தேவனைப் பற்றியும் அவருடைய வார்த்தையைப் பற்றியும் எபிரெய மொழியின் ஒரு பண்பு இதை நன்கு விளக்குகிறது. பழைய ஏற்பாட்டு “டாபர்“ (Dabar) என்ற எபிரெயச் சொல்லை ஒரு “வார்த்தை” என்றோ “ஒரு பொருள்” என்றோ மொழி பெயர்க்கலாம். சூழ்நிலைக்கேற்ப மொழி பெயர்ப்பில் பொருத்தமான வார்த்தையை எடுத்துக் கொள்ளவேண்டும். அநேகம் தடவைகளில் இரண்டு வார்த்தையும் பொருந்தும். இதிலிருந்து தேவனுடைய **வார்த்தை** ஒரு **பொருளாக** இருக்கிறது என்பதை அறியலாம். தமது விசுவாசத்துடன் தேவன் ஒரு வார்த்தையைப் பேசும்போது, அந்த **வார்த்தை** ஒரு **பொருளைப்** போல் உள்ளது.

முன்பு இந்த புத்தகத்தின் **6**ம் அத்தியாயத்தில், புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள “ரேமா” (rhema) என்ற கிரேக்க வார்த்தைக்கும் இது உண்மையாயிருக்கிறது என பார்த்தோம். தேவனின் **ரேமா** - அவருடைய பேசப்பட்ட வார்த்தை - அவருடைய விசுவாசத்திலிருந்து வெளிப்படும் போது பேசப்பட்ட எதையும் நிறைவேற்றும்படி அது தனக்குள் வல்லமையுடையதாய் இருக்கிறது.

எபிரெயர் **11:3**ல் இந்த பிரபஞ்சம் அனைத்தும் அவருடைய வார்த்தையில் அவருக்குள்ள விசுவாசத்தினால் படைக்கப்பட்டது என்பதைக் காண்கிறோம் : ‘‘விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்’’ என்று வருகிறது. காணப்படும் பிரபஞ்சத்திற்குப் பின்பு பிரதான காரணமாக கண்ணிற்குப் புலப்படக் கூடாத தேவனுடைய வார்த்தையுள்ளது. இவ்விதமாக மனித விசுவாசம் தேவ விசுவாசத்தின் செயல்பாட்டை ஒப்புக்கொள்கிறது.

3ம் அத்தியாயத்தில் விசுவாச வரத்தைப் பற்றி பேசும் பொழுது **33**ம் சங்கீதத்தின் **6**ம், **9**ம் வசனங்களில் தாவீது தேவனுடைய பேசப்பட்ட வார்த்தையினாலே இந்தப் படைப்பு உண்டாயிற்று என்பதை அழகாக் கூறுகிறார்.

**(6)** கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது.

**(9)** அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.

ஆதியாகமம் **1:3**ல் இது எவ்வாறு செயல்பட்டது என்பதைக் குறிக்கும் தெளிவான உதாரணம் உள்ளது : பின்பு தேவன் ஒளியுண்டாகக்கடவது என்று சொன்னார், ஒளியுண்டாயிற்று. தேவன் ஒளி என்று சொன்னபோது, ஒளி என்னும் பொருள் தோன்றியது. தேவனுடைய **பேசப்பட்ட வார்த்தை** ஒரு **காரியமாயிற்று.**

இவ்வாறாக விசுவாசத்தின் ஒப்பற்ற வல்லமையையும் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளக்கூடிய மூன்று முடிவுகளுக்குள் நாம் வருகிறோம். முதலாவதாக விசுவாசம் என்பது தேவனுடைய நித்தியத்தின் பண்புகளில் ஒன்று. இரண்டாவதாக விசுவாசம் என்னும் படைப்பின் ஆற்றலால் இப்பிரபஞ்சம் உருவானது. தேவனுடைய விசுவாசமானது வெளிப்படுத்தப்பட்டு அவர் பேசும் வார்த்தைகளால் பயனுள்ளதாகிறது.

தேவன் மனிதனை விசுவாசத்தைப் பயன்படுத்தும் திறமையுடன் படைத்ததினால், விசுவாசத்துடன் இணைந்த மற்ற இரு பண்புகள் : படைக்கும் ஆற்றலும், பேசும் ஆற்றலும் அவனுக்கு உள்ளது. இவ்வாறு மனிதன் தேவனுடன் பகிர்ந்து கொள்ளும் மற்ற இரு பண்புகளும் அவனை மிருகங்களிலிருந்து வித்தியாசப்படுத்துகிறது.

மனிதன் இயற்கையின் சுபாவத்தின்படி படைக்கும் ஆற்றல் உடையவனாக இருக்கிறான். இதுவரை உலகில் இல்லாதது

ஒன்றை அவன் கற்பனையில் காணக்கூடும். பின்பு அவன் அதைத்திட்டமிட்டு, அதை நிறைவேற்ற முடியும். இது அவனை அனைத்து மிருகங்களிலிருந்தும் வித்தியாசப்படுகிறது. ஒரு பறவை அழகான கூடு ஒன்றைக் கட்டுகிறது என்றால் அது அதை இயல்பூக்கத்தினால் கட்டுகிறது. பறவை இல்லாதது ஒன்றை கற்பனையில் திட்டமிட்டு, பின்பு அதைக் கொண்டுவர முடியாது. ஆனால் மனிதனால் கூடும். இந்த அர்த்தத்தில் மனிதன் தொடர்ந்து படைப்பின் செயலைச் செய்கிறான்.

மனிதன் படைக்கும் ஆற்றலுடன் சம்பந்தப்பட்டதே அவனுடைய பேசும் ஆற்றலுமாகும். இது இல்லாத நிலையில் மனிதன் எதையும் திட்டமிட்டு தன் படைப்பின் காரியங்களை வெளிப்படுத்த முடியாது. விளங்கக்கூடிய நிலையில் சத்தமிட்டு பேசக்கூடிய திறன் மனிதனைப் போன்று எந்த விலங்கிற்கும் கிடையாது. இது மனிதன் தேவனின் சாயலில் உருவானவன் என்பதைக் காட்டுகிறது.

மனிதன் தான் ஆரம்பத்தில் படைக்கப்பட்டபடியே தேவனுடைய மூன்று பண்புகளைப் பகிர்ந்து கொள்கிறான் : விசுவாசத்தைச் செயற்படுத்தும் ஆற்றல்; பேசுகின்ற ஆற்றல்; படைக்கின்ற ஆற்றல்.

## விசுவாசத்தின் மேல் சாத்தானுடைய தாக்குதல்

தேவன் மனிதனுடன் தம்மைப் போல் விசுவாசத்தை செயல்படுத்தும் திறமையைக் கொடுத்ததினால் அவன் அவ்வாறே செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். இதைத் தொடர்ந்து தேவன் மனிதனைப் படைத்த பொழுது விசுவாசம் தேவைப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவனை வைக்கின்றார். தேவன் ஒரு நபராக நிரந்தரமாய் ஆதாமுடனே தோட்டத்தில் இல்லை என்பதை வேதம் வெளிப்படுத்துகிறது. அதற்குப் பதிலாக அவர் தமது வார்த்தையைத் தருகின்றார். அவருடைய

**வார்த்தை** நேரிடை பிரசன்னத்திற்கு சமானமாய் இருந்தது. தேவன், அவருடைய வார்த்தை என்னும் காணப்படாத இரண்டு உண்மைகளுடன் விசுவாசமானது தொடர்புள்ளது என்பதை முதலாம் அத்தியாயத்தில் கண்டோம். இவ்வித உறவில் தான் ஆதாம் தான் இருப்பதாகக் கண்டான். தேவன் ஒரு நபராக தோட்டத்தில் ஆதாமுடன் இல்லையாயினும் அவன் தேவனுடன் அவருடைய வார்த்தையின் மூலம் தொடர்புள்ளவனாக காணப்பட்டான். இந்த வார்த்தையை ஆதியாகமம் 2:15-17 வரையுள்ள வசனங்களில் காண்கிறோம்.

(15) தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்.

(16) தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.

(17) ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.

16,17ம் வசனங்களில் தேவன் ஆதாமுடன் பேசிய வார்த்தைகள் குறிக்கப்பட்டுள்ளன. அவைகள் மூன்று பிரிவுகளாக உள்ளன : முதலாவது அனுமதி, இரண்டாவது தடை, மூன்றாவது எச்சரிப்பு. முதலாவது அனுமதி : நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்... இரண்டாவது தடை: ஆனாலும் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்... இறுதியில் எச்சரிக்கை : அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய். இதுவே தேவன் ஆதாமுக்கு கொடுத்த மூன்று வார்த்தைகள் : அனுமதி, தடை, எச்சரிக்கை.

மனிதன் தேவனுடன் சரியான உறவில் இணைக்கப்பட்டிருக்கும் போது அவன் அசீர்வதிக்கப்பட்டு

பாதுகாப்பை அனுபவிக்கிறான். பிசாசினால் அவனைத் தொட முடியாது. ஆனால் பிசாசு மனிதனை தேவனிடமிருந்து பிரித்து தேவனுடைய ஆசீர்வாதங்களை அவன் இழந்து போகச் செய்கிறது. தனக்கே உரிய தந்திரத்தின்படி முதலாவதாக தேவனுடன் ஆதாமிற்குள்ள உறவின் பேரில் சவால் விடவில்லை. தேவன் ஆதாமிற்களித்த வார்த்தைகளின் வல்லமைகளை குறைத்து மதிப்பிடச் செய்தான். மேலும் அவன் ஆதாமை பெலவீன பாண்டமாகிய ஏவாளின் மூலம் சந்தித்தான்.

சாத்தானுக்கும், ஏவாளுக்கும் உள்ள உரையாடல் ஆதியாகமம் 3:1-3ல் கூறப்பட்டுள்ளது.

(1) தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி : நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.

(2) ஸ்தீரி சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்;

(3) ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

ஏவாளை ஏமாற்ற முற்பட்ட சாத்தான் தேவனுடைய வார்த்தையை நேரிடையாக ஆரம்பத்தில் எதிர்க்கவில்லை. அப்படிச் செய்திருந்தால் அது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும். அதற்குப் பதிலாக உண்மையாகவே தேவன் இப்படிச் சொன்னாரா ? என்னும் கேள்வியை எழுப்புகிறான். ஏவாள் அந்த கேள்வியை ஏற்றுக் கொண்ட உடனேயே அந்த யுத்தத்தில் தோற்றுப்போனாள். நாம் தேவனோடு சரியான உறவு

கொள்ள வேண்டுமாயின் சில கேள்விகளுக்கு நமது மனதை பாதுகாக்க வேண்டும். ஆனால் ஏவாள் தன் சுயபுத்தியை சார்ந்தாள். தோட்டத்தில் தன்னை சந்தித்த அழகும், ஞானமும் உள்ள சர்ப்பத்தை எதிர் நோக்குவதற்குத் தனக்கு திறமை உள்ளது என அவள் கருதினாள். அவள் செய்த பிரதான தவறு தன்னம்பிக்கை கொண்டதாகும்.

அடுத்த சாத்தானின் திட்டம் ஆதியாகமம் **3:4**ல் “அப்பொழுது சர்ப்பம் ஸ்தீரியை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை” என்பது. முதலாவது கேள்வியை அனுமதித்த ஏவாளால் இவ்வாசகத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க முடியவில்லை.

அவனுடைய இறுதி நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு நாம் **5**ம் அதிகாரத்தில் கற்றுக் கொண்ட இரு காரியங்களை நினைவுக்குக் கொண்டு வரவேண்டும். முதலாவதாக, மெய்யான விசுவாசத்தின் இறுதி இலக்கு தேவனே ஆவார். தேவன் பேரில் நாம் விசுவாசத்தை இழப்போமானால், அவருடைய வார்த்தையின் பேரில் உள்ள விசுவாசமும் போய்விடும். இரண்டாவதாக, தேவனுடைய நற்குணத்தில், அவருடைய ஞானத்தில் அவருடைய பராமரிக்கும் தன்மையில் முழுநம்பிக்கை கொண்டிருப்போமானால் நாம் பாவம் செய்யும்படிக்கு தூண்டப்படமாட்டோம். சாத்தான் இந்த தத்துவங்களின் அடிப்படையில் செயலாற்றலானான். இக்கட்டத்தில் சாத்தான் தேவவார்த்தையின் பெயரில் ஏவாள் எவ்வளவு விசுவாசம் கொண்டிருக்கிறாள் என்பதை புரிந்து கொண்டிருந்தான். அதற்குப் பின்பு தேவன் பேரிலேயே அவளுக்கு விசுவாசம் குறையும்படி செய்தான். நீங்கள் இதை புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்பது (ஆதியாகமம் **3:5**)ல் வருகிறது.

இங்கு நாம் பார்க்கும் பொழுது சாத்தானுடைய வார்த்தைகள், ஆதாம், ஏவாளுடன் தேவன் வைத்திருந்த உறவை துண்டிப்பதாக இருந்தது. அவன் தேவனை ஒரு சர்வாதிகாரியாகவும் அவர்களை அறிவற்ற நிலையில் தாழ்வாக வைத்திருக்க விரும்புவதாகவும் படம் தீட்டினான். சாத்தான் தேவன் பேரில் எழுப்பிய சந்தேகங்களை இவ்வாறு கூறலாம் : நீ உண்மையாகவே தேவன் உன்னை நேசிக்கிறார் என்று கருதுகிறாயா ? அவர் உன் ஐக்கியத்தை விரும்புகிறவர் என எண்ணுகிறாயா ? இல்லை. அவர் உன்னை இந்த தோட்டத்தில் தமது கட்டுப்பாட்டிற்குள்ளேயே வைத்துக் கொள்ள விரும்புகிறார். நீங்கள் அடிமைகளை விட சிறந்தவர்கள் அல்ல. இப்பொழுது அந்த மரத்தின் கனியைப் புசித்தால் காரியங்கள் வித்தியாசமாய் இருக்கும். நீங்கள் தேவனை சார்ந்திருக்க தேவையில்லை. நீங்கள் தேவனைப் போலவே ஆவீர்கள்.

இப்படி இறுதியாகக் கூறியது ஏவாள் தேவனுடன் கொண்டிருந்த உறவை குறித்தது. அவள் ஏற்கெனவே தேவனுடைய வார்த்தையில் தனக்கிருந்த நம்பிக்கையை இழந்திருந்தாள். இப்பொழுது அவளுக்கு தேவன் பேரில் இருந்த நம்பிக்கையும் போய்விட்டது. தேவனுடைய நற்குணத்திற்கும் அன்பிற்கும் உரிய வெளிப்படையான கரியத்தை அவள் காணவில்லை. அதற்குப் பதிலாக சாத்தானுடைய கருகலும் பொய்யுமான எண்ணத்தை நம்பலானாள். அவர் ஒரு சர்வாதிகாரியாக தன்னையும் தன் கணவனையும் கீழ்நிலையில் வைக்க விரும்புவதாக தப்பெண்ணம் கொண்டாள். தேவன் அவர்களை அவர்களின் திறமைக்கு கீழே வைத்திருக்க விரும்புவதாக அவன் கூறினான். அந்த விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசிப்பதின் மூலம் அவர்களில் இருந்த தேவனுக்கு சமமாய் இருக்கும் தன்மை வெளிப்படுத்தப்படும் என அவன் கூறினான். தேவனுடன் சமமாய் இருப்பதைவிட உயர்ந்த எண்ணம் ஒன்று இருக்கக்கூடுமா ?

ஏவாளின் எண்ணங்கள் ஆதியாகமம் 3:6ல் கூறப்பட்டுள்ளளது.

**(6)** அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.

இங்கு திறவுகோல் வார்த்தை "கண்டு" என்பதாகும். ஏவாள் அந்த மரத்தைக் கண்டாள். இவ்விதமாக ஒரு தளத்திலிருந்து மறுதளத்திற்கு அவள் மாறினாள். இந்த கட்டத்தில் ஏவாள் காணப்படாத தளத்தில் தேவனை உணரும் விசுவாசத்தை இழந்தாள். அவருடைய வார்த்தையின் மேல் இருந்த விசுவாசமும் போயிற்று. அதற்குப் பதிலாக அவள் கண்டது அவளை ஈர்த்தது. அவன் தன் சரீரத்தின் புலன்களை சாரலானாள். அவள் விசுவாசத்தின் தளத்திலிருந்து இறங்கி புலன்களின் தளத்திற்கு வந்தாள். இந்த தளத்திலே அந்த மரம் மூன்று நிலையில் அவளைக் கவர்ந்தது; அது புசிப்புக்கு ஏற்றதாய் இருந்தது. அது கண்களுக்கு இனிமையாய் இருந்தது. அது அவளை ஞானமுள்ளவளாக ஆக்குவதற்கு விரும்பப்படத்தக்கதாக இருந்தது.

## அந்த சோதனையின் தன்மை

**1 யோவான் 2:15-16**ல் அப்போஸ்தலன் சோதனையின் மூன்று குறிப்புகளைக் கூறுகின்றார்.

**(15)** உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூறாதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.

**(16)** ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய

உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.

புலன்களின் உலகம் தேவனுடைய வார்த்தைகளில் மூன்று கூறுகளினால் ஆனது; மாம்ச இச்சை, கண்களின் இச்சை ஜீவனத்தின் பெருமை. வேதத்திலே இச்சை என்பது தலைகீழாக்கப்பட்ட ஓர் வலுவான ஆசையாகும் அது தேவனுடைய நீதியின் வரம்பிற்கு ஒப்புக்கொடுக்கப்படாதது. யோவானினால் குறிக்கப்பட்ட முதல் இரண்டு சோதனைகள் மனிதனின் சரீரப் புலன்களினால் உண்டானது. மூன்றாம் வகையான சோதனை மனிதனின் "தற்பெருமை அல்லது ஆத்துமா" என்னும் தளத்தில் உண்டானது. ஜீவனத்தின் பெருமை என்பது தேவனை சார்ந்திருக்க வேண்டும் என்பதற்கு எதிரான ஓர் பண்பு. இது தன்னைத்தானே உயர்த்துவது. "இது என் வாழ்க்கையை நானே பார்த்துக் கொள்வேன்... நான் தேவனை சார்ந்திருக்கத் தேவையில்லை... நான் ஏன் தேவனை சார்ந்திருக்க வேண்டும் ?" என்று வெளிப்படுகிறது.

இயேசு வனாந்திரத்தில் இருந்த போது சாத்தானால் இவ்வித மூன்று சோதனைகளுக்கும் உட்படுகிறார். (லூக்கா 4:1-3 பார்க்கவும்) சாத்தான் அவரை கல்லுகளை அப்பமாக்கும்படி சொல்லுகிறான். **அது மாம்ச இச்சை.** பின்பு அவன் உலகத்திலே சகல அரசுகளையும் அதன் வல்லமையையும், மகிமையையும் காட்டுகிறான் - **இது கண்களின் இச்சை.** இறுதியாக சாத்தான் இயேசுவை ஆலயத்தின் உப்பரிகையிலிருந்து அவனாகவே தாழக்குதிக்கும்படி வேண்டுகிறான். இது பிதாவின் சித்தத்தையோ, பிதாவின் மகிமையையோ தேடாத ஒரு செயல் இதுவே **ஜீவனத்தின் பெருமை.**

ஆதாமின் சோதனைக்கும், இயேசுகிறிஸ்துவுக்கு ஏற்பட்ட சோதனைக்கும் சில ஒப்புவமைகள் உள்ளன. (1 கொரி. 15:45ல் இயேசு பிந்தின ஆதாம் என்று அழைக்கப்படுகின்றார்) ஆதாம்

தனது சோதனையை ஆழகான தோட்டத்தில் சந்திக்கிறான். அவனைச் சூழ தேவன் அளித்திருந்த எல்லா படைப்பும் இருந்தது. ஆனால் இயேசு சந்தித்த சோதனை வனாந்திரத்திலே கொடிய விலங்குகளுக்கு மத்தியில் ஏற்பட்ட சோதனையாகும். (மாற்கு **1:13**யை பார்க்க) **சாப்பிட்டதின்** மூலம் ஆதாம் தன் சோதனைக்குள்ளானான். **உபவாசத்தின்** மூலம் இயேசு தம் சோதனையை வென்றார். இந்த ஒப்புவமையின் சத்தியம் ஆழமானது.

சாத்தான் ஏவாளைச் சந்தித்ததைக் குறித்து பார்க்கும்பொழுது, அந்த மரம் மூன்று சோதனைகளை அவளுக்கு முன்பு வைத்தது. அது அவளுடைய பசியாகிய **மாம்ச இச்சையை** தூண்டியது. பார்வைக்கு அழகாக **கண்களின் இச்சையை** தோற்றுவித்தது. அவளை ஞானமுள்ளதாக்கி தேவனை சார்ந்திருப்பதிலிருந்து விடுவித்து விடும் என அவளுடைய சுயம் சோதிக்கப்பட்டது. இது **ஜீவனத்தின் பெருமையாகும்.**

சொல்லப்போனால் **பாவம் என்பது ஒரு காரியத்தை செய்வதன்று பாவம் என்பது தேவனைச் சார்ந்திருக்கும் விருப்பத்தை தவிர்ப்பதாகும்.** இந்த ஆசை நம்மில் தோன்றும் போதெல்லாம் இது ஆவிக்குரிய அபாயத்தை உணர்த்துகிறது. ஏவாள் இவ்வாறாக நன்மை, தீமை அறியத்தக்க அறிவு பெற்று தன் அறிவினாலே சுயாதீனமாய் இருக்க விரும்பினாள். இந்த முறையிலேயே மக்கள் பொதுவாக தேவனை சாராதவர்களாக இருக்க முற்படுகின்றனர். மற்றவர்கள் செல்வத்தையும், புகழையும், ஆற்றலையும் விரும்புகின்றனர். இதிலே முக்கியமானது மதமாகும். தேவனே வேண்டாம் என்று சொல்லும் அளவிற்கு நாம் மதக் காரியங்களில் ஈடுபடக்கூடும்.

இப்படிப்பட்ட சுயாதீனத்தில் ஆசை கொண்ட ஏவாள் தன்னுடைய நம்பிக்கையை தேவனின் வார்த்தையிலிருந்து தன் சொந்த புலன்களுக்கு திருப்பினாள். இதன் பலனாக

அவள் அந்த மரத்தின் மூன்று சோதனைக்குட்பட்டு அந்த கனியை புசிக்கலானாள். பின்பு தன் கணவனையும் அதை புசிக்கச் செய்தாள். இவ்வாறாக அவர்கள் இருவரும் தங்கள் கீழ்ப்படியாமையினாலே தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டனர்.

ஆதியாகமம் **3:1-6** வசனங்களின் மூலம் அந்த சோதனையின் தன்மையை நாம் தொகுத்து கூறக்கூடும். காணப்படாத தேவனையும், அவருடைய வார்த்தையையும் சார்ந்திருப்பது ஆதிகாலத்திரிருந்தே மனிதனின் இயற்கையின் சுபாவம். அவிசுவாசம் என்பது தேவனுக்கு ஒவ்வாத பண்பு. சோதனையானது தேவன் பேரிலும் அவருடைய வார்த்தையின் பேரிலும் மனிதன் இயற்கையாக வைக்கும் விசுவாசத்தைப் பிரிக்கின்றது. அது அவனுடைய சரீரப் புலன்களின் வேட்கையைத் தூண்டுகிறது. பார்க்கப் போனால் ஒவ்வொரு சோதனையும் அவிசுவாசத்திற்குள் நடத்தும் சோதனையே. அதன் நோக்கம் தேவனை சாராது இருக்கும் தன்மையாகும். இதன் முடிவு தேவனுக்கு விரோதமான கீழ்ப்படியாமையாகும்.

## விசுவாசம் இதற்கு மாறுபாடானது

விசுவாசமானது சோதனைக்கு எதிரான திசையில் செயல்படுவது. விசுவாசம் என்பது மனிதனை அவனுடைய புலன்களின்மேல் வைக்கும் நம்பிக்கையை இழக்கச் செய்து தேவனை விட்டே பிரிந்து இருக்க விரும்பும் தன் சுயத்தை தூண்டுவதாக உள்ளது. விசுவாசம் என்பது காணப்படாத தேவனையும் அவருடைய வார்த்தையையும் உயர்த்துவதாகும். அது மனிதனை தாழ்த்தி தேவனை சார்ந்திருக்கச் செய்கிறது. இவ்வாறாக விசுவாசமானது மனிதனுடைய வீழ்ச்சியின் பலன்களை மேற்கொண்டு அவன் தேவனுடன் ஆரம்ப நிலையில் உள்ள உறவை மீண்டும் கொள்ளச் செய்கிறது.

ஒரு பக்கத்தில் தேவன் எதிர்பார்க்கும் விசுவாசம், மறுபக்கத்தில் புலன்களின் ஆசைகள் - இந்த இரு

எதிர்மறையான சக்திகளுக்கும் இடையே மனிதன் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறான். இந்த தவிப்பினை ஆபகூக் 2:4ல் “இதோ, அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்” எனக் காண்கிறோம். நாம் முன்பு பார்த்தபடி இந்த வசனத்தின் இரண்டாம் பகுதி புதிய ஏற்பாட்டில் மூன்று தடவைகள் வருகின்றன - கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தினாலே நீதி உண்டாகிறது. இந்த வசனத்தை இரு பிரிவுகளாக பிரித்து பார்க்கும் பொழுது ஒன்று மற்றொன்றை விளக்குவதைக் காணலாம்.

இவ்வசனத்தின் முதல்பகுதி தேவனுக்கு விரோதமாய் செயல்படும் மனித ஆத்தும சக்தியைக் குறிக்கிறது. இதை நாம் கவனிக்க வேண்டியது அவசியமாகும். Behold. His soul which is lifted up is not upright in Him; இதைத்தான் யோவான் ஜீவனத்தின் பெருமை என்கிறார். தன்னையே உயர்த்துகின்ற ஆத்துமா தலைகீழாய் போகும் என இதைமொழி பெயர்க்கலாம். தன்னை உயர்த்த விரும்பும் மனிதனின் சுயம் தேவனையும், அவருடைய வார்த்தையையும் ஒதுக்கிவிட்டு தேவனை சாராத நிலையில் அவன் சொந்த புலன்களை சாரும்படி ஏவுகிறது.

வசனத்தின் இரண்டாம் பகுதி எதிரான ஒரு காரியத்தை சொல்லுகிறது. விசுவாசத்தை வாழ்வின் அடிப்படையாக கொண்ட மனிதன் தன்னை தேவனுக்கு முன்பாக தாழ்த்துகிறான். அவன் தனக்கு தேவனுடைய வார்த்தையை வரம்பாக கற்றுக் கொண்டு சுயத்திலும், தன் புலன்களிலும் வைக்கின்ற நம்பிக்கையை எதிர்க்கின்றான். புலன்கள் மனித சுயத்தைத் தூண்டி அவனை எதுவும் சாராதவனாக மாற்றுகிறது. ஆனால் விசுவாசமோ மனிதனின் சுயத்தை தாழ்மை அடையச் செய்து “நீ தேவனைச் சார்ந்திருக்க வேண்டும்” என்கிறது. எந்த அளவிற்கு புலன்கள் தேவவார்த்தையுடன் ஒன்றித்து

போகிறதோ அந்த அளவிற்குத் தான் அதைச் சாரவேண்டும் என்று சொல்கிறது. சத்தியம் அல்லது பொய், நன்மை அல்லது தீமை, எது என்பதை அறிந்து கொள்ள உதவுவது உன் புலனாய் இருக்கக்கூடாது. தேவன் தம்முடைய வார்த்தையில் என்ன சொல்கின்றார் என்பதாகவே அது இருக்க வேண்டும்.

எப்பகுதியில் வீழ்ச்சி ஏற்பட்டதோ அப்பகுதியை துண்டித்து வைக்கிறது விசுவாசம். வீழ்ச்சி மனிதனை புலன்கள் என்னும் தளத்திற்கு இறக்குகிறது. ஏவாள் அது நல்லது என்று கண்டாள். நீங்கள் தேவனைப் போல் ஆவீர்கள் என்னும் எண்ணத்திற்கு அவர்கள் சுயம் அவர்களை உயர்த்தியது. தேவனுக்குப் பிரியமான நீதியின் வாழ்க்கை வாழ வேண்டுமானால் நம்மை நாமே உயர்த்துவதைத் தவிர்க்க வேண்டும். இதை எப்படிச் செய்வது ? விசுவாசத்தின் தத்துவத்தின் அடிப்படையில் செய்யக்கூடும் "விசுவாசமானது புலன்களின் ஆட்சியையும், பெருமையையும் ஆத்துமா தன்னை உயர்த்துவதையும் ஒதுக்கித் தள்ளுகிறது."

ரோமர் **3:27**ல் பவுல் மேன்மை பாராட்டுவது விசுவாசத்தோடு இசைந்து காணப்படாது எனக்கூறுகிறார். "இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே ? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினாலே ? கிரியாப்பிரமாணத்தினாலேயா ? அல்ல; விசுவாசப் பிரமாணத்தினாலேயே." எந்தவிதமான பக்திக்குரிய உணர்ச்சியோ, அல்லது செயலோ அது மனிதனின் சுதந்திரத்திற்கு, சுயபெருமைக்கு மற்றும் நான் என்னும் எண்ணத்திற்கு இடம் கொடுக்கும். இது வேதத்திற்கு அடுத்த விசுவாசம் அல்ல.

நாம் இருதளங்களில் வாழக்கூடும். ஒன்று மனிதன் தேவனை சார்ந்திருப்பதை தவிர்த்து தன்னையும் தன் புலன்களையும் சார்ந்து வாழ்வது. மற்றது மனிதன் தன்னிலும் தன் புலன்களிலும் சாராது புலன்களால் புரிந்து கொள்ள முடியாத தேவனையும், அவருடைய வார்த்தையையும்

நம்புவதாகும். சுயத்திலிருந்தும், புலன்களிலிருந்தும் நம்மை நீதிக்கென்று விசுவாசமானது பிரித்து நம்மை தேவன் பேரிலும் அவர் வசனத்தின் பேரிலும் நம்பிக்கை கொள்ளச் செய்கிறது. இப்படிப்பட்ட வாழ்க்கையே தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையாகும்.

**விசுவாசமே வீழ்ச்சிக்கு ஏற்ற மாற்று மருந்து.**

# தொகுப்பு

விசுவாசம் என்பது தேவனுடைய நித்திய பண்பாகும். விசுவாசத்தின் மூலம் பேசப்பட்ட அவருடைய வார்த்தைகள் இப்பிரபஞ்சத்தை படைத்தது. தேவனுடைய சாயலாக படைக்கப்பட்ட மனிதன் தேவனுடைய மூன்று பண்புகளில் பங்கேற்கிறான்; விசுவாசத்தை பயன்படுத்தும் ஆற்றல், பேசும் ஆற்றல், படைக்கும் ஆற்றல்.

விசுவாசத்தை பயன்படுத்தும் ஆற்றல் உள்ள மனிதனிடம் அவன் அதை செயல்படுத்த வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார். தோட்டத்திலே ஆதாம் தேவனுடன் தொடர்ந்து தொடர்பு கொள்ளவில்லை. அதற்குப்பதிலாக அவர் சொன்ன வார்த்தையின் மூலம் அவரிடம் தொடர்பு கொண்டான். அந்த வார்த்தை மூன்று பிரிவுகளானது. அனுமதி, தடை, எச்சரிப்பு.

ஆதாமை தேவனிடமிருந்து பிரிக்கும்படி சாத்தான் மெலிந்த பாண்டமான ஏவாள் மூலம் முயற்சித்தான். முதலாவதாக தேவனுடைய வார்த்தையின் பேரில் அவளுக்கு இருந்த நம்பிக்கையை கேள்வி கேட்டு குறைக்கலானான். பின்பு அதை நேரிடையாகவே எதிர்த்தான். அதற்குப் பின்பு தேவன் பேரில் அவளுக்கு இருந்த நம்பிக்கையை குறைவாக்க முற்பட்டான். அவளும், அவள் கணவனும் தாழ்மையாயிருக்கத் தேவையில்லை. நன்மை, தீமை அறிந்து தேவனுக்கு சமமாய்

இருக்கலாம் என்றான். இப்படி தேவனை விட்டு பிரிந்து இருக்க வேண்டும் என்ற ஆசை அவர்களுக்குத் தோன்றி அவர்களை பாவத்திற்குள் வழிநடத்தியது.

இந்த முறையில் காணப்படாத தேவனையும், அவருடைய வார்த்தையையும் நம்பாது ஒதுக்கி வைக்கும்படி ஏவாள் தூண்டப்பட்டாள். அவள் புலன் அறிவுக்குள் வந்தாள். அந்த மரம் அவளுக்கு முன்பாக மூன்று சோதனைகளை வைத்தது; மாம்ச இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை. புலன்களின் அடித்தளத்தில் ஏவாள் மரத்தினால் கவரப்பட்டு சோதனைக்குட்பட்டாள். அவளுடைய கணவனையும் அப்படியே செய்யச் சொன்னாள்.

விசுவாசமானது மனிதனை விழச் செய்யும் சோதனையிலிருந்து அவனை மீட்கிறது. விசுவாசமானது புலன்களின் மேல் வைக்கும் நம்பிக்கையை தவிர்த்து தன்னை உயர்த்த விரும்பும் சுயத்தை கட்டுப்படுத்தி, தேவனைச் சார்ந்திராத நிலையை மாற்றி காணப்படாத தேவன் பேரிலும் அவருடைய வார்த்தையின் பேரிலும் நம்பிக்கை வைக்கத் தூண்டுகிறது. விசுவாசம் எதிர்பார்ப்பதை மனிதன் நிறைவேற்றுவதிலேயே அவனுடைய வருங்கால வெற்றியுள்ளது.

# தேவனுடைய பாதுகாப்பில் உள்ள நம்பிக்கையைப் பற்றிய விசுவாச அறிக்கை

எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். எனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நான் குற்றப்படுத்துகிறேன். இது கர்த்தருடைய ஊழியக்காரனாகிய என்னுடைய சுதந்திரம். சேனைகளின் கர்த்தராகிய உம்மிடமிருந்து என் நீதி வருகிறது.

எனக்கு விரோதமாகப் பேசுபவர்களையும், எனக்கு விரோதமாக ஜெபிக்கின்றவர்களையும், எனக்கு தீமையும் கேடும் உண்டாக வேண்டும் என விரும்புபவர்களையும், என்னை ஒதுக்கித் தள்ளியவர்களையும் நான் மன்னிக்கிறேன். அவர்களை மன்னித்து கர்த்தருடைய நாமத்திலே அவர்களை ஆசீர்வதிக்கிறேன்.

இப்பொழுதும் கர்த்தாவே நீர் மட்டுமே என் கர்த்தர் என்றும், என்னுடைய இரட்சகர் என்றும், உம்மைத் தவிர வேறே தேவர்கள் இல்லையென்றும் நான் அறிக்கையிடுகிறேன் - நீர் நீதியுள்ள தேவன், இரட்சகர். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய உம்மை நான் ஆராதிக்கிறேன்.

நான் என்னைப் புதிதாக இந்த நாளில் / இந்த இரவில் எந்தவித நிபந்தனையுமின்றி கீழ்ப்படிதலுக்கு ஒப்புக் கொடுக்கிறேன். உமக்கு ஒப்புக் கொடுத்ததின் அடிப்படையில் நான் உம்முடைய வார்த்தையின்படி செய்ய விரும்புகிறேன். நான் பிசாசையும் அவனுடைய நெருக்குதல்களையும், அவன் தாக்குதல்களையும், அவன் தரும் பிரச்சனைகளையும், அவன் தரும் ஏமாற்றங்களையும், அவன் எனக்கு விரோதமாகப் பயன்படுத்தும் ஒவ்வொரு ஆயுதத்தையும், நபரையும் எதிர்க்கிறேன். அதற்கு நான் என்னை ஒப்புக் கொடுக்க மறுக்கிறேன்! அவனுக்கு எதிர்த்து நிற்கிறேன். இயேசுவின் நாமத்தில் அவனை விரட்டி அவனை ஒதுக்கி வைக்கிறேன்.

சிறப்பாக நான் எதிர்த்து தள்ளிவைப்பது : பெலவீனம், வலி, தொற்று நோய், வீக்கம், வேண்டாத வளர்ச்சி, ஒவ்வாமை, நுண் கிருமிகள், எல்லாவிதமான பில்லி சூனியங்கள்.

இறுதியாக கர்த்தாவே, இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் தியாக மரணத்தினாலே நான் சாபத்திலிருந்து நீங்கி, நீர் சகலவிதத்திலும் ஆசீர்வதித்த ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்குள் கடந்து வருகிறேன். அவை உயர்வு, ஆரோக்கியம், கனிதரும் தன்மை, வளமை, வெற்றி, தேவ சலுகையாக உள்ளது.

ஆமென்.

மத்தேயு 5:43-45, ரோமர் 12:14, கலாத்தியர் 3:13-14, ஆதியாகமம் 24:1

- டெரிக் & ரூத் பிரின்ஸ்

# ஆசிரியரைப் பற்றி . . .

டெரிக் பிரின்ஸ் (1915-2003) இந்தியாவில் வசித்து வந்த ஆங்கிலேய பெற்றோருக்குப் பிறந்தவர். இங்கிலாந்து நாட்டின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்க மற்றும் லத்தீன் மொழிகளில் புலவராக தேர்ச்சி பெற்றார். பழங்காலத்து மற்றம் நவீன தத்துவம் என்ற துறையில், கிங்ஸ் கல்லூரியில் அவர் கௌரவ பணியாற்றினார். மட்டுமல்ல, அராமிய மற்றும் எபிரெய மொழிகள் உட்பட, பல மொழிகளைக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக்கழகத்திலும் அவர் கற்றார்.

இரண்டாம் உலக யுத்தத்தில், பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றியபோது, அவர் வேதத்தை வாசிக்க ஆரம்பித்து, இயேசுவுடன் வாழ்வை மாற்றும் ஓர் நேர்முக சந்திப்பைப் பெற்றார். இச்சந்திப்பிலிருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலாவது, இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார்; இரண்டாவது, வேதாகமம் ஓர் உண்மையான, அர்த்தமுள்ள, நவீன காலத்துக்கும் ஏற்ற புத்தகம். இவ்விரண்டு முடிவுகளும் அவருடைய வாழ்க்கையின் முழுப் போக்கையும் மாற்றின. அதன்பின் வேதத்தைப் படிக்கவும் அதைக் கற்றுக்கொடுக்கவும் அவர் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

வேதாகமத்தையும் அதின் போதனையையும் தெளிவான மற்றும் எளிய விதத்தில் விளக்கும் டெரிக்கின் பிரதான வரம், லட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையில் விசுவாசத்தின் அடித்தளத்தை அமைப்பதற்கு உதவி செய்திருக்கிறது. சபைப் பிரிவுகளை மற்றும் குழுக்களைச் சாரா நிலையினால், அவருடைய போதனை எல்லா இன மற்றும் மதப் பின்னணிகளிலிருந்தும் வந்த மக்களுக்கு மிகப்

பிரயோஜனமாகவும், வாழ்க்கைக்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது.

அவர் 50ற்க்கும் மேற்பட்ட புத்தகங்களுக்கும், 600 ஒலி மற்றும் 100 ஒளிப்பதிவு செய்யப்பட்ட போதனைகளுக்கும் காரணராய் இருக்கிறார். இவைகளில் அநேகம் 100க்கும் மேலான பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டுள்ளன. அவருடைய அனுதின ரேடியோ ஒலிபரப்பு, அராபிய, பஹாசா, இந்தோனேஷியா, சீன (அமாய், காண்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், சுவாட்டோ) க்ரோஷிய, ஜெர்மன், மலகாசி, மங்கோலிய, ரஷிய, சமோவா, ஸ்பானிஷ் மற்றும் டோங்கன் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த ரேடியோ ஒளிபரப்பு இன்றைக்கும் உலகெங்கும் அநேகருடைய வாழ்வை மாற்றிக்கொண்டிருக்கிறது.

140 நாடுகளில், டெரிக் பிரின்ஸின் போதனைகளைக் கொண்டு, விசுவாசிகளைச் சந்திக்கும் ஊழியத்தை, டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள் இன்றும் செய்து வருகிறது. இதனால் ''இயேசு கிறிஸ்து வரும் வரை'' என்ற கட்டளையை நிறைவேற்றுகிறது. உலகெங்குமிருக்கும் 30 டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இப்பணி நிறைவேறி வருகிறது. இவ்வலுவலகங்கள், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லேண்ட்ஸ், நியூசிலாந்து, நார்வே, ரஷியா, தென் ஆப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் இந்தியா உட்பட பல நாடுகளில் உள்ளன. மேலும் விபரங்கள் அறிய **www.derekprince.in** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.